ஹரீஶ்வர:	வானர்த்தலைவரான	ப்ரவிஶ்ய	பிரவேசித்து
த்வம்	நீர்	யத்ருச்சயா	யதேச்சையாய்
ஶாபோபஹதாம்=		கத:	சென்றவராக
ஶாப	சாபத்தால்	ஸர்வத்ர	எல்லாவிடங்களிலும்
உபஹதாம்	அடிக்கப்பட்டதாயும்	யதாஸுகம்	கஷ்டமின்றியில் (ஸுகமாக)
ராக்ஷஸமுக்யபாலிதாம்-	இராவணனலாளப்பட்டதாயும்	ஸதீம்	பதிவிரதையான
ஶுபாம்	மங்களகரமாயுமிருக்கிற	ஜநகாத்மஜாம்	ஜனகன் திருமகளை
புரீம்	இலங்கையை	விமார்க்க	நன்றாகத்தேடும்.

(௪௯-௫௰-௫௧-ஶ்லோகங்களுக்குத்) தா-ம்—ஹே வாநரோத்தம! தபஸ்ஸினால் பிரம்மவரம் பெற்று பராக்கிரமத்தால் அஷ்டதிக்குப்பாலகர்களை வென்று யசஸ்ஸினால் திரைலோக்கிய பிரஸித்தனான இராவணன் ஸர்வசாஸ்திரங்களுமுணர்ந்த புத்திமானும் ஸகலபோகங்களையும் புஜித்த பிரபுவாயுமிருந்தபோதிலும் ஸீதாவிஷயத்திற்கொண்டிருக்கிற துர்ப்புத்தியால் நாசமடையப்போகிறான். ஸீதாபஹரணஞ்செய்த அவன் மாத்திரம் நாசமடைவதன்றி அவனைச்சேர்ந்த புத்திரமித்திர பாந்தவாளான ஸமஸ்த ராக்ஷஸர்களுமழியக் காலம் வந்துவிட்டது. இந்த விபரீதத்திற்கெல்லாம் ஸீதையென்கிற ஓர் ஸ்திரீ வியாஜம்! ஆகையால், இதுவரையில் தேவர்களும் பயமின்றிப் பிரவேசிக்கமுடியாத விந்த இராவணராஜதானியில், ஹநுமாரே! நீர் கொஞ்சமேனும் யோசனையின்றிப் பிரவேசித்து உமக்கு வேண்டிய காரியங்களனைவற்றையும் நிறைவேற்றிக்கொள்ளலாம். ஹே ஹரிபுங்கவ! சொல்லுகிறேன் கேளும். தசகண்டனென்கிற மஹாப்பிரதாபசாலியாலாளப்பட்ட விந்நகரமும் அழிவையடையுமோ! அஹோ! என்னபத்திரமாயும் அழகாயும் சுபகரமாயும் விளங்குகிறது! சாபபலத்தினாலல்லவோ இதற்கழிவுகாலம் வந்தது! நீர் எங்கெங்த விடங்களுக்குப் போக விரும்புகிறீரோ அந்தந்த விடங்களுக்குத் தடையின்றி சென்று பதிவிருதோத்தமியான ஜனகன் திருமகளைத்தேடும். இந்தவிதம் வெகுகால மிலங்கையை ரக்ஷித்துவந்தவளான இலங்கிணியானவள் இலங்காநாசத்திற்குக் காரணமான சாபத்தைத்தெரிவித்து அந்நகரத்தி லினி பயமின்றிப் பிரவேசிக்கலாமென்கிற விஷயத்தையும் மாருதிக்குச்சொன்னாள்.

சுபாம்=இதுவரையில் தன் குழந்தைபோல் பரிபாலித்துவந்த அந்நகரத்தைப் பிரீதிவிசேஷத்தால் மங்களகரமானதென்றாள். அல்லது அஷ்டைசுவரியத்திற்கும் காரணபூதையான ஸீதாதேவி வாஸம்பண்ணுகிறாளாதலால், அந்நகரத்திற்கு மங்களகரமென்று சப்தப்பிரயோகம்பண்ணினாள். அல்லது துராத்மாவான இராவணனுடைய அரசாக்ஞையைவிட்டு நீங்கி மஹாத்மாவாயும் பரமபாகவதனுமான விபீஷணனுடைய ரக்ஷணையை அடையப்போகிறபடியால் சுபகரமென்றாள்.

ஸ்ரீஸந்மநோரஞ்ஜிநீ நாமத்திராவிட வ்யாக்யாந ஸஹிதமான
ஸுந்தரகாண்டத்தில்
மூன்றாவது ஸர்க்கம் முற்றிற்று.

நான்காவது ஸர்க்கம்.

౧. సనిర్జిత్య పురీం శ్రేష్ఠాం లంకాం తాం కామరూపిణీమ్। విక్రమేణ మహాతేజా హనూమాన్ కపిసత్తమః॥
౨. అద్వారేణ మహాబాహుః ప్రాకారమభిపుప్లువే।
௧. 𑌸𑌨𑌿𑌰𑍍𑌜𑌿𑌤𑍍𑌯𑌪𑍁𑌰𑍀𑌂𑌶𑍍𑌰𑍇𑌷𑍍𑌠𑌾𑌂𑌲𑌙𑍍𑌕𑌾𑌂𑌤𑌾𑌂𑌕𑌾𑌮𑌰𑍂𑌪𑌿𑌣𑍀𑌂।
𑌵𑌿𑌕𑍍𑌰𑌮𑍇𑌣𑌮𑌹𑌾𑌤𑍇𑌜𑌾𑌹𑌨𑍂𑌮𑌾𑌨𑍍𑌕𑌪𑌿𑌸𑌤𑍍𑌤𑌮𑌃॥
௨. 𑌅𑌦𑍍𑌵𑌾𑌰𑍇𑌣𑌮𑌹𑌾𑌬𑌾𑌹𑍁𑌃𑌪𑍍𑌰𑌾𑌕𑌾𑌰𑌮𑌭𑌿𑌪𑍁𑌪𑍍𑌲𑍁𑌵𑍇।
௧. ஸநிர்ஜ்ஜித்யபுரீம்ஶ்ரேஷ்டாம்லங்காம்தாம்காமரூபிணீம்।
விக்ரமேணமஹாதேஜாஹநுமாந்கபிஸத்தம:॥
௨. அத்வாரேணமஹாபாஹு:ப்ராகாரமபிபுப்லுவே।

பதம்.	உரை.	பதம்.	உரை.
கபிஸத்தம:	வானரசிரேஷ்டராயும்	காமரூபிணீம்	நினைத்தரூபம் தரிக்கவல்லவளாயுமிருக்கிற
மஹாதேஜா:	மிகுந்ததேஜஸ்ஸுடையவராயுமிருக்கிற	தாம்	அந்த
ஸ:	அந்த	லங்காம்	இலங்கிணியை
ஹநுமாந்	ஹநுமாரானவர்	விக்ரமேண	பராக்கிரமத்தால்
புரீம்	இலங்காதிதேவதையாயும்	நிர்ஜ்ஜித்ய	ஜயித்து
ஶ்ரேஷ்டாம்	சிரேஷ்டமானவளாயும்		

பதம்.	உரை.	பதம்.	உரை.
மஹாபாஹு:	மிகுந்த புஜபலத்தையுடைய ஹநுமாரானவர்	ப்ராகாரம்	ஆவரணத்தை
அத்வாரேண	குறுக்குவழியினல்	அபிபுப்லுவே	தாண்டினர்.

தா-ம்—அந்த தேஜோவானுன வானரோத்தமர் நினைத்த ரூபம் தரிக்கவல்ல மஹா ஸாமர்த்தியமுடையவளான இலங்கிணியைத் தன் புஜபலத்தால் வென்று, சத்துருநகரத்தைக் கிரமமானவழியில் பிரவேசிக்கக்கூடாதென்று சாஸ்திரமாதலா லதையறிந்த அந்த புத்திமான் இராஜமார்க்கத்திற்செல்லாமல் குறுக்குவழியாகப்போய் கோட்டை மதிற்சுவற்றின்மேலேறித் தாண்டினர்.

౩. ప్రవిశ్యనగరీంలంకాంకపిరాజహితంకరః॥చక్రేథపాదంసవ్యంచశత్రూణాంసతుమూర్ధని।

௩. 𑌪𑍍𑌰𑌵𑌿𑌶𑍍𑌯𑌨𑌗𑌰𑍀𑌂𑌲𑌂𑌕𑌾𑌂𑌕𑌪𑌿𑌰𑌾𑌜𑌹𑌿𑌤𑌂𑌕𑌰𑌃॥
𑌚𑌕𑍍𑌰𑍇𑌥𑌪𑌾𑌦𑌂𑌸𑌵𑍍𑌯𑌂𑌚𑌶𑌤𑍍𑌰𑍂𑌣𑌾𑌂𑌸𑌤𑍁𑌮𑍂𑌰𑍍𑌧𑌨𑌿।

௩. ப்ரவிஶ்யநகரீம்லங்காம்கபிராஜஹிதம்கர:॥
சக்ரேதபாதம்ஸவ்யஞ்சஶத்ரூணாம்ஸதுமூர்த்தநி।

பதம்.	உரை.	பதம்.	உரை.
கபிராஜஹிதம்கர:=		ஸவ்யம்	இடதான
கபிராஜ	வானராதிபதியான ஸுக்ரீவமஹாராஜாவுக்கு	பாதம்	காலை
ஹிதம்கர:	க்ஷேமத்தைச்செய்கிற ஹநுமாரானவர்	சக்ரே	பண்ணினர் (வைத்தார்)
லங்காம்	இலங்கையென்கிற	ஸது	அந்த பாதமோவென்றால்
நகரீம்	பட்டணத்தை	ஶத்ரூணாம்	சத்துருக்களுடைய
ப்ரவிஶ்ய	பிரவேசித்து	மூர்த்தநி	சிரஸில்
(அக்ரே)	(முதலில்)	(சக்ரேவ)	(வைத்ததுபோலவே.)

தா-ம்—விவாககாலத்திலும் பிரயாணகாலத்திலும் நூதன கிரகப்பிரவேசகாலத்திலும் க்ஷேமார்த்தம் முதலில் வலதுகாலெடுத்தடிவைக்கவேண்டும். சத்துரு நகரப்பிரவேசம் செய்கையில் சத்துருக்ஷயார்த்தம் முதலில் இடதுகாலெடுத்தடிவைக்கவேண்டும். இந்நியாயத்தையறிந்த ஹநுமான் ஸுக்ரீவமஹாராஜாவினுடைய க்ஷேமத்தை விரும்பினவராய் சத்துருவான இராவணனுடைய மணிமயகிரீடங்களமைந்த பத்துசிரஸுகளின்மேல் வைப்பதுபோல் தன் இடதுகாலை இலங்காநகர பூஸ்தலத்தில் முதலில் வைத்தார்.

౪. ప్రవిష్టస్సత్వసంపన్నోనిశాయాంమారుతాత్మజః॥సమహాపథమాస్థాయముక్తాపుష్పవిరాజితమ్।
తతస్తుతాంపురీంలంకాంరమ్యామభియయౌకపిః॥

௪. 𑌪𑍍𑌰𑌵𑌿𑌷𑍍𑌟𑌸𑍍𑌸𑌤𑍍𑌵𑌸𑌂𑌪𑌨𑍍𑌨𑍋𑌨𑌿𑌶𑌾𑌯𑌾𑌂𑌮𑌾𑌰𑍁𑌤𑌾𑌤𑍍𑌮𑌜𑌃॥
𑌸𑌮𑌹𑌾𑌪𑌥𑌮𑌾𑌸𑍍𑌥𑌾𑌯𑌮𑍁𑌕𑍍𑌤𑌾𑌪𑍁𑌷𑍍𑌪𑌵𑌿𑌰𑌾𑌜𑌿𑌤𑌂।
𑌤𑌤𑌸𑍍𑌤𑍁𑌤𑌾𑌂𑌪𑍁𑌰𑍀𑌂𑌰𑌮𑍍𑌯𑌾𑌂𑌲𑌂𑌕𑌾𑌮𑌭𑌿𑌯𑌯𑍌𑌕𑌪𑌿𑌃॥

௪. ப்ரவிஷ்டஸ்ஸத்வஸம்பந்நோநிஶாயாம்மாருதாத்மஜ:॥
ஸமஹாபதமாஸ்தாயமுக்தாபுஷ்பவிராஜிதம்।
ததஸ்துதாம்புரீம்ரம்யாம்லங்காமபியயௌகபி:॥

பதம்.	உரை.	பதம்.	உரை.
ஸத்வஸம்பந்ந:	பலமாகிற ஸம்பத்தையுடையவராயும்	நிஶாயாம்	இரவில்
மாருதாத்மஜ:	வாயுபுத்திரருமான	ப்ரவிஷ்ட:	பிரவேசித்தவராய்
ஸ:	அந்த	தத:	பின்பு
கபி:	ஹநுமாரானவர்	ரம்யாம்	ஸுந்தரமான
முக்தாபுஷ்பவிராஜிதம்-முத்து, புஷ்பம், இவைகளோடு விளங்குகிற		தாம்	அந்த
மஹாபதம்	இராஜவீதியை	லங்காம்புரீம்	இலங்கையென்கிற நகரத்தை
ஆஸ்தாய	அடைந்து	அபியயௌ	(நாலுபக்கங்களிலும்) சுற்றினர்.

தா-ம்—அந்த மஹாபலசாலியான ஹநுமார் முத்துகளாலும் புஷ்பங்களாலும் அலங்கரிக்கப்பட்டிருக்கிற இராஜவீதியை இரவிலடைந்து அதிரமணீயமான அந்த திவ்விய நகரத்தை நாலுபக்கமும் சுற்றினர்.

౫. హసితోద్ఘుష్టనినదైస్తూర్యఘోషపురస్సరైః।వజ్రాంకుశనికాశైశ్చవజ్రజాలవిభూషితైః॥
౬. గృహముఖ్యైఃపురీరమ్యాబభాసేద్యౌరివాంబుదైః।

௫. 𑌹𑌸𑌿𑌤𑍋𑌦𑍍𑌘𑍁𑌷𑍍𑌟𑌨𑌿𑌨𑌦𑍈𑌸𑍍𑌤𑍂𑌰𑍍𑌯𑌘𑍋𑌷𑌪𑍁𑌰𑌸𑍍𑌸𑌰𑍈𑌃।
𑌵𑌜𑍍𑌰𑌾𑌂𑌕𑍁𑌶𑌨𑌿𑌕𑌾𑌶𑍈𑌶𑍍𑌚𑌵𑌜𑍍𑌰𑌜𑌾𑌲𑌵𑌿𑌭𑍂𑌷𑌿𑌤𑍈𑌃॥
௬. 𑌗𑍃𑌹𑌮𑍁𑌖𑍍𑌯𑍈𑌃𑌪𑍁𑌰𑍀𑌰𑌮𑍍𑌯𑌾𑌬𑌭𑌾𑌸𑍇𑌦𑍍𑌯𑍌𑌰𑌿𑌵𑌾𑌂𑌬𑍁𑌦𑍈𑌃।

௫. ஹஸிதோத்க்ருஷ்டநிநதைஸ்தூர்யகோஷபுரஸ்ஸரை:|
வஜ்ராங்குஶநிகாஶைஶ்சவஜ்ரஜாலவிபூஷிதை:||
௬. க்ருஹமுக்யை:புரீரம்யாபபாஸேத்யௌரிவாம்புதை:|

பதம்.	உரை.	பதம்.	உரை.
தூர்யகோஷபுரஸ்ஸரை:-	நிருத்த கீதாதிவாத்தியங்களை முன்னிட்டுக்கொண்டிருக்கின்றனவாயும்	நிகாஶை:ச	ஸதிருசமாயிருக்கின்றனவாயும்
ஹஸிதோத்க்ருஷ்டநிநதை:=		வஜ்ரஜாலவிபூஷிதை:=	
ஹஸித	சிரிப்பினுடைய	வஜ்ரஜால	வஜ்ரஸமூகத்தால்
உத்க்ருஷ்ட	சிரேஷ்டமான	விபூஷிதை:	அலங்கரிக்கப்பட்டனவாயுமிருக்கிற
நிநதை:	சப்தங்களையுடையனவாயும்	க்ருஹமுக்யை:	சிரேஷ்டமான வீடுகளால்
வஜ்ராங்குஶநிகாஶை:ச=		ரம்யா	மனோக்கியமாயிருக்கிற
வஜ்ர	வஜ்ராயுதத்தையே	புரீ	(இலங்கா) நகரமானது
அங்குஶ	மாவட்டியாகவுடைய ஐராவதமென்கிற கஜசிரேஷ்டத்திற்கு	அம்புதை:	மேகங்களால்
		த்யௌரிவ	ஆகாசம்போல்
		பபாஸே	பிரகாசித்தது.

தா-ம்—ஸ்வர்க்கலோகத்திலுள்ள ஐராவதமென்கிற கஜசிரேஷ்டம்போல் வெளுத்து, ரத்னகோடிகளாலிழைக்கப்பட்டு, நர்த்தனவாத்தியகோஷங்களாலும் ஸந்தோஷமிகுதியாலுண்டாகிற நகைப்புத்வனிகளாலும் நிறைந்து அதியழகாய் விளங்குகிற மாளிகைகள் சூழ்ந்த இலங்காநகரமானது வெண்மேகங்களடர்ந்த ஆகாசம்போல் பிரகாசித்தது.

౬. ప్రజజ్వాల తదాలంకారరక్షోగణగృహైశ్శుభైః సితాభ్రసదృశైశ్చిత్రైః పద్మస్వస్తికసంస్థితైః॥
౭. వర్ధమానగృహైశ్చాపి సర్వతస్సువిభూషితా॥ తాంచిత్రమాల్యాభరణాంకపిరాజహితంకరః।
౮. రాఘవార్థంచరన్ శ్రీమాన్ దదర్శచననందచ॥

௬. 𑌪𑍍𑌰𑌜𑌜𑍍𑌵𑌾𑌲 𑌤𑌦𑌾𑌲𑌙𑍍𑌕𑌾 𑌰𑌕𑍍𑌷𑍋𑌗𑌣𑌗𑍃𑌹𑍈𑌶𑍍𑌶𑍁𑌭𑍈𑌃॥
௭. 𑌸𑌿𑌤𑌾𑌭𑍍𑌰𑌸𑌦𑍃𑌶𑍈𑌶𑍍𑌚𑌿𑌤𑍍𑌰𑍈𑌃 𑌪𑌦𑍍𑌮𑌸𑍍𑌵𑌸𑍍𑌤𑌿𑌕𑌸𑌂𑌸𑍍𑌥𑌿𑌤𑍈𑌃।
𑌵𑌰𑍍𑌧𑌮𑌾𑌨𑌗𑍃𑌹𑍈𑌶𑍍𑌚𑌾𑌪𑌿 𑌸𑌰𑍍𑌵𑌤𑌸𑍍𑌸𑍁𑌵𑌿𑌭𑍂𑌷𑌿𑌤𑌾॥
௮. 𑌤𑌾𑌂 𑌚𑌿𑌤𑍍𑌰𑌮𑌾𑌲𑍍𑌯𑌾𑌭𑌰𑌣𑌾𑌂 𑌕𑌪𑌿𑌰𑌾𑌜𑌹𑌿𑌤𑌙𑍍𑌕𑌰𑌃।
𑌰𑌾𑌘𑌵𑌾𑌰𑍍𑌥𑌂 𑌚𑌰𑌨𑍍 𑌶𑍍𑌰𑍀𑌮𑌾𑌨𑍍 𑌦𑌦𑌰𑍍𑌶 𑌚 𑌨𑌨𑌨𑍍𑌦 𑌚॥

௬. ப்ரஜஜ்வாலததாலங்காரக்ஷோகணக்ருஹைஶ்ஶுபை:||
௭. ஸிதாப்ரஸத்ருஶைஶ்சித்ரை:பத்மஸ்வஸ்திகஸம்ஸ்திதை:|
வர்த்தமாநக்ருஹைஶ்சாபிஸர்வதஸ்ஸுவிபூஷிதா||
௮. தாம்சித்ரமால்யாபரணாம்கபிராஜஹிதம்கர:|
ராகவார்த்தம்சரந்ஶ்ரீமாந்ததர்ஶசநநந்தச||

பதம்.	உரை.	பதம்.	உரை.
ஶுபை:	மங்களகரமாயும்	ஸுவிபூஷிதா	நன்றாயலங்கரிக்கப்பட்ட
ஸிதாப்ரஸத்ருஶை:=		லங்கா	இலங்கையானது
ஸிதாப்ர	வெளுத்திருக்கிற மேகத்திற்கு	ததா	அப்பொழுது
ஸத்ருஶை:	ஸமானமாயிருக்கின்றனவாயும்	ப்ரஜஜ்வால	பிரகாசித்தது
சித்ரை:	விசித்ரமாயும்	கபிராஜஹிதம்கர:=	
பத்மஸ்வஸ்திகஸம்ஸ்திதை:=		கபிராஜ	ஸுக்ரீவமஹாராஜாவுக்கு
பத்ம	பத்மமென்றும்	ஹிதம்கர:	க்ஷேமத்தைச்செய்கிற ஹநுமான்
ஸ்வஸ்திக	ஸ்வஸ்திகமென்றும் சொல்லப்பட்ட கட்டடவிசேஷங்களோடு	ராகவார்த்தம்	ஸ்ரீராகவனுடைய பிரயோஜனமாக
		சரந்	ஸஞ்சரித்துக்கொண்டு
ஸம்ஸ்திதை:	கூடிக்கொண்டிருக்கின்றனவாயுமிருக்கிற	ஸ்ரீமாந்	ஸம்பத்யுக்தவானாக
ரக்ஷோகணக்ருஹை:=		சித்ரமால்யாபரணாம்	விசித்திரமான மாலைகள், ஆபரணங்கள் இவைகளோடுகூடின
ரக்ஷோகண	இராக்ஷஸக்கூட்டங்களுடைய		
க்ருஹை:	வீடுகளாலும்	தாம்	அந்த இலங்கையை
வர்த்தமானக்ருஹை:	வர்த்தமான மென்கிற கட்டட விசேஷங்களோடுகூடின வீடுகளாலும்	ததர்ஶ	பார்த்தார்
		நநந்தச	ஸந்தோஷிக்கவும் ஸந்தோஷித்தார்.
ஸர்வத:	நாலுபக்கங்களிலும்		

தா-ம்—வெகு தாவள்ளியமான் சுண்ணச்சாந்தினால் பூசப்பட்டு சரத்காலமேகம்போல் மிகவும் வெளுத்து அதிவிசித்திரமாயும் சுபகரமாயும் விளங்குகிற அந்த ராக்ஷஸமாளிகைகள், பத்மம், ஸ்வஸ்திகம், வர்த்தமானமென்கிற நானுவித கட்டட விசேஷங்களோடுகூடி இலங்காநகரத்தை நான்குபக்கங்களிலும் அத்யாச்சரியமாயலங்கரித்தன. ஸுக்கிரீவமஹாராஜாவினுடைய க்ஷேமார்த்தமாகவும், இராகவனுடைய காரியார்த்தமாகவும் மஹாவிக்கினங்களையெல்லாம் தாண்டி இலங்கிணியையும் ஜயித்து எந்த வீரனும் பிரவேசிக்க

முடியாத இராவணநகரத்தில் நிர்ப்பயமாய்ப் பிரவேசித்து, ''இனி ஸீதாதர்ஸனம் கிடைக்கும். ஸ்ரீராமகாரியம் நிறைவேறு'' மென்கிற மனோதைரியத்தால் பிரஸன்னமான திருமுகமண்டலத்தையுடைய ஹநுமான், அந்நகரத்திலுள்ள கிரகங்களினமைப்பையும், அழகையும், தாவள்ளியத்தையும், இரத்தினகாந்தியையுங்கண்டு பரமாச்சரியங்கொண்டார்.

౯. భవనాద్భవనంగచ్ఛన్ దదర్శ పవనాత్మజః। వివిధాకృతిరూపాణి భవనాని తతస్తతః॥

கூ. ப⁴வநாத்³ ப⁴வநம் க³ச்ச²ந் த³த³ர்ஸ² பவநாத்மஜ:।
விவிதா⁴க்ருதிரூபாணி ப⁴வநாநி ததஸ்தத:॥

கூ. பவநாத்பவநம்கச்சந்ததர்ஸபவநாத்மஜ:।
விவிதாக்ருதிரூபாணிபவநாநிததஸ்தத:॥

பதம்.	உரை.	பதம்.	உரை.
பவநாத்மஜ:	வாயுகுமாரரான ஹநுமான்	விவிதாக்ருதிரூபாணி=	
பவநாத்	ஒரு வீட்டினின்றும்	விவிதாக்ருதி	அனேகவிதமான
பவநம்	வேறொரு வீட்டிற்கு	ரூபாணி	ரூபத்தையுடைய
கச்சந் (ஸந்)	போகானின்றுகொண்டு	பவநாநி	வீடுகளை
ததஸ்தத:	அங்கங்கே	ததர்ஸ	பார்த்தார்.

౧౦. శుశ్రావ మధురం గీతం త్రిస్థానస్వరభూషితమ్। స్త్రీణాం మదసమృద్ధానాం దివి చాప్సరసామివ॥

௧௦. ஸு²ஸ்²ராவ மது⁴ரம் கீ³தம் த்ரிஸ்தா²நஸ்வரபூ⁴ஷிதம்।
ஸ்த்ரீணாம் மத³ஸம்ருத்³தா⁴நாம் தி³வி சாப்ஸரஸாமிவ॥

௧௦. ஸுஸ்ராவமதுரம்கீதம்த்ரிஸ்தாநஸ்வரபூஷிதம்।
ஸ்த்ரீணாம்மதஸம்ருத்தாநாம்திவிசாப்ஸரஸாமிவ॥

பதம்.	உரை.	பதம்.	உரை.
திவி	ஸ்வர்க்கத்திலுள்ள	த்ரிஸ்தாந	மார்பு, கழுத்து, தலை இம்மூன்று ஸ்தானங்களிலிருந்துண்டாகிற
அப்ஸரஸாமிவ	அப்ஸரஸ்திரீகளுடையதுபோல்		
மதஸம்ருத்தாநாம்=		ஸ்வர	மந்த்ரமத்யதாரகங்களென்கிற ஸ்வரத்திஞல்
மத	யௌவனக்கொழுப்பினால்	பூஷிதம்	அலங்கரிக்கப்பட்டும்
ஸம்ருத்தாநாம்	பரிபூர்ணமாயிருக்கிற	மதுரம்	மனோகரமாயுமிருக்கிற
ஸ்த்ரீணாம்	ஸ்திரீகளுடைய	கீதம்	ஸங்கீதத்தை
த்ரிஸ்தாநஸ்வரபூஷிதம்=		ஸுஸ்ராவ	கேட்டார்.

౧౧. శుశ్రావ కాంచీనినదం నూపురాణాం చ నిస్స్వనమ్। సోపాననినదాంశ్చైవ భవనేషు మహాత్మనామ్॥

౧౨. ఆస్ఫోటితనినాదాంశ్చ క్ష్వేళితాంశ్చ తతస్తతః॥

௧௧. ஸு²ஸ்²ராவ காஞ்சீநிநத³ம் நூபுராணாம் ச நிஸ்ஸ்வநம்।
ஸோபாநநிநதா³ம்ஸ்²சைவ ப⁴வநேஷு மஹாத்மநாம்॥

௧௨. ஆஸ்போ²டிதநிநாதா³ம்ஸ்²ச க்ஷ்வேளிதாம்ஸ்²ச ததஸ்தத:।

௧௧. ஸுஸ்ராவகாஞ்சீநிநதம்நூபுராணாம்சநிஸ்வநம்।
ஸோபாநநிநதாம்ஸ்சைவபவநேஷுமஹாத்மநாம்॥

௧௨. ஆஸ்போடிதநிநாதாம்ஸ்சக்ஷ்வேளிதாம்ஸ்சததஸ்தத:।

பதம்.	உரை.	பதம்.	உரை.
மஹாத்மநாம்	மேன்மையுடையவர்களுடைய	நிநதாம்ஸ்சைவ	சப்தங்களையும்
பவநேஷு	மாளிகைகளில்	ததஸ்தத:	அங்கங்கே
காஞ்சீநிநதம்	ஒட்டியாணசப்தத்தையும்	ஆஸ்போடிதநிநாதாம்ஸ்ச=	
நூபுராணாம்	காற்சலங்கைகளுடைய	ஆஸ்போடித	தோள் தட்டுதலினாலுண்டாகிற
நிஸ்வநம்	த்வனியையும்	நிநாதாம்ஸ்ச	சப்தங்களையும்
ஸோபாநநிநதாம்ஸ்சைவ=		க்ஷ்வேளிதாம்ஸ்ச	ஸிம்ஹநாதங்களையும்
ஸோபாந	மித்தைப்படிகளுடைய	ஸுஸ்ராவ	கேட்டார்.

(கூ-௧௦-௧௧-௧௨ - ஸ்லோகங்களுக்குத்) தா-ம்—இந்தவிதம் அந்நகரத்திலுள்ள மாளிகைகளின் திவ்வியாலங்காரத்தைக்கண்டு வியப்புற்ற ஹநுமான் ஸீதாதேவி யிருக்குமிடத்தை வீடுகள்தோறும் தேடியறிய ஆரம்பித்தனர். ஒருவீட்டினின்று மற்றொரு வீட்டிற்குப்போகையில் அந்தந்த வீடுகள் கட்டப்பட்டிருக்கிற கட்டட விநோதங்களையும் விசித்திராலங்கார விசேஷங்களையுங் கண்டார். அநேகமாளிகைகளில் அப்ஸரஸ்திரீகள்போல் திவ்விய ஸௌந்தரியமுள்ளவர்களாய், யௌவ்வனபரிபாகத்தால் மதித்தவர்களாய், மிக உத்ஸாகத்தோடுகூடின ஸ்திரீகள், மார்பு கண்டம் சிரஸென்கிற மூன்று பிரதேசங்களிலுண்டாகிற மந்த்ரமத்ய

தாரகமென்னும் திவ்ய ஸ்வரங்களமைந்து அந்தக்கரணத்தைக் கவரும்படியான ஆனந்தரஸத்தைப்பொழி யும் கண்டத்தோடு கானஞ்செய்கிற மனோகரமான ஸங்கீதத்தைக்கேட்டார். சில கனவான்களுடைய உப்ப ரிகைகளில் யௌவ்வனச்செருக்காலும் மத்தியபான மயக்கத்தாலும் சிருங்காரவிளையாட்டுகளை அமிதமாக ச்செய்கிற ஸ்திரீகளுடைய ஒட்யாண த்வனியையும், நூபுரநாதத்தையும், படிகளேறியிறங்குகிற கோஷத் தையுங்கேட்டார். இன்னம் சிலவிடங்களில் யௌவ்வனமதிப்படைந்த ஆடவர்கள் ஒருவர்க்கொருவர் வீர வாதஞ்செய்கையில் தோள்தட்டுதல், கர்ஜ்ஜித்தல் முதலிய சேஷ்டிதங்களாலுண்டாகிற மஹாநாதத்தையுங் கேட்டார்.

౧౨. శుశ్రావ జపతాం తత్ర మంత్రాన్ రక్షోగృహేషు వై॥

கஉ. 𑌶𑍁𑌶𑍍𑌰𑌾𑌵 𑌜𑌪𑌤𑌾𑌂 𑌤𑌤𑍍𑌰 𑌮𑌨𑍍𑌤𑍍𑌰𑌾𑌨𑍍 𑌰𑌕𑍍𑌷𑍋𑌗𑍃𑌹𑍇𑌷𑍁 𑌵𑍈॥

கஉ. ஶுஶ்ராவஜபதாம்தத்ரமந்த்ராந்ரக்ஷோக்ருஹேஷுவை॥

பதம்.	உரை.	பதம்.	உரை.
தத்ர	அந்தலங்காநகரத்தில்	மந்த்ராந்	மந்திரங்களை
ரக்ஷோக்ருஹேஷு	இராக்ஷதர்களுடைய வீட்டில்	ஶுஶ்ராவ	கேட்டார்.
ஜபதாம்	ஜபம்பண்ணுகிறவர்களுடைய		

தா-ம்—இந்தவிதம் சிருங்காரவிலாஸஸம்பந்தமான கானங்களையும் ஆபரணவோஸைகளையுங்கேட்ட ஹநுமான் சில வேதமறிந்த அரக்கர்கள் தங்கள் கிரகங்களிலுச்சரித்துக்கொண்டிருக்கிற ருக் யஜுஸ் ஸாம மென்கிற வேதங்களைக்கேட்டார்.

౧౩. స్వాధ్యాయనిరతాంశ్చైవ యాతుధానాన్ దదర్శ సః। రావణస్తవసంయుక్తాన్ గర్జతో రాక్షసానపి॥

கங. 𑌸𑍍𑌵𑌾𑌧𑍍𑌯𑌾𑌯𑌨𑌿𑌰𑌤𑌾𑌂𑌶𑍍𑌚𑍈𑌵 𑌯𑌾𑌤𑍁𑌧𑌾𑌨𑌾𑌨𑍍 𑌦𑌦𑌰𑍍𑌶 𑌸𑌃।
𑌰𑌾𑌵𑌣𑌸𑍍𑌤𑌵𑌸𑌂𑌯𑍁𑌕𑍍𑌤𑌾𑌨𑍍 𑌗𑌰𑍍𑌜𑌤𑍋 𑌰𑌾𑌕𑍍𑌷𑌸𑌾𑌨𑌪𑌿॥

கங. ஸ்வாத்யாயநிரதாம்ஶ்சைவயாதுதாநாந்ததர்ஶஸ:।
ராவணஸ்தவஸம்யுக்தாந்கர்ஜ்ஜதோராக்ஷஸாநபி॥

பதம்.	உரை.	பதம்.	உரை.
ஸ:	அம்மாருதி	ராவண	தசக்கிரீவனுடைய
ஸ்வாத்யாயநிரதாந்—		ஸ்தவ	ஸ்தோத்திரத்தோடு
ஸ்வாத்யாய	அத்தியயனத்தில்	ஸம்யுக்தாந்	கூடிக்கொண்டு
நிரதாந்	ஆஸக்தியுடைய	கர்ஜ்ஜத:	கோஷிக்கிற
யாதுதாநாந்	இராக்ஷஸர்களையும்	ராக்ஷஸாநபி	அரக்கர்களையும்
ராவணஸ்தவஸம்யுக்தாந்—		ததர்ஶ	பார்த்தார்.

౧౪. రాజమార్గం సమావృత్య స్థితం రక్షోబలం మహత్। దదర్శ మధ్యమే గుల్మే రావణస్య చరాన్ బహూన్॥

கச. 𑌰𑌾𑌜𑌮𑌾𑌰𑍍𑌗𑌂 𑌸𑌮𑌾𑌵𑍃𑌤𑍍𑌯 𑌸𑍍𑌥𑌿𑌤𑌂 𑌰𑌕𑍍𑌷𑍋𑌬𑌲𑌂 𑌮𑌹𑌤𑍍।
𑌦𑌦𑌰𑍍𑌶 𑌮𑌧𑍍𑌯𑌮𑍇 𑌗𑍁𑌲𑍍𑌮𑍇 𑌰𑌾𑌵𑌣𑌸𑍍𑌯 𑌚𑌰𑌾𑌨𑍍 𑌬𑌹𑍂𑌨𑍍॥

கச. ராஜமார்க்கம்ஸமாவ்ருத்யஸ்திதம்ரக்ஷோபலம்மஹத்।
ததர்ஶமத்யமேகுல்மேராவணஸ்யசராந்பஹூந்॥

பதம்.	உரை.	பதம்.	உரை.
ராஜமார்க்கம்	ராஜவீதியை	குல்மே	(ஸைந்ய) ஸமூகத்தில்
ஸமாவ்ருத்ய	நன்றாகச் சூழ்ந்துகொண்டு	ராவணஸ்ய	இராவணனுடைய
ஸ்திதம்	இருக்கிற	பஹூந்	அனேகர்களான
மஹத்	பெரிதான	சராந்	கூடபுருஷர்களையும்
ரக்ஷோபலம்	இராக்ஷஸ ஸைந்நியத்தையும்	ததர்ஶ	பார்த்தார்.
மத்யமே	(பட்டணத்திற்கு) நடுவில்		

(கங-கச-வது ஶ்லோகங்களுக்குத்) தா-ம்—பிறகு அம்மாருதியானவர், பிரம்மயக்ஞம் முதலான நித் திய சடங்குகளை முடித்து ருக்யஜுஸ் ஸாமமென்கிற வேதங்களை ஸகிம்ஹிதையாய். ஸந்தை சொல்லிக்கொ ண்டும், கிரமம், ஜடை, கனம் முதலான வேதாத்தியனக்கிரமங்களை அநுஸந்தித்துக்கொண்டு மிருக்கிற அனேக இராக்ஷஸர்களைக்கண்டார். இந்திர வருண குபேராதி திக்பாலகாளைவென்று கைலாஸகிரியைப்பேர் த்து பாசுபதாஸ்திரம்பெற்று, தேவர்களையடித்து, பரமசிவனுக்கு மித்திரனாய் பிரம்மாவுக்குக் கொள்பேர னாய் ஸர்வ ஜகத்பிரஸித்தனாய் அஷ்டலக்ஷ்மீஸஹிதனாய் வாழ்ந்துவருகிற மஹாப்பிரதாபசாலியான இராவ ணனுடைய திவ்விய வீரசரித்திரத்தைப்பாடி, "ஜெயவிஜயீபவ" வென்று அண்டகடாஹங்கள் பிளக்கும் படி கர்ஜ்ஜித்து அந்த தசகண்டனை ஸ்தோத்திரம்பண்ணுகிற அனேக ஸ்துதிபாடகர்களைக் கண்டார். அனந்த ரம், நகரமத்தியில் இராஜவீதியில் ஸ்தாபிக்கப்பட்டு அங்கிருந்து நகரமுழுதையும் அதிஜாக்கிரதையாய்ப் பா

துகாத்துவருகிற ஸமுத்திரஸாம்யமான மஹா ஸைந்யத்தையும், அதற்குள்ளும் புறமும் நுழைந்து வெளிப்பட்டு, அங்கங்கு மஹாராஜாவைப்பற்றி நடக்கிற விருத்தாந்தங்களையறிந்து யாவருக்குந்தெரியாமல் இராவணனுக்கு அடிக்கடி தெரிவிக்கிற அனேக கூடபுருஷர்களையுங்கண்டார்.

౧౫. దీక్షితాన్ జటిలాన్ ముండాన్ గోజినాంబరధారిణః। దర్భముష్టిప్రహరణానగ్నికుండాయుధాంస్తథా॥
౧౬. కూటముద్గరపాణీంశ్చ దండాయుధధరానపి। ఏకాక్షానేకకర్ణాంశ్చ లంబోదరపయోధరాన్॥
౧౭. కరాళాన్ భుగ్నవక్త్రాంశ్చ వికటాన్వామనాంస్తథా। ధన్వినః ఖడ్గినశ్చైవ శతఘ్నీముసలాయుధాన్॥
౧౮. పరిఘోత్తమహస్తాంశ్చ విచిత్రకవచోజ్జ్వలాన్। నాతిస్థూలాన్నాతికృశాన్నాతిదీర్ఘాతిహ్రస్వకాన్॥
౧౯. నాతిగౌరాన్నాతికృష్ణాన్నాతికుబ్జాన్నవామనాన్। విరూపాన్ బహురూపాంశ్చ సురూపాంశ్చ సువర్చసః॥
౨౦. ధ్వజినః పతాకినశ్చైవ దదర్శ వివిధాయుధాన్।

௧௫. 𑌦𑍀𑌕𑍍𑌷𑌿𑌤𑌾𑌨𑍍𑌜𑌟𑌿𑌲𑌾𑌨𑍍𑌮𑍁𑌣𑍍𑌡𑌾𑌨𑍍𑌗𑍋𑌜𑌿𑌨𑌾𑌮𑍍𑌬𑌰𑌧𑌾𑌰𑌿𑌣𑌃।
𑌦𑌰𑍍𑌭𑌮𑍁𑌷𑍍𑌟𑌿𑌪𑍍𑌰𑌹𑌰𑌣𑌾𑌨𑌗𑍍𑌨𑌿𑌕𑍁𑌣𑍍𑌡𑌾𑌯𑍁𑌧𑌾𑌂𑌸𑍍𑌤𑌥𑌾॥
௧௬. 𑌕𑍂𑌟𑌮𑍁𑌦𑍍𑌗𑌰𑌪𑌾𑌣𑍀𑌂𑌶𑍍𑌚𑌦𑌣𑍍𑌡𑌾𑌯𑍁𑌧𑌧𑌰𑌾𑌨𑌪𑌿।
𑌏𑌕𑌾𑌕𑍍𑌷𑌾𑌨𑍇𑌕𑌕𑌰𑍍𑌣𑌾𑌂𑌶𑍍𑌚𑌲𑌮𑍍𑌬𑍋𑌦𑌰𑌪𑌯𑍋𑌧𑌰𑌾𑌨𑍍॥
௧௭. 𑌕𑌰𑌾𑌳𑌾𑌨𑍍𑌭𑍁𑌗𑍍𑌨𑌵𑌕𑍍𑌤𑍍𑌰𑌾𑌂𑌶𑍍𑌚𑌵𑌿𑌕𑌟𑌾𑌨𑍍𑌵𑌾𑌮𑌨𑌾𑌂𑌸𑍍𑌤𑌥𑌾।
𑌧𑌨𑍍𑌵𑌿𑌨𑌃𑌖𑌡𑍍𑌗𑌿𑌨𑌶𑍍𑌚𑍈𑌵𑌶𑌤𑌘𑍍𑌨𑍀𑌮𑍁𑌸𑌲𑌾𑌯𑍁𑌧𑌾𑌨𑍍॥
௧௮. 𑌪𑌰𑌿𑌘𑍋𑌤𑍍𑌤𑌮𑌹𑌸𑍍𑌤𑌾𑌂𑌶𑍍𑌚𑌵𑌿𑌚𑌿𑌤𑍍𑌰𑌕𑌵𑌚𑍋𑌜𑍍𑌜𑍍𑌵𑌲𑌾𑌨𑍍।
𑌨𑌾𑌤𑌿𑌸𑍍𑌥𑍂𑌲𑌾𑌨𑍍𑌨𑌾𑌤𑌿𑌕𑍃𑌶𑌾𑌨𑍍𑌨𑌾𑌤𑌿𑌦𑍀𑌰𑍍𑌘𑌾𑌤𑌿𑌹𑍍𑌰𑌸𑍍𑌵𑌕𑌾𑌨𑍍॥
௧௯. 𑌨𑌾𑌤𑌿𑌗𑍌𑌰𑌾𑌨𑍍𑌨𑌾𑌤𑌿𑌕𑍃𑌷𑍍𑌣𑌾𑌨𑍍𑌨𑌾𑌤𑌿𑌕𑍁𑌬𑍍𑌜𑌾𑌨𑍍𑌨𑌵𑌾𑌮𑌨𑌾𑌨𑍍।
𑌵𑌿𑌰𑍂𑌪𑌾𑌨𑍍𑌬𑌹𑍁𑌰𑍂𑌪𑌾𑌂𑌶𑍍𑌚𑌸𑍁𑌰𑍂𑌪𑌾𑌂𑌶𑍍𑌚𑌸𑍁𑌵𑌰𑍍𑌚𑌸𑌃॥
௨௦. 𑌧𑍍𑌵𑌜𑌿𑌨𑌃𑌪𑌤𑌾𑌕𑌿𑌨𑌶𑍍𑌚𑍈𑌵𑌦𑌦𑌰𑍍𑌶𑌵𑌿𑌵𑌿𑌧𑌾𑌯𑍁𑌧𑌾𑌨𑍍।

௧௫. தீக்ஷிதாங்ஜடிலாங்முண்டாங்கோஜிநாம்பரதாரிண꞉।
தர்ப்பமுஷ்டிப்ரஹாரணாநக்நிகுண்டாயுதாம்ஸ்ததா॥
௧௬. கூடமுத்கரபாணீம்ஶ்ச தண்டாயுததராநபி।
ஏகாக்ஷாநேககர்ணாம்ஶ்சலம்போதரபயோதராந்॥
௧௭. கராளாந்புக்நவக்த்ராம்ஶ்சவிகடாந்வாமநாம்ஸ்ததா।
தந்விந꞉கட்கிநஶ்சைவஶதக்நீமுஸலாயுதாந்॥
௧௮. பரிகோத்தமஹஸ்தாம்ஶ்சவிசித்ரகவசோஜ்வலாந்।
நாதிஸ்தூலாந்நாதிக்ருஶாந்நாதிதீர்க்காதிஹ்ரஸ்வகாந்॥
௧௯. நாதிகௌராந்நாதிக்ருஷ்ணாந்நாதிகுப்ஜாந்நவாமநாந்।
விரூபாந்பஹுரூபாம்ஶ்சஸுரூபாம்ஶ்சஸுவர்ச்சஸ꞉॥
௨௦. த்வஜிந꞉பதாகிநஶ்சைவததர்ஶவிவிதாயுதாந்।

பதம்.	உரை.
தீக்ஷிதாந்	யக்கிய தீக்ஷையுடையவர்களையும்
ஜடிலாந்	ஜடையை தரித்தவர்களையும்
முண்டாந்	தீக்ஷாவிஸர்ஜ்ஜனஞ்செய்து மொட்டையாயிருப்பவர்களையும்
கோஜிநாம்பரதாரிண꞉=	
கோஜிநாம்பர	எருதுதோலாகிற வஸ்திரத்தை
தாரிண꞉	தரித்தவர்களையும்
தர்ப்பமுஷ்டிப்ரஹாரணாந்=	
தர்ப்பமுஷ்டி	பிடி தர்ப்பத்தை
ப்ரஹாரணாந்	ஆயுதமாயுடையவர்களையும்
ததா	அப்படியே
அக்நிகுண்டாயுதாந்=	
அக்நிகுண்ட	ஹோமகுண்டங்களை
ஆயுதாந்	ஆயுதமாயுடையவர்களையும்
கூடமுத்கரபாணீம்ஶ்ச=	
கூடமுத்கர	கூடமுத்கரமென்கிற ஆயுதங்களை
பாணீம்ஶ்ச	கையிலுடையவர்களையும்

பதம்.	உரை.
தண்டாயுதததராநபி	தண்டாயுதத்தையுடையவர்களையும்
ஏகாக்ஷாந்	ஒத்தைக்கண்ணுடையவர்களையும்
ஏககர்ணாம்ஶ்ச	ஒத்தைக்காதுடையவர்களையும்
லம்போதரபயோதராந்=	
லம்ப	தொங்கிக்கொண்டிருக்கிற
உதர	வயிறென்ன
பயோதராந்	ஸ்தனங்களென்ன, இதுகளையுடையவர்களையும்
கராளாந்	பயங்கரமான ரூபத்தையுடையவர்களையும்
புக்நவக்த்ராம்ஶ்ச=	
புக்ந	கோணலான
வக்த்ராம்ஶ்ச	முகத்தையுடையவர்களையும்
விகடாந்	ஏறக்குறையவிருக்கிற அவயவங்களையுடையவர்களையும்
ததா	அப்படியே
வாமநாந்	குள்ளர்களையும்

பதம்.	உரை.
தந்விநஃ	தனுஸ்ஸுடையவர்களையும்
கட்கிநஶ்சைவ	கத்தியுடையவர்களையும்
ஶதக்நீமுஸலாயுதாந்	பீரங்கி உலக்கைமுதலிய ஆயுதங்களையுடையவர்களையும்
பரிகோத்தமஹஸ்தாம்ஶ்ச=	
பரிகோத்தம	சிரேஷ்டமான இருப்புத்தடியை
ஹஸ்தாம்ஶ்ச	கையிலுள்ளவர்களையும்
விசித்ரகவசோஜ்வலாந்=	
விசித்ர	நானாவிதமாயிருக்கிற
கவச	கவசங்களினால்
உஜ்வலாந்	பிரகாசித்துக்கொண்டிருக்கிறவர்களையும்
நாதிஸ்தூலாந்	வெகு பெருத்திராதவர்களையும்
நாதிக்ருஶாந்	மிகவும் இளைத்திராதவர்களையும்
நாதிதீர்க்காதிஹ்ரஸ்வகாந்=	
நாதிதீர்க்க	அதிக உயரமாயும்
நாதிஹ்ரஸ்வாந்	மிகவும் குள்ளமில்லாதவர்களையும்
நாதிகௌராந்	அதிகமாக வெளுத்திராதவர்களையும்
நாதிக்ருஷ்ணாந்	அதிக கறுப்பாயில்லாதவர்களையும்
நாதிகுப்ஜாந்	அதிக கூனில்லாதவர்களையும்
நவாமநாந்	குள்ளமில்லாதவர்களையும்
விரூபாந்	குரூபிகளையும்
பஹுரூபாம்ஶ்ச	அதிக ரூபமுடையவர்களையும்
ஸுரூபாம்ச	நல்ல ரூபத்தையுடையவர்களையும்
ஸுவர்ச்சஸஃ	நல்ல தேஜஸ்ஸுடையவர்களையும்
த்வஜிநஃ	கொடிகளுடையவர்களையும்
பதாகிநஶ்சைவ	பதாகங்களையுடையவர்களையும்
விவிதாயுதாந்	நானாவித ஆயுதங்களையுடையவர்களையும்
ததர்ஶ	(ஹநுமார்) பார்த்தார்.

தா-ம்—பெரிய யாகங்களைச் செய்யத்தொடங்கி தீக்ஷாஸம்ஹிதர்களாயிருப்பவர் சிலர். ஆரம்பித்த யாகங்களைப் பூர்த்திபண்ணி அவபிருதஸ்நானஞ்செய்து தீக்ஷாவிஸர்ஜ்ஜனமடைந்தவர் சிலர். ஜடாபாரம் தாங்கின தபஸ்விகள் சிலர். சில மந்திரஸித்தியின்பொருட்டு எருதுத்தோலை வஸ்திரமாக அணிந்தவர் சிலர். அனிஷ்ட நிவாரணார்த்தம் தர்ப்பைகளை ஆயுதமாகத் தாங்கினவர் சிலர். சத்ருக்ஷயார்த்தம் ஹோமகுண்டங்களில் அதர்வணவேதமந்திரம் ஜபித்துக்கொண்டே ஆஹுதிகள் செய்வார் சிலர். தடிகளையும் கத்திகளையும் உலக்கைகளையும் ஈட்டிகளையும் விற்களையும் பீரங்கிகளையும் இன்னம் பற்பல ஆயுதங்களையுந் தாங்கினவரனேகர். சிலருக்கு ஒருகண், சிலருக்கு ஒருகாது, சிலருக்குத் தொங்குகிற வயறு. சிலருக்குத் தொங்குகிற ஸ்தனம். கோரமான பார்வையுடையவர் சிலர். முகங்கோணி வாய்கோணி வக்ராக்ருதியாயிருப்பவர் சிலர். நீண்ட கைகளும் நீண்ட கால்களும் பெருத்த தொந்தியுமுடையவர் சிலர். கைகுறைந்து கால் குறைந்து மற்ற அங்கங்களும் குறைந்து குரூபிகளாயிருப்பவர் சிலர். சிலர் அதிக குள்ளர். சிலர் அதிக நெடியர். சிலர் ஸ்தூலசரீரிகள். சிலர் மிகவும் இளைத்து வாடினவர்கள். சிலர் கிருஷ்ணபக்ஷ ராத்திரிபோல் கறுத்தவர். சிலர் பௌர்ணமி ராத்திரிபோல் வெளுத்தவர். அதிக குள்ளமில்லாமலும், அதிக உயரமில்லாமலும், மிக கறுத்திராமலும், வெகு வெளுத்திராமலும், விசேஷ அழகுள்ளவர்களாயும் விசேஷ குரூபிகளாயுமிராமல் ஸாதாரணரூபவான்களாயிருப்பவரனேகர். ஸமஸ்த லக்ஷணங்களுமமைந்து மிக தேஜஸ்ஸோடுகூடி ஸர்வாபரணபூஷிதர்களாயதிஸுந்தரமாய் விளங்குவர் சிலர். கவசங்கள் தரித்து ஆபரணங்கள் பூண்டு லக்ஷ்மீவான்களாய் விளங்குபவர் சிலர். இப்படி நானாவித இராக்ஷஸர்களையும், ஆயுதபாணிகளான யுத்தவீரர்களையும், த்வஜங்களைத் தாங்கின புருஷர்களையும், குரூபிகளான ஜனங்களையும், அழகான ஸ்திரீபுமான்களையும் கண்டார்.

௨௰. శక్తివృక్షాయుధాంశ్చైవపట్టసాశనిధారిణః॥
௨௧. క్షేపణీపాశహస్తాంశ్చదదర్శసమహాకపిః। స్రగ్విణస్త్వనులిప్తాంశ్చవరాభరణభూషితాన్॥
௨௨. నానావేషసమాయుక్తాన్యథాస్వైరగతాన్బహూన్। తీక్ష్ణశూలధరాంశ్చైవవజ్రిణశ్చమహాబలాన్॥

௨௰. ஶக்திவ்ருக்ஷாயுதாம்ஶ்சைவபட்டஸாஶநிதாரிணஃ॥
௨௧. க்ஷேபணீபாஶஹஸ்தாம்ஶ்சததர்ஶஸமஹாகபிஃ।
ஸ்ரக்விணஸ்த்வநுலிப்தாம்ஶ்சவராபரணபூஷிதாந்॥
௨௨. நாநாவேஷஸமாயுக்தாந்யதாஸ்வைரகதாந்பஹூந்।
தீக்ஷ்ணஶூலதராம்ஶ்சைவவஜ்ரிணஶ்சமஹாபலாந்॥

௨௰. ஶக்திவ்ருக்ஷாயுதாம்ஶ்சைவபட்டஸாஶநிதாரிணஃ॥
௨௧. க்ஷேபணீபாஶஹஸ்தாம்ஶ்சததர்ஶஸமஹாகபிஃ।
ஸ்ரக்விணஸ்த்வநுலிப்தாம்ஶ்சவராபரணபூஷிதாந்॥
௨௨. நாநாவேஷஸமாயுக்தாந்யதாஸ்வைரகதாந்பஹூந்।
தீக்ஷ்ணஶூலதராம்ஶ்சைவவஜ்ரிணஶ்சமஹாபலாந்॥

பதம்.	உரை.
ஸஃ	அந்த
மஹாகபிஃ	ஹநுமாரானவர்
ஶக்திவ்ருக்ஷாயுதாந்=	
ஶக்தி	சக்தியென்ன (சூலம் அல்லது வேலாயுதம்
வ்ருக்ஷ	மரங்களென்ன (இவைகளை)
ஆயுதாந்	ஆயுதமாயுடையோர்களையும்
பட்டஸாஶநிதாரிணஃ=	
பட்டஸ	கூரான இருப்புத்தடியென்ன
அஶநி	வஜ்ராயுதமென்ன
தாரிணஃ	(இவைகளை) தரித்துக்கொண்டிருக்கிறவர்களையும்

பதம்.	உரை.
க்ஷேபணீ	க்ஷேபணியென்கிற ஆயுதவிசேஷமெ
பாஶ	பாசமென்ன (இவைகளை) (ன்ன
ஹஸ்தாம்ஶ்ச	கையிலுடையோர்களையும்
ஸ்ரக்விண꞉	புஷ்பமாலை தரித்தவர்களையும்
அநுலிப்தாம்ச	(சந்தண)ப்பூச்சுடையோர்களையும்
வராபரணபூஷிதாந்=	
வர	சிரேஷ்டமான
ஆபரண	ஆபரணங்களால்
பூஷிதாந்ச	அலங்கரிக்கப்பட்டவர்களையும்
நாநாவேஷஸமாயுக்தாந்=	

பதம்.	உரை.
நாநாவேஷ	அனேகவிதமான வேஷத்தோடு
ஸமாயுக்தாந்	கூடிக்கொண்டிருப்பவர்களையும்
யதாஸ்வைரகதாந்	இஷ்டப்படி திரிந்துகொண்டிருப்பவர்களையும்
பஹூந்	அனேக ஜனஸமூகங்களையும்
தீக்ஷ்ணஶூலதராந்	கூர்மையான சூலத்தை தரித்தவர்களையும்
வஜ்ரிணஶ்ச	வஜ்ராயுதமுடையோர்களையும்
மஹாபலாந்	மிக பலசாலியான (இராக்ஷஸர்களையும்
ததர்ஶ	பார்த்தார்.

தா-ம்—பிறகு அம்மாருதியானவர் சூலம் வஜ்ராயுதம் இருப்புத்தடி விருக்ஷங்கள் கயிறுகள் முதலியவைகளை ஆயுதங்களாக தரித்துக்கொண்டிருக்கிற அனேக இராக்ஷதர்களைக்கண்டார். திவ்வியமான புஷ்பமாலைகள் தரித்து பரிமளசந்தணம் பூசி, சிரேஷ்டமான ஆபரணங்களாலலங்கரித்துக்கொண்டு ஸ்வேச்சையாயும் உல்லாஸமாயுந் திரிகிற அனேக ஸுகபுருஷர்களையுங்கண்டார். புருஷர் ஸ்திரீகள்போலும் ஸ்திரீகள் புருஷர்போலும் இன்னம் பற்பலவிதமாக தங்கள் நிஜரூபத்தைமாற்றி விசித்திரமான வேஷங்கள் பூண்ட அனேகரையும், மல்லயுத்தம் முதலானவைசெய்கிற மஹாபலசாலிகளையும், இன்னம் அனேக ஜனஸமூஹங்களையும் கண்டார்.

౨౩. శతసాహస్రమవ్యగ్రమారక్షంమధ్యమంకపిః। రక్షోధిపతినిర్దిష్టందదర్శాంతఃపురాగ్రతః॥

௨௩. 𑌶𑌤𑌸𑌾𑌹𑌸𑍍𑌰𑌮𑌵𑍍𑌯𑌗𑍍𑌰𑌮𑌾𑌰𑌕𑍍𑌷𑌂𑌮𑌧𑍍𑌯𑌮𑌂𑌕𑌪𑌿𑌃।
𑌰𑌕𑍍𑌷𑍋𑌧𑌿𑌪𑌤𑌿𑌨𑌿𑌰𑍍𑌦𑌿𑌷𑍍𑌟𑌂𑌦𑌦𑌰𑍍𑌶𑌾𑌨𑍍𑌤𑌃𑌪𑍁𑌰𑌾𑌗𑍍𑌰𑌤𑌃॥

௨௩. ஶதஸாஹஸ்ரமவ்யக்ரமாரக்ஷம்மத்யமம்கபி꞉।
ரக்ஷோதிபதிநிர்த்திஷ்டம்ததர்ஶாந்த꞉புராக்ரத꞉॥

பதம்.	உரை.
கபி꞉	ஹநுமாரானவர்
அந்த꞉புராக்ரத꞉	அந்தப்புரத்திற்கெதிரில்
ஶதஸாஹஸ்ரம்	இலக்ஷஸங்கியையுடையதாயும்
அவ்யக்ரம்	(இரக்ஷிப்பதில்) ஜாக்கிரதையுள்ளதாயும்

பதம்.	உரை.
ரக்ஷோதிபதிநிர்த்திஷ்டம்	இராக்ஷஸப்பிரபுவான இராவணனாலேற்படுத்தப்பட்டதாயும்
மத்யமம்	நடுவிலிருக்கிறதுமான
ஆரக்ஷம்	இராவணமூலபலத்தை
ததர்ஶ	பார்த்தார்.

தா-ம்—பிறகு அந்த வாயுபுத்திரர், இலங்காநகரமத்தியில் இராவணனந்தப்புரத்திற்கெதிரில் இலக்ஷக்கணக்காய் ஸ்தாபிக்கப்பட்டு, அந்த இராக்ஷஸேசுவரனுடைய ஆக்கியையால் அகோராத்திரம் விழித்த கண்களோடும் துடிக்கிற மீசைகளோடும் பிடித்த விற்களோடும் உருவின கத்திகளோடும் கடுகடுத்து சத்துருவினுடைய தைரியத்தைக் கலக்கும்படியான குரூரபார்வையோடு நின்றுகொண்டு அந்நகரத்தை இரக்ஷித்துவருகிற மூலபலமென்று ஜகத்பிரஸித்தமான ஸைந்நிய ஸமூகத்தைக்கண்டார்.

౨౪. సతదాతద్గృహందృష్ట్వామహాహాటకతోరణమ్। రాక్షసేంద్రస్యవిఖ్యాతమద్రిమూర్ధ్నిప్రతిష్ఠితమ్॥

౨౫. పుండరీకావతంసాభిఃపరిఘాభిరలంకృతమ్। ప్రాకారావృతమత్యర్థందదర్శసమహాకపిః॥

௨௪. 𑌸𑌤𑌦𑌾𑌤𑌦𑍍𑌗𑍃𑌹𑌂𑌦𑍃𑌷𑍍𑌟𑍍𑌵𑌾𑌮𑌹𑌾𑌹𑌾𑌟𑌕𑌤𑍋𑌰𑌣𑌮𑍍।
𑌰𑌾𑌕𑍍𑌷𑌸𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌸𑍍𑌯𑌵𑌿𑌖𑍍𑌯𑌾𑌤𑌮𑌦𑍍𑌰𑌿𑌮𑍂𑌰𑍍𑌧𑍍𑌨𑌿𑌪𑍍𑌰𑌤𑌿𑌷𑍍𑌠𑌿𑌤𑌮𑍍॥

௨௫. 𑌪𑍁𑌣𑍍𑌡𑌰𑍀𑌕𑌾𑌵𑌤𑌂𑌸𑌾𑌭𑌿𑌃𑌪𑌰𑌿𑌘𑌾𑌭𑌿𑌰𑌲𑌂𑌕𑍃𑌤𑌮𑍍।
𑌪𑍍𑌰𑌾𑌕𑌾𑌰𑌾𑌵𑍃𑌤𑌮𑌤𑍍𑌯𑌰𑍍𑌥𑌂𑌦𑌦𑌰𑍍𑌶𑌸𑌮𑌹𑌾𑌕𑌪𑌿𑌃॥

௨௪. ஸததாதத்க்ருஹம்த்ருஷ்ட்வாமஹாஹாடகதோரணம்।
ராக்ஷஸேந்த்ரஸ்யவிக்யாதமத்ரிமூர்த்நிப்ரதிஷ்டிதம்॥

௨௫. புண்டரீகாவதம்ஸாபி꞉பரிகாபிரலங்க்ருதம்।
ப்ராகாராவ்ருதமத்யர்த்தம்ததர்ஶஸமஹாகபி꞉॥

பதம்.	உரை.
ஸ꞉	அப்படி பிரஸித்தமான
ஸ꞉	அந்த
மஹாகபி꞉	ஹநுமாரானவர்
ததா	அப்பொழுது
தத்	அந்த மூலபலத்தை
த்ருஷ்ட்வா	பார்த்து

பதம்.	உரை.
மஹாஹாடகதோரணம்	உயர்ந்த பொன்னினாற் செய்யப்பட்ட தோரணங்களையுடையதாயும்
விக்யாதம்	எங்கும் பிரஸித்தமாயும்
அத்ரிமூர்த்நி	பர்வதத்தின் சிகரத்தில்
ப்ரதிஷ்டிதம்	ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறதாயும்
புண்டரீகாவதம்ஸாபி꞉=	

பதம்.	உரை.	பதம்.	உரை.
புண்டரீக	வெண்தாமரை புஷ்பத்தை	ஆவ்ருதம்	சூழப்பட்டதாயுமிருக்கிற
அவதம்ஸாபி:	சிரோபூஷணமாயுடைய	ராக்ஷஸேந்த்ரஸ்ய	இராவணனுடைய
பரிகாபி:	அகழ்களினால்	க்ருஹம்	மாளிகையை
அலங்க்ருதம்	அலங்கரிக்கப்பட்டதாயும்	அத்யர்த்தம்	மிகவும்
ப்ராகாராவ்ருதம்=		ததர்ஶ	பார்த்தார்.
ப்ராகார	மதிலினால்		

தா-ம்—இந்தவிதம் அதிபயங்கரமாக விளங்குகிற மூலபலத்தைக்கண்ட ஹநுமான், திரிகூடபர்வதத்தினுச்சியில் ஸ்தாபிக்கப்பட்டு, நாகலோகமளவில் வியாபித்து வெண்தாமரைபுஷ்பங்களால் நிறைந்த அகழினாலும், ஸ்வர்க்கலோகமளவினுயர்ந்து ஸ்வச்சமான வெண்சாந்தினால் பூசப்பட்டுப் பிரகாசிக்கிற மதிலினாலும் சூழப்பட்டு, பொன்மயமான தோரணங்களாலலங்கரிக்கப்பட்டு இராவணகிருகமென்று ஜகத்பிரஸித்தமான அந்த தசகண்டனுடைய அரண்மனையைப்பார்த்தார்.

౨౬. త్రివిష్టపనిభందివ్యందివ్యనాదవినాదితమ్। వాజిహ్రేషితసంఘుష్టంనాదితంభూషణైస్తథా॥

౨౭. రథైర్యానైర్విమానైశ్చతథాహయగజైశ్శుభైః। వారణైశ్చచతుర్దంతైశ్శ్వేతాభ్రనిచయోపమైః॥

౨౮. భూషితంరుచిరద్వారంమత్తైశ్చమృగపక్షిభిః। రక్షితంసుమహావీర్యైర్యాతుధానైస్సహస్రశః॥

౨౯. రాక్షసాధిపతేర్గుప్తమావివేశమహాకపిః॥

௨௬. ത്രിവിഷ്ടപനിഭംദിവ്യംദിവ്യനാദവിനാദിതം।
വാജിഹ്രേഷിതസംഘുഷ്ടംനാദിതംഭൂഷണൈസ്തഥാ॥

௨௭. രഥൈര്യാനൈര്വിമാനൈശ്ചതഥാഹയഗജൈശ്ശുഭൈഃ।
വാരണൈശ്ചചതുര്ദന്തൈശ്ശ്വേതാഭ്രനിചയോപമൈഃ॥

௨௮. ഭൂഷിതംരുചിരദ്വാരംമത്തൈശ്ചമൃഗപക്ഷിഭിഃ।
രക്ഷിഭിസ്സുമഹാവീര്യൈര്യാതുധാനൈസ്സഹസ്രശഃ॥

௨௯. രാക്ഷസാധിപതേര്ഗുപ്തമാവിവേശമഹാകപിഃ॥

௨௬. த்ரிவிஷ்டபநிபம்திவ்யம்திவ்யநாதவிநாதிதம்।
வாஜிஹ்ரேஷிதஸம்குஷ்டம்நாதிதம்பூஷணைஸ்ததா॥

௨௭. ரதைர்யாநைர்விமாநைஶ்சததாஹயகஜைஶ்ஶுபை:।
வாரணைஶ்சசதுர்த்தந்தைஶ்ஶ்வேதாப்ரநிசயோபமை:॥

௨௮. பூஷிதம்ருசிரத்வாரம்மத்தைஶ்சம்ருகபக்ஷிபி:।
ரக்ஷிபிஸ்ஸுமஹாவீர்யைர்யாதுதாநைஸ்ஸஹஸ்ரஶ:॥

௨௯. ராக்ஷஸாதிபதேர்குப்தமாவிவேஶமஹாகபி:।

பதம்.	உரை.	பதம்.	உரை.
மஹாகபி:	ஹநுமாரானவர்	ஶ்வேதாப்ரநிசயோபமை:=	
த்ரிவிஷ்டபநிபம்	ஸ்வர்க்கத்திற்கு ஸமானமாயும்	ஶ்வேதாப்ர	வெண்மையான மேகத்தினுடைய
திவ்யம்	சிரேஷ்டமாயும்	நிசயோபமை:	ஸமூகத்திற்கு ஸமானமுமான
திவ்யநாதிதம்	விசேஷமாக சப்திக்கப்பட்டதாயும்	சதுர்த்தந்தை:	நாலுதந்தங்களையுடைய
வாஜிஹ்ரேஷிதஸங்குஷ்டம்=		வாரணைஶ்ச	யானைகளாலும்
வாஜி	குதிரையினுடைய	மத்தை:	மதித்திருக்கிற
ஹ்ரேஷித	கனைத்தலினால்	ம்ருகபக்ஷிபி:	மிருகங்கள், பக்ஷிகள், (இவைகளால்)
ஸங்குஷ்டம்	வியாப்தமானதாயும்	பூஷிதம்	அலங்கரிக்கப்பட்டதாயும்
ததா	அப்படியே	ரக்ஷிபி:	பாதுகாப்பவர்களான
பூஷணை:	ஆபரணங்களால்	ஸுமஹாவீர்யை:	வெகு சிரேஷ்டமான வீரர்களாகிய
நாதிதம்	சப்திக்கப்பட்டதாயும்	யாதுதாநை:	இராக்ஷதர்களால்
ரதை:	இரதங்களினாலும்	ஸஹஸ்ரஶ:	அநேகப்பிரகாரமாக
யாநை:	வாகனங்களினாலும்	குப்தம்	இரக்ஷிக்கப்பட்டதுமான
விமாநைஶ்ச	(ஆகாயத்தில் திரிகிற) விமானங்களா[லும்	ராக்ஷஸாதிபதே:	இராவணனுடைய
ததா	அப்படியே	ருசிரத்வாரம்	மனோக்கியமான கோட்டைவாசலை
ஶுபை:	மங்களகரமான	ஆவிவேஶ	அடைந்தார்.
ஹயகஜை:	குதிரைகளாலும் யானைகளாலும்		

தா-ம்—இந்த சுலோகங்களில் இராவணனந்தப்புரத்தினுடைய வெளித்வாரமானது வர்ணிக்கப்படுகிறது. அனேகாயிரம் ஜாத்யசுவங்கள் உத்ஸாஹவிசேஷத்தால் கனைத்துக்கொண்டிருந்தன. குதிரைகளுக்கும் யானைகளுக்கும் மற்ற மிருகபக்ஷிகளுக்கும் மிகுதியாகப்போடப்பட்டிருந்த ஆபரணஸமூகங்கள் விசேஷமாக கோஷித்தன. அனேக இரதங்களும், வாகனங்களும் விமானங்களும் வெகு அழகாக சிங்காரிக்கப்பட்டு வரிசைவரிசையாக விடப்பட்டிருந்தன. மங்களகரமான முகங்களோடுகூடிய அனேகலக்ஷம் குதிரைகளும், தங்

கக்கட்டு கட்டப்பட்ட பெருத்த நீண்ட இரண்டிரண்டு தந்தங்களையுடைய எண்ணிறந்த யானைகளும் ஒழுங்காகக் கட்டப்பட்டிருந்தன. அப்படியே, சரத்கால மேகஸமூகமே பூமியில் வந்திறங்கினதுபோல் மிகவும் வெளுத்து பெருத்து நீண்டிருக்கிற நாலுதந்தங்களையுடைய கஜசிரேஷ்டங்களும் கணக்கில்லாமல் கட்டப்பட்டிருந்தன. இவைகளன்றி, மிகுந்த உணவுபலத்தால் மதித்திருக்கிற ஸிம்ஹம, கரடி, புலி முதலிய மிருகங்களும், ஹம்ஸம் மயில் குயில்முதலிய பக்ஷிவர்க்கங்களும் வெகு அழகாக வைக்கப்பட்டிருந்தன. இந்தவிதம் ரதகஜதுரகங்களாலும் பக்ஷிமிருகவர்க்கங்களாலு மலங்கரிக்கப்பட்டு, மங்களவாத்தியகோஷத்தாலும், ஸ்துதிபாடகர்களுடைய கானத்தாலும், அசுவங்களுடைய கனைப்பினுலுமுண்டாகிற நாதத்தால் நிறைந்து, ஸ்வர்க்கபுரிக்கு ஸமானமாக அதிஜாஜ்வல்லியமாயும் ஆனந்தமயமாயும் விளங்குகிற அந்த அந்தப்புரவாசலானது அனேக யுத்தங்களிற்றேர்ந்த மஹாப்பிரபலர்களான லக்ஷம் ராக்ஷஸபடாக்களால், சத்ருவானவன் எந்தவிதத்திலும் உள்ளே பிரவேசிக்கமுடியாமல், காக்கப்பட்டிருந்தது. அந்த வாசலை ஹநுமான் சென்றடைந்தார்.

௨௯. స హేమజాంబూనదచక్రవాళం మహార్హముక్తామణిభూషితాంతమ్ । పరార్ధ్యకాలాగరుచందనాక్తం స రావణాంతఃపురమావివేశ ॥

௨௯. ஸஹேமஜாம்பூநதசக்ரவாளம் மஹார்ஹமுக்தாமணிபூஷிதாந்தம் ।
பரார்த்யகாலாகருசந்தநாக்தம் ஸ ராவணாந்த:புரமாவிவேஶ ॥

௨௯. ஸஹேமஜாம்பூநதசக்ரவாளம்மஹார்ஹமுக்தாமணிபூஷிதாந்தம்।
பரார்த்யகாலாகருசந்தநாக்தம்ஸராவணாந்த:புரமாவிவேஸ॥

இதி ஸ்ரீமத் ஸுந்தரகாண்டே சதுர்த்த: ஸர்க்க:

பதம்.	உரை.	பதம்.	உரை.
ஸஹேமஜாம்பூநதசக்ரவாளம்=		முக்தாமணி	முத்தென்ன, இரத்தினமென்ன, (இவைகளால்)
ஸஹேம	(ஜம்புநதிக்கு இதரஸ்தலத்திலுண்டாகிற) பொன்னேடுகூடியதாயும்	பூஷிதாந்தம்	அலங்கரிக்கப்பட்ட அக்ரபாகங்களையுடையதாயும்
ஜாம்பூநத	ஜம்புநதியிலுண்டாகிற பொன்னேடு கூடியதாயுமிருக்கிற	பரார்த்தியகாலாகருசந்தநாக்தம்	சிரேஷ்டமானஅகரு,சந்தனம்(இவைகளால் வியாப்தமாயுமிருக்கிற)
சக்ரவாளம்	பிராகாரமண்டலத்தையுடையதாயும்	ராவணாந்த:புரம்	இராவணனுடைய அந்தப்புரத்தை
மஹார்ஹமுக்தாமணிபூஷிதாந்தம்=		ஆவிவேஸ	பிரவேசித்தார்.
மஹார்ஹ	மிகுந்தவிலையுள்ள		

தா-ம்—பசும்பொன், உருக்கிவிட்ட தங்கம் இவைகளாற் செய்யப்பட்ட பிராகாரத்தால் சூழப்பட்டு, நவரத்தினங்களிழைத்த கட்டடங்களாலமைந்து, உத்கிருஷ்டமான சந்தனாதி வாஸனைத்திரவியங்களுடைய திவ்விய பரிமளத்தால் நிறைந்து, ஸகலவித போகங்களுக்கும் மூலஸ்தானமாய் விளங்குகிற இராவணனந்தப்புரத்தைப் பிரவேசித்தார்.

ஸ்ரீஸன்மனோரஞ்ஜனீ நாமத்திராவிட வ்யாக்யாந ஸஹிதமான
ஸுந்தரகாண்டத்தில்
நான்காவது ஸர்க்கம் முற்றிற்று.

ஐந்தாவது ஸர்க்கம்.

௧. తతస్స మధ్యంగతమంశుమంతం జ్యోత్స్నావితానం మహదుద్వమంతమ్ । దదర్శ ధీమాన్ దివి భానుమంతం గోష్ఠే వృషం మత్తమివ భ్రమంతమ్ ॥

௧. ததஸ்ஸ மத்யங்கதமம்ஶுமந்தம் ஜ்யோத்ஸ்நாவிதாநம் மஹதுத்வமந்தம் ।
ததர்ஶ தீமாந் திவி பாநுமந்தம் கோஷ்டே வ்ருஷம் மத்தமிவ ப்ரமந்தம் ॥

௧. ததஸ்ஸமத்யம்கதமம்ஸுமந்தம்ஜ்யோத்ஸநாவிதாநம்மஹதுத்வமந்தம்।
ததர்ஸதீமாந்திவிபாநுமந்தம்கோஷ்டேவ்ருஷம்மத்தமிவப்ரமந்தம்॥

பதம்.	உரை.	பதம்.	உரை.
தத:	(இராவணனந்தப்புரத்தில்பிரவேசித்த) [பிற்பாடு	ஜ்யோத்ஸ்நா	நிலாவாகிற
தீமாந்	புத்திமானன	விதாநம்	மேல்கட்டை
ஸ:	அம்மாருதி	உத்வமந்தம்	விஸ்தாரம்பண்ணுகிறவனுயுமிருக்கிற
திவி	ஆகாசத்தில்	பாநுமந்தம்	சந்திரனை
மத்யம்	(ஆகாச) மத்தியை	கோஷ்டே	தொழுத்தில்
கதம்	அடைந்திருக்கிறவனுயும்	ப்ரமந்தம்	திரிகிறதாயும்
அம்ஶுமந்தம்	கிரணங்களையுடையவனுயும்	மத்தம்	மதித்துமிருக்கிற
மஹத்	அதிகமாக	வ்ருஷமிவ	காளையைப்போல
ஜ்யோத்ஸ்நாவிதாநம்		ததர்ஸ	பார்த்தார்.

அவதாரிகை—ஹநுமார் இலங்காப்பிரவேசம் செய்கையில் சந்திரோதயமாயிற்றென்று, இரண்டாவது ஸர்க்கம்,௫௯-வது ஸ்லோகத்தில் சொல்லப்பட்டது. இப்பொழுது நகரமுழுதும் சுற்றி தேவியைத்தேடி பிறகு அந்தப்புரப்பிரவேசம்செய்கையில் சந்திரனை ஆகாயமத்தியிற் கண்டாரெனவே, அப்பொழுது அர்த்தராத்திரி காலமென்றும், பூர்ணசந்திரிகையினுத்தாசையால் ஸமஸ்த வஸ்துக்களையும் ஸ்பஷ்டமாகக் காணக்கூடிய தருணமென்றும் விளங்குகிறது.

தா-ம்—இந்தவிதம் பூர்ணசந்திரிகைராத்திரியில் அந்த ராக்ஷஸரிடமான நகரத்தில் யாவர் கண்ணுக்கும் புலப்படாமல் தேவியை அதிஸாமர்த்தியமாய்த் தேடிவருகிற ஹநுமான் இராவணனந்தப்புரப்பிரவேசம் செய்கையில், அனேக பசுக்களின்மத்தியில் மதித்து கர்வித்து கம்பீரமாய் நிற்கிற ஓர் காளைபோல், ஆகாசமத்தியில், நக்ஷத்திரதாராக்கிரக ஸமூகாந்தரத்தில், தன்னுடைய ஸ்வச்சமான கிரணங்களால் இருளைப்போக்கி உலகத்தை ஆனந்திப்பித்துக்கொண்டிருக்கிற சந்திரனைப்பார்த்தார்.

౨. లోకస్యపాపానివినాశయంతంమహోదధించాపిసమేధయంతం।భూతానిసర్వాణివిరాజయంతందదర్శశీతాంశుమథాభియాంతమ్॥

௨. 𑌲𑍋𑌕𑌸𑍍𑌯𑌪𑌾𑌪𑌾𑌨𑌿𑌵𑌿𑌨𑌾𑌶𑌯𑌨𑍍𑌤𑌂𑌮𑌹𑍋𑌦𑌧𑌿𑌂𑌚𑌾𑌪𑌿𑌸𑌮𑍇𑌧𑌯𑌨𑍍𑌤𑌮𑍍।
𑌭𑍂𑌤𑌾𑌨𑌿𑌸𑌰𑍍𑌵𑌾𑌣𑌿𑌵𑌿𑌰𑌾𑌜𑌯𑌨𑍍𑌤𑌂𑌦𑌦𑌰𑍍𑌶𑌶𑍀𑌤𑌾𑌂𑌶𑍁𑌮𑌥𑌾𑌭𑌿𑌯𑌾𑌨𑍍𑌤𑌮𑍍॥

௨. லோகஸ்யபாபாநிவிநாஸயந்தம்மஹோததிஞ்சாபிஸமேதயந்தம்।
பூதாநிஸர்வாணிவிராஜயந்தம்ததர்ஸஸீதாம்ஸுமதாபியாந்தம்॥

பதம்.	உரை.	பதம்.	உரை.
அத	பின்பு	பூதாநி	ஜந்துக்களை
லோகஸ்ய	உலகத்தினுடைய	விராஜயந்தம்	பிரகாசிப்பிக்கிறவனையும்
பாபாநி	பாபபலதுக்கங்களை	அபியாந்தம்	(ஆகாசகிரியைக்குறித்து)போகிறவனுமயிருக்கிற
விநாஸயந்தம்	போக்கடிக்கிறவனையும்		
மஹோததிஞ்சாபி	ஸமுத்திரத்தையும்	ஸீதாம்ஸும்	குளிர்ச்சியான கிரணங்களையுடைய சந்திரனை
ஸமேதயந்தம்	நன்றாய்விர்த்திபண்ணுகிறவனையும்	ததர்ஸ	பார்த்தார்.
ஸர்வாணி	ஸமஸ்தங்களான		

தா-ம்—ஸஞ்சாரத்திற்கு விரோதமாக உலகமுழுதையும் மூடிக்கொண்டிருக்கிற காரிருளைப்போக்கி, பாபகிருத்தியங்களின் பலன்களாகிற துக்கங்களைத்தணித்து, தன்னுடைய ரஜதஸாம்யமான ஸ்வச்சகிரணங்களால் வஸ்துக்களைப் பிரகாசிப்பித்து, தன்னுடைய ஸமாகமனத்தால் பொங்கிக் குதித்துக் கூத்தாடும்படி ஸமுத்திரத்தைச்செய்து, அஸ்தாசலமுகமாய் சென்றுகொண்டிருக்கிற சீதகிரணங்களோடுகூடிய சந்திரனை கண்டார்.

౩. యాభాతిలక్ష్మీర్భువిమందరస్థాతథాప్రదోషేషుచసాగరస్థా।తథైవతోయేషుచపుష్కరస్థారరాజసాచారునిశాకరస్థా॥

௩. 𑌯𑌾𑌭𑌾𑌤𑌿𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍀𑌰𑍍𑌭𑍁𑌵𑌿𑌮𑌨𑍍𑌦𑌰𑌸𑍍𑌥𑌾𑌤𑌥𑌾𑌪𑍍𑌰𑌦𑍋𑌷𑍇𑌷𑍁𑌚𑌸𑌾𑌗𑌰𑌸𑍍𑌥𑌾।
𑌤𑌥𑍈𑌵𑌤𑍋𑌯𑍇𑌷𑍁𑌚𑌪𑍁𑌷𑍍𑌕𑌰𑌸𑍍𑌥𑌾𑌰𑌰𑌾𑌜𑌸𑌾𑌚𑌾𑌰𑍁𑌨𑌿𑌶𑌾𑌕𑌰𑌸𑍍𑌥𑌾॥

௩. யாபாதிலக்ஷ்மீர்ப்புவிமந்தரஸ்தாததாப்ரதோஷேஷுசஸாகரஸ்தா।
ததைவதோயேஷுசபுஷ்கரஸ்தாரராஜஸாசாருநிஸாகரஸ்தா॥

பதம்.	உரை.	பதம்.	உரை.
யா	எந்த	தோயேஷு	ஜலங்களில்
லக்ஷ்மீः	காந்தியானது	புஷ்கரஸ்தா	தாமரையிலிருந்ததாக
புவி	பூமியில்	(பாதி)	(எவ்வண்ணம் விளங்குமோ)
மந்தரஸ்தா	மந்தரபர்வதத்திலிருந்துகொண்டு	ததைவச	அப்படிபோலவே
பாதி	(எப்படி) பிரகாசிக்குமே	ஸா	அந்த காந்தியானது
ததா	அப்படியே	சாருநிஸாகரஸ்தா=	
ப்ரதோஷேஷு	ஸாயங்காலங்களில்	சாரு	அழகான
ஸாகரஸ்தா	பாற்கடலிலிருந்ததாக	நிஸாகரஸ்தா	சந்திரனிடத்திலிருந்துகொண்டு
(பாதி)	(எப்படி பிரகாசிக்குமோ)	ரராஜ	பிரகாசித்தது.

தா-ம்—பூமத்தியில் ஆகாயத்தை யளாவிக்கொண்டு ஸ்வர்ணரஜதரத்தினங்களோடு விளங்குகிற மந்தரகிரியினிடத்திலும், ஸூரியாஸ்தமனகாலத்தில் மஹோததியிலும், ஸ்படிகம்போல் நிர்மலமாயிருக்கிற ஜலத்தில் ஜனித்து விர்த்தியடைகிற தாமரைபுஷ்பத்தினிடத்திலும் காந்தியானது எப்படி பிரகாசிக்குமோ அப்படியே சந்திரனிடத்தி லந்த காந்தியானது சோபித்தது.

౪. హంసోయథారాజతపంజరస్థఃసింహోయథామందరకందరస్థః।వీరోయథాగర్వితకుంజరస్థశ్చంద్రోపిబభ్రాజతథాంబరస్థః॥

௪. 𑌹𑌂𑌸𑍋𑌯𑌥𑌾𑌰𑌾𑌜𑌤𑌪𑌞𑍍𑌜𑌰𑌸𑍍𑌥𑌃𑌸𑌿𑌂𑌹𑍋𑌯𑌥𑌾𑌮𑌨𑍍𑌦𑌰𑌕𑌨𑍍𑌦𑌰𑌸𑍍𑌥𑌃।
𑌵𑍀𑌰𑍋𑌯𑌥𑌾𑌗𑌰𑍍𑌵𑌿𑌤𑌕𑍁𑌞𑍍𑌜𑌰𑌸𑍍𑌥𑌶𑍍𑌚𑌨𑍍𑌦𑍍𑌰𑍋𑌽𑌪𑌿𑌬𑌭𑍍𑌰𑌾𑌜𑌤𑌥𑌾𑌮𑍍𑌬𑌰𑌸𑍍𑌥𑌃॥

௪. ஹம்ஸோயதாராஜதபஞ்சரஸ்தஸ்ஸிம்ஹோயதாமந்தரகந்தரஸ்தஃ।
வீரோயதாகர்விதகுஞ்சரஸ்தஸ்சந்த்ரோபிபப்ராஜததாம்பரஸ்தஃ॥

பதம்.	உரை.	பதம்.	உரை
ஹம்ஸ:	அன்னப்பறவையானது	யதா	எப்படி (விளங்குமோ)
யதா	எப்படி	வீர:	யுத்தவீரனானவன்
ராஜதபஞ்சரஸ்த:=		கர்விதகுஞ்சரஸ்த:=	
ராஜத	வெள்ளிஸம்பந்தமான	கர்வித	மதமடைந்த
பஞ்சரஸ்த:	கூட்டிலிருந்துகொண்டு (பிரகாசிக்குமோ)	குஞ்சரஸ்த:	யானையின்மேலிருந்துகொண்டு
		யதா	எப்படி (ஜ்வலிப்பனோ)
ஸிம்ஹ:	சிங்கமானது	ததா	அப்படி
மந்தரகந்தரஸ்த:=		சந்த்ரோபி	சந்திரனும்
மந்தர	மந்தரகிரியினுடைய	அம்பரஸ்த:	ஆகாயத்திலிருந்துகொண்டு
கந்தரஸ்த:	குகையிலிருந்துகொண்டு	பப்ராஜ	பிரகாசித்தான்.

தா-ம்—வெள்ளியாற்செய்யப்பட்ட கூட்டில் வாஸம்பண்ணுகிற அன்னப்பறவைபோலும், மந்தரபர்வதத்தில் ஓர்குகையில் வாஸம்பண்ணுகிற மிருகேந்திரம்போலும், யானையின்மீது அம்பாரிபோட்டுக்கொண்டு ஸவாரிவருகிற யுத்தவீரன்போலும், சந்திரனானவன் ஆகாசத்தில் தன்னுடைய சீதகிரணங்களோடு விளங்கினான்.

౫. స్థితఃకకుద్మానివతీక్ష్ణశృంగోమహాచలశ్శ్వేతఇవోచ్చశృంగః। హస్తీవజాంబూనదబద్ధశృంగోరరాజచంద్రఃపరిపూర్ణశృంగః॥

௫. 𑌸𑍍𑌥𑌿𑌤𑌃𑌕𑌕𑍁𑌦𑍍𑌮𑌾𑌨𑌿𑌵𑌤𑍀𑌕𑍍𑌷𑍍𑌣𑌶𑍃𑌙𑍍𑌗𑍋𑌮𑌹𑌾𑌚𑌲𑌶𑍍𑌶𑍍𑌵𑍇𑌤𑌇𑌵𑍋𑌚𑍍𑌚𑌶𑍃𑌙𑍍𑌗𑌃।
𑌹𑌸𑍍𑌤𑍀𑌵𑌜𑌾𑌂𑌬𑍂𑌨𑌦𑌬𑌦𑍍𑌧𑌶𑍃𑌙𑍍𑌗𑍋𑌰𑌰𑌾𑌜𑌚𑌂𑌦𑍍𑌰𑌃𑌪𑌰𑌿𑌪𑍂𑌰𑍍𑌣𑌶𑍃𑌙𑍍𑌗𑌃॥

௫. ஸ்திதःககுத்மாநிவதீக்ஷ்ணஶ்ருங்கோமஹாசலஶ்ஶ்வேதஇவோச்சஶ்ருங்கः।
ஹஸ்திவஜாம்பூநதபத்தஶ்ருங்கோரராஜசந்த்ரःபரிபூர்ணஶ்ருங்கः॥

பதம்.	உரை.	பதம்.	உரை.
தீக்ஷ்ணஶ்ருங்க:	கூருன கொம்புகளையுடையதாய்	ஜாம்பூநத	பொன்னினால்
ஸ்தித:	இருக்கிற	பத்த	கட்டப்பட்ட
ககுத்மாநிவ	காளையைப்போலவும்	ஶ்ருங்க:	தந்தங்களையுடைய
உச்சஶ்ருங்க:	உயரமானசிகரங்களையுடைய	ஹஸ்தீவ	யானையானதுபோலும்
ஶ்வேத	வெளுப்பான	பரிபூர்ணஶ்ருங்க:	பூர்ணகலையையுடைய
மஹாசலயிவ	பெரியமலைபோலும்	சந்த்ர:	சந்திரனானவன்
ஜாம்பூநதபத்தஶ்ருங்க:=		ரராஜ	விளங்கினான்.

தா-ம்—மிக கூர்மையான கொம்புகளோடுகூடிய வெண்மையான விருஷபம்போலும், அத்யுன்னதமான சிகரங்களையுடைய ஓர் ஶ்வேதகிரிபோலும், தங்கக்கட்டுகட்டி வெகு தாவள்ளியமாய் விளங்குகிற தந்தங்களையுடைய கஜசிரேஷ்டம்போலும் சந்திரனானவன் ஆகாயத்தில் தன்னுடைய ஷோடசகலைகளுடன் அத்யத்புதமாய் விளங்கினான்.

౬. వినష్టశీతాంబుతుషారపంకోమహాగ్రహగ్రాహవినష్టపంకః। ప్రకాశలక్ష్మ్యాశ్రయనిర్మలాంకోరరాజచంద్రోభగవాన్ శశాంకః॥

௬. 𑌵𑌿𑌨𑌷𑍍𑌟𑌶𑍀𑌤𑌾𑌂𑌬𑍁𑌤𑍁𑌷𑌾𑌰𑌪𑌙𑍍𑌕𑍋𑌮𑌹𑌾𑌗𑍍𑌰𑌹𑌗𑍍𑌰𑌾𑌹𑌵𑌿𑌨𑌷𑍍𑌟𑌪𑌙𑍍𑌕𑌃।
𑌪𑍍𑌰𑌕𑌾𑌶𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍍𑌯𑌾𑌶𑍍𑌰𑌯𑌨𑌿𑌰𑍍𑌮𑌲𑌾𑌙𑍍𑌕𑍋𑌰𑌰𑌾𑌜𑌚𑌂𑌦𑍍𑌰𑍋𑌭𑌗𑌵𑌾𑌨𑍍𑌶𑌶𑌾𑌙𑍍𑌕𑌃॥

௬. விநஷ்டஶீதாம்புதுஷாரபங்கோமஹாக்ரஹக்ராஹவிநஷ்டபங்கः।
ப்ரகாஶலக்ஷ்ம்யாஶ்ரயநிர்மலாங்கோரராஜசந்த்ரோபகவாந்ஶஶாங்கः॥

பதம்.	உரை.	பதம்.	உரை.
விநஷ்டஶீதாம்புதுஷாரபங்க:=		விநஷ்ட	போக்கடிக்கப்பட்டிருக்கிற
விநஷ்ட	போயிருக்கிற	பங்க:	இருளையுடையவனும்
ஶீதாம்பு	பனிஜலத்தினுடைய	ப்ரகாஶலக்ஷ்ம்யாஶ்ரயநிர்மலாங்க:=	
துஷார	கணங்களாகிற	ப்ரகாஶ	தேஜஸ்ஸினுடைய
பங்க:	தோஷத்தையுடையவனும்	லக்ஷ்ம்யா:	ஸம்ருத்திக்கு
மஹாக்ரஹக்ராஹவிநஷ்டபங்க:=		ஆஶ்ரய	ஆஶ்ரயமாயிருக்கிறதினால்
மஹாக்ரஹ	பிரஹஸ்பத்தியாதிக்கிரகங்களுடைய	நிர்மல	ஸ்வச்சமான
க்ராஹ	கிரஹிப்பதினால்	அங்க:	களங்கத்தையுடையவனும்
விநஷ்ட	போயிருக்கிற	ஶஶாங்க:	முசல்போன்ற அடையாளத்தை ப,தியிலுடையவனும்
பங்க:	அந்தகாரத்தையுடையவனும்		
அல்லது		பகவாந்	பூஜ்ஜியனுமான
மஹாக்ரஹ	ஸூரியனுடையகிரணங்களை	சந்த்ர:	சந்திரனானவன்
க்ராஹ	கிரகிப்பதினால்	ரராஜ	பிரகாசித்தான்.

தா-ம்—அன்றிரவில் சந்திரகாந்தியானது பனியினால் பாதிக்கப்படவில்லை. சந்திரனும் ஸூரியனிடத்திலிருந்து ஒளியை கிரகித்து மலினமின்றி விளங்கினான். பிரகாசமிகுதியால் சந்திரனிடத்துள்ள முயலாகிருதியோடுகூடின களங்கமானது ஸ்பஷ்டமாகக்காணப்பட்டது. இந்தவிதம் அந்த பூஜ்ஜியனான சந்திரன் ஆகாயத்தில் வெகு அழகாகக் காணப்பட்டான்.

౭. శిలాతలం ప్రాప్య యథా మృగేంద్రో మహారణ్యం ప్రాప్య యథా గజేంద్రః। రాజ్యం సమాసాద్య యథా నరేంద్రః తథా ప్రకాశో విరరాజ చంద్రః॥

௭. 𑌶𑌿𑌲𑌾𑌤𑌲𑌂𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌯𑌯𑌥𑌾𑌮𑍃𑌗𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑍋𑌮𑌹𑌾𑌰𑌣𑌂𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌯𑌯𑌥𑌾𑌗𑌜𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌃।
𑌰𑌾𑌜𑍍𑌯𑌂𑌸𑌮𑌾𑌸𑌾𑌦𑍍𑌯𑌯𑌥𑌾𑌨𑌰𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌸𑍍𑌤𑌥𑌾𑌪𑍍𑌰𑌕𑌾𑌶𑍋𑌵𑌿𑌰𑌰𑌾𑌜𑌚𑌨𑍍𑌦𑍍𑌰𑌃॥

௭. ஶிலாதலம்ப்ராப்யயதாம்ருகேந்த்ரோமஹாரணம்ப்ராப்யயதாகஜேந்த்ர:।
ராஜ்யம்ஸமாஸாத்யயதாநரேந்த்ரஸ்ததாப்ரகாஶோவிரராஜசந்த்ர:॥

பதம்.	உரை.	பதம்.	உரை.
ஶிலாதலம்	பெரும்பாறையை	ராஜ்யம்	இராஜ்ஜியத்தை
ப்ராப்ய	அடைந்த	ஸமாஸாத்ய	நன்றுயடைந்த
ம்ருகேந்த்ர:	சிங்கமானது	நரேந்த்ர:	ராஜாவானவன்
யதா	எப்படியோ	யதா	எப்படியோ
மஹாரணம்	பெரிய வனத்தை	ததா	அப்படியே
ப்ராப்ய	அடைந்த	ப்ரகாஶ:	பிரகாசிக்கிற
கஜேந்த்ர:	பெரிய யானையானது	சந்த்ர:	சந்திரனானவன்
யதா	எப்படியோ	விரராஜ	விசேஷமாகப் பிரகாசித்தான்.

தா-ம்—மஹாபர்வதத்தில் ஸஞ்சரிக்கிற சிங்கம்போலும், பெரியவனத்திலுலாவுகிற யானைபோலும், இராஜ்ஜியத்தையடைந்து ஸிம்ஹாஸனத்தில் வீற்றிருந்து அரசாக்ஷிசெய்கிற மன்னன்போலும் சந்திரனானவன் ஆகாசமத்தியத்தையடைந்து நிர்விக்னமாய்த் தன்னுடைய கிரணங்களை வீசிக்கொண்டு அதிகம்பீரமாயும் வெகு ஸுந்தரமாயும் பிரகாசித்தான்.

౮. ప్రకాశచంద్రోదయనష్టదోషః ప్రవృత్తరక్షఃపిశితాశదోషః। రామాభిరామేరితచిత్తదోషః స్వర్గప్రకాశో భగవాన్ ప్రదోషః॥

௮. 𑌪𑍍𑌰𑌕𑌾𑌶𑌚𑌨𑍍𑌦𑍍𑌰𑍋𑌦𑌯𑌨𑌷𑍍𑌟𑌦𑍋𑌷𑌃𑌪𑍍𑌰𑌵𑍃𑌤𑍍𑌤𑌰𑌕𑍍𑌷𑌃𑌪𑌿𑌶𑌿𑌤𑌾𑌶𑌦𑍋𑌷𑌃।
𑌰𑌾𑌮𑌾𑌭𑌿𑌰𑌾𑌮𑍇𑌰𑌿𑌤𑌚𑌿𑌤𑍍𑌤𑌦𑍋𑌷𑌃𑌸𑍍𑌵𑌰𑍍𑌗𑌪𑍍𑌰𑌕𑌾𑌶𑍋𑌭𑌗𑌵𑌾𑌨𑍍𑌪𑍍𑌰𑌦𑍋𑌷𑌃॥

௮. ப்ரகாஶசந்த்ரோதயநஷ்டதோஷ:ப்ரவ்ருத்தரக்ஷ:பிஶிதாஶதோஷ:।
ராமாபிராமேரிதசித்ததோஷ:ஸ்வர்க்கப்ரகாஶோபகவாந்ப்ரதோஷ:॥

பதம்.	உரை.	பதம்.	உரை.
ப்ரகாஶசந்த்ரோதயநஷ்டதோஷ:=		ராமா	நாயகியென்ன
ப்ரகாஶ	பிரகாசித்துக்கொண்டிருக்கிற	அபிராம	நாயகனென்ன (இவர்களினால்)
சந்த்ரோதய	சந்திரனுடைய உதயத்தால்	ஈரித	போக்கடிக்கப்பட்டிருக்கிற
நஷ்ட	போக்கடிக்கப்பட்ட	சித்ததோஷ:	(பிரணயகலகமாகிற) தோஷத்தையுடையதாயும்
தோஷ:	(இருளாகிற) தோஷத்தையுடையதாயும்		
ப்ரவ்ருத்தரக்ஷ:பிஶிதாஶதோஷ:=		ஸ்வர்க்கப்ரகாஶ:	ஸ்வர்க்கம்போல் பிரகாசிக்கிறதாயுமிருக்கிற
ப்ரவ்ருத்த	விருத்தியடைந்துகொண்டிருக்கிற		
ரக்ஷ	இராக்ஷதர்களுடைய	பகவாந்	பூஜிக்கத்தருந்த
பிஶிதாஶ	மாம்ஸபக்ஷணமாகிற	ப்ரதோஷ:	இராத்திரிகாலமானது (நடந்துகொண்டிருந்தது.)
தோஷ:	தோஷத்தையுடையதாயும்		
ராமாபிராமேரிதசித்ததோஷ:=			

தா-ம்—சந்திரிகையோடுகூடிய அந்த ராத்திரியானது கொஞ்சமேனும் இருளில்லாமல் நிர்மலமாகப் பிரகாசித்தது. இராக்ஷதர்கள் மாம்ஸபக்ஷணஞ்செய்து ஸந்தோஷமிகுதியாற் களித்தனர். ஸ்திரீபுமான்கள் பிரணயகலகம் நீங்கி தங்கள் நாயகர் நாயகிகளுடன் கூடிக்குலாவி ரமித்தனர். இவ்வண்ணம் ஸந்தோஷவிர்த்திசெய்கிற அந்த இரவானது பிராட்டியைத்தேடுவதற்கு அனுகூலமாகப் பிரகாசித்தபடியால் ஸ்வர்க்கலோகம்போல் ஆனந்தகரமாயும், ஸ்ரீஸீதாராமபக்தாளால் பூசிக்கத்தகுந்ததாயும் விளங்கிற்று.

౯. తంత్రీస్వనాః కర్ణసుఖాః ప్రవృత్తాః స్వపంతి నార్యః పతిభిః సువృత్తాః। నక్తంచరాశ్చాపి తథా ప్రవృత్తా విహర్తుమత్యద్భుతరౌద్రవృత్తాః॥

௯. 𑌤𑌨𑍍𑌤𑍍𑌰𑍀𑌸𑍍𑌵𑌨𑌾𑌃𑌕𑌰𑍍𑌣𑌸𑍁𑌖𑌾𑌃𑌪𑍍𑌰𑌵𑍃𑌤𑍍𑌤𑌾𑌃𑌸𑍍𑌵𑌪𑌨𑍍𑌤𑌿𑌨𑌾𑌰𑍍𑌯𑌃𑌪𑌤𑌿𑌭𑌿𑌃𑌸𑍁𑌵𑍃𑌤𑍍𑌤𑌾𑌃।
𑌨𑌕𑍍𑌤𑌂𑌚𑌰𑌾𑌶𑍍𑌚𑌾𑌪𑌿𑌤𑌥𑌾𑌪𑍍𑌰𑌵𑍃𑌤𑍍𑌤𑌾𑌵𑌿𑌹𑌰𑍍𑌤𑍁𑌮𑌤𑍍𑌯𑌦𑍍𑌭𑍁𑌤𑌰𑍌𑌦𑍍𑌰𑌵𑍃𑌤𑍍𑌤𑌾𑌃॥

௯. தந்த்ரீஸ்வநா:கர்ணஸுகா:ப்ரவ்ருத்தா:ஸ்வபந்திநார்ய:பதிபிஸ்ஸுவ்ருத்தா:।
நக்தம்சராஶ்சாபிததாப்ரவ்ருத்தாவிஹர்த்துமத்யத்புதரௌத்ரவ்ருத்தா:॥

பதம்.	உரை.	பதம்.	உரை.
தந்த்ரீஸ்வநா:	வீணைமுதலான வாத்தியவிசேஷங்களுடைய தந்திநாதங்கள்	ததா	அப்படியே
		நக்தஞ்சராஶ்சாபி	இராக்ஷதர்களும்
கர்ணஸுகா:	கேட்பதற்கு இன்பமாக	அத்யத்புதரௌத்ரவ்ருத்தா:=	
ப்ரவ்ருத்தா:	சப்தித்தன	அத்யத்புத	அதிக ஆச்சரியமாயும்
ஸுவ்ருத்தா:	நன்னடத்தையுடைய	ரௌத்ர	பயங்கரமாயுமிருக்கிற
நார்ய:	ஸ்திரீகள்	வ்ருத்தா:	வியாபாரத்தையுடையவர்களாக
பதிபி:	பர்த்தாக்களோடுகூட	விஹர்த்தும்	கிரீடிப்பதற்கு
ஸ்வபந்தி	தூங்குகிறார்கள்	ப்ரவ்ருத்தா:	பிரவர்த்தித்தனர்.

தா-ம்—பூர்ணசந்திரிகையோடுகூடின அன்றிரவில் அனேகவிடங்களில் வீணைமுதலிய வாத்தியங்கள் தங்கள் திவ்வியநாதத்தால் கர்ணாமிருதத்தைப் பொழிந்தன. கற்புடைய மாதர் தங்கள் பதிகளுடன்கூடி ரமித்து நித்திரைசெய்தனர். இராக்ஷதர்கள் மாம்ஸத்தை புஜித்து மத்தியபானத்தைச்செய்து, உத்ஸாக மிகுதியாற் குதித்துக் கூத்தாடிக் கொக்கரித்து, பயங்கரமான சேஷ்டைகளைச் செய்துகொண்டு கிரீடிப்பதற்காரம்பித்தனர்.

౧౦. మత్తప్రమత్తానిసమాకులానిరథాశ్వభద్రాసనసంకులాని।వీరశ్రియాచాపిసమాకులానిదదర్శధీమాన్సకపిఃకులాని॥

க௦. மத்தப்ரமத்தாநிஸமாகுலாநிரதாஶ்வபத்ராஸநஸங்குலாநி।
வீரஶ்ரியாசாபிஸமாகுலாநிததர்ஶதீமாந்ஸகபி:குலாநி॥

க௦. மத்தப்ரமத்தாநிஸமாகுலாநிரதாஶ்வபத்ராஸநஸங்குலாநி।
வீரஶ்ரியாசாபிஸமாகுலாநிததர்ஶதீமாந்ஸகபி:குலாநி॥

பதம்.	உரை.	பதம்.	உரை.
தீமாந்	புத்திமானான	ரத	இரதங்களென்ன
ஸ:	அந்த	அஶ்வ	ஜாத்யசுவங்களென்ன
கபி:	ஹநுமாரானவர்	பத்ர	பத்ரமென்கிற கஜஸ்ரேஷ்டங்களென்ன (இவைகளை நிறுத்தும்படியான)
மத்தப்ரமத்தாநி=		ஆஸநஸங்குலாநி	ஸ்தலங்களால் நிறைந்தனவாயும்
மத்த	மதுபானத்தால்	வீரஶ்ரியாசாபி	ஜயஸ்ரீஸம்பந்தத்தால்
ப்ரமத்தாநி	மதிமயங்கின ஜனங்களையுடையனவாயும்	ஸமாகுலாநி	நிறைந்திருக்கின்றனவாயுமிருக்கிற
ஸமாகுலாநி	வியவஸ்தையற்றவர்களாயிருக்கிற ஜனஸமூகங்களையுடையனவாயும்	குலாநி	கிருகங்களை
ரதாஶ்வபத்ராஸநஸங்குலாநி=		ததர்ஶ	பார்த்தார்.

தா-ம்—லோகமாதாவான ஜானகியைத் தரிசிப்பதற்காக ஆனந்தகரமான சந்திரிகையோடுகூடிய இரவில் இராவணாந்தப்புரப்பிரவேசஞ்செய்த அந்த புத்திமானான ஹநுமார், மத்தியபானத்தால் மதிமயங்கி சித்தஸ்வாதீனமிழந்து வியவஸ்தையின்றிக் குதிக்கிற ஜனங்களையுடையனவாயும், இரதகஜதுரகங்களை விடுவதற்கும் கட்டுவதற்கும் யோக்கியமான விஸ்தாரசாலைகளையும் கட்டுத்தறிகளையுமுடையனவாயும், ஜயஸ்ரீயால் வாஸம்பண்ணப்பட்டு வெகு சுபகரமாய் விளங்குகின்றனவுமான அனேக மாளிகைககளைக் கண்டார்.

౧౧. పరస్పరంచాధికమాక్షిపంతిభుజాంశ్చపీనానధిక్షిపంతి।మత్తప్రలాపానధిక్షిపంతిమత్తానిచాన్యోన్యమధిక్షిపంతి॥

౧౨. రక్షాంసివక్షాంసిచవిక్షిపంతిగాత్రాణికాంతాసుచవిక్షిపంతి।రూపాణిచిత్రాణిచవిక్షిపంతిదృఢానిచాపానిచవిక్షిపంతి॥

கக. பரஸ்பரஞ்சாதிகமாக்ஷிபந்திபுஜாம்ஶ்சபீநாநதிவிக்ஷிபந்தி।
மத்தப்ரலாபாநதிவிக்ஷிபந்திமத்தாநிசாந்யோந்யமதிக்ஷிபந்தி॥

க௨. ரக்ஷாம்ஸிவக்ஷாம்ஸிசவிக்ஷிபந்திகாத்ராணிகாந்தாஸுசவிக்ஷிபந்தி।
ரூபாணிசித்ராணிசவிக்ஷிபந்தித்ருடாநிசாபாநிசவிக்ஷிபந்தி॥

கக. பரஸ்பரஞ்சாதிகமாக்ஷிபந்திபுஜாம்ஶ்சபீநாநதிவிக்ஷிபந்தி।
மத்தப்ரலாபாநதிவிக்ஷிபந்திமத்தாநிசாந்யோந்யமதிக்ஷிபந்தி॥

க௨. ரக்ஷாம்ஸிவக்ஷாம்ஸிசவிக்ஷிபந்திகாத்ராணிகாந்தாஸுசவிக்ஷிபந்தி।
ரூபாணிசித்ராணிசவிக்ஷிபந்தித்ருடாநிசாபாநிசவிக்ஷிபந்தி॥

பதம்.	உரை.	பதம்.	உரை.
பரஸ்பரம்	ஒருவர்க்கொருவர்	அதிக்ஷிபந்தி	பயப்படுத்துகிறவர்களும்
அதிகம்	அதிகமாக	வக்ஷாம்ஸி	மார்புகளை
ஆக்ஷிபந்தி	பரிஹாஸம் பண்ணிக்கொண்டிருப்பவர்களும்	விக்ஷிபந்தி	திறந்துகொண்டிருப்பவர்களும்
		காந்தாஸு	நாயகிகளின்பேரில்
பீநாந்	பெருத்திருக்கிற	காத்ராணி	சரீரங்களை
புஜாந்	தோள்களை	விக்ஷிபந்தி	போட்டுக்கொண்டிருப்பவர்களும்
அதிவிக்ஷிபந்தி	(ஒருவர்மேலொருவர்) போட்டுக்கொண்டிருப்பவர்களும்	சித்ராணி	நானாவிதங்களான
		ரூபாணி	வேஷங்களை
மத்தப்ரலாபாந்=		விக்ஷிபந்தி	போட்டுக்கொண்டிருப்பவர்களும்
மத்த	மதத்தினாலுண்டாகிற	த்ருடாநி	வலிவான
ப்ரலாபாந்	பிதற்றல்களை	சாபாநி	தனுஸ்ஸுகளை
அதிவிக்ஷிபந்தி	விசேஷமாகப் பேசுகிறவர்களும்	விக்ஷிபந்திச	டங்காரம் செய்பவர்களுமான
மத்தாநி	மதித்தவர்களும்	ரக்ஷாம்ஸி	இராக்ஷதர்களை
அந்யோந்யம்	ஒருவர்க்கொருவர்	(ததர்ஶ)	(பார்த்தார்.)

தா-ம்—பிராட்டியைத் தேடிக்கொண்டு ஹநுமான் போகையில் சில ராக்ஷதர்கள் தங்கள் ஸ்நேகிதர்களோடுகூடி விளையாடி, ஒருவரையொருவர் பரிகாஸம் செய்துகொண்டிருந்தனர். சிலர் தோழர்கள் தோள்களில் கைபோட்டுக்கொண்டு உல்லாஸமாயுலாவித்திரிந்தனர். சிலர் மத்தியபானத்தால் மதிமயங்கி தாறுமா

றாகப் பேசிக்கொண்டிருந்தனர். மிகவும் கொழுத்த சில ராக்ஷதர் பிறரை பயமுறுத்திக்கொண்டிருந்தனர். சிலர் மேல்வஸ்திரமில்லாமல் விசாலமான வக்ஷஸ்ஸுடன் சந்திரிகையில் வேடிக்கையாயுலாவினர். சில விடபுருஷர் தங்களருமைநாயகிகளின்பேரில் சாய்ந்துகொண்டு ஸந்தோஷமாய் கிரீடித்தனர். சிலர் நானுவேஷங்கள் தரித்து விசித்திரமாகக் காணப்பட்டனர். சிலர் வில்லெடுத்து நாண்பூட்டி டங்காரசப்தம் செய்தனர். இந்தவிதம் அவ்வரக்கர்கள் சந்திரிகையின் ஸுகத்தைத் தங்கள் மனோரதப்படி யனுபவிப்பதைக் கண்டார்.

౧౩. దదర్శ కాంతాశ్చ సమాలభంత్యస్తథాపరాస్తత్ర పునస్స్వపంత్యః। సురూపవక్త్రాశ్చ తథా హసంత్యః క్రుద్ధాః పరాశ్చాపి వినిశ్వసంత్యః॥

௧௩. [illegible]

[illegible]

௧௩. ததர்ஶகாந்தாஶ்சஸமாலபந்த்யஸ்ததாபராஸ்தத்ரபுநஸ்வபந்தய:|
ஸுரூபவக்த்ராஶ்சததாஹஸந்தய:க்ருத்தா:பராஶ்சாபிவிநிஶ்வஸந்தய:||

பதம்.	உரை.	பதம்.	உரை.
(அத)	(பிறகு)	ததா	அவ்விதமே
ஸமாலபந்த்ய:	நற்சந்தனம் பூசிக்கொண்டிருப்போர்களான	ஹஸந்த்ய:	சிரிக்கிற
காந்தாஶ்ச	ஸ்திரீகளையும்	ஸுரூபவக்த்ராஶ்ச	ஸுந்தரமுகமுடையவர்களையும்
ததா	அப்படியே	க்ருத்தா:	கோபித்தவர்களையும்
தத்ர	அவ்விடத்தில்	* விநிஶ்வஸந்த்ய:	(பர்த்தாவின் பிரிவினுல்) பெருமூச்சு விடுபவர்களான
புந:	மறுபடியும்		
ஸ்வபந்த்ய:	தூங்கிக்கொண்டிருக்கிற	பராஶ்சாபி	அந்நியஸ்திரீகளையும்
பரா:	வேறான (ஸ்திரீகளையும்)	ததர்ஶ	பார்த்தார்.

தா-ம்—அப்பொழுது சிலமாதர் நற்சந்தனம்பூசி நறுமலர்சாத்தி திவ்யாலங்காரத்தோடு விளங்கினர். சிலர் தங்கள் கணவர்களுடன் கிரீடித்து நித்திரைசெய்து மறுபடியும் கிரீடித்துக் கண் துயின்றனர். சிலர் முத்துவரிசைகள்போன்ற பற்களை வெளியிட்டு மந்தஹாஸம்செய்கிற ஸுந்தரவதனத்தோடிருந்தனர். சிலர் பர்த்தாக்களோடு பிரணயகலகம்செய்து அவரோடு சேராமல் தனியே நின்றனர். சிலர் பிரணயகலகத்தால் நேர்ந்த பர்த்ருவிரஹம் ஸகியாமல் பெருமூச்சுவிட்டனர். இப்படி பல அவஸரங்களிலிருக்கிற ஸுந்தரிகளைப் பார்த்துக்கொண்டே சென்றார்.

౧౪. మహాగజైశ్చాపి తథా నదద్భిస్సుపూజితైశ్చాపి తథా సుసద్భిః। రరాజ వీరైశ్చ వినిశ్వసద్భిః హ్రదో భుజంగైరివ నిశ్వసద్భిః॥

௧௪. [illegible]

[illegible]

௧௪. மஹாகஜைஶ்சாபிததாநதத்பிஸ்ஸுபூஜிதைஶ்சாபிததாஸுஸத்பி:|
ரராஜவீரைஶ்சவிநிஶ்வஸத்பி:ஹ்ரதோபுஜங்கைரிவநிஶ்வஸத்பி:||

பதம்.	உரை.	பதம்.	உரை.
ததா	அப்படியே		ரர்கள் கிடைக்கவில்லையென்கிற
நதத்பி:	கீங்காரம் செய்கிற		துக்கத்தினுல்) பெருமூச்சுவிடுகிற
மஹாகஜைஶ்சாபி	பெரிய யானைகளாலும்	வீரைஶ்ச	யுத்தவீரர்களாலும்
ததா	அவ்விதமே	நிஶ்வஸத்பி:	சீறுகிற
ஸுபூஜிதை:	நன்முக பூஜிக்கப்பட்ட	புஜங்கை:	நாகங்களால் (நிறைந்த)
ஸுஸத்பி:	பெரியோர்களாலும்	ஹ்ரதயிவ	மடுவுபோல்
விநிஶ்வஸத்பி:	(தன்னுடன் யுத்தம்பண்ணத்தக்க வீ	ரராஜ	விளங்கிற்று.

தா-ம்—மதமிகுதியால் கீங்காரசப்தம்பண்ணுகிற அனேக யானைகளைக்கண்டார். மஹாபூஜ்ஜியர்களான அனேக பெரியோர்களைத் தரிசித்தார். தனக்கு ஸதிருசமாகத் தன்னேடு யுத்தம்செய்யவல்ல வீரர்கள் லபிக்கவில்லையேயென்று பெருமூச்சுவிடுகிற சூரர்களைப் பார்த்தார். வெகு பயங்கரமாய்ச் சீறுகிற ஸர்ப்பங்கள் நிறைந்த நாகலோகம்போல் மஹாகுரூரஸ்வபாவமுள்ள இராக்ஷதர்களால் வஸிக்கப்பட்ட அந்தப்புரத்தைக் கண்ணுற்றார்.

౧౫. బుద్ధిప్రధానాన్ రుచిరాభిధానాన్ సంశ్రద్దధానాన్ జగతః ప్రధానాన్। నానావిధానాన్ రుచిరాభిధానాన్ దదర్శ తస్యాం పురి యాతుధానాన్॥

௧௫. [illegible]

[illegible]

௧௫. புத்திப்ரதாநாந்ருசிராபிதாநாந்ஸம்ஶ்ரத்ததாநாந்ஜகத:ப்ரதாநாந்|
நாநாவிதாநாந்ருசிராபிதாநாந்ததர்ஶதஸ்யாம்புரியாதுதாநாந்||

* ஸமாலபந்த்ய: என்றும் பாடம். சதுரமாய் வார்த்தை சொல்பவர்களையும், அல்லது தங்கள் குறைகளைச் சொல்லிக்கொண்டிருப்பவர்களையுமென்றர்த்தம்.

பதம்.	உரை.	பதம்.	உரை.
ஸஃ	அந்த (ஹநுமாரானவர்)	ருசிராபிதாநாந்	மனோக்கியமான பேருடையோர்களுமான
புத்திப்ரதாநாந்	சிரேஷ்டமான புத்தியுடையவர்களையும்	தஸ்யாம்	அந்த
ருசிராபிதாநாந்	நல்வார்த்தை சொல்பவர்களையும்	புரீ	இலங்கையில் (இருக்கிற)
ஸம்ஶ்ரத்ததாநாந்	மிகவும் சிரத்தையுடையவர்களையும்	யாதுதாநாந்	இராக்ஷதர்களையும்
ஜகதஃ	லோகத்திற்கு	ததர்ஶ	பார்த்தார்.
ப்ரதாநாந்	முக்கியர்களையும்		
நாநாவிதாநாந்	அனேகவித வேஷத்தையுடையவர்களையும்		

தா-ம்—பிறகு அம்மாருதியானவர் சிறந்த புத்திமான்களையும், மதுரமான வார்த்தை சொல்பவர்களையும், ஒருவரையொருவர் நம்பி அந்தரங்கவிஷயங்களைச் சொல்லிக்கொண்டிருக்கிற ஸ்நேகிதர்களையும், ஜகத்பிரஸித்தர்களான இராக்ஷஸப்பிரமுகர்களையும், செவிக்கினிய நாமம் பூண்டவர்களையும், நானாவிதவேஷம் தரித்தவர்களையும் அங்ககிற்கண்டார்.

౧౬. స ననన్దదృష్ట్వాసచతాన్సురూపాన్నానాగుణానాత్మగుణానురూపాన్। విద్యోతయన్తీస్స తదాసురూపాఃదదర్శ కాశ్చిచ్చపునర్విరూపాః॥

௧௬. [illegible]

[illegible]

௧௬. நநந்தத்ருஷ்ட்வாஸசதாந்ஸுரூபாந்நாநாகுணாநாத்மகுணாநுரூபாந்|
வித்யோதயந்திஸ்ஸததாஸுரூபாததர்ஶகாஶ்சிச்சபுநர்விரூபாஃ||

பதம்.	உரை.	பதம்.	உரை.
ஸச	அப்படி பிரஸித்தமான	நநந்த	ஆனந்தித்தார்
ஸஃ	அந்த ஹநுமாரானவர்	வித்யோதயந்தீஃ	ஜ்வலித்துக்கொண்டிருக்கிற
ஸுரூபாந்	நல்ல வர்ச்சஸ்விகளையும்	ஸுரூபாஃ	நல்ல ரூபமுள்ள ஸ்திரீகளையும்
நாநாகுணாந்	விவிதகுணங்களையுடையவர்களையும்	காஶ்சித்	சில
ஆத்மகுணாநுரூபாந்	தம்முடைய குணத்திற் கனுகுணமான (வியாபாரமுடையவர்களான)	விரூபாஃ	குரூபிகளான (ஸ்திரீகளையும்)
		ததா	அப்பொழுது
தாந்	அந்த (ராக்ஷதர்களை)	புநஃ	மறுபடியும்
த்ருஷ்ட்வா	பார்த்து	ததர்ஶ	பார்த்தார்.

தா-ம்—பிறகு அந்த வாயுபுத்திரர் நல்ல ரூபவான்களையும், நானாவித குணங்களையுடையவர்களையும், தங்கள் குணங்களுக்கனுகுணமான வியாபாரங்களையுடையவர்களுமான இராக்ஷதர்களையும், மின்னல்போல் ஜ்வலிக்கிற தேஜஸ்ஸுடையவர்களும் குரூபிகளுமான அனேக ஸ்திரீகளையுங் கண்டார்.

౧౭. తతోవరార్హాస్సువిశుద్ధభావాస్తేషాంస్త్రియస్తత్రమహానుభావాః। ప్రియేషుపానేషుచసక్తభావాదదర్శ తారాఇవసుప్రభావాః॥

௧௭, [illegible]

[illegible]

௧௭. ததோவரார்ஹாஸ்ஸுவிஶுத்தபாவாஸ்தேஷாம்ஸ்த்ரியஸ்தத்ரமஹாநுபாவாஃ|
ப்ரியேஷுபாநேஷுசஸக்தபாவாததர்ஶதாராஇவஸுப்ரபாவாஃ||

பதம்.	உரை.	பதம்.	உரை.
ததஃ	பின்பு	பாநேஷுச	மத்தியபானங்களிலும்
வரார்ஹாஃ	சிரேஷ்டமாயிருக்கிறவர்களும்	ஸக்தபாவாஃ	பிரவேசித்திருக்கிற மனதுடையவர்களுமான
விஶுத்தபாவாஃ	(பர்த்தாக்களிடத்தில்) நிர்மலமான மனஸ்ஸுடையோர்களும்	தேஷாம்	அந்த இராக்ஷதர்களுடைய
மஹாநுபாவாஃ	பாதிவ்ருத்திய சிலமுடையவர்களும்	ஸ்திரியஃ	ஸ்திரீகளை
ஸுப்ரபாவாஃ	நற்சரித்திரமுடையவர்களும்	தாராஇவ	நக்ஷத்திரங்களைப்போல்
ப்ரியேஷு	நாயகர்களிடத்திலும்	ததர்ஶ	பார்த்தார்.

தா-ம்—பிறகு அம்மாருதியானவர் ஆகாயத்தில் ஜ்யோதிர்மயமாய் விளங்குகிற நக்ஷத்திரமண்டலங்கள்போல் உப்பரிகைகளில் பளபளக்கிற தேககாந்தியை வீசிக்கொண்டு பர்த்ருஸகிதர்களாய் ஸஞ்சரிக்கிற அனேக ரூபலாவண்ணியமுள்ள ஸுந்தரிகளையும், பதிகளிடத்தில் அந்தரங்கமான விசுவாஸமுள்ள குலஸ்திரீகளையும், பதிவிருதாதர்மத்திற் சிறந்த உத்தமிகளையும், ஸத்சரித்திரத்தோடுகூடிய குணவதிகளையும், க்ரீடிப்பதற்கும் மத்தியபானஞ் செய்வதற்கும் மிகுந்த ஆஸக்தியுடைய தருணிகளையும் பார்த்துக்கொண்டேசென்றார்.

౧౮. శ్రియాజ్వలన్తీస్త్రపయోపగూఢా నిశీథకాలేరమణోపగూఢాః। దదర్శ కాశ్చిత్ప్రమదోపగూఢా యథావిహఙ్గాఃకుసుమోపగూఢాః॥

௧௮. [illegible]

[illegible]

௧௮. ஶ்ரியாஜ்வலந்திஸ்த்ரபயோபகூடாநிஶீதகாலேரமணோபகூடாஃ|
ததர்ஶகாஶ்சித்ப்ரமதோபகூடாயதாவிஹங்காஃகுஸுமோபகூடாஃ||

பதம்.	உரை.	பதம்.	உரை.
ஶ்ரியா	காந்தியினல்	ரமணோபகூடா:	கணவரோடு கூடியிருப்போர்களையும்
ஜ்வலந்தீ:	பிரகாசித்துக்கொண்டிருக்கிறவர்களை [யும்	ப்ரமுதோபகூடா:	ஸந்தோஷத்தோடிருப்பவர்களுமான
த்ரபயோபகூடா:—		காஶ்சித்	சிலபேர்களை
த்ரபய	லஜ்ஜையோடு	குஸுமோபகூடா:	புஷ்பத்தில் மறைந்திருக்கிற
உபகூடா:	கூடிக்கொண்டிருப்பவர்களையும்	விஹங்காயதா	(பெண்) பக்ஷிகளைப்போல்
நிஶீதகாலே	அர்த்தராத்திரிகாலத்தில்	ததர்ஶ	பார்த்தார்.

தா-ம்—விருக்ஷங்களில் புஷ்பஸமூகமத்தியில் தங்கள் பொற்சிறகோடு விளங்கும் பக்ஷிகளைப்போல், காந்தி மிகுதியால் ஜ்வலித்தும், லஜ்ஜையால் மௌனமாயும், பதிகளோடு கிரீடித்துக்கொண்டும், கிரீடித்த பிறகு ஆனந்தித்துக்கொண்டும், இப்படி பலவாறாக புஷ்பதல்பங்களில் பர்த்ருஸமேதராய் சயனித்திருக்கிற தருணிகளைக்கண்டார்.

౧౯. అన్యాః పునర్హర్మ్యతలోపవిష్టాస్తత్ర ప్రియాంకేషు సుఖోపవిష్టాః। భర్తుః ప్రియా ధర్మపరా నివిష్టా దదర్శ ధీమాన్ మదనాభివిష్టాః॥

௧௯. [illegible]
[illegible]

௧௯. அந்யா: புநர்ஹர்ம்யதலோபவிஷ்டாஸ்தத்ர ப்ரியாங்கேஷு ஸுகோபவிஷ்டா:।
பர்த்து: ப்ரியா தர்மபரா நிவிஷ்டா ததர்ஶ தீமாந் மதநாபிவிஷ்டா:॥

பதம்.	உரை.	பதம்.	உரை.
தத்ர	அவ்விடத்தில்	ஸுகோபவிஷ்டா:	ஸுகமாயிருப்போர்களையும்
தீமாந்	புத்திமானான ஹநுமான்	பர்த்து:	பர்த்தாவுக்கு
ஹர்ம்யதலோபவிஷ்டா:—		ப்ரியா:	சந்தோஷத்தைச் செய்பவர்களையும்
ஹர்ம்ய	மேலுப்பரிகையினுடைய	தர்மபரா:	தர்மத்திலாஸக்தியுள்ளவர்களையும்
தல	பிரதேசத்தில்	நிவிஷ்டா:	கல்யாணமானவர்களையும்
உபவிஷ்டா:	உட்காந்திருப்பவர்களையும்	மதநாபிவிஷ்டா:	மன்மதபாணத்தாற்கட்டுண்ட
ப்ரியாங்கேஷு—		அந்யா:	இதரமானஸ்திரீகளையும்
ப்ரிய	கணவர்களுடைய	புந:	மறுபடியும்
அங்கேஷு	மடிகளில்	ததர்ஶ	பார்த்தார்.

தா-ம்—புத்திபராக்கிரமவிசேஷத்தால் முதிர்ந்த அந்த ஹநுமான் ஸீதாதேவியை மாளிகைகள்தோறும் தேடிக்கொண்டு செல்கையில் சில உப்பரிகைகளில் உல்லாஸமா யுட்காந்திருக்கிற ஸ்திரீகளையும், பர்த்தாக்களுடைய மடிகளில் சாந்துகொண்டு ஸுகிக்கிற யுவதிகளையும், கணவனுக்கு இரதியைத்தருகிற காந்தைகளையும், தர்மத்தி லாஸக்தியுள்ள பதிவிருதைகளையும், ஸமீபகாலத்தில் மணம்புரிந்து மங்களஸூசகங்களான சின்னங்களையுடைய வதூக்களையும், மன்மதபாணத்தா லடிபட்டுத் துவண்டுவாடின காமினிகளையுங்கண்டார்.

౨౦. అప్రావృతాః కాంచనరాజివర్ణాః కాశ్చిత్పరార్థ్యాస్తపనీయవర్ణాః। పునశ్చ కాశ్చిచ్ఛశలక్ష్మవర్ణాః కాంతప్రహీణా రుచిరాంగవర్ణాః॥

౨౧. తతః ప్రియాన్ప్రాప్య మనోభిరామాః సుప్రీతియుక్తాః ప్రసమీక్ష్య రామాః। గృహేషు హృష్టాః పరమాభిరామా హరిప్రవీరస్స దదర్శ రా [మాః॥

௨௰. [illegible]
[illegible]

௨௧. [illegible]
[illegible]

௨௰. அப்ராவ்ருதா: காஞ்சநராஜிவர்ணா: காஶ்சித் பரார்த்யாஸ் தபநீயவர்ணா:।
புநஶ்ச காஶ்சிச் ஶஶலக்ஷ்மவர்ணா: காந்தப்ரஹீணா ருசிராங்கவர்ணா:॥

௨௧. தத: ப்ரியாந் ப்ராப்ய மநோபிராமாஸ் ஸுப்ரீதியுக்தா: ப்ரஸமீக்ஷ்ய ராமா:।
க்ருஹேஷு ஹ்ருஷ்டா: பரமாபிராமா ஹரிப்ரவீரஸ் ஸ ததர்ஶ ராமா:॥

பதம்.	உரை.	பதம்.	உரை.
அப்ராவ்ருதா:	மேல்போர்வையில்லாதவர்களையும்	காந்தப்ரஹீணா:	பர்த்தாவைவிட்டுப்பிரிந்திருப்பதனல்
காஞ்சநராஜிவர்ணா:—		ஶஶலக்ஷ்மவர்ணா:	சந்திரன்போல் வெளுத்ததேகமுடையவர்களையும்
காஞ்சந	ஸ்வர்ணத்தினுடைய	ருசிராங்கவர்ணா:	மனோஹரமானதேககாந்தியுடைய
ராஜி	கூட்டத்தினுடைய	காஶ்சித்	சில்ஸ்திரீகளையும்
வர்ணா:	வர்ணம்போன்ற வர்ணமுடையவர்களையும்	தத:	பின்பு
பரார்த்யா:	உத்தமஸ்திரீகளையும்	ப்ரியாந்	பர்த்தாக்களை
தபநீயவர்ணா:	உருக்கினதங்கம்போன்றமேனியுடையவர்களான	ப்ராப்ய	அடைந்து
காஶ்சித்	சிலஸ்திரீகளையும்	ஸுப்ரீதியுக்தா:	அதிக ஆசையோடு கூடினவர்களையும்
புநஶ்ச	மறுபடியும்	மநோபிராமா:	மனதுக்குரம்யமான
		ராமா:	ஸ்திரீகளையும்

பதம்.	உரை.	பதம்.	உரை.
ராமலக்ஷ்மணலக்ஷணாஃ	ஸ்ரீராகவ லக்ஷ்மணர்களின்பெயரை யடையாளமாயுமுடைய	பரிநிக்நந்தஃ	ஹிம்ஸித்துக்கொண்டு
இஷவஃ	பாணங்கள்	அஸம்பாதம்	அவகாசமில்லாததை
ஜ்வலிதாஸ்யாஃ	விஷாக்கினியால் எரிகிற முகங்களையுடைய	கரிஷ்யந்தி	செய்யப்போகின்றன
உரகாஇவ	ஸர்ப்பங்கள்போல்	மஹாந்	பெரியவரான (சிறந்தவரான)
இஹ	இந்த (இலங்கையில்)	ஸஃ-ராமஃ	அந்த-ஸ்ரீராகவன்
ஶீக்ரம்-நிபதிஷ்யந்தி	த்வரையாக-விழப்போகின்றன	ராக்ஷஸேந்த்ரமஹாஸர்ப்பாந்	இராக்கதமுக்கியாளாகிறபெரு ஸர்ப்பங்களை
கங்கவாஸஸஃ	கழுகுஇரக்கையைவஸ்திரமாயுடைய (பாணங்கள்)	ராமகருடஃ	இராமனாகிறகருடன்
		வைநதேயஃ	கருத்மானனவர்
		உரகாநிவ	ஸர்ப்பங்களைப்போல்
அஸ்யாம்-புர்யாம்	இந்த-பட்டணத்தில்	வேகேந	வேகத்தோடே
ஸமந்ததஃ	நாற்புறத்திலும்	உத்தரிஷ்யதி	மேலெடுத்தெறியப்போகிறார்.

தா-ம்—ஹேராக்ஷஸேந்திர! உனது துர்ப்புத்தியாலிந்நகருக்குக்கொஞ்சகாலத்தில்நேரிடப்போகிற பிரளயத்தைச் சொல்லுகிறேன்கேள். அந்தரகுவீரன் இவ்விடம் வந்தவுடன் தனது உக்கிரகோதண்டத்தை வளைத்து, தங்கக்கட்டுகட்டி இராமலக்ஷ்மண நாமாங்கிதங்களைவகித்துக் காலகோடிவிஷத்தைக்கக்குகிற ஸர்பபங்கள்போல் ஜ்வலிக்கிற தேஜஸ்ஸுடைய திவ்வியசரங்களை வர்ஷிக்கப்போகிறார். கழுகுரக்கைகள்போன்ற இரக்கைகளையுடைய அந்ததிடங்கொண்ட ராமபாணங்கள் இலங்காநகரமுழுது மிடைவெளியில்லாமல் வியாபித்து இராக்கதருடைய மார்பைப்பிளந்து கண்டங்களைச்சேதித்துப் பரமஹிம்ஸை செய்யப்போகின்றன. மஹாவேகவானன வைனதேயனுடைய மூக்கிற்சிக்கியஸர்ப்பங்கள் வதைபடுவதுபோல் நீங்களெல்லோரு மூர்த்தவிஜயராகவனுடைய விக்கிரமவேகத்தா லாகாயத்திலெடுத்தெறியப்பட்டு நசிக்கப்போகிறீர்கள்.

(அவதாரிகை) தன்னிடத்திலிருந்து ஸீதையையொருக்காலும் இராமன் அடையமாட்டானென்றுசொன்ன இராவண வசனத்திற்குபதிலுத்தரம் சொல்லப்படுகிறது.

౨౮. అపనేష్యతిమాంభర్తాత్వత్తశ్శీఘ్రమరిందమః॥అసురేభ్యశ్శ్రియందీప్తాంవిష్ణుస్త్రిభిరివక్రమైః।

௨௮. 𑌅𑌪𑌨𑍇𑌷𑍍𑌯𑌤𑌿𑌮𑌾𑌂𑌭𑌰𑍍𑌤𑌾𑌤𑍍𑌵𑌤𑍍𑌤𑌃𑌶𑍀𑌘𑍍𑌰𑌮𑌰𑌿𑌨𑍍𑌦𑌮𑌃॥
𑌅𑌸𑍁𑌰𑍇𑌭𑍍𑌯𑌃𑌶𑍍𑌰𑌿𑌯𑌂𑌦𑍀𑌪𑍍𑌤𑌾𑌂𑌵𑌿𑌷𑍍𑌣𑍁𑌸𑍍𑌤𑍍𑌰𑌿𑌭𑌿𑌰𑌿𑌵𑌕𑍍𑌰𑌮𑍈𑌃।

உஅ. அபநேஷ்யதிமாம்பர்த்தாத்வத்தஶ்ஶீக்ரமரிந்தம:॥
அஸுரேப்யஶ்ஶ்ரியம்தீப்தாம்விஷ்ணுஸ்த்ரிபிரிவக்ரமை:।

பதம்.	உரை.	பதம்.	உரை.
விஷ்ணு:	(வாமனவதாரம் செய்தருளின) விஷ்ணுவானவர்	அரிந்தம:	சத்துருநாசகரான
த்ரிபி:	மூன்றுகளான	பர்த்தா	என் நாதனான (ஸ்ரீராகவன்)
க்ரமை:	அடிவைப்புகளால்	மாம்	என்னை
அஸுரேப்ய:	அஸுரர்களிடத்திலிருந்து	ஶீக்ரம்	த்வரையாக
தீப்தாம்	ஒளியுற்ற	த்வத்த:	உன்னிடத்திலிருந்து
ஶ்ரியமிவ	இராஜ்ஜியஸம்பத்துபோல்	அபநேஷ்யதி	எடுத்துகொண்டுபோகப்போகிறார்.

தா-ம்—மேகத்தால் மறைப்புண்ட சந்திரிகைபோலும் இந்திரஹஸ்தகதமான ஹிரண்ணியகசிபு கீர்த்திபோலும் உன்வசத்தையடைந்த வென்னை ஸ்ரீராமன் தரிசிப்பதற்கு மசக்தனென்றுபிதற்றுகிற அடேராவண! என்னுடையநாதன் மானிடவடிவங்கொண்டமையா லவருடைய விக்கிரமமகிமையை யறியாமலேசுகிறாய். வாமனரூபியாய் மூன்றடிநிலம்யாசித்துப் பிறகு தனது விசுவரூபத்தைவெளியிட்டுப்பூமியையோரடியாலும் வானையோரடியாலுமளந்து மூன்றுவததடிவைப்பால் அஸுரேசுவரனை பலிசக்கிரவர்த்தியின் ஸர்வ ஸ்ரீயையும் ஸ்வீகரித்த ஸ்ரீமந்நாராயணன்போல் எனதுபர்த்தாவும் சிறியஉருவங்கொண்டவராயினும் உன்போன்ற பிரபலசத்துருக்களனேகரை சிரமமின்றி தனதுகோதண்டத் திருவிளையாட்டால் க்ஷணகாலத்தில் முடிக்கவல்ல மஹாதீரன். பாணிக்கிரகணஞ்செய்த பத்தினியைப்பரிக்க வகையறியாத சௌரியமற்ற துர்ப்பலனென்றெண்ணிமகிழாதே. இன்னம்சிலநாளில் என்னைப்பற்றிவந்த உன்னிருபது புயங்களைப் பனைமரம் வெட்டிச்சாய்ப்பதுபோலறுத்து, மகுடமேந்திய சிரங்களைப் பனங்காய்போலுதிர்த்து அவைதூஷித்தவாயில்மண்ணிட்டு, இவ்விதம்கஷ்டப்படுகிற வென்னைத் திரும்பியடைந்து ரக்ஷிக்கப்போகிறார்.

౨౯. జనస్థానే హతస్థానే నిహతే రక్షసాం బలే॥ అశక్తేన త్వయా రక్షః కృతమేతదసాధు వై।

உகூ. 𑌜𑌨𑌸𑍍𑌥𑌾𑌨𑍇 𑌹𑌤𑌸𑍍𑌥𑌾𑌨𑍇 𑌨𑌿𑌹𑌤𑍇 𑌰𑌕𑍍𑌷𑌸𑌾𑌂 𑌬𑌲𑍇॥
𑌅𑌶𑌕𑍍𑌤𑍇𑌨 𑌤𑍍𑌵𑌯𑌾 𑌰𑌕𑍍𑌷𑌃 𑌕𑍃𑌤𑌮𑍇𑌤𑌦𑌸𑌾𑌧𑍁 𑌵𑍈।

உகூ. ஜநஸ்தாநேஹதஸ்தாநேநிஹதேரக்ஷஸாம்பலே॥
அஶக்தேநத்வயாரக்ஷ:க்ருதமேததஸாதுவை।

பதம்.	உரை.	பதம்.	உரை.
ஜநஸ்தாநே	கரன்முதலானவர்களுடைய வாஸஸ்தானமானது	அஶக்தேந	சக்தியற்றிருக்கிற
ஹதஸ்தாநே	நாசம்பண்ணப்பட்டஇடமுடையதாக	த்வயா	உன்னால்
ரக்ஷஸாம்	இராக்ஷதர்களுடைய	அஸாது	நலமில்லாமலிருக்கும்படி
பலே	ஸைந்நியமானது	ஏதத்	(யுக்தமில்லாமல்திருட்டுத்தனத்தாலபகரித்துவந்த) இந்தகிருத்தியமானது
நிஹதே(ஸதி)	அடிக்கப்பட்டிருக்கையில்	க்ருதம்	செய்யப்பட்டது.
(ஹே) ரக்ஷஸ	ஓ ராவண		

தா-ம்—கரதூஷணப்பிரமுகாளான இராக்ஷதவீரரும் அவர்களுடைய அளவற்ற ஸைன்னியமும் ஸ்ரீரகுவீர கோதண்டத்தால் ஒருமுகூர்த்த நாழிகைக்குள்மடிந்து தண்டகாரண்ணியமுழுதும் இராக்கத சூன்னியமாயிருக்கையில் கேவலமபலனான நீ அந்தநரஸிம்மத்துவயத்தை யெதிர்க்கபயந்து வஞ்சனையாலவர்களை ஆசிரமத்தினின்று வெளிப்படுத்தி ஸமயம்பார்த்து என்னையபகரித்துவந்தாய். இந்த சோரகிருத்தியம் பௌருஷலேசமாவதுள்ளவீரன் செய்யத்தகுந்ததோ. ஸர்வலோகநிந்திதமும் விற்பிடித்தவீரன் செய்யத்தகாததுமான இச்செய்கை விக்கிரமவிளம்பரத்தை யடிக்கடிசெய்துகொள்ளுகிற உன்னாலேயே செய்யப்பட்டது.

౩౦. ఆశ్రమం తు తయోః శూన్యం ప్రవిశ్య నరసింహయోః॥ గోచరం గతయోర్భ్రాత్రోరపనీతా త్వయాధమ।

௩௦. 𑌆𑌶𑍍𑌰𑌮𑌂 𑌤𑍁 𑌤𑌯𑍋𑌃 𑌶𑍂𑌨𑍍𑌯𑌂 𑌪𑍍𑌰𑌵𑌿𑌶𑍍𑌯 𑌨𑌰𑌸𑌿𑌂𑌹𑌯𑍋𑌃॥
𑌗𑍋𑌚𑌰𑌂 𑌗𑌤𑌯𑍋𑌰𑍍𑌭𑍍𑌰𑌾𑌤𑍍𑌰𑍋𑌰𑌪𑌨𑍀𑌤𑌾 𑌤𑍍𑌵𑌯𑌾𑌧𑌮।

௩0 ஆஶ்ரமந்துதயோஶ்ஶூந்யம்ப்ரவிஶ்யநரஸிம்ஹயோ:।
கோசரம்கதயோர்ப்ராத்ரோரபநீதாத்வயாதம।

பதம்.	உரை.	பதம்.	உரை.
(ஹே) அதம	அடே நீச	ஶூந்யம்	(அவர்களில்லாமல்) பாழடைந்த
கோசரம்	வெளிதேசத்தை	ஆஶ்ரமம்	முனிவர் இருக்கத்தகுந்த இடத்தை
கதயோ:	அடைந்தவாளும்	ப்ரவிஶ்ய	புகுந்து
ப்ராத்ரோ:	தமையன்தம்பிமார்களும்	த்வயா	உன்னால்
நரஸிம்ஹயோ:	புருஷஸிரேஷ்டருமான	அபநீதா	(நான்) எடுத்துக்கொண்டுவரப்பட்டேன்.
தயோ:	அந்த (இராமலக்ஷ்மணனுடைய)		

தா-ம்—ஹேராக்ஷஸாதம! உன்னுடைய பராக்கிரமப்பிரபாவத்தை யென்னிடத்திலோ புகழ்ந்துகொள்ளுவது! என்னை நீ அபகரித்தவிதம் யானறியேனோ. மஹாகஜங்களின் மஸ்தகத்தைப்பிளக்கிற ஸிம்ஹங்கள்போல் ஸர்வசத்துரு ஹந்தாக்களான இராமலக்ஷ்மணனென்கிற நரசிரேஷ்டர் என்னை யாசிரமத்தில் தனியேவிட்டு வெளியிற்போயிருக்கையில் நீ என்னையபகரித்துவந்தாய்.

31. నహిగంధముపాఘ్రాయరామలక్ష్మణయో స్త్వయా॥శక్యంసందర్శనే స్థాతుంశునాశార్దూలయోరివ।

௩௧. 𑌨𑌹𑌿𑌗𑌨𑍍𑌧𑌮𑍁𑌪𑌾𑌘𑍍𑌰𑌾𑌯𑌰𑌾𑌮𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑌣𑌯𑍋𑌸𑍍𑌤𑍍𑌵𑌯𑌾॥
𑌶𑌕𑍍𑌯𑌂𑌸𑌨𑍍𑌦𑌰𑍍𑌶𑌨𑍇𑌸𑍍𑌥𑌾𑌤𑍁𑌂𑌶𑍁𑌨𑌾𑌶𑌾𑌰𑍍𑌦𑍂𑌲𑌯𑍋𑌰𑌿𑌵।

௩௧. நஹிகந்தமுபாக்ராயராமலக்ஷ்மணயோஸ்த்வயா।।
ஶக்யம்ஸந்தர்ஶனேஸ்தாதும்ஶுநாஶார்த்தூலயோரிவ।

பதம்.	உரை.	பதம்.	உரை.
ஶுநா	நாயினால்	கந்தம்	வாஸனையை
ஶார்த்தூலயோரிவ	இரண்டுபுலிகள்போல்	உபாக்ராய	முகர்ந்து
த்வயா	உன்னால்	ஸ்தாதும்	இருப்பதற்கு
ராமலக்ஷ்மணயோஃ	இராமலக்ஷ்மணனுடைய	நஶக்யம்	சக்கியமன்று.
ஸந்தர்ஶநே	பார்வையில்		

தா-ம்—ஹேராக்ஷஸ! வியாக்கிரமிருப்பதை வாஸனையாலறிந்து நடுங்கியோடுகிற சுவானம்போல் ஸ்ரீராமலக்ஷ்மணனென்கிற நரவியாக்கிரர் ஸமீபத்திலிருக்கிறாரென்று கேட்டமாத்திரத்திற் காதவழியோடும்படியான துடைநடுக்கமுள்ளவன் நீ. அவர்களைப் பிரத்தியக்ஷத்தில்கண்டால் அவர்முன்னிற்பதற்கு முனக்கு தைரியமுண்டோ.

32. తస్యతేవిగ్రహేతాభ్యాంయుగగ్రహణమస్థిరమ్॥వృత్రస్యేవేంద్రబాహుభ్యాంబాహోరేకస్యనిగ్రహః।

௩௨. 𑌤𑌸𑍍𑌯𑌤𑍇𑌵𑌿𑌗𑍍𑌰𑌹𑍇𑌤𑌾𑌭𑍍𑌯𑌾𑌂𑌯𑍁𑌗𑌗𑍍𑌰𑌹𑌣𑌮𑌸𑍍𑌥𑌿𑌰𑌮𑍍॥
𑌵𑍃𑌤𑍍𑌰𑌸𑍍𑌯𑍇𑌵𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌬𑌾𑌹𑍁𑌭𑍍𑌯𑌾𑌂𑌬𑌾𑌹𑍋𑌰𑍇𑌕𑌸𑍍𑌯𑌨𑌿𑌗𑍍𑌰𑌹𑌃।

௩௨. தஸ்யதேவிக்ரஹேதாப்யாம்யுகக்ரஹணமஸ்திரம்।।
வ்ருத்ரஸ்யேவேந்த்ரபாஹுப்யாம்பாஹோரேகஸ்யநிக்ரஹஃ।

பதம்.	உரை.	பதம்.	உரை.
தஸ்ய	(அஸமர்த்தத்தால்திருட்டுத்தனமாயென்னையபகரித்துவந்த) அந்த	வ்ருத்ரஸ்ய	விருத்திராஸுரனுடைய
		ஏகஸ்ய-பாஹோஃ	ஒன்றான-தோளுக்கு
தே	உனக்கு	இந்த்ரபாஹுப்யாம்	இந்திரனுடையதோள்களோடு
தாப்யாம்	அந்தஇராமலக்ஷ்மணரோடு	விக்ரஹேஸதி	யுத்தமுண்டாயிருநதுள்ளளவில்
யுத்தே (ஸதி)	சண்டையுண்டாயிருந்துள்ளளவில்	நிக்ரஹஇவ	அபஜயம்போல்
யுகக்ரஹணம்	யுத்தத்தில் (ஜயாபஜயங்கள்)	அஸ்திரம்	நிலையற்றது.

தா-ம்—சிங்ககர்ஜ்ஜனையைக்கேட்டகஜம்போலும் புலிநாற்றமறிந்தசுவானம்போலும்பயந்து ஸ்ரீராமலக்ஷ்மணதரிசனமுங்கூடாதென்று அவர்களை வஞ்சனையால்வெளிப்படுத்தி,மாயவேஷத்தாலென்னை மதிமயங்கப்பண்ணி, யாகவேதிகைபோல்பரிசுத்தமானதிவ்வியாசிரமத்திலுனது அபரிசுத்ததாள்களைவைத்தென்னையபகரித்துவந்த அடசோர! எதிர்நின்று யுத்தஞ்செய்ய வல்லமையற்றுப்பின்புறங்தேடின அஸத்தே! உனக்குமவ்வில்லாளர்க்கும்போர்நேரில் உனக்குஜயம்கிடைத்துவிடுமோ! ஸீதாபஹரணம்லபித்துவிடுமோ! நீ எதிர்த்துயுத்தஞ்செய்ய அவ்வளவுநேரமாவது உன்பிராணனையுனக்குவைப்பார்களோ. ஜயாபஜயமென்கிற சங்கைக்கு மிடங்கொடுப்பார்களோ. விருத்திராஸுரனுடைய ஒருகைக்கும் இந்திரனுடைய இரண்டுகைகளுக்கும் யுத்தம்நேர்ந்தபோது இந்திரஜயமெப்படிஸித்தமாயிற்றோ அவ்வண்ணம் இராக்ஷஸப்பதரான நீயொருவன்யுத்தவீராளான அவ்விருவரை யெதிர்த்தக்கா லுன்விநாசம் ஸ்திரமன்றோ.

33. క్షిప్రంతవసనాథో మేరామస్సౌమిత్రిణాసహ॥తోయమల్పమివాదిత్యఃప్రాణానాదాస్యతేశరైః।

௩௩. 𑌕𑍍𑌷𑌿𑌪𑍍𑌰𑌂𑌤𑌵𑌸𑌨𑌾𑌥𑍋𑌮𑍇𑌰𑌾𑌮𑌃𑌸𑍌𑌮𑌿𑌤𑍍𑌰𑌿𑌣𑌾𑌸𑌹॥
𑌤𑍋𑌯𑌮𑌲𑍍𑌪𑌮𑌿𑌵𑌾𑌦𑌿𑌤𑍍𑌯𑌃𑌪𑍍𑌰𑌾𑌣𑌾𑌨𑌾𑌦𑌾𑌸𑍍𑌯𑌤𑍇𑌶𑌰𑍈𑌃।

௩௩. க்ஷிப்ரம்தவஸநாதோமேராமஸ்ஸௌமித்ரிணாஸஹ।।
தோயமல்பமிவாதித்யஃப்ராணாநாதாஸ்யதேஶரைஃ।

பதம்.	உரை.	பதம்.	உரை.
மே	என்னுடைய	தவ	உன்னுடைய
ஸஃ-நாதஃ	அந்த-(என்)பர்த்தாவான	ப்ராணாந்	உயிரை
ராமஃ	ஸ்ரீராகவன்	ஶரைஃ	பாணங்களால்
ஸௌமித்ரிணாஸஹ	இலக்ஷ்மணரோடுகூட (வந்து)	க்ஷிப்ரம்	சீக்கிரமாக
ஆதித்யஃ	ஸூரியன்	ஆதாஸ்யதே	எடுக்கப்போகிறார்.
அல்பம்-தோயமிவ	கொஞ்சமான-ஜலத்தைப்போல்		

தா-ம்—ஹேராக்ஷஸ! "யுத்தத்தினாலோஸாமர்த்தியத்தினாலோவஞ்சனையினாலோ எந்தவிதத்தினாலோ ஸீதையென்வசமாய்விட்டாள், எப்படிப்பட்டவீரராயினு மினியவரென்செய்வார், ஸீதையிருக்குமிடமவரறிவரோ,அறிந்தும் ஜலமத்தியிலுள்ள விக்கோட்டையை யவரணுகுவரோ," என்று இவ்வெண்ணங்களால் ஸந்தோஷங்கொள்ளாதே. நீ ஸமுத்திரத்திலொளிந்தாலும் பாதாளபிலத்தில் நுழைந்தாலும் மாயாசக்தியால் மறைந்தாலும், ஸர்வலோகநாதனும் எனக்குப் பிராணபந்துவுமானவந்த இரகுவீரன் உன்னைவிடார். ஸம்ஸ்தவிடங்களிலும் தடையின்றிச்செல்லுகிற ஸூரியகிரணம்போல் ஸ்ரீராகவவிக்கிரமும்செல்லும் .நீர்க்காவலால் திடங்

கொண்டிருக்கிற அடேராவண! இன்னம் கொஞ்சகாலத்தில் என்னுடையநாதன் இலக்ஷ்மணஸஹிதராய் இங்குவந்து ஸ்வல்பஜலத்தை க்ஷணகாலத்தில்ஸூரியகிரணமாகர்ஷிப்பதுபோல் உன்னுடைய பஞ்சப்பிராணன்களையும் தன்னுடைய திவ்வியசரங்களால் அநாயாஸமாய் அதித்வரையிலரிக்கப்போகிறார்.

౨౪ గిరిం కుబేరస్య గతోఽపధాయ వా సభాం గతో వా వరుణస్య రాజ్ఞః।
అసంశయం దాశరథేర్న మోక్ష్యసే మహాద్రుమః కాలహతోఽశనేరివ॥

௨௪. 𑌗𑌿𑌰𑌿𑌂 𑌕𑍁𑌬𑍇𑌰𑌸𑍍𑌯 𑌗𑌤𑍋𑌽𑌪𑌧𑌾𑌯 𑌵𑌾 𑌸𑌭𑌾𑌂 𑌗𑌤𑍋 𑌵𑌾 𑌵𑌰𑍁𑌣𑌸𑍍𑌯 𑌰𑌾𑌜𑍍𑌞𑌃॥
𑌅𑌸𑌂𑌶𑌯𑌂 𑌦𑌾𑌶𑌰𑌥𑍇𑌰𑍍𑌨 𑌮𑍋𑌕𑍍𑌷𑍍𑌯𑌸𑍇 𑌮𑌹𑌾𑌦𑍍𑌰𑍁𑌮𑌃 𑌕𑌾𑌲𑌹𑌤𑍋𑌽𑌶𑌨𑍇𑌰𑌿𑌵॥

௨௪. கிரிம்குபேரஸ்யகதோபதாயவாஸபாம்கதோவாவருணஸ்யராஜ்ஞ:॥
அஸம்ஶயம்தாஶரதேர்நமோக்ஷ்யஸேமஹாத்ரும:காலஹதோஶநேரிவ।

𑌇𑌤𑌿 𑌶𑍍𑌰𑍀𑌸𑍁𑌨𑍍𑌦𑌰𑌕𑌾𑌣𑍍𑌡𑍇 - 𑌏𑌕𑌵𑌿𑌂𑌶𑌸𑍍𑌸𑌰𑍍𑌗𑌃.

பதம்.	உரை.	பதம்.	உரை.
(ஹே ராவண)	(வாராய் இராவணா)	கதோவா	அடைந்தவனானாலும்
குபேரஸ்ய	குபேரனுடைய	காலஹத:	காலத்தாலடிக்கப்பட்ட
கிரிம்	கைலாயத்தை அல்லது கந்தமாதனபர்வதத்தை	மஹாத்ரும:	பெருமரமானது
		அஶநேரிவ	இடியினின்றுபோல்
கதோவா	அடைந்தவனானாலும்	தாஶரதே:	இராகவனிடத்தினின்று
வருணஸ்ய	வருணனென்கிற	அபதாய	அதிக்கிரமித்து
ராஜ்ஞ:	அரசனுடைய	நமோக்ஷ்யஸே	விடப்படமாட்டாய்.
ஸபாம்	ஸபையை	அஸம்ஶயம்	ஸந்தேகமில்லை.

தா-ம்—அடேராவண! இவ்விடம் பத்திரமில்லையென்று வேறெங்குஓடினாலுமோடு. கைலாஸம் அல்லது கந்தமாதனமென்று சொல்லப்பட்ட குபேராசிரியமான கிரியிலாவதோடியொளித்துக்கொள். வருணனுடைய ஸபையிலாவதோடிப்புகுந்துகொள். இன்னமெதுபத்திரமென்று தோன்றுகிறதோ அங்குஓடியொளித்துக்கொள். ஸ்ரீராமபாணத்திற்குத் தப்புவாயென்று நினைக்கிறாயோ! விதிபலத்தாலேவப்பட்டுஅழிக்கவருகிற இடிக்கிலக்கானவிருக்ஷம்போல் உன்விநாசகாலம்நெருங்க உன்சிரஸையுத்தேசித்துவருகிற ஸ்ரீராமபாணமுன்னைக்கொல்லாமல்விடாது. குபேரபலமும் வருணபலமு மற்றதேவதாபலமும் ஸ்ரீராமசரத்திற்கீடல்ல.

ஸ்ரீஸந்மகோரஞ்ஜநீநாமத்திராவிட வ்யாக்யாநஸஹிதமான ஸுந்தரகாண்டத்தில்

இருபத்தோராவதுஸர்க்கம் - முற்றிற்று.

இருபத்திரண்டாவதுஸர்க்கம்.

౧. సీతాయా వచనం శ్రుత్వా పరుషం రాక్షసాధిపః। ప్రత్యువాచ తతస్సీతాం విప్రియం ప్రియదర్శనామ్॥

௧. 𑌸𑍀𑌤𑌾𑌯𑌾 𑌵𑌚𑌨𑌂 𑌶𑍍𑌰𑍁𑌤𑍍𑌵𑌾 𑌪𑌰𑍁𑌷𑌂 𑌰𑌾𑌕𑍍𑌷𑌸𑌾𑌧𑌿𑌪𑌃।
𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑍁𑌵𑌾𑌚 𑌤𑌤𑌸𑍍𑌸𑍀𑌤𑌾𑌂 𑌵𑌿𑌪𑍍𑌰𑌿𑌯𑌂 𑌪𑍍𑌰𑌿𑌯𑌦𑌰𑍍𑌶𑌨𑌾𑌮𑍍॥

௧. ஸீதாயாவசநம்ஶ்ருத்வாபருஷம்ராக்ஷஸாதிப:।
ப்ரத்யுவாசததஸ்ஸீதாம்விப்ரியம்ப்ரியதர்ஶநாம்॥

பதம்.	உரை	பதம்.	உரை.
ராக்ஷஸாதிப:	இராக்ஷஸப்பிரபுவான(இராவணன்)	ப்ரியதர்ஶநாம்	இஷ்டமான பார்வையுடைய
ஸீதாயா:	பிராட்டியினுடைய	ஸீதாம்	பிராட்டியை(ப்பார்த்து)
பருஷம்-வசநம்	கடினமான-வார்த்தையை	விப்ரியம	அநிஷ்டமான (வசனத்தை)
ஶ்ருத்வா	கேட்டு	ப்ரத்யுவாச	பதில்சொன்னான்.
தத:	பிறகு		

தா-ம்—இந்தவிதம் தனக்கிட்ட வபராதங்களைக் கொஞ்சமேனும் ஸ்மரியாது, இவன் எப்படியாவது தர்மசிந்தாபரனாய் பகவத்பிரஸாதம்பெற்று உஜ்ஜீவித்தாற்போதுமென்கிற சேதன வாத்ஸல்யமிகுதியால், பிராட்டியானவள் ஹிதமொழிகளைப் பலவாறாகவுரைத்தனள். பிரதமத்தில், அவனுக்குக் கிடைத்திருக்கிற தாராஸம்பத்தைக்காட்டி, ஸ்ரீராகவார்கையானதா னவனுக்கு லபிக்கமாட்டாததை யுரைத்தாள். பிறகுபரதாரகமனவிச்சையாலுண்டாகு மனர்த்தங்களைக்காட்டி, ஸாதுவசனங்களையதிக்கிரமியாது தர்மாசாரத்தோடு உஜ்ஜீவியென்று நீதிமார்க்க முபதேசித்தாள். அனந்தரம், பதிசோரனைத் தாகநீர்யாசிக்குமாப்போலே தன்னை விட்டுவிடவேண்டுமென்றுகோரிதைன்னியதசையைவெளியிட்டுயாசித்தாள். கடைசியாக, ஸ்ரீராகவலக்ஷ்மண விக்கிரமத்தைஏற்கனவேயறிந்து பயத்தால்சோரகிருத்தியஞ்செய்த வவ்வரக்கனையிகழ்ந்து, தன்னைவிடாத பக்ஷத்தி லிரகுவீரகோதண்டத்தாலுண்டாகப்போகிற கோரவதத்தைக்காட்டி பயமுறுத்தினள். இப்படி நய

பய்விதங்களாலுரைத்த அக்கிருபாநிதியின் பத்திபவசனங்களில் குருரமல்லாது ஹிதங்கண்டானில்லை. காலபலத்தாலவனுக்கு அந்ததர்மக்கியையின் ஸாரவாக்கியங்கள் கர்ணகடோமாகவேயிருந்தன. ஆகையாலவனுடைத் தநீதியெல்லாம் விபர்த்தமாய்விட்டது. அவள்பிரதிவசனம் முடிந்தவுடன் காமமயமாலஹிதாஹிதமறியவொண்ணாமையற்றிருக்கிற இராவணன் அந்த பதிவிரதையின்மனம்வருந்தும்படி இன்னமு சிலஅநுசார மொழிகளைச் சொல்லலுற்றனன்.

౨. యథాయథాసాంత్వయితా వశ్యః స్త్రీణాంతథాతథా । యథాయథా ప్రియంవక్తా పరిభూతస్తథాతథా ॥

௨. 𑌯𑌥𑌾𑌯𑌥𑌾𑌸𑌾𑌨𑍍𑌤𑍍𑌵𑌯𑌿𑌤𑌾𑌵𑌶𑍍𑌯𑌃𑌸𑍍𑌤𑍍𑌰𑍀𑌣𑌾𑌂𑌤𑌥𑌾𑌤𑌥𑌾 ।
𑌯𑌥𑌾𑌯𑌥𑌾𑌪𑍍𑌰𑌿𑌯𑌂𑌵𑌕𑍍𑌤𑌾𑌪𑌰𑌿𑌭𑍂𑌤𑌸𑍍𑌤𑌥𑌾𑌤𑌥𑌾 ॥

௨. யதாயதாஸாந்த்வயிதாவஶ்ய꞉ஸ்த்ரீணாம்ததாததா।
யதாயதாப்ரியம்வக்தாபரிபூதஸ்த்ததாததா॥

பதம்.	உரை.	பதம்.	உரை.
யதாயதா	எப்படி எப்படி	யதா யதா	எப்படி எப்படி
ஸாந்த்வயிதா	நல்வார்த்தைசொல்லுகிறானோ (அந்த புருஷன்)	ப்ரியம்	இஷ்டவசனத்தை
		வக்தா	சொல்லுகிறானோ
ததா ததா	அப்படி அப்படியே	ததா ததா	அப்படி அப்படி
ஸ்த்ரீணாம்	ஸ்திரீகளுக்கு	பரிபூத꞉	(ஸ்த்ரீகளால்) அவமானப்படுத்தப்படுகிறான்.
வஶ்ய꞉	(தான்) ஸ்வாதீனனாகிறான்		

தா-ம்.—புருஷன் ஸ்திரீகளுக்குநல்வார்த்தைசொல்லச்சொல்ல இவன் அவர்கள்வசியனாகிறானல்லது அவர்களிவன் ஸ்வாதீனத்தையடைகிறதில்லை. இவன் பிரியமொழிகளுரைக்கவுரைக்க அவர்களால் திரஸ்கரிக்கப்படுகிறான்.

౩. సన్నియచ్ఛతిమేక్రోధంత్వయికామస్సముత్థితః । ద్రవతో౽మార్గమాసాద్యహయానివసుసారథిః ॥

௩. 𑌸𑌂𑌨𑌿𑌯𑌚𑍍𑌛𑌤𑌿𑌮𑍇𑌕𑍍𑌰𑍋𑌧𑌂𑌤𑍍𑌵𑌯𑌿𑌕𑌾𑌮𑌸𑍍𑌸𑌮𑍁𑌤𑍍𑌥𑌿𑌤𑌃 ।
𑌦𑍍𑌰𑌵𑌤𑍋𑌮𑌾𑌰𑍍𑌗𑌮𑌾𑌸𑌾𑌦𑍍𑌯𑌹𑌯𑌾𑌨𑌿𑌵𑌸𑍁𑌸𑌾𑌰𑌥𑌿𑌃 ॥

௩. ஸந்நியச்சதிமேக்ரோதம்த்வயிகாமஸ்ஸமுத்தித꞉।
த்ரவதோமார்க்கமாஸாத்யஹயாநிவஸுஸாரதி꞉॥

பதம்.	உரை.	பதம்.	உரை.
(ஹேஸீதே)	(வாராய்ஜனகபுத்ரீ)	ஆஸாத்ய	அடைந்து
த்வயி	உன்னிடத்தில்	த்ரவத꞉	ஓடுகிற
ஸமுத்தித꞉	உண்டான	ஹயாந்	குதிரைகளை
காம꞉	ஆசையானது	ஸுஸாரதிரிவ	ஸமர்த்தனை தேர்ப்பாகன்போல்
மே-க்ரோதம்	என்னுடைய-கோபத்தை	ஸம்நியச்சதி	அடக்குகிறது.
அமார்க்கம்	கெட்ட வழியை		

தா-ம்—ஹேஸீதே! கேவலம் ஸதிரீஜாதியான நீ மஹாராஜாவான வெனக்குச்செய்யு மவமானத்தால்மிகுந்த கோபத்தையடைந்திருக்கிறேன். நீ என்மனதிற்கிசையு நிமித்தம் ஸர்வஸ்வங்களையு முனக்கர்ப்பணஞ்செய்வதாக வாய்மொழிதந்து உன்னைப் பலவாறுகப்பிரார்த்திக்கும் நீ மனமிரங்காது ஆபரணாலங்காரங்களைவர்ஜ்ஜித்து என்னை அவமானிக்கிறாய். இக்கடத்தையாலுன்விஷயத்தில் மஹாகோபங்கொண்டவனாயினும் உன்மீதெனக்குள்ள காமமான தென்னையடக்குகின்றது. இராஜமார்க்கத்தைவிட்டுப் புறங்களிற்பாய்க்தோடுகிற அசுவங்களைக் கடிவாள ஸூத்திரத்தாலடக்கித் திருப்பிக்கொண்டுபோகிற ஸமர்த்தனைஸாரதிபோல் குரோதபலத்தாலுன்னைப்பிரிகிற வென்மனதைக் காமமானது உன்னிடத்தில்பிரீதிபண்ணும்படிசெய்கிறது. ஆகையாலல்லவோ நீ செய்கிற வபராதத்தைக்க்ஷமித்து உனக்குத்தீங்குசெய்ய மனமில்லாதிருக்கின்றனன்.

౪. వామఃకామోమనుష్యాణాంయస్మిన్ కిలనిబధ్యతే । జనేతస్మిన్ స్త్వనుక్రోశస్స్నేహశ్చకిలజాయతే ॥

౫. ఏతస్మాత్కారణాన్నత్వాంఘాతయామివరాననే । వధార్హామవమానార్హాంమిథ్యాప్రవ్రజితేరతామ్ ॥

௪. 𑌵𑌾𑌮𑌃𑌕𑌾𑌮𑍋𑌮𑌨𑍁𑌷𑍍𑌯𑌾𑌣𑌾𑌂𑌯𑌸𑍍𑌮𑌿𑌨𑍍𑌕𑌿𑌲𑌨𑌿𑌬𑌧𑍍𑌯𑌤𑍇 ।
𑌜𑌨𑍇𑌤𑌸𑍍𑌮𑌿𑌂𑌸𑍍𑌤𑍍𑌵𑌨𑍁𑌕𑍍𑌰𑍋𑌶𑌸𑍍𑌸𑍍𑌨𑍇𑌹𑌶𑍍𑌚𑌕𑌿𑌲𑌜𑌾𑌯𑌤𑍇 ॥

௫. 𑌏𑌤𑌸𑍍𑌮𑌾𑌤𑍍𑌕𑌾𑌰𑌣𑌾𑌨𑍍𑌨𑌤𑍍𑌵𑌾𑌂𑌘𑌾𑌤𑌯𑌾𑌮𑌿𑌵𑌰𑌾𑌨𑌨𑍇 ।
𑌵𑌧𑌾𑌰𑍍𑌹𑌾𑌮𑌵𑌮𑌾𑌨𑌾𑌰𑍍𑌹𑌾𑌂𑌮𑌿𑌥𑍍𑌯𑌾𑌪𑍍𑌰𑌵𑍍𑌰𑌜𑌿𑌤𑍇𑌰𑌤𑌾𑌮𑍍 ॥

௪. வாம꞉காமோமநுஷ்யாணாம்யஸ்மிந்கிலநிபத்யதே।
ஜநேதஸ்மிந்ஸ்த்வநுக்ரோஶஸ்ஸ்நேஹஶ்சகிலஜாயதே॥

௫. ஏதஸ்மாத்காரணாந்நத்வாம்காதயாமிவராநநே।
வதார்ஹாமவமாநார்ஹாம்மித்யாப்ரவ்ராஜிதேரதாம்॥

பதம்.	உரை.	பதம்.	உரை.
மநுஷ்யாணும்	பிராணிகளுக்கு	ஸ்நேஹஸ்ச	நட்பும்
வாமஃ	அழகான	அநுக்ரோஸஸ்ச	தயையும்
காமஃ	(போகத்தில்) ஆசையானது	ஜாயதேகில	உண்டாகிறதன்றே
யஸ்மிந்கில	எவ்விடத்தில்	ஏதஸ்மாத்காரணுத்	இந்தகாரணத்தால்
நிபத்யதே	கட்டப்படுகிறதோ (அல்லது)	(ஹே) வராநநே	(ஓ)சிரேஷ்டமானமுகமுடையவளே
மநுஷ்யாணும்	பிராணிகளுக்கு	மித்யாப்ரவ்ரஜிதே	பொய்யான வந்யவிருத்தி யுடைய (ராமனிடத்தில்)
காமஃ	போகவிச்சையானது		
வாமஃகில	பிரதிகூலமன்றே (அப்படியிருந்தும்)	ரதாம்	ஆஸக்தியுடையவளும் (அதனுல்)
யஸ்மிந்	எவ்விடத்தில் (அக்காமமானது)	வதார்ஹாம்	கொலைக்குரியவளும்
நிபத்யதே	கட்டப்படுகிறதோ	அவமாநார்ஹாம்	அவமானத்திற் கிசைந்தவளுமான
தஸ்மிந்-ஜநே	அந்த-ஜனத்தினிடத்தில்	த்வாம்-நகாதயாமி	உன்னை-கொலைசெய்யேன்.

தா-ம்—ஹேஸீதே! ஸகலமனுஷியரும் காமத்திற்கீடுபடுகின்றனர். காமத்திலேயே பரமஸுகத்தை யனுபவிக்கின்றனர். பிறகு அக்காமமே அவருக்கு சத்துருவாய்விடுகிறது. ஒருமனிதன் எவ்விடத்தில் காமத்தால்கட்டப்படுகிறனே அவ்விடத்திலவன் தோஷங்களைவிசாரிக்கிறதில்லை, அபராதங்களைப்பார்க்கிறதில்லை, அவ்விடத்திலவனுக்குப் பரமமைத்திரமும் தாக்ஷிண்யமும் ஜனிக்கின்றன. என்ன அவமானம் நேரிடினும் அதைக்கவனியாது தான்காமுற்றஸ்திரீக்குபவ்வியனுய்விடுகிருன். இஃதியந்தான், ஹேஸுந்தரி! உன்விஷயத்திலெனக்குண்டாயிருக்கும் க்ஷமைக்குக்காரணம். இராஜாதிராஜன், இராக்ஷஸேந்திரன், ஸார்வபௌமன், மஹாப்பிரதாபவான், யானுன்னைக்காமுற்றனன். தண்டகாரண்ணியத்தினின்றுன்னைக் கொண்டிங்கு சேர்த்தனன். பத்துமாதமுன்னைப் பலவாறுபிரார்த்தித்தனன். நீ என்னையடையவிரும்பாது அந்த நாடோடிராமனிடத்திலேயே வியாமோகங்கொண்டிருக்கிருய். பௌருஷமின்மையா லிராஜ்ஜியமிழந்து தபஸ்வியென்று கபடவேஷம்பூண்டு வனத்தில்ஸஞ்சரிக்கிற அந்தஅல்பனையேபூஷிக்கிருய். உனது ரதியையிச்சிக்கிறவென்னுடைய பலபௌருஷவிக்கிரமங்களையும் பெருமையையுமறியாது மந்தபுத்தியா லென்னைத்தூஷிக்கிருய். ஹேஸீதே! உனது நடத்தைக்கும் பிடிவாதத்திற்கும் பயமின்றிப்பிரதிசொன்னக் குரூரவசனங்களுக்கும் உன்னையான் தண்டித்திருக்கவேண்டும். உன்னைக் கண்டார்கண்டு சிரிக்கும்படி அவமானித்திருக்கவேண்டும். ஸ்திரீஜாதியென்கிற தயையின்றி உன்னைச்சித்திரவதம் செய்திருக்கவேண்டும். இப்படிப்பட்ட மஹாபராதியாயினும் உன்னிடத்தில் யான்கிருபைகொண்டவனுயினன். பீடிப்பதற்கும் அவமானிப்பதற்கும் மனமில்லனுயினன். இதற்குக் காரணமெனதுகாமந்தான். காமுற்றவிடங்களிற் சீற்றங்கொள்ளாதது காமங்கொண்டார் குணமாதலின் நீ செய்த வபராதசதங்களைப் பிரணயலீலையென்று மானித்துன்னை க்ஷமித்திருக்கின்றனன்.

திர்த்தியவிசேஷார்த்தம்:

யஸ்மின்-எந்த, ஜநே-பக்தஜனத்தினிடத்தில், அநுக்ரோஸஃ-கிருபையும், ஸ்நேஹஸ்ச-பிரியமும், நிபத்யதே-கட்டப்படுகிறதோ, தஸ்மிந்-அந்த, ஜநே-பக்தஜனவிஷயத்தில், மநுஷ்யாணும்-மனிதர்களுக்கு, காமஃ- ஆவலானது, வாமஃகிம் - பிரதிகூலமாயென்ன, ஆசிருதவாத்ஸல்வியதயா பரிபூர்ணையான என்னிடத்தில் பிருத்தியனுகவேண்டுமென்கிற விருப்பமானது உனக்கு யுக்தந்தான், ஆனுல் என்னைக் கொலைபுரிகிற ஸ்திரீகாதுகனுன உன்விஷயத்தில் விசுவாஸம் யுக்தமன்றென்கிற விஷயத்தில் சொல்லப்படுகிறது; ஏதஸ்மாத்காரணுத் - உன்னிடத்தில் பிருத்தியத்துவத்தைக் கோருகிறேனுதலால், ப்ரவ்ரஜிதே-வந்யவிருத்தியுடைய, (மத்ஸ்வாமிநி-என் ஸ்வாமியான, என்னுதனுன, ராமே-ஸ்ரீராகவனிடத்தில்,) ரதாம்-விருப்பமுற்றவளும் என்னுடையதேவதையுமான, த்வாம்-உன்னை, ஹேவராநநே-வாராய் சிரேஷ்டமானதிருமுகமுடையவளே, நகாதயாமி - ஹிம்ஸியேன், வதார்ஹாம் - கொலைக்கு பாத்திரபூதையும், அவமாநார்ஹாம் - அவமானத்திற்குரியவளுமான, ஸ்த்ரியமபி-ஸ்திரீஜாதியையும், காதயாமீதியத் - கொல்கிறவனென்கிற யாதொன்றுண்டோஅது, மித்யா-பொய்.

ஆசிருதஜனவிஷயத்தில் ஸ்நேகமும் கிருபையுமுண்டாகில் அவருடைய பிருத்தியத்துவத்தை யங்கீகரிப்பதற்கு அவரிடத்துள்ள காமம்பிரதிகூலமாகுமோ. உன்னிடத்தில் வாத்ஸல்லிய பரிபூர்ணையாயிருக்கிற வென்கீழ் நீ தாஸ்ஸியம்புரியவிரும்புவது யுக்தந்தான். ஆகிலும் ஸ்திரீகாதுகனுன உன்னையானேற்றுக்கொள்வது தகுதியோவென்னில், ஹேதேவி! ஸமாதானமுரைக்கின்றனனதைக்கேட்டருளாய். யான்ஸ்திரீகாதுகனல்லன். வதத்திற்கும் அவமானத்திற்கும் தகுதியானவபராதம்செய்தஸ்திரீயாயினு மவளையான்ஹிம்ஸியேன். ஸ்திரீகாதுகனென்று எனக்குமித்தியாபவாதமுண்டாயிருக்கிறது. என்னுடையநாதனுன ஸ்ரீராகவனிடத்தி லத்தியந்தம் விசுவாஸமுள்ள ஹேபரதேவதே! இந்த மித்தியாபவாதத்தால் என்னைப்பரிகரியாதே, அவசியமென்தாஸ்ஸியத்தை யங்கீகரித்தருளாய்.

௨. పరుషాణీహ వాక్యాని యాని యాని బ్రవీషి మామ్ । తేషు తేషు వధో యుక్తస్తవ మైథిలి దారుణః॥

கா. பாருஷாணீஹவாக்யாநியாநியாநிப்ரவீஷிமாம்।
தேஷுதேஷுவதோயுக்தஸ்தவமைதிலிதாருணஃ॥

கூ. பருஷாணீஹவாக்யாநியாநியாநிப்ரவீஷிமாம்।
தேஷுதேஷுவதோயுக்தஸ்தவமைதிலிதாருணஃ॥

பதம்.	உரை.	பதம்.	உரை.
(ஹே) மைதிலி	(ஓ) ஸீதே	யாநியாநி	எந்தெந்த
இஹ	இவ்விடத்தில்	பருஷாணி	கடூரங்களான
மாம்	என்னை	வாக்யாநி	வார்த்தைகளை

பதம்.	உரை.	பதம்.	உரை.
ப்ரவீஷி	சொல்லுகிருயோ	தாருண:-வத:	பயங்கரமான-கொலையானது
தேஷுதேஷு	அங்கங்கே	யுக்த:	தகுந்தது.
தவ	உனக்கு		

౭. ఏవముక్త్వాతు వైదేహీం రావణో రాక్షసాధిపః । క్రోధసంరంభసంయుక్తస్సీతాముత్తరమబ్రవీత్ ॥

௭. ஏவமுக்த்வாதுவைதேஹீம்ராவணோராக்ஷஸாதிப:।
க்ரோதஸம்ரம்பஸம்யுக்தஸ்ஸீதாமுத்தரமப்ரவீத்॥

எ. ஏவமுக்த்வாதுவைதேஹீம்ராவணோராக்ஷஸாதிப:।
க்ரோதஸம்ரம்பஸம்யுக்தஸ்ஸீதாமுத்தரமப்ரவீத்॥

பதம்.	உரை.	பதம்.	உரை.
ராக்ஷஸாதிப:-ராவண:-	இராக்ஷஸப்பிரபுவான இராவணன்	ஸம்ரம்ப	பரபரப்போடு
வைதேஹீம்	பிராட்டியை (ப்பார்த்து)	ஸம்யுக்த:	கூடினவனாக
ஏவம்-உக்த்வா	இந்தவிதம்-சொல்லி	ஸீதாம்	பிராட்டியைக்குறித்து
க்ரோதஸம்ரம்பஸம்யுக்த:=		உத்தரம்	பிரதிவசனத்தை
க்ரோத	கோபத்தினுடைய	அப்ரவீத்	(பின்வருமாறு) சொன்னான்.

(கு-மு-எ-ஸ்) தா-ம்.—ஹேஸீதே! நீ இப்பொழுதுரைத்த கர்ணகடூரமான பிரதிமொழிக்கு முன்னேக் கோரவதத்திலி ட்டிருக்கவேண்டும். வரம்பின்றி மனம்போனவாறு எங்கிலமையையும் கௌரவத்தையும்யோசியாது குரூரவசனங்கள் மொழி ந்தனே. உன்னைத்தக்ஷணமே வதைத்திருக்கவேண்டுமென்றறி. இந்தவிதம் அபிமதையாகாது திரணத்தைதப்புகட்டி முன்னி ருக்கிற திங்குகளைப் பயமின்றி யிடித்துரைத்த பிராட்டியின் அவமதிப்பால் மனக்கொதிப்படைந்து இவ்வாறுரைத்து அத்யுக் கிரமானகோபத்துடன் திவிழிவிழித்து மீசைதுடிக்க தேகம்படபடக்க, மிகுந்த பரபரப்புடன் இன்னம் சிலபயங்கரமொழிக ளாயறைந்தனன்.

౮. ద్వౌమాసౌ రక్షితవ్యౌ మే యోఽవధిస్తే మయా కృతః । తతశ్శయనమారోహ మమ త్వం వరవర్ణిని ॥

౯. ఊర్ధ్వం ద్వాభ్యాంతు మాసాభ్యాం భర్తారం మామనిచ్ఛతీమ్ । మమ త்వాం ప్రాతరాశార్థ మారభన్తే మహానసే ॥

அ. த்வௌமாஸௌரக்ஷிதவ்யௌமேயோவதிஸ்தேமயாக்ருத:।
ததஶ்ஶயநமாரோஹமமத்வம்வரவர்ணிநி॥

கூ. ஊர்த்வம்த்வாப்யாந்துமாஸாப்யாம்பர்த்தாரம்மாமநிச்சதீம்।
மமத்வாம்ப்ராதராஶார்த்தமாரபந்தேமஹாநஸே॥

அ. த்வௌமாஸௌரக்ஷிதவ்யௌமேயோவதிஸ்தேமயாக்ருத:।
ததஶ்ஶயநமாரோஹமமத்வம்வரவர்ணிநி॥

கூ. ஊர்த்வம்த்வாப்யாந்துமாஸாப்யாம்பர்த்தாரம்மாமநிச்சதீம்।
மமத்வாம்ப்ராதராஶார்த்தமாரபந்தேமஹாநஸே॥

பதம்.	உரை.	பதம்.	உரை.
(ஹே) வரவர்ணிநி	(ஓ) சிரேஷ்டமான தேககாந்தியுடை யவளே	ஆரோஹ	ஏறு
		த்வாப்யாம்-மாஸாப்யாம்-இரண்டு-மாஸங்களுக்கு	
தே-மயா	உனக்கு-என்னால்	ஊர்த்வம்து	மேலோவென்றல்
ய:-அவதி:-	எந்த-கெடுவானது	மாம்-பர்த்தா	என்னை-நாயகனுக
க்ருத:	செய்யப்பட்டதோ (அதற்கு)	அநிச்சதீம்-த்வாம்	இச்சியாத-உன்னை
த்வௌ-மாஸௌ	இரண்டு-மாதங்கள்	ப்ராதராஶார்த்தம்	இரண்டுமாஸம் பூர்த்தியாகி மறுநாள் காலைபோஜனநிமித்தம்
மே-ரக்ஷிதவ்யௌ	என்னால்-இரக்ஷிக்கத்தக்கவை (பார்		
தத:-மம	பிறகு-என்னுடைய [க்கத்தக்கவை)	மம	என்னுடைய (பாசகர்கள்)
ஶயநம்	படுக்கையை	மஹாநஸே	சமையல்கட்டிலில்
த்வம்	நீ	ஆரபந்தே	ஹிம்ஸிப்பார்கள்.

தா-ம்.—ஹேஸீதே! தங்கப்பிரபைபோன்றகாந்தியுடைய உனதுதிவ்யவபுவழகில்யானீடுபட்டேனுகையால் நீ புத்தி யின்மையாற்செய்தவபராதங்களைக்ஷமித்தேன். நீ என்னைபர்த்தாவாகவரிப்பதற்கு ஆதியிலேற்படுத்திய ஓராண்டுகெடுவிற்பத்து மாதஞ்சென்றுவிட்டது. இன்னமிரண்டு மாதத்திற்குள் நீமனேநிச்சயஞ்செய்து என்சயனத்தை யடையவேண்டும். அதற்குள் நீ மனமிசைந்தென்னை ஸந்தோஷிப்பிக்காயாகில் மூன்றுமாதப்பிரதம தினகாலையில் உனதுமாம்ஸத்தைப் பாகஞ்செய்து எனக் காகாரமாயமைப்பதற்காக எனதுபரிசாரகர்கள் சமையற்சாலைக்குன்னைக்கொண்டுபோய்ப் பீடிப்பார்கள். இதையறிந்துநீ உஜ் ஜீவிக்கும்வண்ணம் நடந்துகொள்ளக்கடவாய்.

౧౦. తాం తర్జ్యమానాం సంప్రేక్ష్య రాక్షసేంద్రేణ జానకీమ్ । దేవగంధర్వకన్యాస్తా విషేదుర్వికృతేక్షణాః ॥

௧௦. தாந்தர்ஜ்யமாநாம்ஸம்ப்ரேக்ஷ்யராக்ஷஸேந்த்ரேணஜாநகீம்।
தேவகந்தர்வகந்யாஸ்தாவிஷேதுர்விக்ருதேக்ஷணா:॥

௧௦. தாந்தர்ஜ்யமாநாம்ஸம்ப்ரேக்ஷ்யராக்ஷஸேந்த்ரேணஜாநகீம்।
தேவகந்தர்வகந்யாஸ்தாவிஷேதுர்விக்ருதேக்ஷணா:॥

பதம்.	உரை.	பதம்.	உரை.
ராக்ஷஸேந்த்ரேண	இராக்ஷஸராஜாவான (இராவணனு	தேவகந்தர்வகந்யா:	தேவகந்தர்வகன்னிகைகள்
தர்ஜ்யமாநாம்	மிரட்டப்பட்ட [ல்)	விக்ருதேக்ஷணா:	விகாரமான கண்களையுடையவர்களா
தாம்-ஜாநகீம்	அந்த-ஜனகபுத்திரியை (ப்பார்த்து)	விஷேது:	துக்கித்தார்கள். [ய்க்கொண்டு

தா-ம்—இவ்விதமிராவணனு லதட்டப்பட்ட பிராட்டியின் தைன்னியத்தையும் துக்கத்தையுங்கண்டு அவ்வரக்கனைப் பின்றொடர்ந்துவந்த தேவகந்தர்வஸ்திரீகள் மிகவும்வருந்தமுற்றனர். பெருங்காற்றிலசைந் தாடுகிற இளவாழைபோல் இராக்ஷஸபீதியாலும் அவனுடைய உக்கிரவசனங்களாலும் தேககம்பமெடுத்துக் கண்ணீர்சொரிந்து என்செய்வோமென்று பரிதபிக்கிற ஏழையைக்கண்டவுடன் அம்மாதரும் பயந்து பிரமித்தபார்வையோடு துக்கித்தனர்.

౧౧. ఓష్ఠప్రకారైరపరావక్త్రనేత్రైస్తథాపరాః । సీతామాశ్వాసయామాసుస్తర్జితాం తేన రక్షసా॥

கக. ஓஷ்ட்ப்ரகாரைரபராவக்த்ரநேத்ரைஸ்ததாபரா:।
ஸீதாமாஶ்வாஸயாமாஸுஸ்தர்ஜிதாம்தேநரக்ஷஸா॥

கக. ஓஷ்டப்ராகாரைரபராவக்த்ரநேத்ரைஸ்ததாபரா:।
ஸீதாமாஶ்வாஸயாமாஸுஸ்தர்ஜிதாம்தேநராக்ஷஸா॥

பதம்.	உரை.	பதம்.	உரை.
தேந-ரக்ஷஸா	அந்த-இராக்ஷஸனுல்	ததா-அபரா:	அவ்விதமே-வேறுசிலஸ்திரீகள்
தர்ஜிதாம்-ஸீதாம்	மிரட்டப்பட்ட-பிராட்டியை	வக்த்ரநேத்ரை:	முகமென்ன கண்களென்ன, இவைக
அபரா:	சிலஸ்திரீகள்		ளின் ஸமிக்கியைகளாலும்
ஓஷ்டப்ரகாரை:	உதட்டுஸமிக்கியைகளாலும்	ஆஶ்வாஸயாமாஸு:	தேறுதலைச்செய்தார்கள்.

தா-ம்—பிராட்டி இவ்வண்ண மதட்டப்பட்டு நடுங்குகையில் மறைவில்நின்ற வேறுஸ்திரீகளில் சிலர் உதடுகளாலும், சிலர் முகங்களாலும், சிலர் கண்களாலும் ஸமிக்கியைகளைச் செய்து, அந்த ஸமிக்கியைகளால் "ஸீதே! இதெல்லாம்வீண்மிரட்டுதான், காரியத்திலொன்றுமில்லை, பயப்படாதே" என்கிற அர்த்தத்தை வெளியிட்டு, துக்கிக்கிற ஜானகியைத்தேற்றினர்கள்.

౧౨. తాభిరాశ్వాసితా సీతా రావణం రాక్షసాధిపమ్ । ఉవాచాత్మహితం వాక్యం వృత్తశౌండీర్యగర్వితమ్॥

கஉ. தாபிராஶ்வாஸிதாஸீதாராவணம்ராக்ஷஸாதிபம்।
உவாசாத்மஹிதம்வாக்யம்வ்ருத்தஶௌண்டீர்யகர்விதம்॥

கஉ. தாபிராஶ்வாஸிதாஸீதாராவணம்ராக்ஷஸாதிபம்।
உவாசாத்மஹிதம்வாக்யம்வ்ருத்தஶௌண்டீர்யகர்விதம்॥

பதம்.	உரை,	பதம்.	உரை.
தாபி:	அந்த ஸ்திரீகளால்	வ்ருத்தஶௌண்டீர்யகர்விதம் (யதாயதா)=	
ஆஶ்வாஸிதா-ஸீதா	தேற்றரவுசெய்யப்பட்ட-பிராட்டி	வ்ருத்த	பாதிவிருத்தியத்தினுடைய
ராக்ஷஸாதிபம்	இராக்ஷஸராஜாவான	ஶௌண்டீர்ய	பலத்தினுல் (உண்டான)
ராவணம்	இராவணனை (ப்பற்றி)	கர்விதம் (யதாயதா)	பெருமைதோன்றும்படி
ஆத்மஹிதம்-வாக்யம்	தனக்குநல்லதான - வார்த்தையை	உவாச	சொன்னுள்.

தா-ம்—ஸமீபத்திலுள்ள ஸ்திரீகளின் ஜாடையால் திடமடைந்த பிராட்டியானவள் ரௌத்திரமொழிகளுரைத்த இராவணனைப்பார்த்துத் தன்னுடையபாதிவிருத்தியதேஜஸ்ஸுக்குமுன் அவனுடையபலமுழுதுந் திரணப்பிராயமென்கிற பெருமைதோன்றும்படி தனக்கு ஹிதமான இன்னம் சிலவசனங்களைக்கூறினள்.

౧౩. నూనం న తే జనః కశ్చిదస్తి నిశ్శ్రేయసే స్థితః । నివారయతి యో న త్వాం కర்మణోఽస్మాద్విగర్హితాత్॥

கரு. நூநம்நதேஜந:கஶ்சிதஸ்திநிஶ்ஶ்ரேயஸேஸ்தித:।
நிவாரயதியோநத்வாம்கர்மணோஸ்மாத்விகர்ஹிதாத்॥

கரு. நூநம்நதேஜந:கஶ்சிதஸ்திநிஶ்ரேயஸேஸ்தித:।
நிவாரயதியோநத்வாம்கர்மணோஸ்மாத்விகர்ஹிதாத்॥

பதம்.	உரை.	பதம்.	உரை.
(ஹேராவண)	(அடேராவண)	நூநம்	நிச்சயம்
தே-நிஶ்ரேயஸே	உனக்கு-நல்விஷயத்தில் [வன்)	ய:-அஸ்மாத்	எவன்-இந்த (இப்படி)
ஸ்தித:	இருப்பவன் (ஹிதோபதேசம் செய்ப	விகர்ஹிதாத்	நிந்திக்கப்பட்ட
கஶ்சித்-ஜந:	ஒரு-பிராணியும்	கர்மண:	வியாபாரத்திலிருந்து
நாஸ்தி	இல்லை	த்வாம்-நநிவாரயதி	உன்னை-திருப்பவில்லையோ.

தா-ம்—அடேராவண! உன்னுடைய அன்னத்தையுண்டு பந்துக்களென்றும் மந்திரிகளென்றும் பெயர்பூண்டு உன்னைச்சூழ்ந்திருக்கிற எண்ணிறந்தஜனங்களுள் ஸன்மார்க்கநெறியில் நிலைநிற்கிற ஸாதுவொருவனுமில்லை. அதர்மத்திற் பிரவர்த்திக்கிற தங்களரசனுக்கு சாஸ்திரவிதிகளைத் துணிவுடனுபதேசித்து ஸத்ஸம்பிரதாயத்திலாஸக்தி ஜனிப்பிக்கத்தக்க ஸத்புருஷனொருவனுமில்லை. எல்லோருமுனது தயவையபேக்ஷித்து

உன்க்ஷேமத்தைக்கருதாது, உனக்கின்பமளிக்கிற பாபவிர்த்தியிலுன் மனங்குதூகலங்கொள்ளும்படி இச்சகம் பாம்கிற துர்மந்திரிகளென்றேயெண்ணுகிறேன். இங்கிருந்தபடி நீயெப்படியறிந்தாயெனில் உன்னுடையகட த்தையே அதை வியக்தமாக்குகிறது. பரதாரையைகிர்ப்பந்திக்கிற இந்தபாமகிகிருஷ்டமான பாபவிருத்தியத் தினின்றுன் மனதைத்தடுப்பாரொருவனுமில்லையே.

౧౪. మాం హి ధర్మాత్మనః పత్నీం శచీమివ శచీపతేః । త్వదన్యస్త్రిషు లోకేషు ప్రార్థయేన్మనసాపి కః॥

௧௪. മാം ഹി ധർമ്മാത്മനഃ പത്നീം ശചീമിവ ശചീപതേഃ।
ത്വദന്യസ്ത്രിഷു ലോകേഷു പ്രാർത്ഥയേന്മനസാപി കഃ॥

௧௪. மாம்ஹிதர்மாத்மந:பத்நீம்ஶசீமிவஶசீபதே:।
த்வதந்யஸ்த்ரிஷுலோகேஷுப்ரார்த்தயேந்மநஸாபிக:॥

பதம்.	உரை.	பதம்.	உரை.
தர்மாத்மந:	தர்மத்தையேஸ்வரூபமாயுடைய (ஸ்ரீ ராகவனுக்கு)	த்வத்	உன்னைக்காட்டிலும்
		அந்ய:-க:	வேறொருவனை-எவன் (தான்)
பத்நீம்-மாம்ஹி	பாரியையான-என்னையோவென்றால்	த்ரிஷுலோகேஷு	மூன்றுலோகங்களில்
ஶசீபதே:	இந்திரனுக்கு (பாரியையான)	மநஸாபி	மனதினாலாவது
ஶசீமிவ	சசிதேவியைப்போல்	ப்ரார்த்தயேத்	கோருவான்.

தா-ம்—ஹேராக்ஷஸாதம! ஸகலதேவகணங்களுக்கு மதிபதியான மஹேந்திரனுக்கு சசீதேவிபத்தினி போல் மானுஷகோடிகளுக்கெல்லாம் பிரபுவான ஸ்ரீராகவனுக்குநான் தர்மபத்தினீ. இந்திரபத்தினியையொரு வனுங்கோரத்துணியாதுபோல் அந்த தர்மஸ்வரூபியானமனுஜேந்திரனுடைய போகத்திற்கேயுரியபரிசுத்தை யானவென்னை வாய்கூசாது பிரார்த்திக்கிற நீயல்லாவ் இம்மூவுலகில் அனர்த்த ஹேதுகாமான இக்காமபாவ த்தை மனதிலுங்கொள்ளத்தக்க வேறொருவனுமுண்டோ? ஆத்மநாசத்தையும் வம்சநாசத்தையுமறியாமல் பதிவிரதாக்கினியைப்பற்றவருகிற உன்போல் வேறுமூடர் இவ்வுலகிலுளரோ?

౧౫. రాక్షసాధమ రామస్య భార్యామమితతేజసః । ఉక్త్వాన సియత్పాపం క్వ గతస్తస్య మోక్ష్యసే॥

௧௫. രാക്ഷസാധമ രാമസ്യ ഭാര്യാമമിതതേജസഃ।
ഉക്ത്വാനസി യത്പാപം ക്വ ഗതസ്തസ്യ മോക്ഷ്യസേ॥

௧௫. ராக்ஷஸாதமராமஸ்யபார்யாமமிததேஜஸ:।
உக்தவாநஸியத்பாபம்க்வகதஸ்தஸ்யமோக்ஷ்யஸே॥

பதம்.	உரை.	பதம்.	உரை.
(ஹே)ராக்ஷஸாதம	(ஓ)இராக்ஷஸநீசனே	உக்தவாந்-அஸி	சொன்னவனாகை-ஆனாயோ
அமிததேஜஸ:	மிதமற்றபராக்கிரமமுடைய	தஸ்ய	அவரிடத்திலிருந்து
ராமஸ்ய	ஸ்ரீராகவனுடைய	க்வ-கத:	எங்கு-போனவனாக
பார்யாம்	பத்தினியான (எனனை)	மோக்ஷ்யஸே	தப்பித்துக்கொள்ளப்போகிறாய்.
யத்-பாபம்	எந்த-பாபரூபமானவாக்கியத்தை		

தா-ம்—அடாராக்ஷஸப்பதரே! ஸ்ரீராகவனைக் கேவலம் மனுஷியனென்றுபழிக்கிறாய். அவரதுவிக்கிர மத்தை நீயளவிட்டறிந்ததுண்டோ. முயன்றாலுமளவிட உன்னால்முடியுமோ. அந்த நரஸிம்மன் உன்போன்ற லக்ஷம்வீரரைக்ஷணகாலத்திலரிக்கவல்லஅமிதபலமுள்ளவீரன். அப்பேர்ப்பட்டதேஜோவான்எனக்குபர்த்தா. கைவிட்டவிடத்தும் ஓடிவந்துரக்ஷிக்கும்படியான பக்தவாத்ஸல்லியமுள்ளவர். அப்படியிருக்கவென்னை அனு தையென்றுநினைத்து என்னைக்குறித்து மனம்போனவாறுபாபவசனங்களையுரைத்தாய். இவ்வபராதத்திற்காக உனக்குக்கிடைக்கப்போகிற கொடுந்தண்டத்திற்குத்தப்புவாயோ? பதிவிரதையை யவமானித்து மொழிந்த வசனங்கள் வீண்போகுமோ! நீபிரம்மலோகத்திற் போயொளிந்தாலும் உன்சிரஸைக்குறித்துவருகிற ஸ்ரீரா பாணங்களுக்குத்தப்பஸாத்தியமோ!

౧౬. యథా దృప్తశ్చ మాతంగః శశశ్చ సహితౌ వనే । తథా ద్విరదవద్రామస్త్వం నీచ శశవత్స్మృతః॥

௧௬. യഥാ ദൃപ്തശ്ച മാതംഗഃ ശശശ്ച സഹിതൗ വനേ।
തഥാ ദ്വിരദവദ്രാമസ്ത്വം നീച ശശവത്സ്മൃതഃ॥

௧௬. யதாத்ருப்தஶ்சமாதங்கஶ்ஶஶஶ்சஸஹிதௌவநே।
ததாத்விரதவத்ராமஸ்த்வம்நீசஶஶவத்ஸ்ம்ருத:॥

பதம்.	உரை.	பதம்.	உரை.
வநே-த்ருப்த:	காட்டில்-மதித்திருக்கிற	இராவணன் தன்னையானையாக நினைத்து ஸந்தோஷிக்கப்போகிறானென்று பரிஷ்கரிக்கிறாள்.	
மாதங்கஶ்ச-ஶஶஶ்ச	யானையும்-முசலும்	ராம:-த்விரதவத்	ஸ்ரீராகவன்-யானைபோல்
யதா-ஸஹிதௌ	எப்படி (சண்டைசெய்ய)சேருமோ	ஸ்ம்ருத:	எண்ணப்படுகிறார் [கிறாய்.)
ததா	அப்படியே (சக்கிரவர்த்தித் திருமகளும் நீயும் சேர்ந்திருக்கிறீர்கள்)	த்வம்-நீசஶஶவத்	நீ-அல்பமுசலைப்போல் (எண்ணப்படு

தா-ம்—வனத்தில்ஸஞ்சரிக்கிற வோர்மத்தகஜத்திற்கும் முயலுக்கும் யுத்தம் நேரிடிலெப்படியோ அப்படியே யுத்தமின்றிமதித்திருக்கிற தோள்களையுடைய ஸ்ரீராகவனுக்கும் இராக்ஷத நீசனானவுனக்கும் போர் நேரிடப்போகிறது. நீதான்மத்தகஜம்போன்ற திண்தோள்வலியனென்றெண்ணாதே. இராம ராவண யுத்தத்தில் ஸ்ரீராமன்கஜமென்றும் முயல்நீயென்றும் மூன்றுலகும்சொல்லும். காபசசயுத்தத்தில் சசநாசமெப்படி வியக்தமோ அப்படியே ஸ்ரீராகவஸந்தியில் உனதுநாசம்நிச்சயம்.

౧౭. సత్వమిక్ష్వాకునాథం వై క్షిపన్నిహ న లజ్జసే । చక్షుషోర్విషయం తస్య న తావదుపగచ్ఛసి॥

கஎ. 𑌸𑌤𑍍𑌵𑌮𑌿𑌕𑍍𑌷𑍍𑌵𑌾𑌕𑍁𑌨𑌾𑌥𑌂𑌵𑍈𑌕𑍍𑌷𑌿𑌪𑌨𑍍𑌨𑌿𑌹𑌨𑌲𑌜𑍍𑌜𑌸𑍇।
𑌚𑌕𑍍𑌷𑍁𑌷𑍋𑌰𑍍𑌵𑌿𑌷𑌯𑌂𑌤𑌸𑍍𑌯𑌨𑌤𑌾𑌵𑌦𑍁𑌪𑌗𑌚𑍍𑌛𑌸𑌿॥

கஎ. ஸத்வமிக்ஷ்வாகுநாதம்வைக்ஷிபந்நிஹநலஜ்ஜஸே।
சக்ஷுஷோர்விஷயம்தஸ்யநதாவதுபகச்சஸி॥

பதம்.	உரை.	பதம்.	உரை.
ஸ:-த்வம்	(அல்பமுசலுக்குஸமானனான) அந்தநீ	இஹ-நலஜ்ஜஸே	இவ்விடத்தில்- வெட்கமடையாமலிரு
இக்ஷ்வாகுநாதம் -	இக்ஷ்வாகுவம்சப்பிரபுவான (ஸ்ரீராமனை)	தஸ்ய	அந்த (ஸ்ரீராகவனுடைய) [க்கிறாய்
க்ஷிபந்	(மாயாமிருகவியாஜத்தால்)தூரமாக ஓட்டிவிட்டு	சக்ஷுஷோ:-விஷயம்	கண்களுடைய - மார்க்கத்தை
		நதாவதுபகச்சஸி	அடையாமற்போனாயல்லவா.

தா-ம்—அடே ராவணா! தண்டகாரண்ணியத்திலென்னை யபகரிக்கவருகையில் நீ செய்தவஞ்சனாகிருத்தியத்தை யிப்பொழுதுநினைத்து இலஜ்ஜையடைகிறாயோ! ஸ்வஜனமத்தியிலாத்மப்பிரதாபப்பிரகாரஞ்செய்து மகிழ்கிற அடஅல்ப! நீ செய்தஅனாரியகிருத்தியத்தை யிங்குநினைத்து வெட்கமுறுகிறாயில்லை. நீ அந்த ராமகஜத்திற்கு எதிர்ப்படபயந்து மாயமானை முன்னனுப்பி அந்தவியாஜத்தால் இரகுவீரனை ஆசிரமத்தினின்று வெளிப்படுத்திப் பிறகென்னையபகரித்துவந்தாய். அந்த நரேந்திரனுடைய கண்களுக்குப் புலப்படாமல் தப்பி வந்துவிட்டாய். அவனைஸந்தித்திருந்தாயாகில் அப்பொழுதே அவருடைய விக்கிரமகிமையையறிந்திருப்பாய்.

౧౮. ఇమే తే నయనే క్రూరే విరూపే కృష్ణపింగళే । క్షితౌ న పతితే కస్మాన్మామనార్య నిరీక్షతః॥

க அ. 𑌇𑌮𑍇𑌤𑍇𑌨𑌯𑌨𑍇𑌕𑍍𑌰𑍂𑌰𑍇𑌵𑌿𑌰𑍂𑌪𑍇𑌕𑍃𑌷𑍍𑌣𑌪𑌿𑌙𑍍𑌗𑌳𑍇।
𑌕𑍍𑌷𑌿𑌤𑍌𑌨𑌪𑌤𑌿𑌤𑍇𑌕𑌸𑍍𑌮𑌾𑌨𑍍𑌮𑌾𑌮𑌨𑌾𑌰𑍍𑌯𑌨𑌿𑌰𑍀𑌕𑍍𑌷𑌤𑌃॥

க அ. இமேதேநயநேக்ரூரேவிரூபேக்ருஷ்ணபிங்களே।
க்ஷிதௌநபதிதேகஸ்மாந்மாமநார்யநிரீக்ஷத:॥

பதம்.	உரை.	பதம்.	உரை.
(ஹே) அநார்ய	அட துஷ்டா	இமே நயநே	இந்த-கண்கள்
மாம்-நிரீக்ஷத:	என்னை-பார்க்கிறவனான	கஸ்மாத்	எந்தகாரணத்தால்
தே-க்ரூரே	உன்னுடைய-பயங்கரமானவும்	க்ஷிதௌ	பூமியில்
விரூபே	விகாரமானவும் [னவுமான	நபதிதே	விழுந்தனவாகவில்லை.
க்ருஷ்ணபிங்களே	கறுத்தும் கோரோஜனவர்ணமுடைய		

தா-ம்—பரதாரையும் பதிவிரதையுமான ஸ்திரீயைப்பார்த்துப் பெண்டாக வேண்டுமென்று பிரார்த்திக்கிற அடநீச! சோரகிருத்தியஞ்செய்ததைமறந்து ஆண்மைபாராட்டுகிற அடஅயோக்கிய! பதிவிரதோத்தமியானவென்னைப்பார்த்து மோகித்து,ஹேசாருநேத்ரே! ஹேசாருவதநே! ஹேவிலாஸிநீ! ஹேபிரியே!என்று விளிக்கும்படியானதுர்ப்புத்தி யுனக்குண்டாயிற்றல்லவா! எந்த சக்ஷுரிந்திரியத்தால் பதிவிரதைக் கிவ்விதவபராதஞ்செய்தாயோ அந்தசக்ஷுரிந்திரிய மப்பொழுதே பூமியில்தெறித்து விழாமல் நிற்பதற்கென்னகாரணந்தெரியுமோ? ஸீதையைக்கண்டுகாமுற்ற உன்னுடைய கறுத்தவிகாரமான க்ரூரபிங்காக்ஷங்களிரண்டும் பதிவிரதாக்கினியால் தகிக்கப்பட்டு நீறாய்நிலத்தில்விழாததற்கென்னகாரணந்தெரியுமோ?

౧౯. తస్య ధర్మాత్మనః పత్నీం స్నుషాం దశరథస్య చ । కథం వ్యాహరతో మాం తే న జిహ్వా వ్యవశీర్యతే॥

க௯. 𑌤𑌸𑍍𑌯𑌧𑌰𑍍𑌮𑌾𑌤𑍍𑌮𑌨𑌃𑌪𑌤𑍍𑌨𑍀𑌂𑌸𑍍𑌨𑍁𑌷𑌾𑌂𑌦𑌶𑌰𑌥𑌸𑍍𑌯𑌚।
𑌕𑌥𑌂𑌵𑍍𑌯𑌾𑌹𑌰𑌤𑍋𑌮𑌾𑌂𑌤𑍇𑌨𑌜𑌿𑌹𑍍𑌵𑌾𑌵𑍍𑌯𑌵𑌶𑍀𑌰𑍍𑌯𑌤𑍇॥

க௯. தஸ்யதர்மாத்மந:பத்நீம்ஸ்நுஷாம்தஶரதஸ்யச।
கதம்வ்யாஹரதோமாந்தேநஜிஹ்வாவ்யவஶீர்யதே॥

பதம்.	உரை.	பதம்.	உரை.
தர்மாத்மந:	தர்மஸ்வரூபியான	ஸ்நுஷாம்ச	நாட்டுப்பெண்ணுமான
தஸ்ய	(அப்படி மஹாகீர்த்தி யுடையவருமான) அந்த ஸ்ரீராமனுக்கு	மாம்	என்னை(ப்பற்றி) [லுகிற
		வியாஹரத:	(காமவிகாரத்தோடு) வார்த்தைசொல்
பத்நீம்	(தர்ம) பத்தினியும்	தே-ஜிஹ்வா	உன்னுடைய-நாக்கானது
தஶரதஸ்ய	சக்கிரவர்த்திக்கு	கதம்-நவ்யவஶீர்யதே	என்-அறுந்துவிழவில்லை.

தா-ம்—காமநோயால் சித்தஸ்வாதீனமிழந்து பிதற்றுகிற அடேராக்ஷஸ! ஸாமான்னிய ஸ்திரீயாயினும் பரதாரையைப்பார்த்திவ்வாறுஉளறுவது கொடியபாவம். நானோபரமபாவனமான இரவிகுலத்தில் ஸத்

தியந்தவருத அறுபதுநாயிரவருஷம் அரசாக்ஷிபுரிந்து ஸ்வர்க்கலோகமளவில் தனதுகீர்த்தியை நிலைநாட்டிய தசரதசக்கிரவர்த்திக்கு நாட்டுப்பெண். தர்மத்தையே திடவிரதமாகக்கொண்டுதர்மஸ்தாபனார்த்தம்ஸகலராஜ்ஜியபோகங்களையுந்துறந்து அடவியை அடைந்திருக்கிற ஸ்ரீராகவனுக்கு தர்மபத்தினீ. எங்களுடைய குலமஹிமையையும்விரதமஹிமையையுமறியாது, அதர்மப்பிரவர்த்திசெய்யும்படி என்னைத்தூண்டுகிறாய். அதமாதமனுமொழியத்துணியாத அனாரியவசனங்களைஎன்னைப்பார்த்துரைத்தாய். அப்படிமொழிந்ததற்காக, அடநீச! உன்னுடையநாக்கு அப்பொழுதேபுழுத்து அறுந்துகீழ்விழுந்திருக்கவேண்டுமன்றோ? விழாததற்கென்னகாரணந்தெரியுமோ?

౨౦. అసందేశాత్తురామస్యతపసశ్చానుపాలనాత్ । నత్వాంకుర్మిదశగ్రీవభస్మభస్మార్హతేజసా॥

உ०. 𑌅𑌸𑌂𑌦𑍇𑌶𑌾𑌤𑍍𑌤𑍁𑌰𑌾𑌮𑌸𑍍𑌯𑌤𑌪𑌸𑌶𑍍𑌚𑌾𑌨𑍁𑌪𑌾𑌲𑌨𑌾𑌤𑍍।
𑌨𑌤𑍍𑌵𑌾𑌂𑌕𑍁𑌰𑍍𑌮𑌿𑌦𑌶𑌗𑍍𑌰𑍀𑌵𑌭𑌸𑍍𑌮𑌭𑌸𑍍𑌮𑌾𑌰𑍍𑌹𑌤𑍇𑌜𑌸𑌾॥

உ०. அஸந்தேஶாத்துராமஸ்யதபஸஶ்சாநுபாலநாத்।
நத்வம்குர்மிதஶக்ரீவபஸ்மபஸ்மார்ஹதேஜஸா॥

பதம்.	உரை.	பதம்.	உரை.
(ஹே)தஶக்ரீவ	அடேராவண!	அநுபாலநாத்	பரிபாலனத்தாலும்
ராமஸ்ய	ஸ்ரீராகவனுடைய	பஸ்மார்ஹ	தஹிக்கப்படுவதற்குத்தகுந்தவனே!
அஸந்தேஶாத்	(அபராதிகள்விஷயத்தில்சபியென்று) நியமனமில்லாமையாலும்	தேஜஸா	பாதிவிருத்தியதேஜஸ்ஸால்
		த்வாம்-பஸ்ம	உன்னை-சாம்பலாக
தபஸஃ	(பாதிவிருத்திய ரூபமான) தபஸ்ஸினுடைய	நகுர்மி	செய்யேன் (செய்யவில்லை.)

தா-ம்—அடேராவண! என்னைப்பற்றிவந்த உனது இருபதுகைகளும் அப்பொழுதே அறுந்துவிழும்படி சபித்திருப்பேன். என்னைப்பார்த்துமோகித்த உனதுஇருபதுகண்களும் அப்பொழுதே தெறித்துவிழும்படி சபித்திருப்பேன். போகார்த்தமென்னையழைத்த உனதுநாக்கு அப்பொழுதேபுழுத்துவிழும்படி சபித்திருப்பேன். நீயிழைத்தவபராதங்களுக்கு அப்பொழுதே நீறும்படிசெய்திருப்பேன். நினைத்தமாத்திரத்தில் உனதுமலைபேர்த்தமிடுக்கும் திக்பாலகரைவென்றதிண்மையும் கஜங்களையிடித்தகாம்பீரியமும் தபோபலத்தினுடைய தௌஷ்டியமுமழிந்து பத்துத்தலைகளுடன் எரிந்துசாம்பலாய் விழும்படிசெய்யத்தக்க பாதிவிருத்தியதேஜஸ்ஸெனக்கிருக்கிறது. நீயும் இந்தகோரநாசத்தையடையும்படியான அபராதம்செய்திருக்கிறாய். அப்படியேன்செய்யவில்லையென்றுவினவின், அபராதிகளைச்சபிக்கும்படி என்னுடையநாதன் எனக்கனுமதியளிக்கவில்லை. அனுமதியில்லாவிடினும் மஹாபராதியான உன்னைச்சபித்தாலென்னெனில், அபராதிகளிடத்திலும் கருணையேபாராட்டுகிற அந்த தயாளுவுக்கது ஸம்மதமாகுமோ வென்றஞ்சுகிறேன். ஸம்மதாஸம்மதத்தை யோசிப்பானேனெனில் அஸம்மதமாயினது என்னுடைய பாதிவிருத்தியத்திற்குப் பிரதிகூலமாகிறது. பாதிவிருத்தியரக்ஷணம் குலஸ்திரீகளுக்குப்பிரதானமன்றோ! ஸ்ரீராகவஸம்மதமாயினும் அபராதிகளுக்குச் சாபம்விதிப்பதால் தபோபலம் குறையுமாதலின், உன்னையழித்து அதனால் பாதிவிருத்திய தேஜோக்ஷீணத்தையடைய யான்விரும்பவில்லை. இக்காரணங்களாலல்லவோ, அடபாபி! இதுவரையில் வைவஸ்வதவசமடையாது நீ ஜீவித்திருக்கிறாய்.

౨౧. నాపహర్తుమహంశక్యాత్త్వయారామస్యధీమతః । విధిస్తవవధార్థాయవిహితోనాత్రసంశయః॥

உக. 𑌨𑌾𑌪𑌹𑌰𑍍𑌤𑍁𑌮𑌹𑌂𑌶𑌕𑍍𑌯𑌾𑌤𑍍𑌤𑍍𑌵𑌯𑌾𑌰𑌾𑌮𑌸𑍍𑌯𑌧𑍀𑌮𑌤𑌃।
𑌵𑌿𑌧𑌿𑌸𑍍𑌤𑌵𑌵𑌧𑌾𑌰𑍍𑌥𑌾𑌯𑌵𑌿𑌹𑌿𑌤𑍋𑌨𑌾𑌤𑍍𑌰𑌸𑌂𑌶𑌯𑌃॥

உக. நாபஹர்த்துமஹம்ஶக்யாத்வாயராமஸ்யதீமதஃ।
விதிஸ்தவவதார்த்தாயவிஹிதோநாத்ரஸம்ஶயஃ॥

பதம்.	உரை.	பதம்.	உரை.
தீமதஃ	புத்திமானான	நஶக்யா	சக்கியமாகேன். [ட்டு
ராமஸ்ய	ஸ்ரீராமனுக்கு	தவ-வதார்த்தாய	உன்னுடைய- மரணத்தையும் பொரு
அஹம்	(பாரியையான) நான்	விதிஃ	ஈசுவரஸங்கல்பமானது
த்வயா	உன்னால்	விஹிதஃ	செய்யப்பட்டிருக்கிறது
அபஹர்த்தும்.	அபகரிப்பதற்கு	நாத்ரஸம்ஶயஃ	இதற்கு ஸந்தேகமில்லை.

தா-ம்—அடேராவண! என்னை நீ ஸ்ரீராகவனிடத்திலிருந்தபகரித்தது உன்னுடையஸாமர்த்தியவிசேஷத்தினாலுமல்ல, பராக்கிரமமகிமையாலுமல்ல. அந்த ஜகதேகவீரனுடைய ஸம்ரக்ஷணையிலிருக்கிற வென்னையார்தானபகரிக்கசக்தர். அந்தபுருஷோத்தமனை யாக்கிரமிப்பது யாவருக்குத்தான்ஸாத்தியம். உன்மாயவலையிலகப்பட்டு மோசம்போனாளென்று மகிழுகிறாய். அடபித்த! யானுன்வசத்தையடைந்ததற்குக் காரணம் வேறு. உன்னுடைய விநாசகாலம்ஸமீபித்துவிட்டது. இலங்காராஜ்ஜியத்திற்கு முன்கூறுள்ளஸம்பந்தமொழியும்படியான காலம்வந்துவிட்டது. விதிவசத்தாலென்னை நீ யடைந்தாய். இதுதெய்வஸங்கல்பமான செய்கை, ஸந்தேகமில்லை.

౨౨. శూరేణధనదభ్రాత్రా బలైస్సముదితేనచ। అపోహ్యరామంకస్మాద్ధిదారచౌర్యంత్వయాకృతమ్॥

௨௨. 𑌶𑍂𑌰𑍇𑌣𑌧𑌨𑌦𑌭𑍍𑌰𑌾𑌤𑍍𑌰𑌾𑌬𑌲𑍈𑌸𑍍𑌸𑌮𑍁𑌦𑌿𑌤𑍇𑌨𑌚।
𑌅𑌪𑍋𑌹𑍍𑌯𑌰𑌾𑌮𑌂𑌕𑌸𑍍𑌮𑌾𑌦𑍍𑌧𑌿𑌦𑌾𑌰𑌚𑍌𑌰𑍍𑌯𑌂𑌤𑍍𑌵𑌯𑌾𑌕𑍃𑌤𑌮𑍍॥

௨௨. ஶூரேணதநதப்ராத்ராபலைஸ்ஸமுதிதேநச।
அபோஹ்யராமம்கஸ்மாத்திதாரசௌர்யம்த்வயாக்ருதம்॥

பதம்.	உரை.	பதம்.	உரை.
(ஹேராவண)	(அடே இராவணா)	ராமம்	ஸ்ரீராகவனை
ஶூரேண	சூரனும்	அபோஹ்ய	மோசம் செய்து
தநதப்ராத்ரா	குபேரனுக்குஸகோதரனும்	தாரசௌர்யம்	(இதரனுடைய) பாரியையைத்திருடு
பலைஃ	சதுரங்கஸேனைகளோடு (வலிவோடு)	கஸ்மாத்	எந்தகாரணத்தால் [வது
ஸமுதிதேநச	கூடிக்கொண்டிருப்பவனுமான	க்ருதம்	செய்யப்பட்டது.
த்வயா	உன்னால்		

தா-ம்—அடேராவணா! உலகத்தில் ஆண்மையற்றவன், ஸகோதரபலமற்றவன், ஸைந்ய பலமற்றவன், இப்படி ஸகலவிதபலமுமற்ற காம்ட்டாடியான புருஷனன்றோ சோரகிருத்தியஞ் செய்யத்துணிவான். நீயோ இந்திரப்பிரபிருதிகளான மஹாவீரரை வென்றசூரன். தனாதிபதியான குபேரன் உனக்கு ஸாக்ஷாத்பிராதா. வானுலகு, மண்ணுலகு, கீழுலகு, இம்மூவுலகிலும் யுத்தஞ்செய்து ஜயஸ்ரீயோடு திரும்பவல்ல மஹா ஸைன்னியங்களுக்கதிபதி. இவ்வண்ணம் சௌரியத்திலும் ஸ்நேகத்திலும் ஸைன்னியத்திலும் அமிதபலவானாயிருக்கிற நீ ஸ்ரீராகவனை யெதிர்த்து யுத்தஞ்செய்யாது மாயையா லவரைவஞ்சித்ததற் கென்னகாரணம்? இரதகஜதுரகபதாதிகளென்கிற உபபலங்களொன்றுமில்லாது தனியாய் ஏழையாய்நிற்கிறவென்பர்த்தாவை நீ திரிலோகாக்கிரமஞ்செய்த உன்னுடைய தோள்வலியோடும் அளவற்ற சதுரங்க ஸைந்யங்களோடும் தனாதிபதியினுப பலத்தோடுமெதிர்த்துஜயமடையாது வஞ்சிப்பானேன்? அட அஸத்தே! அளவற்றபலவானாயினும், ஏகவீரனாய்நிற்கிற அப்புருஷோத்தமனையெதிர்த்து வெல்லமுடியாதென்கிறபயத்தினாலிந்த சோரகிருத்தியஞ்செய்தாயன்றோ?

౨౩. సీతాయావచనంశ్రుత్వారావణోరాక్షసాధిపః। వివృత్యనయనేక్రూరేజానకీమన్వవైక్షత॥

௨௩. 𑌸𑍀𑌤𑌾𑌯𑌾𑌵𑌚𑌨𑌂𑌶𑍍𑌰𑍁𑌤𑍍𑌵𑌾𑌰𑌾𑌵𑌣𑍋𑌰𑌾𑌕𑍍𑌷𑌸𑌾𑌧𑌿𑌪𑌃।
𑌵𑌿𑌵𑍃𑌤𑍍𑌯𑌨𑌯𑌨𑍇𑌕𑍍𑌰𑍂𑌰𑍇𑌜𑌾𑌨𑌕𑍀𑌮𑌨𑍍𑌵𑌵𑍈𑌕𑍍𑌷𑌤॥

௨௩. ஸீதாயாவசநம்ஶ்ருத்வாராவணோராக்ஷஸாதிப꞉।
விவ்ருத்யநயநேக்ரூரோஜாநகீமந்வவைக்ஷத॥

பதம்.	உரை.	பதம்.	உரை.
ராக்ஷஸாதிபঃ-ராவணঃ-	அரக்கர்பெருமானான-இராவணன்	நயநே	கண்களை
ஸீதாயாঃ-வசநம்	பிராட்டியினுடைய-வாக்கியத்தை	விவ்ருத்ய	விரித்து (திறந்து)
ஶ்ருத்வா	கேட்டு	ஜாநகீம்	ஜனகபுத்திரியை
க்ரூரே	பயங்கரமான	அந்வவைக்ஷத	பார்த்தான்.

தா-ம்—இந்தவிதம்பிராட்டி இராவணனுடைய நன்மையையேஉட்கருதி அவனுக்குத்தன்னைவிடாதபக்ஷத்தில் நேரிடப்போகிற அனர்த்தங்களைப் பயமின்றியுரைத்தாள். தன்னுடைய பாதிவிருத்திய தேஜோவிசேஷத்தையும் பர்த்திருவீரியவிசேஷத்தையும்வெளிப்படுத்தி அரக்கன்செய்தசோரகிருத்தியத்தை யவன் பத்தினிகளும் பரிசாரகைகளுங் கேழ்க்கவற்புறுத்திச்சொல்லிய ஸீதையின்மீது மஹாகோபங்கொண்டு தீப்பொறிசிதறுங் குரூரநேத்திரங்களோடு இராவணன் அவளைவிழித்துப்பார்த்தான்.

౨౪. నీలజీమూతసంకాశోమహాభుజశిరోధరః। సింహసత్త్వగతిశ్శ్రీమాన్దీప్తజిహ్వోగ్రలోచనః॥

౨౫. చలాగ్రమకుటప్రాంశుశ్చిత్రమాల్యానులేపనః। రక్తమాల్యాంబరధరస్తప్తాంగదవిభూషణః॥

౨౬. శ్రోణీసూత్రేణమహతామేచకేనసుసంవృతః। అమృతోత్పాదనద్ధేనభుజగేనేవమందరః॥

౨౭. తాభ్యాంసపరిపూర్ణాభ్యాంభుజాభ్యాంరాక్షసేశ్వరః। శుశుభేచలసంకాశశ్శృంగాభ్యామివమందరః॥

௨௪. 𑌨𑍀𑌲𑌜𑍀𑌮𑍂𑌤𑌸𑌂𑌕𑌾𑌶𑍋𑌮𑌹𑌾𑌭𑍁𑌜𑌶𑌿𑌰𑍋𑌧𑌰𑌃।
𑌸𑌿𑌂𑌹𑌸𑌤𑍍𑌤𑍍𑌵𑌗𑌤𑌿𑌶𑍍𑌶𑍍𑌰𑍀𑌮𑌾𑌨𑍍𑌦𑍀𑌪𑍍𑌤𑌜𑌿𑌹𑍍𑌵𑍋𑌗𑍍𑌰𑌲𑍋𑌚𑌨𑌃॥

௨௫. 𑌚𑌲𑌾𑌗𑍍𑌰𑌮𑌕𑍁𑌟𑌪𑍍𑌰𑌾𑌂𑌶𑍁𑌶𑍍𑌚𑌿𑌤𑍍𑌰𑌮𑌾𑌲𑍍𑌯𑌾𑌨𑍁𑌲𑍇𑌪𑌨𑌃।
𑌰𑌕𑍍𑌤𑌮𑌾𑌲𑍍𑌯𑌾𑌮𑍍𑌬𑌰𑌧𑌰𑌸𑍍𑌤𑌪𑍍𑌤𑌾𑌙𑍍𑌗𑌦𑌵𑌿𑌭𑍂𑌷𑌣𑌃॥

௨௬. 𑌶𑍍𑌰𑍋𑌣𑍀𑌸𑍂𑌤𑍍𑌰𑍇𑌣𑌮𑌹𑌤𑌾𑌮𑍇𑌚𑌕𑍇𑌨𑌸𑍁𑌸𑌂𑌵𑍃𑌤𑌃।
𑌅𑌮𑍃𑌤𑍋𑌤𑍍𑌪𑌾𑌦𑌨𑌦𑍍𑌧𑍇𑌨𑌭𑍁𑌜𑌗𑍇𑌨𑍇𑌵𑌮𑌨𑍍𑌦𑌰𑌃॥

௨௭. 𑌤𑌾𑌭𑍍𑌯𑌾𑌂𑌸𑌪𑌰𑌿𑌪𑍂𑌰𑍍𑌣𑌾𑌭𑍍𑌯𑌾𑌂𑌭𑍁𑌜𑌾𑌭𑍍𑌯𑌾𑌂𑌰𑌾𑌕𑍍𑌷𑌸𑍇𑌶𑍍𑌵𑌰𑌃।
𑌶𑍁𑌶𑍁𑌭𑍇𑌚𑌲𑌸𑌂𑌕𑌾𑌶𑌶𑍍𑌶𑍃𑌙𑍍𑌗𑌾𑌭𑍍𑌯𑌾𑌮𑌿𑌵𑌮𑌨𑍍𑌦𑌰𑌃॥

அக

௨௪. நீலஜீமூதஸங்காஶோமஹாபுஜஶிரோதரஃ।
ஸிம்ஹஸத்வகதிஶ்ஶ்ரீமாந்தீப்தஜிஹ்வாக்ரலோசநஃ॥

௨௫. சலாக்ரமகுடப்ராம்ஶுஶ்சித்ரமால்யாநுலேபநஃ।
ரக்தமால்யாம்பரதரஸ்தப்தாங்கதவிபூஷணஃ॥

௨௬. ஶ்ரோணீஸூத்ரேணமஹதாமேசகேநஸுஸம்வ்ருதஃ।
அம்ருதோத்பாதநத்தேநபுஜகேநேவமந்தரஃ॥

௨௭. தாப்யாம்ஸபரிபூர்ணாப்யாம்புஜாப்யாம்ராக்ஷஸேஶ்வரஃ।
ஶுஶுபேசலஸங்காஶஶ்ஶ்ருங்காப்யாமிவமந்தரஃ॥

பதம்.	உரை.
நீலஜீமூதஸங்காஶஃ	கறுத்தமேகத்திற்குநிகரானவனும்
மஹாபுஜஶிரோதரஃ	பெருபுஜத்தையும்கழுத்தையுமுடையவனும்
ஸிம்ஹஸத்வகதிஃ	சிங்கம்போல் கம்பீரநடையுடையவனும்
ஶ்ரீமாந்	சோபையுடையவனும்
தீப்தஜிஹ்வாக்ரலோசநஃ	எரிகிற நாக்குநுனியையும் கண்களையுமுடையவனும்
சலாக்ரமகுடப்ராம்ஶுஃ	அசைகிற நுனிகளையுடைய கிரீடத்தால் உயர்ந்திருப்பவனும்
சித்ரமால்யாநுலேபநஃ	பற்பல புஷ்பமாலையும் சந்தனப்பூச்சுமுடையவனும்
ரக்தமால்யாம்பரதரஃ	சிவந்தமாலையையும் வஸ்திரத்தையும் தரித்திருப்பவனும்
தப்தாங்கதவிபூஷணஃ	புடம்வைத்த தங்கத்தால்செய்த தோள்வளைகளாலலங்கரிக்கப்பட்டிருப்பவனும்

பதம்	உரை.
அம்ருதோத்பாதநத்தேந—	
அம்ருதோத்பாத	அமிருதமுண்டுபண்ண
நத்தேந	கட்டப்பட்ட
புஜகேந	(வாஸுகியென்கிற) ஸர்ப்பத்தால்
மந்தரயிவ	மந்தரபருவதம்போல்
மேசகேந	கறுப்பானதும்
மஹதா	பெரியதுமான
ஶ்ரோணீஸூத்ரேண	இடுப்புநாணால்
ஸுஸம்வ்ருதஃ	நன்றாகச்சூழப்பட்டவனும்
அசலஸங்காஶஃ	மலைக்கொப்பானவனுமான
ஸஃ-ராக்ஷஸேஶ்வரஃ	அந்த-இராக்ஷஸராஜா
பரிபூர்ணாப்யாம்	(பிரபாவவிசேஷத்தால்) நிறைந்த
தாப்யாம்	மிகப்பிரஸித்தமான
புஜாப்யாம்	இரண்டுதோள்களால்
ஶ்ருங்காப்யாம்	இரண்டுசிகரங்களோடு
மந்தரயிவ	மந்தரகிரிபோல்
ஶுஶுபே	விளங்கினான்.

(௨௪-மு-௨௭-ல்) தா-ம்—பிராட்டியால் திரஸ்கரிக்கப்பட்ட கோபத்தோடு ஜ்வலித்த இராவணன் தன்னுடைய ராக்ஷஸஸ்வரூபத்தோடு அதிபயங்கரனாகவிளங்கினான். நீருண்டமேகஜாலம்போற் கறுத்தசரீரமுள்ளவன். திண்மைநிறைந்த திரண்டபுஜமுள்ளவன். தசசிரங்களைத்தாங்குகிற வலிமையாற் பெருத்தகண்டமுடையவன். அக்கினிமண்டலங்கள் போல்ஜ்வலிக்கிற கண்களையுடையவன். இரத்தமாம்ஸ போஜனத்தாற் சிவந்து அக்கினிசிகைபோற் பிரகாசிக்கிற நுனிநாக்குடையவன். மிருகேந்திரம்போல்மதித்த கம்பீரமான நடையுள்ளவன். கோபவேகத்தாலசைந்தாடுகிற உன்னதமான கிரீடம்தரித்தவன். நானாவர்ண பரிமளலேபனங்களாற் பிரகாசிப்பவன். நறுமலர்தொடுத்த சிறந்தபுஷ்பமாலையணிந்தவன். தாமஸசின்னமான சிவந்தவஸ்திரங்களையும் புஷ்பஹாரங்களையுந் தரித்தவன். அமிருதமதனகாலத்தில் மந்தரகிரியைச்சுற்றிக் கட்டியவாஸுகிபோல் தன்னுடைய பெருத்த இடையிற்பூட்டிய அரைநாணோடு விளங்குபவன். இவ்விதவேஷமமைந்த தனவிஜயராஜ்ஜியலக்ஷ்மீஸம்பன்னனான அவ்வரக்கர்கோன், காரிருளைப்பழிக்கிற அவனுடைய ஸ்தூலசரீரத்தின் மீதுபொருந்தி பர்வதத்தைப்பேர்த்துப் பந்தாடின பிரஸித்தியாலிறுமாந்திருக்கிற புஜத்துவயத்தோடு, உன்னதசிகரங்களாலதிகம் பிரமாகவிளங்கு மந்தரபர்வதம்போற் பிரகாசித்தான்.

౨౮. తరుణాదిత్యవర్ణాభ్యాంకుండలాభ్యాంవిభూషితః । రక్తపల్లవపుష్పాభ్యామశోకాభ్యామివాచలః॥

౨౯. సకల్పవృక్షప్రతిమోవసంతఇవమూర్తిమాన్ । శ్మశానచైత్యప్రతిమోభూషితోపిభయంకరః॥

౩౦. అవేక్షమాణోవైదేహీంకోపసంరక్తలోచనః । ఉవాచరావణస్సీతాంభుజంగఇవనిశ్శ్వసన్॥

௨௮. 𑌤𑌰𑌣𑌾𑌦𑌿𑌤𑍍𑌯𑌵𑌰𑍍𑌣𑌾𑌭𑍍𑌯𑌾𑌂𑌕𑍁𑌣𑍍𑌡𑌲𑌾𑌭𑍍𑌯𑌾𑌂𑌵𑌿𑌭𑍂𑌷𑌿𑌤𑌃।
𑌰𑌕𑍍𑌤𑌪𑌲𑍍𑌲𑌵𑌪𑍁𑌷𑍍𑌪𑌾𑌭𑍍𑌯𑌾𑌮𑌶𑍋𑌕𑌾𑌭𑍍𑌯𑌾𑌮𑌿𑌵𑌾𑌚𑌲𑌃॥

௨௯. 𑌸𑌕𑌲𑍍𑌪𑌵𑍃𑌕𑍍𑌷𑌪𑍍𑌰𑌤𑌿𑌮𑍋𑌵𑌸𑌨𑍍𑌤𑌇𑌵𑌮𑍂𑌰𑍍𑌤𑌿𑌮𑌾𑌨𑍍।
𑌶𑍍𑌮𑌶𑌾𑌨𑌚𑍈𑌤𑍍𑌯𑌪𑍍𑌰𑌤𑌿𑌮𑍋𑌭𑍂𑌷𑌿𑌤𑍋𑌪𑌿𑌭𑌯𑌂𑌕𑌰𑌃॥

௩௦. 𑌅𑌵𑍇𑌕𑍍𑌷𑌮𑌾𑌣𑍋𑌵𑍈𑌦𑍇𑌹𑍀𑌂𑌕𑍋𑌪𑌸𑌂𑌰𑌕𑍍𑌤𑌲𑍋𑌚𑌨𑌃।
𑌉𑌵𑌾𑌚𑌰𑌾𑌵𑌣𑌸𑍍𑌸𑍀𑌤𑌾𑌂𑌭𑍁𑌜𑌂𑌗𑌇𑌵𑌨𑌿𑌶𑍍𑌶𑍍𑌵𑌸𑌨𑍍॥

௨௮. தருணாதித்யவர்ணாப்யாம்குண்டலாப்யாம்விபூஷிதஃ।
ரக்தபல்லவபுஷ்பாப்யாமஶோகாப்யாமிவாசலஃ॥

௨௯. ஸகல்பவ்ருக்ஷப்ரதிமோவஸந்தஇவமூர்த்திமாந்।
ஶ்மஶாநசைத்யப்ரதிமோபூஷிதோபிபயங்கரஃ॥

௩௦. அவேக்ஷமாணோவைதேஹீம்கோபஸம்ரக்தலோசநஃ।
உவாசராவணஸ்ஸீதாம்புஜங்கஇவநிஶ்வஸந்॥

பதம்.	உரை.	பதம்.	உரை.
தருணதித்யவர்ணப்யாம்-மத்தியான ஸூரியனுடைய காந்தி யொத்த காந்தியுடைய		ஶ்மஶாநசைத்யப்ரதிம:-சுடுகாட்டிலிருக்கும் மரம்போல்	
குண்டலாப்யாம்	கர்ணபரணத்தால்	பயங்கர:	பயத்தையுண்டுபண்ணுபவனுமான
ரக்தபல்லவபுஷ்பாப்யாம்-சிவந்த தளிரென்னபுஷ்பமென்ன இவைகளையுடைய		ஸ:-ராவண:	அந்த-இராவணன்
		கோபஸம்ரக்தலோசந:—	
அஶோகாப்யாம்	அசோகவிருக்ஷங்களால்	கோபஸம்ரக்த	கோபத்தால் சிவந்த-
அசலஇவ	பருவதம்போல்	லோசந:	கண்களையுடையவனுக்
விபூஷித:	அலங்கரிக்கப்பட்டவனும் (அதனால்)	வைதேஹீம்	ஸீதையை
கல்பவ்ருக்ஷப்ரதிம:	கல்பகவிருக்ஷத்திற்கு ஸமானமாயிரு[ப்பவனும்	அவேக்ஷமாண:	பார்த்துக்கொண்டு
மூர்த்திமாந்	சரீரமுடைய	புஜங்கஇவ	பாம்புபோல்
வஸந்தஇவ	வஸந்தன்போலிருப்பவனும்	நிஶ்வஸந்	பெருமூச்செறிகிறவனுக்கொண்டு
பூஷிதோபி	அலங்கரிக்கப்பட்டவனுயினும்	ஸீதாம்	பிராட்டியை (குறித்து)
		உவாச	(பின்வருமாறு) சொன்னன்.

(உ௮-மு-௩௦-ல்.) தா-ம்.—ஸூரிய மண்டலங்கள்போல் ஜ்வலிக்கிற குண்டலங்களை யணிந்த அவ்விராவணன் இரத்தவர்ண புஷ்பபல்லவ நிபிடமான அசோகவிருக்ஷங்களோடுகூடிய பர்வதம்போற் காணப்பட்டான். கிரீடகுண்டல ஹாரகேயூர அங்குளீகாதி திவ்யாபரண ஸம்பூர்ணனுய்ப் பிரகாசிக்கிற அவ்வரக்கர்கோன் காஞ்சனவத்தாக விளங்கும் கற்பகத்தருபோற்காணப்பட்டான். உத்தம பரிமளசந்தணம்பூசித் தாதவிழ் மாலைசூடி யௌவனமதிப்போடு மன்மதோத்ஸவந்தேடுகிற அந்தஸுந்தர புருஷன் மூர்த்திகரித்தவஸந்தன்போற் காணப்பட்டான். இப்படி ரூபயௌவன ஸம்பத்தும் ஆபரண ஸமிருத்தியுமுடையவனுயினும் அவனைக் காண்போர்க்கு ஆனந்தமுண்டாகாது பயமேயுண்டாயிற்று. வடிவழகிற்குறைவில்லை, ஆபரணத்திற் பழுதில்லை, யௌவனத்திற்குறைவில்லை. ஆகிலும் இந்தஸம்பத்துகள் பரமகாதுகனை இராக்கதனை யடைந்தமையால் ஆனந்தகரமாகாது பயங்கரமாயின. புஷ்பபல்லவ பலஸங்கீர்ணமான விருக்ஷவிசேஷத்தை உத்தியானவனமத்தியிற் கண்டால் சக்ஷுரிந்திரியம் ஸந்தோஷமுறும். அவ்விருக்ஷமே சுடுகாட்டில் வளருமாகில் பயத்திற்கு ஹேதுவாகும். அதுபோலவே ஸ்திரீகாதுகன், ஸாதுகண்டகன், தயாதாக்ஷிண்ணியாதிகுணங்களின்னவென்றுமறியாத இராக்ஷஸாதமன், அப்படிப்பட்டவனுடைய அலங்காரமுமழகும்பயாவகமானவை. இக்காரணத்தால் பூஷிதனுயினும் தாருணனுகவே காணப்பட்ட தசக்ரீவன், கொதிக்கிற கோபவேகத்தால் கொள்ளிபோற் சிவந்தகண்களோடு, பாதிவிருத்தியநெறியிற் பதிவுற்று நிற்கிற பிராட்டியை விழித்துப்பார்த்து, உரகேந்திரம்போல் தாமஸஸஹிதமான அனல்காற்றை நிசுவஸித்துப் பிரதிவசனமுரைத்தனன்.

౩౦. అనయేనాభిసంపన్నమర్థహీనమనువ్రతే । నాశయామ్యహమద్య త్వాం సూర్యస్సంధ్యామివౌజసా॥

[illegible]

௩௧. அநயேநாபிஸம்பந்நமர்த்தஹீநமநுவ்ரதே।
நாஶயாம்யஹமத்யத்வாம்ஸூர்யஸ்ஸந்த்யாமிவௌஜஸா॥

பதம்.	உரை.	பதம்.	உரை.
அநயேந	அந்நியாயத்தோடு	ஓஜஸா	தேஜஸ்ஸால்
அபிஸம்பந்நம்	கூடியிருப்பவனும்	ஸூர்ய:	கதிரவன்
அர்த்தஹீநம்	தனரகிதனுமான (ராமனை)	ஸந்த்யாமிவ	ஸந்தியைப்போல்
அநுவ்ரதே	அடைந்த (ஸீதே)	அத்ய	இப்பொழுது
அஹம்-த்வாம்	நான்-உன்னை	நாஶயாமி	அழிக்கிறேன்.

தா-ம்.—நீதியில்லான், அர்த்தமில்லான், ஒன்றுமிலலான், அப்படிப்பட்ட அஸத்புருஷனுன ராமனையே ஆசிரயித்திருக்கிற ஸீதே! நாவடக்கமின்றி நினைத்தபடி நவின்றனை. தன்னுடைய உக்கிரதேஜஸ்ஸால் ஸந்தியாகால விருளையழிக்கிற தினகரன்போல் இதோ உன்னை க்ஷணகாலத்திற் கொன்றுவிடுகிறேன்.

౩౧. ఇత్యుక్త్వా మైథిలీం రాజా రావణశ్శత్రురావణః । సందిదేశ తతస్సర్వా రాక్షసీర్ఘోరదర్శనాః॥

[illegible]

௩௨. இத்யுக்த்வாமைதிலீம்ராஜாராவணஶ்ஶத்ருராவண:।
ஸந்திதேஶததஸ்ஸர்வாராக்ஷஸீர்க்கோரதர்ஶநா:॥

பதம்.	உரை.	பதம்.	உரை.
தத:	பிறகு	மைதிலீம்	ஸீதையை(ப்பார்த்து
ஶத்ருராவண:	சத்துருக்களை வியஸனமுறும்படிசெய்கிறவும்	இதி-உக்த்வா	இந்தவிதம்-சொல்லி
		கோரதர்ஶநா:	பயங்கரமானபார்வையுடைய
ராஜா	(அரக்கர்) பிரபுவுமான	ஸர்வா:-ராக்ஷஸீ:	ஸமஸ்தர்களான-இராக்ஷஸிகளை (க்கு[றித்து)
ராவண:	இராவணன்	ஸந்திதேஶ	ஆக்கியாபித்தான்.

தா-ம்.—சத்துருக்கள் கண்டம்விட்டுக் கதறிதபிக்கும்படிசெய்யும் பராக்கிரமசாலியான அவ்வரக்கர்பெருமான் ஸீதையைப்பார்த் திவ்விதஞ்சொல்லிப் பிறகு பயங்கரரூபிகளான இராக்ஷஸிகளைநோக்கி ஸீதாநிர்ப்பந்தவிஷயமாகப் பின்வருமாறு ஆக்கியாபித்தான்.

33. ఏకాక్షీమేకకర్ణాంచకర్ణప్రావరణాంతథా । గోకర్ణీంహస్తికర్ణీంచలంబకర్ణీమకర్ణికామ్॥
34. హస్తిపాద్యశ్వపాద్యౌచగోపాదీంపాదచూళికామ్ । ఏకాక్షీమేకపాదీంచపృథుపాదీమపాదికామ్॥
35. అతిమాత్రశిరోగ్రీవామతిమాత్రకుచోదరీమ్ । అతిమాత్రాస్యనేత్రాంచదీర్ఘజిహ్వామజిహ్వికామ్॥
అనాసికాంసింహముఖీంగోముఖీంసూకరీముఖీమ్।

௩௩. [illegible]
௩௪. [illegible]
௩௫. [illegible]

௩௩. ஏகாக்ஷீமேககர்ணாஞ்சகர்ணப்ராவரணாந்ததா।
கோகர்ணீம்ஹஸ்திகர்ணீம்சலம்பகர்ணீமகர்ணிகாம்॥
௩௪. ஹஸ்திபாத்யஸ்வபாத்யௌசகோபாதீம்பாதசூளிகாம்॥
ஏகாக்ஷீமேகபாதீம்சப்ருதுபாதீமபாதிகாம்॥
௩௫. அதிமாத்ரஶிரோக்ரீவாமதிமாத்ரகுசோதரீம்।
அதிமாத்ராஸ்யநேத்ராம்சதீர்க்கஜிஹ்வாமஜிஹ்விகாம்॥
அநாஸிகாம்ஸிம்ஹமுகீம்கோமுகீம்ஸூகரீமுகீம்।

பதம்.	உரை.	பதம்.	உரை.
ஏகாக்ஷீம்	ஒருகண்ணுடையவளையும்	ப்ருதுபாதீம்	பெருகாலுடையவளையும்
ஏககர்ணாஞ்ச	ஒருகாதுடையவளையும்	அபாதிகாம்	காலில்லாதவளையும்
கர்ணப்ராவரணாம்	(சிரஸைச்) சுற்றிக்கொண்டிருக்கிற காதுடையவளையும்	அதிமாத்ரஶிரோக்ரீவாம்-	பிரமாணத்தை விஞ்சினதலைகழுத்து இவைகளையுடையவளையும்
ததா	அப்படியே [ளையும்	அதிமாத்ரகுசோதரீம்	பிரமாணத்தையதிக்கிரமித்த கொங்கை வயிறு இவைகளையுடையவளையும்
கோகர்ணீம்	பசுவின் காதுபோன்ற காதுடையவ	அதிமாத்ராஸ்யநேத்ராம்ச-	கணக்குக்கடங்காதமுகம்கண் இவைகளையுடையவளையும
ஹஸ்திகர்ணீம்ச	யானையின் காதுபோன்ற காதுடையவளையும்	தீர்க்கஜிஹ்வாம்	நீண்டநாக்குடையவளையும்
லம்பகர்ணீம்	தொங்குகிறகாதுடையவளையும்	அஜிஹ்விகாம்	நாக்கில்லாதவளையும்
அகர்ணிகாம்	காதில்லாதவளையும்	அநாஸிகாம்	மூக்கில்லாதவளையும் [ளையும்
ஹஸ்திபாத்யஸ்வபாத்யௌச-	யானையின் கால்போன்ற காலுடையவளையும் குதிரைக்கால்போன்றகாலுடையவளையும் [ளையும்	ஸிம்ஹமுகீம்	சிங்கமுகம்போன்ற முகமுடையவ
கோபாதீம்	பசுவின் கால்போன்ற காலுடையவ	கோமுகீம்	பசுவின்முகம்போன்ற முகமுடையவளையும் [யவளுமான
பாதசூளிகாம்	காலில்தலைமயிருடையவளையும் [யும்	ஸூகரீமுகீம்	பன்றியின்முகம்போன்ற முகமுடை
ஏகாக்ஷீம்	ஒற்றைக்கண் இந்திரியமுடையவளை	ராக்ஷஸீ:	இராக்ஷஸிகளை
ஏகபாதீம்ச	ஒற்றைக்காலுடையவளையும்	ராவண:	இராவணன் (ஆக்கியாபித்தான்.)

36. యథామద్వశగాసీతాక్షిప్రంభవతిజానకీ॥ తథాకురుతరాక్షస్యస్సర్వాఃక్షిప్రంసమేత్యచ।

௩௬. [illegible]

௩௬. யதாமத்வஶகாஸீதாக்ஷிப்ரம்பவதிஜாநகீ॥
ததாகுருதராக்ஷஸ்யஸ்ஸர்வா:க்ஷிப்ரம்ஸமேத்யச।

பதம்.	உரை.	பதம்.	உரை.
ஸர்வா:	ஸமஸ்தர்களான	யதா	எப்படி
(ஹே) ராக்ஷஸ்ய:	இராக்ஷஸஸ்திரீகளே	மத்வஶகா	என்ஸ்வாதீனையாக
க்ஷிப்ரம்	சீக்கிரமாக	பவதி	ஆகுவளோ
ஸமேத்ய	வந்து (அடைந்து)	ததா	அந்தப்படி
ஜாநகீ	ஜனகபுத்திரியான	க்ஷிப்ரம்	சீக்கிரமாக
ஸீதா	ஸீதை	குருத	செய்யுங்கள்.

(௩௩-மு;௩௬-ல்.) தா-ம்—இராவணன்பார்த்தாக்கியாபித்தஸ்திரீகளினிலக்ஷணஞ்சொல்லப்படுகிறது. அந்தஸீதாரக்ஷணஸ்திரீகோஷ்டியில், ஒருவளுக்கு ஒரேகண், ஒருவளுக்குஒரேகாது, ஒருவளுக்கு சிரஸைச் சூழ்ந்தகாது, ஒருவளுக்குப் பசுவின்காதுபோன்றகாது, ஒருவளுக்கு யானையின்காதுபோன்றகாது, ஒருவளுக்குத் தொங்குகிறகாது, ஒருவளுக்குக் காதேயில்லை. ஒருவளுக்கு யானைப்பாதம்போன்றபாதம், ஒருவளுக்குக் குதிரையினதுபாதம்போல் ஒத்தைக்குளம்புள்ளபாதம், ஒருவளுக்குப் பசுவினது பாதம்போல் இரட்

டைக்கொளம்புள்ளபாதம், ஒருவளுக்குப் பாதத்தில்மயிர், ஒருவளுக்கு ஓரேபாதம், ஒருவளுக்கு ஸ்தூலபாதம், ஒருவளுக்குப் பாதமேயில்லை. ஒருவளுக்கு மிகவும்பெருத்தஸ்தனம், ஒருவளுக்கு அதிவிஸ்தாரமான வயிறு, ஒருவளுக்கு அளவிட்டுமுடியாத அகன்றமுகம், அப்படியே மிகவுமகன்றகண். ஒருவளுக்கு நீண்டநாக்கு, ஒருவளுக்கு நாக்கேயில்லை, மூக்கில்லாதவளொருவள், ஸிம்மமுகமுடையாளொருவள். இப்படி அங்கஹீனகளாயும் குரூபிகளாயும் கோரரூபிகளாயுமிருக்கிற இராக்ஷஸிகளனைவரையும்பார்த்து ஸீதை தன்ஸ்வாதீனமாகும்விதத்தைச் சீக்கிரஞ் செய்யவேண்டுமென்றுக்கியாபித்தான்.

౧౭. ప్రతిలోమానులోమైశ్చ సామదానాదిభేదనైః॥ ఆవర్జయత వైదేహీం దండస్యోద్యమనేనచ।

௧௭. 𑌪𑍍𑌰𑌤𑌿𑌲𑍋𑌮𑌾𑌨𑍁𑌲𑍋𑌮𑍈𑌶𑍍𑌚𑌸𑌾𑌮𑌦𑌾𑌨𑌾𑌦𑌿𑌭𑍇𑌦𑌨𑍈𑌃॥
𑌆𑌵𑌰𑍍𑌜𑌯𑌤𑌵𑍈𑌦𑍇𑌹𑍀𑌂𑌦𑌣𑍍𑌡𑌸𑍍𑌯𑍋𑌦𑍍𑌯𑌮𑌨𑍇𑌨𑌚।

௧௭. ப்ரதிலோமாநுலோமைஶ்சஸாமதாநாதிபேதநைঃ॥
ஆவர்ஜயதவைதேஹீம்தண்டஸ்யோத்யமநேநச।

பதம்.	உரை.	பதம்.	உரை.
(ஹேராக்ஷஸ்ய:)	(ஓ இராக்ஷஸிகளே)	ஸாமதாநாதிபேதநைஶ்ச-ஸாமதாநாதிபேதவார்த்தைகளாலு	
ப்ரதிலோமாநுலோமைஶ்ச=		தண்டஸ்ய	தண்டோபாயத்தினுடைய [ம்
ப்ரதிலோம	பிரதிகூலவார்த்தையாலும்	உத்யமநேநச	பிரயத்தினத்தாலும்
அநுலோமைஶ்ச	அனுகூலவார்த்தையாலும் (அல்லது)	வைதேஹீம்	ஸீதையை
	பிரதிகூலமாயும் அனுகூலமாயுமுள்ள	ஆவர்ஜயத	வசப்படுத்துங்கள்.

தா-ம்—எந்தவிதத்தினாலாவது ஸீதையென்னைக்காமுறும்படிசெயயுங்கள். ஸாமதானபேததண்டமென்கிற சதுர்வித உபாயங்களையும் பிரயோகியுங்கள். பிரதமத்தில் நல்வார்த்தைகளால் ஸமாதானஞ்சொல்லி வசீகரிக்கப்பாருங்கள். இசையாவிடில் ஆபரணவஸ்திர தனராஜ்ஜிய ஸாம்பிராஜ்ஜியங்களை விசேஷமாயளித்து ஸந்தோஷிப்பியுங்கள். அதற்குமிசையாவிடில், ராமராவண தாரதம்மியங்களைக்காட்டி ராமனிடத்துள்ள மைத்திரத்தைநீக்கி இராவணனிடத்தில் வியாமோகமுண்டுபண்ணுங்கள். மித்திரபேதோபாயமும் காரியத்தைஸாதியாவிடில், அந்தியோபாயமான தண்டோபாயத்தைச்செய்யுங்கள். பிரஹாரத்திற்குப்பயந்து ஸ்வாதீனையாகலாம். இப்படி, எவ்விதத்தினாலாவதுவைதேஹிபிடிவாதத்தைவிட்டுஅபிமதையாகும்படி செய்யுங்கள்.

౧౮. ఇతి ప్రతిసమాదిశ్య రాక్షసేంద్రః పునః పునః॥ కామమన్యుపరీతాత్మా జానకీం పర్యతర్జయత్।

௧௮. 𑌇𑌤𑌿𑌪𑍍𑌰𑌤𑌿𑌸𑌮𑌾𑌦𑌿𑌶𑍍𑌯𑌰𑌾𑌕𑍍𑌷𑌸𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌃𑌪𑍁𑌨𑌃𑌪𑍁𑌨𑌃॥
𑌕𑌾𑌮𑌮𑌨𑍍𑌯𑍁𑌪𑌰𑍀𑌤𑌾𑌤𑍍𑌮𑌾𑌜𑌾𑌨𑌕𑍀𑌂𑌪𑌰𑍍𑌯𑌤𑌰𑍍𑌜𑌯𑌤𑍍।

௧௮. இதிப்ரதிஸமாதிஶ்யராக்ஷஸேந்த்ரঃபுநঃபுநঃ॥
காமமந்யுபரீதாத்மாஜாநகீம்பர்யதர்ஜயத்।

பதம்.	உரை.	பதம்.	உரை.
ராக்ஷஸேந்த்ர:	இராக்ஷஸநாதனை (இராவணன்)		னால் சூழப்பட்டமனமுடையவனாக
இதி	இந்தவிதம்	புந:புந:	அடிக்கடி
ப்ரதிஸமாதிஶ்ய	ஆக்கியாபித்து	ஜாநகீம்	பிராட்டியை
காமமந்யுபரீதாத்மா	காமமென்ன கோபமென்ன இவைக	பர்யதர்ஜயத்	மிரட்டினான்.

தா-ம்—இவ்விதமந்த ராக்ஷஸிகளுக்காக்கியாபித்துவிட்டு, இலங்கேசுவரன், காமமென்ன, கோபமென்ன, இவைகளால் விகாரமடைந்த மனதோடு, ஸீதையை யடிக்கடி பார்த்து மிரட்டினான்.

౧౯. ఉపగమ్య తతః క్షిప్రం రాక్షసీ ధాన్యమాలినీ॥ పరిష్వజ్య దశగ్రీవమిదం వచనమబ్రవీత్।

௧௯. 𑌉𑌪𑌗𑌮𑍍𑌯𑌤𑌤𑌃𑌕𑍍𑌷𑌿𑌪𑍍𑌰𑌂𑌰𑌾𑌕𑍍𑌷𑌸𑍀𑌧𑌾𑌨𑍍𑌯𑌮𑌾𑌲𑌿𑌨𑍀॥
𑌪𑌰𑌿𑌷𑍍𑌵𑌜𑍍𑌯𑌦𑌶𑌗𑍍𑌰𑍀𑌵𑌮𑌿𑌦𑌂𑌵𑌚𑌨𑌮𑌬𑍍𑌰𑌵𑍀𑌤𑍍।

௧௯. உபகம்யததঃக்ஷிப்ரம்ராக்ஷஸீதாந்யமாலிநீ॥
பரிஷ்வஜ்யதஶக்ரீவமிதம்வசநமப்ரவீத்।

பதம்.	உரை.	பதம்.	உரை.
தத:	பிறகு	தஶக்ரீவம்	இராவணனை
தாந்யமாலிநீ	தான்னியமாலினியென்கிற	பரிஷ்வஜ்ய	கட்டிக்கொண்டு
ராக்ஷஸீ	இராக்ஷஸியானவள்	இதம்-வசநம்	பின்வருகிற-வார்த்தையை
க்ஷிப்ரம்	சீக்கிரமாக	அப்ரவீத்	சொன்னாள்.
உபகம்ய	ஸமீபித்துவந்து		

தா-ம்—இந்தவிதம் காமக்ரோதமூர்ச்சிதனாய் ஸகலபரிஜனங்களும் நடுங்கும்படி ஆக்கியைகள் விதித்து ஜானகியை அதட்டுகிறஇராவணனை தான்னியமாலினியென்கிற இராக்ஷஸஸ்தீரியானவளோடிவந்து ஆலிங்கனம்செய்து கோபசமனமாகும்படியான தேன்மொழிகளை யறைந்தனள்.

౪౦. మయా క్రీడ మహారాజ సీతయా కింతవానయా॥ వివర్ణయా కృపణయా మానుష్యా రాక్షసేశ్వర।

௪௦. 𑌮𑌯𑌾𑌕𑍍𑌰𑍀𑌡 𑌮𑌹𑌾𑌰𑌾𑌜 𑌸𑍀𑌤𑌯𑌾 𑌕𑌿𑌂 𑌤𑌵𑌾𑌨𑌯𑌾॥
𑌵𑌿𑌵𑌰𑍍𑌣𑌯𑌾 𑌕𑍃𑌪𑌣𑌯𑌾 𑌮𑌾𑌨𑍁𑌷𑍍𑌯𑌾 𑌰𑌾𑌕𑍍𑌷𑌸𑍇𑌶𑍍𑌵𑌰।

௪௦. மயாக்ரீடமஹாராஜஸீதயாகிம்தவாநயா॥
யத்-மே	எந்தகாரணத்தால்-என்னுடைய	நவிஶீர்யதே	பிளவாமலிருக்கிறதோ
இதம்-ஹ்ருதயம்து	இந்த-மனதானதோவென்றால்	தத்-பஹுதுக்கபூர்ணம்-ஆகையால்-துக்கபூரிதையும் [தும்	
வஜ்ராஹதம்	வஜ்ஜிராயுதத்தாலடிக்கப்பட்ட [ல்	ஸுகாத்-விஹீநம்	ஸௌக்கியத்திலிருந்து சூன்னியமான
அசலஸ்ய-ஶ்ருங்கமிவ	பருவதத்தினுடைய கொடிமுடிபோ	ஸ்திரம்	அழிவற்றதாகவும் (இருக்கிறது)
அத்ய-ஸஹஸ்ரதா	இப்பொழுது-அனேகப் பிரகாரமாக	நூநம்	நிச்சயம்.

தா-ம்.—ஸ்ரீராகவஸமேத வாஸமாகிற நித்தியஸுகத்தையிழந்தேன். இலங்காநகரவாஸமாகிறமஹாதுக்கத்தை யடைந்தேன். சீலத்தைக்குலைக்கவந்த இராவணனால் மஹாபயமடைந்தேன். ஐயோ இந்த கோரராக்ஷஸிகளால் அளவற்ற நலிவுண்டேன். இதற்கெல்லாம் சலித்ததோ இந்தஹ்ருதயம்! மேல்விழுந்த அசனியை லக்ஷியம்பண்ணாதுநிற்கிற பர்வதசிகரம்போல், இவ்வளவு துக்கங்களையுங்கொண்டு இன்னமெவ்வளவுவந்தபோதிலும் சலியேனென்று சொல்லுவதுபோல் சாசுவதஸ்திரங்கொண்டு அமைந்திருக்கிறதே என் ஹ்ருதயம்! இதற்கழிவென்பதுகிடையாதோ!

౫. నైవాస్తినూనంమమదోషమత్రవధ్యాహమస్యాప్రియదర్శనస్య।భావంనచాస్యాహమనుప్రదాతుమలంద్విజోమంత్రమివాద్విజాయ॥

௫. 𑌨𑍈𑌵𑌾𑌸𑍍𑌤𑌿𑌨𑍂𑌨𑌂𑌮𑌮𑌦𑍋𑌷𑌮𑌤𑍍𑌰𑌵𑌧𑍍𑌯𑌾𑌹𑌮𑌸𑍍𑌯𑌾𑌪𑍍𑌰𑌿𑌯𑌦𑌰𑍍𑌶𑌨𑌸𑍍𑌯।
𑌭𑌾𑌵𑌂𑌨𑌚𑌾𑌸𑍍𑌯𑌾𑌹𑌮𑌨𑍁𑌪𑍍𑌰𑌦𑌾𑌤𑍁𑌮𑌲𑌂𑌦𑍍𑌵𑌿𑌜𑍋𑌮𑌨𑍍𑌤𑍍𑌰𑌮𑌿𑌵𑌾𑌦𑍍𑌵𑌿𑌜𑌾𑌯॥

௫. நைவாஸ்திநூநம்மமதோஷமத்ரவத்த்யாஹமஸ்யாப்ரியதர்ஶநஸ்ய।
பாவம்நசாஸ்யாஹமநுப்ரதாதுமலம்த்விஜோமந்த்ரமிவாத்விஜாய॥

பதம். உரை.

இந்தவிதம் கஷ்டானுபவத்தைப் பொறுப்பதைக்காட்டிலும் பிராணத்தியாகஞ் செய்துவிவிடலாம். அதனலாத்மஹத்தியாகிற மஹாதோஷம் ஸம்பவிக்குமென்றுசங்கித்து அதை வேறுகாரணத்தால் பரிகரிக்கிறாள். [கிற) ஆத்மவதையில்

பதம்.	உரை.
அத்ர-மம	என்னால்-(இப்பொழுதுசெய்யப்படப்போ
தோஷ:-நைவாஸ்தி	பாதகம்-இல்லவேயில்லை

ஏன் தோஷமில்லையென்றால் இராவணனால் மரிப்பதைக்காட்டில் தானேமரிப்பது ஶ்ரேயஸ்கரமென்கிறாள்.

பதம்.	உரை.
அஹம்	(எக்காரணத்தால்) நான்
அப்ரியதர்ஶநஸ்ய-அஸ்ய-பிரியமற்றபார்வையுடைய-(இராவணனுடைய) இராவணனால்	

பதம். உரை. [ஆகிறேனே)

பதம்.	உரை.
நூநம்-வத்யா	நிச்சயமாக-கொலைபுரியப்பட்டவளாக

அதனால் தோஷம்கிடையாதென்று கருத்து. ஆனால் (ஸர்வத:ஆத்மாநம்கோபாய) என்கிற சுருதிப்ரகாரம் இராவணனையனுஸரித்தாவது ஆத்மஸம்ரக்ஷணம் காரியமென்றால் அது நான்செய்ய வல்லியேன் என்கிறாள்.

பதம்.	உரை.
அஹம்-அஸ்ய	நான்-இந்த-இராவணனுடைய (இராவணனிடத்தில்)
பாவம்	அபிப்பிராயத்தை-(மனதை)
த்விஜ:-அத்விஜாய	பிராம்ஹணன்-அப்பிராம்ஹணனையும்
மந்த்ரமிவ	(வேத) மந்திரம்போல் [பொருட்டு
அநுப்ரதாதும்-நாலம்	கொடுப்பதற்கு-ஸமர்த்தையல்ல.

தா-ம்.—துக்கானுபவத்தால் எனதுஜீவன் ஊர்ஜ்ஜிதவாழ்க்கைகொள்கிறதேயொழிய தேகத்தைவிட்டு நீங்குவதைக்காணேன். இப்படியே ஜீவித்திருந்தால் கொஞ்சகாலத்தி லிராவணனென்னைக் கொல்லப்போகிறான். அந்தபாபிஷ்டி கையாலிறப்பதைவிட ஆத்மஹத்திசெய்து கொள்வதேமேன்மை. ஸர்வவிதத்தாலு மாத்மரக்ஷணஞ் செய்யவேண்டுமென்கிற சுருதிவாக்கியத்தை மரியாதைபண்ணவேண்டுமானால் எனது கற்பை இராவணனுக்கர்ப்பணஞ்செய்யவேண்டும். வியபசாரஞ்செய்தாவது ஜீவரக்ஷணஞ்செய்ய விரும்புகிறவள்யானோ! அவ்வதமாதமவாழ்க்கையைவிட ஆத்மஹத்தியென்கிற பாபத்தைச்செய்வது உத்தமோத்தமமானகாரியம். பிராணஹானிநேரிடினும் வேதவித்தையைசூத்திரனுக்களிக்க விணங்காத விப்பிரன்போல், கோரவதமும் கோரபாபமுநேரிடினும் ஸ்ரீராகவார்ப்பணஞ்செய்த வென்மனதை இராவணனுக் கிசையும்படிசெய்யேன்.

౬. నూనంమమాంగాన్యచిరాదనార్యశ్శస్త్రైశ్శితైశ్ఛేత్స్యతిరాక్షసేంద్రః।తస్మిన్ననాగచ్ఛతిలోకనాథేగర్భస్థజంతోరివశల్యకృంతః॥

௬. 𑌨𑍂𑌨𑌂𑌮𑌮𑌾𑌙𑍍𑌗𑌾𑌨𑍍𑌯𑌚𑌿𑌰𑌾𑌦𑌨𑌾𑌰𑍍𑌯𑌶𑍍𑌶𑌸𑍍𑌤𑍍𑌰𑍈𑌶𑍍𑌶𑌿𑌤𑍈𑌶𑍍𑌛𑍇𑌤𑍍𑌸𑍍𑌯𑌤𑌿𑌰𑌾𑌕𑍍𑌷𑌸𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌃।
𑌤𑌸𑍍𑌮𑌿𑌨𑍍𑌨𑌨𑌾𑌗𑌚𑍍𑌛𑌤𑌿𑌲𑍋𑌕𑌨𑌾𑌥𑍇𑌗𑌰𑍍𑌭𑌸𑍍𑌥𑌜𑌨𑍍𑌤𑍋𑌰𑌿𑌵𑌶𑌲𑍍𑌯𑌕𑍃𑌨𑍍𑌤𑌃॥

௬. நூநம்மமாங்காந்யசிராதநார்யஶ்ஶஸ்த்ரைஶ்ஶிதைஶ்ச்சேத்ஸ்யதிராக்ஷஸேந்த்ர:।
தஸ்மிந்நநாகச்சதிலோகநாதேகர்ப்பஸ்தஜந்தோரிவஶல்யக்ருந்த:॥

பதம்.	உரை.	பதம்.	உரை.
லோகநாதே-தஸ்மிந்	ஜகத்ப்ரபுவான-அந்த (ஸ்ரீராகவன்)	மம	என்னுடைய (அவயவங்களை)
அநாகச்சதி (ஸதி)	(இரண்டுமாதத்திற்குமுன்பே) யெழுந்தருளாமலிருப்பராகில் [ய	அநார்யஃ-ராக்ஷஸேந்த்ரஃ-துஷ்டனாகிய இராவணன்	
		ஶிதைஃ-ஶஸ்த்ரைஃ	கூருடைய-பாணங்களால்
கர்ப்பஸ்தஜந்தோஃ	கர்ப்பத்திலிருக்கிற பிராணியினுடை	அசிராத்-சேத்ஸ்யதி	சீக்கிரமாக-வெட்டப்போகிறான்
அங்காநி-ஶல்யக்ருந்தஇவ-அவயவங்களை-நாவிதன்போல்		நூநம்	நிச்சயம்.

தா-ம்.—ஜகத்பிரபுவான ஸ்ரீராகவன் இன்னமிரண்டுமாதத்தி லென்னையடையாராகில், கர்ப்பத்தினின்று வெளிப்படாது மரித்துப்போன சிசுவினங்கங்களை நாவிதன் சின்னபின்னமாக்கி வெளிப்படுத்துவதுபோல், தன்மனோரதத்திற் கிசையாதவென்னை இராவணன் சரங்களால் சேதிக்கப்போகிறான்.

౭. దుఃఖం బతేదం మమ దుఃఖితాయా మాసౌ చిరాయాధిగమిష్యతో ద్వౌ।బద్ధస్య వధ్యస్య తథా నిశాంతే రాజాపరాధాదివ తస్కరస్య॥

௭. 𑌦𑍁𑌃𑌖𑌂𑌬𑌤𑍇𑌦𑌂𑌮𑌮𑌦𑍁𑌃𑌖𑌿𑌤𑌾𑌯𑌾𑌮𑌾𑌸𑍌𑌚𑌿𑌰𑌾𑌯𑌾𑌧𑌿𑌗𑌮𑌿𑌷𑍍𑌯𑌤𑍋𑌦𑍍𑌵𑍌।
𑌬𑌦𑍍𑌧𑌸𑍍𑌯𑌵𑌧𑍍𑌯𑌸𑍍𑌯𑌤𑌥𑌾𑌨𑌿𑌶𑌾𑌨𑍍𑌤𑍇𑌰𑌾𑌜𑌾𑌪𑌰𑌾𑌧𑌾𑌦𑌿𑌵𑌤𑌸𑍍𑌕𑌰𑌸𑍍𑌯॥

௭. துஃக்கம்பதேதம்மமதுஃக்கிதாயாமாஸௌசிராயாதிகமிஷ்யதோத்வௌ।
பத்தஸ்யவத்த்யஸ்யததாநிஶாந்தேராஜாபராதாதிவதஸ்கரஸ்ய॥

பதம்.	உரை.	பதம்.	உரை.
சிராயஃ-துக்கிதாயாஃ	பஹுகாலமாய்-துக்கத்தை யடைந்த		தப்பிதத்தால்
மம-த்வௌ	எனக்கு-இரண்டான	பத்தஸ்ய-ததா	கட்டப்பட்டிருப்பவனும்-அப்படியே
மாஸௌ - அதிகமிஷ்யதஃ -	கெடுவிட்டமாஸம்-வரப்போகிறது (என்கிறயாதொன்றுண்டோ)	நிஶாந்தேச-வத்த்யஸ்ய-பிராதக்காலத்தில்	கொலைபுரியத்தக்க
		தஸ்கரஸ்யேவ	திருடனைப்போல் [வனுமான
இதம்-ராஜாபராதாத்	இது-இராஜனையும்பொருட்டு செய்த	துக்கம்-பத	வியஸனம்-(வந்துவிட்டது) கஷ்டம்.

தா-ம்—.இப்பத்துமாதகாலமாக அகோராத்திரம் துக்கத்தாற் கதறுகிறவெனக்கு இவ்விரண்டுமாதங்களுமாய்ந்தவுடன், இராஜாபராதத்தாற்கட்டுண்டு அதன்பிரயோசனமாக ஓர் தினைதயத்தில் சிரஸாக்கினையை யெதிர்பார்த்திருக்கும் சோரன்போல், ஐயோ, நிரபராதியானயான் அதர்மத்திற் கிணங்காமைக்காக கொலையுண்ணப்போகிறேன். இராகவநிமித்தம் பிராணதாரணஞ்செய்துவந்தயான் அந்தலோகநாதனைக்காணாது விநாசமடையப்போகிறேன். சீலரக்ஷணத்திற்காக விப்பலனோ! ஆகொடிது!

౮. హా రామ హా లక్ష్మణ హా సుమిత్రే హా రామమాతః సహ మే జనన్యా।ఏషా విపద్యామ్యహమల్పభాగ్యా మహార్ణవే నౌరివ మూఢవాతా॥

௮. 𑌹𑌾𑌰𑌾𑌮𑌹𑌾𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑌣𑌹𑌾𑌸𑍁𑌮𑌿𑌤𑍍𑌰𑍇𑌹𑌾𑌰𑌾𑌮𑌮𑌾𑌤𑌃𑌸𑌹𑌮𑍇𑌜𑌨𑌨𑍍𑌯𑌾।
𑌏𑌷𑌾𑌵𑌿𑌪𑌦𑍍𑌯𑌾𑌮𑍍𑌯𑌹𑌮𑌲𑍍𑌪𑌭𑌾𑌗𑍍𑌯𑌾𑌮𑌹𑌾𑌰𑍍𑌣𑌵𑍇𑌨𑍌𑌰𑌿𑌵𑌮𑍂𑌢𑌵𑌾𑌤𑌾॥

௮. ஹாராமஹாலக்ஷ்மணஹாஸுமித்ரேஹாராமமாதஸ்ஸஹமேஜநந்யா।
யேஷாவிபத்யாம்யஹமல்பபாக்யாமஹார்ணவேநௌரிவமூடவாதா॥

பதம்.	உரை.	பதம்.	உரை.
மே-ஜநந்யா ஸஹ	என்னுடைய-தாயோடுகூட	ஏஷா-அஹம்	இந்த-நான்
ஹாராமமாதஃ	ஓராமமாதாவான (கௌஸல்யே)	மஹார்ணவே-மூடவாதா-பெருங்கடலில்-சுழற்காற்றையுடை	
ஹாஸுமித்ரே	ஓ ஸுமித்ரே!	நௌரிவ	ஓடம்போல்
ஹாராம-ஹாலக்ஷ்மண-ஓராம-ஓலக்ஷ்மண!		விபத்யாமி	ஆபத்தை யடைகிறேன்.
அல்பபாக்யா	மந்தபாக்கியமுடைய		(விபத்யே-என்றிருக்கவேண்டும் ஆர்ஷம்.)

தா-ம்—.இந்தவிதம் கிலேசமுற்றபிராட்டி தன்னுடைய பிராணபந்துவைக்காணாது பின்வருமாறு முறையிட்டனள். (ரமயதீதிராமஃ) ஸர்வலோக மனோகரனென்றுகாரணப் பெயர்பூண்ட ஹேநாத! ஆசிருதரக்ஷணத்திற்காக விரைந்து துஷ்டநிக்கிரகஞ்செய்யும் ஸாதுகுணமுள்ள ஹேசரண்ணிய! என்விஷயத்தில்தேவரீருடைய கல்யாணகுணங்கள் மித்தியையாகக் காண்கின்றனவே! ஆசிருதையானவென்னைத் தேவரீர் மறந்துவிட்டீரோ! என்னுடையபிரலாபங்கள் தேவரீருடையசெவியிற்படவில்லையோ! ஐயோகாணேனே நாதனே, இலக்ஷ்மணனையாவ தழைப்போ மென்று பின்னுங்கதறுகிறாள். ஹாலக்ஷ்மண! ஜ்யேஷ்டப்ராதாவின் பத்தினியான யானுமக்கு மாதாவன்றோ! என்னையிப்படி யுபேக்ஷிக்கலாமோ! பத்தினிவிஷயமென்று ஸ்ரீராகவன் பராங்முகமாயிருந்தாலும் மாதாவிஷயத்தில் நீரிப்படியிருப்பது தர்மமாகுமோ! அன்றி, அரண்ணியத்திற்குப்பிரயாணப்படுங்கால், "ராமம்தஶரதம்வித்தி, மாம்வித்திஜநகாத்மஜாம்" என்று சொல்லிவிடுத்த ஸுமித்திரையின்வாக்கியம் மறந்துவிட்டீரோ! என்னையிரக்ஷிக்க வராதபக்ஷத்தில், உமக்குமாதாவை யுபேக்ஷித்தல், மாதிருவாக்கிய உல்லங்கனம் செய்தல், இவ்விரண்டுபாபமும் நேரிடுமாதலால் நீர் அவசியம்ரக்ஷிக்கமுயன்றிருப்பீர். ஐயோ காணேனே இன்னமப்பிரியபந்துவை. இவ்விதமிலக்ஷ்மணனைக்காணாது மாமியான கௌஸல்யையையழைக்கிறாள். அன்னாய் கௌஸல்யே! லோகபர்த்தாவான ஸ்ரீராகவனைப் பெற்றவளென்கிற யசஸ்ஸோடுவிளங்குந்தாயே! புத்திரனைநம்பி நாட்டுப்பெண்ணை நாடுவிட்டனுப்பியநீர் கஷ்டமடைந்துவிட்டீர். ஐயோநானும்மைக்காணாதிங்கழிகிறேன். மாற்றான்றாயான கைகேயியைப்போலல்லாமல் மிகுந்த ஆர்வத்துடன் ஸீதாராமரக்ஷணநிமித்தமாக அருமைமைந்தனைவனத்திற் கனுப்பிய பிரியமாதாவான ஸுமித்திரே! எனதுகஷ்டத்தைக்காணீர்; ஸ்ரீராமலக்ஷ்மணனைப்பிரிந்தேன். இராக்ஷஸவசமடைந்தேன். உங்க

ளையெல்லாங் காணுதொழிகிறேன். யானல்பமான பாக்கியஞ்செய்தவள். கடல்மத்தியில் சுழல்காற்றிற்கிலக்கான வோடம்போல் துக்கபரவசையாகி அந்நியாயமாய் நசித்துவிடுகிறேன். ஹாகஷ்டம்!

౯. తపస్వినౌ ధారయతా మృగస్య సత్త్వేన రూపం మనుజేంద్రపుత్రౌ। నూనం విశస్తౌ మమ కారణాత్తౌ సింహర్షభౌ ద్వావివ వైద్యుతేన॥

௯. [illegible]

௯. தபஸ்விநௌதாரயதாம்ருகஸ்யஸத்வேநரூபம்மநுஜேந்த்ரபுத்ரௌ।
நூநம்விஶஸ்தௌமமகாரணாத்தௌஸிம்ஹர்ஷபௌத்வாவிவவைத்யுதேந॥

பதம்.	உரை.	பதம்.	உரை.
ம்ருகஸ்ய-ரூபம்	மானினுடைய-ஆகாரத்தை	வைத்யுதேந	இடியினுல்
தாரயதா-ஸத்வேந	தரித்த-ஜந்துவால் (மாரீசனுல்)	த்வௌ-ஸிம்ஹர்ஷபாவிவ-	இரண்டான ஸிம்ஹஸிரேஷ்டங்க
தரஸ்விநௌ-தௌ	பலமுடையவர்களான-அந்த	மம-காரணாத்	என்னுடையநிமித்தமாக [ள்போல்
மநுஜேந்த்ரபுத்ரௌ	இராஜகுமாரர்கள்	நூநம்-விஶஸ்தௌ	நிச்சயமாக-ஹிம்ஸிக்கப்பட்டார்கள்.

தா-ம்.—அவ்வாரியபுத்திரரிருவரும் உயிரோடிருந்தனராயின் என்னையிதுவரையிற் றேடியடையாமலிரார். அசனியாற்கொலையுண்ட மிருகேந்திரங்கள்போ லந்நரேந்திரரும் பொன்மான் வடிவங்கொண்டென்னைமயக்கிய உத்பாதத்தாலடிப்பட்டனரென்பது நிச்சயம். ஐயோ சக்ஷுரிந்திரியத்திற்குவசையாகிமோசம் போனேனே! ஆசையால்பத்தப்பட் டென்னையனைப் பரிகொடுத்தேனே! பாபியான யானன்றோ அந்தலோகபாலருடைய நாசத்திற்குக்காரணமாகிறேன்.

౧౦. నూనం స కాలో మృగరూపధారీ మామల్పభాగ్యాం లులుభే తదానీమ్। యత్రార్యపుత్రం విససర్జ మూఢా రామానుజం లక్ష్మణపూర్వజం చ॥

௧௦. [illegible]

௧௦. நூநம்ஸகாலோம்ருகரூபதாரீமாமல்பபாக்யாம்லுலுபேததாநீம்।
யத்ரார்யபுத்ரம்விஸஸர்ஜமூடாராமாநுஜம்லக்ஷ்மணபூர்வஜஞ்ச॥

பதம்.	உரை.	பதம்.	உரை.
யதா-மூடா	எந்தகாலத்தில்-மூடையான (யான்)	ஸ:-கால:	அந்த-காலமானது
ஆர்யபுத்ரம்	பூஜ்யரானதசரதபுத்திரரான	நூநம்-ததாநீம்	நிச்சயமாக-அப்பொழுது
ராமாநுஜம்	இலக்ஷ்மணனையும்	ம்ருகரூபதாரீ	மான்வேடம்பூண்டதாக
லக்ஷ்மணபூர்வஜம்ச	ஸ்ரீராகவனையும்	அல்பபாக்யாம்-மாம்	ஸ்வல்பபாக்கியஞ் செய்தவளான-என்
விஸஸர்ஜ	விட்டுவிட்டேனே	லுலுபே	வஞ்சித்தது. [னை

தா-ம்.—அஹோ மூடையானேன்! மாயாமிருகதிருஷ்டத்தால் கியானசூன்னியையானேன். மோகாவேசத்தால் கைங்கரியசேஷத்துவத்தைமறந்தேன். மாஞசைகொண்டு நித்தியவிபூதியைப் பரிகொடுத்தேன். முன்னின்றமான்வேண்டுமென்று பதியையாசித்து அவரையதன்பின்விடுத்தேன். பிறகென்னை ரக்ஷித்துவந்த பரிசுத்தஹிருதயரான இலக்ஷ்மணரை மூடையான நான் அனுசியமொழிகளால் தூஷித்து மனங்கசந்தென்னைவிடும்படி செய்தேன். இப்படி இருவரையுங் கைவிட்டவுடன் ஆபத்தையடைந்தேன். அல்பபாக்கியமுடையவளானவென்னை துஷ்காலமானது மாயாமிருகரூபியாகவந்து வஞ்சித்துவிட்டது, நிச்சயம்!

౧౧. హా రామ సత్యవ్రత దీర్ఘబాహో హా పూర్ణచంద్రప్రతిమానవక్త్ర। హా జీవలోకస్య హితః ప్రియశ్చ వధ్యాం న మాం వేత్సి హి రాక్షసానా

௧௧. [illegible] [ம்॥

[illegible]

௧௧. ஹாராமஸத்யவ்ரததீர்க்கபாஹோஹாபூர்ணசந்த்ரப்ரதிமாநவக்த்ர।
ஹாஜீவலோகஸ்யஹித:ப்ரியஶ்சவத்யாம்நமாம்வேத்ஸிஹிராக்ஷஸாநாம்॥

பதம்.	உரை.	பதம்.	உரை.
ஸத்யவ்ரத-தீர்க்கபாஹோ-	ஸத்தியத்தையே விரதமாயுடையவரே-நீண்ட திருக்கைகளையுடைய	ஹாபூர்ணசந்த்ரப்ரதிமாநவக்த்ர -	நிறைந்தமதிக்குச்சமானமான திருமுகமுடையவரே
ஹாராம	ஓ-ஸ்ரீராகவ [வரே	மாம்-ராக்ஷஸாநாம்	என்னை-இராக்கதருக்கு
ஜீவலோகஸ்ய-ப்ரியஶ்ச-	பிராணிலோகத்திற்கு-இஷ்டனுமான (தேவரீர்)	வத்யாம்	ஹிம்ஸிக்கப்பட்டவளாக (பலியாக)
		நவேத்ஸிஹி-ஹா	அறியவில்லையோ-கஷ்டம்.

தா-ம்.—ஹேஸர்வலோகமஞேஹர! ஸத்தியரக்ஷணமே விரதமாகக்கொண்ட ஹேதர்மஜ்ஞ! துஷ்டநிக்கிரகசிஷ்டபரிபாலனர்த்தம் நீண்ட திருக்கைகளையுடையபுருஷோத்தம! நிறைந்தமதிபோலதி ஆஹ்லாதகரமான திருமுகமண்டலமுடைய ஹே ஸுந்தர! ஹேஸர்வஜீவகாருண்ணிய! இராக்கதர்கையிற்சிக்கி வதைபடுகிறவென்னைமறந்தீரோ! பக்தஜனத்தினுடைய மனம்ஸந்தோஷிக்கும்படி செய்கிறதேவரீர் பரமபக்தையானவென்மனம்புண்ணுகி பதறும்படியேன் விட்டிருக்கிறீர்? சரணமடைந்தாரை ரக்ஷிக்கிறதாகப் பிரதிக்கிணை செய்ததேவரீர் என்னையேன் ரக்ஷிக்காது புலம்பவிட்டிருக்கிறீர்? கரதூஷணப்பிரமுகாதிகளை க்ஷணத்தில்

கிபாதஞ்செய்து தண்டகாவனரிஷிகளுக்கபயமளித்ததிருக்கைகளால் இராவணனையடித்து என்னை ரக்ஷிக்கலாகாதோ? சிவதனுஸ்ஸைமுறித்த தீர்க்கபாஹுவென்றும்மைக்கொண்டாடி ஜனகனென்னை யுமக்களித்தாரே. இப்படியான் படுவதற்கோ அந்தபாஹுபலம்படைத்தீர்! நீண்டகையுள்ளார் தீர்க்ககொடையாளரென்பார்களே, அரக்கனுக்கென்னை தானம்செய்வதற்கோ உமதுகைகள்நீண்டன! பக்தையை ரக்ஷிப்பதற்குக கைநீளவில்லையோ! பாணிக்கிரணஞ்செய்த பத்தினியை ரக்ஷிப்பதற்கு பாஹுபலமுண்டாகவில்லையோ! கற்பழிக்கவந்த காதுகனைக் கண்டிப்பது தர்மபரிபாலனமாகாதோ! ஹாநாத, ஹாராம, தீர்க்கபாஹோ! காமணனே தேவரீருடைய திருக்கைகளை; ஸகல ஆத்மாக்களுக்கும் ஹிதம்செய்கிற ஜீவகாருண்ணியன். ஸகலதுக்க நிவாரணஞ்செய்கிற தயாபரன். துக்கோத்பவமான உஷ்ணத்தைப்போக்குகிற பூர்ணேந்துவதனன். ஸர்வலோகானந்தகரன். ஐயோ இக்குணங்களிலொன்றையு மிப்பொழுதுகாணவில்லையே. ஹாபிராணபந்தோ! என்னை மறந்துவிட்டீரோவென்று துக்கித்தாளந்த பரதேவதையானஸீதை.

౧౨. అనన్యదైవత్వమియం క్షమా చ భూమౌ చ శయ్యా నియమశ్చ ధర్మే। పతివ్రతాత్వం విఫలం మమేదం కృతం కృతఘ్నేష్వివ మానుషాణామ్॥

௧௨. 𑌅𑌨𑌨𑍍𑌯𑌦𑍈𑌵𑌤𑍍𑌵𑌮𑌿𑌯𑌂𑌕𑍍𑌷𑌮𑌾𑌚𑌭𑍂𑌮𑍌𑌚𑌶𑌯𑍍𑌯𑌾𑌨𑌿𑌯𑌮𑌶𑍍𑌚𑌧𑌰𑍍𑌮𑍇।

𑌪𑌤𑌿𑌵𑍍𑌰𑌤𑌾𑌤𑍍𑌵𑌂𑌵𑌿𑌫𑌲𑌂𑌮𑌮𑍇𑌦𑌂𑌕𑍃𑌤𑌂𑌕𑍃𑌤𑌘𑍍𑌨𑍇𑌷𑍍𑌵𑌿𑌵𑌮𑌾𑌨𑍁𑌷𑌾𑌣𑌾𑌮𑍍॥

௧௨. அநந்யதைவத்வமியம்க்ஷமாசபூமௌசஶய்யாநியமஶ்சதர்மே।

பதிவ்ரதாத்வம்விபலம்மமேதம்க்ருதம்க்ருதக்நேஷ்விவமாநுஷாணாம்॥

பதம்.	உரை.	பதம்.	உரை.
அநந்யதைவத்வம்	இதரனைதேவதையாய் எண்ணுமலிருந்ததும் (பர்த்தாஒருவனேதெய்வ	இதம்-மே	இந்தஸமஸ்தமும்-எனக்கு
		க்ருதக்நேஷு	செய்நன்றிமறப்பவர்களிடத்தில்
இயம்-க்ஷமாச	இந்த-பொறுமையும் [மென்றர்த்தம்)	க்ருதம்	செய்யப்பட்ட
பூமௌ-ஶய்யாச	பூமியில்-படுக்கையும்	மாநுஷாணாம்	மனிதருடைய
தர்மே-நியமஶ்ச	நியாயமார்க்கத்தில்-ஸ்திரபுத்தியும்	கர்மேவ	உபகாரசெய்கைபோல்
பதிவ்ரதாத்வம்	பர்த்தாவையேவிரதமாயுடைமையும் (இவைமுதலான)	வ்யர்த்தம்	வியர்த்தமாயின.

தா-ம்.—ஹேநாத! "உன்னிற்றுமற்றொருதெய்வம்தொழாளவனையல்லால்" என்கிறபடியே, தேவரீரையல்லது வேறொருவரைத்தெய்வமாகயான்எண்ணவில்லை. தேவரீரையேதிரிகரணசுத்தியுடன் யான் தெய்வமாகப்பூஜித்துவந்தேன். பட்டாபிஷேகயத்தனகாலத்தில் நாராயண பூஜார்த்தம் பூஜாக்கிரகத்திலிருக்கையில் ரங்கநாதனையர்ச்சியாது தேவரீரையேதியானித்திருந்தேன். பரமநீசனானராவணன் தேவரீரைத் தூஷிக்கையிலும்என்னை ஹிம்ஸிக்கையிலும் அந்யசிந்தாரஹிதையாய் தேவரீருடையகமலசரணங்களையேநம்பியிருந்தேன். இப்படிப்பட்ட பக்தையென்கிற காருண்ணியபாவத்தாலாவது தேவரீர் என்னைரக்ஷிக்கவில்லை. நாதனைக்காணலாம், க்ஷேமமடையலாம், என்று பரமஹிம்ஸைகளையெலலாம்பொறுத்து இதுவரையில் ஜீவதாரணஞ்செய்தேன். அபராதமிழைத்த ராவணனை பஸ்மமாக்கவல்ல தேஜஸ்ஸிருந்தும் அடிமையானயான், உடமையுடையவனிட்டவழக்கென்றிராமல், ஆத்மரக்ஷணத்திற்ப்ரவர்த்தையாயின் பாரதந்திரியலக்ஷணத்திற்குவிரோதமாகுமென்று, அவ்வழிபுகாமல், "தவாஸ்மி" என்றொருதரமஞ்சலிசெய்து பிரபத்திபண்ணினராயின் யாராகிலுமவருக்குடனே அபயப்பிரதானஞ்செய்கிறேனென்று பிரதிக்கியைகொண்டிருக்குந் தேவரீருடையதிருநாமங்களையே உச்சாரணஞ்செய்துகொண்டு அபயத்தையெதிர்பார்த்து க்ஷமையோடிருந்தேன். என்னபலனடைந்தேன். திவ்வியாந்தப்புரத்தில் திவ்வியபோகஸகிதமான ஹம்ஸதூளிகாசயனத்தை யபேக்ஷியாமல், நாதனைப்பிரிந்தபிறகு அந்தப்புரவாஸமேன், ஆபரணாலங்காரமேன், அன்னபானாதிகளேன், என்று ஸமஸ்தஸுகங்களையும் வர்ஜ்ஜித்து, தேவரீருடைய திருவங்கத்தைத் திரும்பியடையுநிமித்தம் புழுதிபடிந்தபாழ்தரையிற் படுப்பதாகிற கடுவிரதத்தையுமனுஸரித்தேன். பதியைப்பிரிந்திருக்குங் காலத்தில் குலஸ்திரீ யனுஸரிக்கவேண்டிய ஸகலதர்மங்களையும் ஆசரித்தேன். ஆபரணங்களணிந்தேனில்லை, போகங்களபேக்ஷித்தேனில்லை, பரபுருஷஸ்மரணை கொண்டேனில்லை, எப்பொழுதும் பதியையே நினைத்து ஸந்தோஷகாலம் வருமோவென்றிருந்தேன். பாபியான இராவணனும் காதுகிகளான இவ்விராக்ஷஸிகளும் இனியமொழிகளாலும் கடுமொழிகளாலும் என்மனதைக்கலக்க வெத்தனித்தபோது, யானிணங்காமல் பிராணஹானிக்கும்பயப்படாமல் ஸ்திரபுத்திகொண்டேயிருந்தேன். இந்த தர்மாசரணமும் பாதிவிருத்தியமும் என்னபயன்தந்தன. ஹே ராகவ! தேவரீர்விஷயமாக யான்பாராட்டிய அநந்யகதிபாவமும், பாரதந்திரியமும், தர்மாசரணமும், பாதிவிருத்தியமும், இவையெல்லாம் கிருதக்கினனுக்கிழைத்த உபகாரங்கள்போல்வீணாயின. எனதுசேஷத்துவத்தையாண்டு என்னை ஆபத்காலத்தில் கைவிட்ட தேவரீர் "ஆத்மாநம்மாநுஷம்மந்யே" என்கிறபடி மனுஷியாவதாரங்கொண்டதால் மனிதர்க்கியல்பான கிருதக்கினத்துவத்தை யடைந்துவிட்டீரோ? யான்செய்த பிரபத்தியெல்லாம் வீணாயிற்றே. இரக்ஷிப்பாரில்லையே! ஐயோ என்பாக்கியமென்ன அல்பபாக்கியம்!.

౧౩. మోఘో హి ధర్మశ్చరితో మయాయం తథైకపత్నీత్వమిదం నిరర్థమ్। యా త్వాం న పశ్యామి కృశా వివర్ణా హీనా త్వయా సంగమనే ని [రాశా॥

௧௩. 𑌮𑍋𑌘𑍋𑌹𑌿𑌧𑌰𑍍𑌮𑌶𑍍𑌚𑌰𑌿𑌤𑍋𑌮𑌯𑌾𑌯𑌂𑌤𑌥𑍈𑌕𑌪𑌤𑍍𑌨𑍀𑌤𑍍𑌵𑌮𑌿𑌦𑌂𑌨𑌿𑌰𑌰𑍍𑌥𑌮𑍍।

𑌯𑌾𑌤𑍍𑌵𑌾𑌂𑌨𑌪𑌶𑍍𑌯𑌾𑌮𑌿𑌕𑍃𑌶𑌾𑌵𑌿𑌵𑌰𑍍𑌣𑌾𑌹𑍀𑌨𑌾𑌤𑍍𑌵𑌯𑌾𑌸𑌂𑌗𑌮𑌨𑍇𑌨𑌿𑌰𑌾𑌶𑌾॥

௧௩. மோகோஹிதர்மஸ்சரிதோமயாயம்ததைகபத்நீத்வமிதம்நிரர்த்தம்।
யாத்வாம்நபஸ்யாமிக்ருஸாவிவர்ணாஹீநாத்வயாஸங்கமநேநிராஸா॥

பதம்.	உரை.	பதம்.	உரை.
(ஹேராம)த்வயாஹீநா-(ஓராம)உம்மால்-விடப்பட்டவளாக		மயா	(அப்படிப்பட்ட) என்னால்
க்ருஸா-விவர்ணா	இளைத்தவளும்-அழகற்றவளுமாக (ஆ	சரிதஃ-தர்மஃ	செய்யப்பட்ட-தர்மமானது
(ஸாஹம்)	(அந்தயான்) [னேனோ)	வ்யர்தோஹி	பிரயோஜநமற்றதன்றோ
ஸங்கம - நே - நிராஸா - உம்முடைய) ஸம்பந்தத்தில்-ஆசை யற்றவளாக		ததா-யேகபத்நீத்வம்	அப்படியே-ஒரேபர்த்தாவையுடைய தாயிருக்கையையும்
த்வாம்-நபஸ்யாமி	உம்மை-பார்க்காமலிருக்கேனோ	நிரர்த்தம்	பிரயோஜநமன்று.

தா-ம்.—ஹேராகவ! தேவரீருடைய திருக்கமல சரணஸேவையின்றி யான்கிருசித்தேன், ஸர்வாங்க சோபையிழந்தேன். பார்வைக்குவழங்காத குத்ஸிதரூபியானேன். யானுசரித்த தர்மங்களெல்லாம் வியர்த்தமாயின. யான்செய்ததவம் ஸபலமாகவில்லை. அவ்வண்ணமே ஏகபத்நீத்வமென்கிற விரதமும் வியர்த்தமே!

౧౪. పితుర్నిదేశంనియమేనకృత్వావనాన్నివృత్తశ్చరితవ్రతశ్చ। స్త్రీభిస్తుమన్యేవిపులేక్షణాభిస్త్వంరంస్యసేవీతభయఃకృతార్థః॥

௧௪. [illegible]
[illegible]

௧௪. பிதுர்நிதேஸம்நியமேநக்ருத்வாவநாந்நிவ்ருத்தஸ்சரிதவ்ரதஸ்ச।
ஸ்த்ரீபிஸ்துமந்யேவிபுலேக்ஷணாபிஸ்த்வம்ரம்ஸ்யஸேவீதபயஃக்ருதார்த்தஃ॥

பதம்.	உரை.	பதம்.	உரை.
(ஹேராம)-த்வம்	(வாரீர்ராமனே) தேவரீர்		யொழித்தவராய்க்கொண்டு
பிதுஃ-நிதேஸம்	பிதாவினுடைய-ஆஜ்ஞையை [ய்து	க்ருதார்த்தஃ	பலித்தபிரயோஜநமுடையவராக
நியமேந-க்ருத்வா	அவிச்சிந்நமாக(தடங்கலில்லாமல்) செ	விபுலேக்ஷணாபிஃ	நீண்டகண்களையுடைய
வநாத்-நிவ்ருத்தஃ	அரணியத்திலிருந்து-திரும்பினவராக	ஸ்த்ரீபிஃ-ரம்ஸ்யஸே	ஸ்திரீகளோடு-ரமிக்கப்போகிறீர்
வீதபயஃ	வனவாஸத்தா லுண்டான பயத்தை	மந்யே	(என்று) யெண்ணுகிறேன்.

தா-ம்.—ஹேராகவ! தேவரீர்பிதிருவாக்கியத்தை வனவாஸத்தால் நிறைவேற்றிப்பிறகு அரண்ணியத்தினின்றும் அதனுடைய பயத்தினின்றும்விடுபட்டு அயோத்திமாநகரம்சேர்ந்து ஸிம்மாஸனாரூடராய் இராஜ்ஜியலக்ஷ்மீஸமேதராய் ஸகலஸாம்பிராஜ்ஜியங்களையுமடைந்து, உத்பலமலர்கள்போலகன்ற நீண்ட ஆக்லாதகரமான கண்களுடைய வனேக கட்டழகுமாதரைச்சேர்ந்து ரமிக்கப்போகிறீரென்று நினைக்கிறேன்.

౧౫. అహంతురామత్వయిజాతకామాచిరంవినాశాయనిబద్ధభావా। మోఘంచరిత్వాథతపోవ్రతంచత్యక్ష్యామిధిగ్జీవితమల్పభాగ్యా॥

௧௫. [illegible]
[illegible]

௧௫. அஹந்துராமத்வயிஜாதகாமாசிரம்விநாஸாயநிபத்தபாவா।
மோகம்சரித்வாததபோவ்ரதஞ்சத்யக்ஷ்யாமிதிக்ஜீவிதமல்பபாக்யா॥

பதம்.	உரை.	பதம்.	உரை.
ஹேராம	வாரீர்ஸ்ரீராகவனே		யே உண்டான நியமத்தையும்
அல்பபாக்யா	ஸ்வல்பபாக்யத்தையுடைய	சரித்வா	செய்து
அஹம்து	நானேவென்றால்	விநாஸாய	நாசத்தையும்பொருட்டு
த்வயி-சிரம்	உம்மிடத்தில்-வெகுகாலமாக	நிபத்தபாவா	தேவரீர் திருவடிகளிலேயே கட்டப்பட்ட வபிப்ராயத்தையுடையவளாக
ஜாதகாமா	உண்டாயிருக்கிறஆசையுடையவளாக		
அத-மோகம்	பிறகு-வியர்த்தமான	திக்-ஜீவிதம்	தூஷிதமான-பிராணனை
தபோவ்ரதம்ச	ஆகார மில்லாமலும் உம்மிடத்திலே	த்யக்ஷ்யாமி	விடுகிறேன்.

தா-ம்.—இந்தவிதம், ஹேராகவ! தேவரீர் கஷ்டத்தினின்று நீங்கி நஷ்டராஜ்ஜியத்தைத் திரும்பியடைந்து நஷ்டஸ்திரீக்குப் பிரதியாக இஷ்டஸ்திரீக்க ளனேகரைச்சேர்ந்து ஸந்தோஷபாக்கியத்தையனுபவிக்கப்போகிறீர். பாக்கியஹீனையான யானோவென்னில், ஜீவனுள்ளளவில் உறுதியான அன்போடு தேவரீரையே நேசித்தேன். அனன்யபாவத்தோடு பாதிவிருத்தியதர்மத்தைக் குறைவின்றியனுஸரித்தேன். தேவரீரைப்பிரிந்த விந்தனைகாலம் அன்னபானமின்றி கடுந்தவத்தோடு தேவரீரதாகமனத்தை யெதிர்பார்த் திருந்தேன். என்னசெய்து மெனக்குப் பலோதயமாகவில்லை. அனிஷ்டநிவர்த்திக்கு நற்காலம் சேரவில்லை. எனதுநேசமும், தபஸ்ஸும், தர்மமும், கோரிக்கையும், கஷ்டமும் எல்லாம்வீணாயின. இவ்விதவிடறுகளுக்கெல்லாமிலக்காகி படாதனபட்டு ஸர்வவிததூஷிதமான ஜன்மங்கொண்ட வென்பிராணனை யான் கயந்து இதோ ஆதைஒழித்துவிடப்போகிறேன். இப்படி யொழிக்கையிலும் தேவரீருக்கர்ப்பணஞ்செய்தவென்மனதிலேதாகிலும் களங்கமுண்டோ? கைவிட்டதொன்றேதாகிலு பக்தியிற் குறைவுண்டோ? தேவரீரது கமலசரணங்களிற்கட்டுண்ட நிர்த்தோஷமான பாவத்துடன், துன்பத்தின்வாயில்விழுந்து அகாலமரணத்தை யடைந்தழிகிறேன்.

౧౬. సాజీవితంక్షిప్రమహంత్యజేయంవిషేణశస్త్రేణశితేనవాపి।విషస్యదాతానహిమేస్తికశ్చిచ్ఛస్త్రస్యవావేశ్మనిరాక్షసస్య॥

௧௬. 𑌸𑌾𑌜𑍀𑌵𑌿𑌤𑌂𑌕𑍍𑌷𑌿𑌪𑍍𑌰𑌮𑌹𑌂𑌤𑍍𑌯𑌜𑍇𑌯𑌂𑌵𑌿𑌷𑍇𑌣𑌶𑌸𑍍𑌤𑍍𑌰𑍇𑌣𑌶𑌿𑌤𑍇𑌨𑌵𑌾𑌪𑌿।
𑌵𑌿𑌷𑌸𑍍𑌯𑌦𑌾𑌤𑌾𑌨𑌹𑌿𑌮𑍇𑌸𑍍𑌤𑌿𑌕𑌶𑍍𑌚𑌿𑌚𑍍𑌛𑌸𑍍𑌤𑍍𑌰𑌸𑍍𑌯𑌵𑌾𑌵𑍇𑌶𑍍𑌮𑌨𑌿𑌰𑌾𑌕𑍍𑌷𑌸𑌸𑍍𑌯॥

௧௬. ஸாஜீவிதம்க்ஷிப்ரமஹம்த்யஜேயம்விஷேணஶஸ்த்ரேணஶிதேநவாபி।
விஷஸ்யதாதாநஹிமேஸ்திகச்சித்ஶஸ்த்ரஸ்யவாவேஶ்மநிராக்ஷஸஸ்ய॥

பதம்.	உரை.	பதம்.	உரை.
அஹம்-விஷேண	யான்-விஷத்தாலாவது	ராக்ஷஸஸ்ய-வேஶ்மநி-ராவணனுடைய-வீட்டில்	
ஶிதேந-ஶஸ்த்ரேண	தீக்ஷணமான-ஆயுதத்தாலாவது	மே-விஷஸ்ய	எனக்கு-விஷத்தையாவது
ஜீவிதம்-க்ஷிப்ரம்	ப்ராணனை-சீக்கிரமாக	ஶஸ்த்ரஸ்யவா-தாதா	ஆயுதத்தையாவது-கொடுப்பவன்
த்யஜேயம்	விட்டுவிடுகிறேன்	கச்சித்-நாஸ்திஹி	ஒருவனும்-இல்லையன்றோ.

தா-ம்.—இப்பொழுது கொஞ்சம்விஷமாவது, தீக்ஷணமான சஸ்திரமாவது கிடைத்தால் உடனே பிராணனை யொழித்துவிடுவேன். ஆனாலிவைகளைக் கொடுக்கும்படியான அவ்வளவு உபகாரிகள் இந்நகரிலிருப்பரோ! பாதிவிருத்தியநாசனத்தி லூற்றங்கொண்டபாபிகள் வாழுமிந்நகரில் இவ்விதவுபகாரத்தையுஞ் செய்யப்பெறுவேனோ! விபசரியத்திற்கிணங்கின் ஸகலபோகங்களு மென்னையடையும். பிராணஹானிசெய்தாவது தர்மத்தைநிலைநிறுத்த முயலுமெனக்குக் கத்தியாவது விஷமாவது கிடைக்காத அதர்மநகரமிது. அதர்மவிர்த்திக்கே இது அனுகூலமானதல்லவோ.

౧౭. ఇతీవదేవీబహుధావిలప్యసర్వాత్మనారామమనుస్మరంతీ।ప్రవేపమానాపరిశుష్కవక్త్రానగోత్తమంపుష్పితమాససాద॥

௧௭. 𑌇𑌤𑍀𑌵𑌦𑍇𑌵𑍀𑌬𑌹𑍁𑌧𑌾𑌵𑌿𑌲𑌪𑍍𑌯𑌸𑌰𑍍𑌵𑌾𑌤𑍍𑌮𑌨𑌾𑌰𑌾𑌮𑌮𑌨𑍁𑌸𑍍𑌮𑌰𑌨𑍍𑌤𑍀।
𑌪𑍍𑌰𑌵𑍇𑌪𑌮𑌾𑌨𑌾𑌪𑌰𑌿𑌶𑍁𑌷𑍍𑌕𑌵𑌕𑍍𑌤𑍍𑌰𑌾𑌨𑌗𑍋𑌤𑍍𑌤𑌮𑌂𑌪𑍁𑌷𑍍𑌪𑌿𑌤𑌮𑌾𑌸𑌸𑌾𑌦॥

௧௭. இதீவதேவீபஹுதாவிலப்யஸர்வாத்மநாராமமநுஸ்மரந்தீ।
ப்ரவேபமாநாபரிஶுஷ்கவக்த்ராநகோத்தமம்புஷ்பிதமாஸஸாத॥

பதம்.	உரை.	பதம்.	உரை.
ப்ரவேபமாநா	இராக்ஷஸஸ்திரீகளின் அதட்டுருட்டுகளால்நடுங்கப்பட்டவளும்	ஸர்வாத்மநா-ராமம்	ஸகலவிதத்தாலும்-ஸ்ரீராகவனை
பரிஶுஷ்கவக்த்ரா-தேவீ-	உலர்ந்துபோன திருப்பவளத்தையுடையஸீதையானவள்	அநுஸ்மரந்தீ	ஸ்மரித்தவளாய்க்கொண்டு
இதீவ-பஹுதா-விலப்ய-	இந்தவிதம்-அனேகப்ரகாரமாக துக்கித்து	புஷ்பிதம்-நகோத்தமம்-	பூத்திருக்கிற வ்ருக்ஷத்துக்குள்சிறந்ததான-ஶிம்ஶுபாவ்ருக்ஷத்தை
		ஆஸஸாத	அடைந்தாள்.

தா-ம்.—இந்தவித மதர்மத்திற் பிரவர்த்திக்கும்படி இடைவிடா துபத்திரவிக்கப்பட்டபிராட்டி பிரமாதமான கலக்கத்துடன், இனி ஜீவனோடிருக்கின் அனர்த்தம்நேரிடும், ஆத்மஹத்தியால் இராவணஹிம்ஸையை முந்தவேண்டு மென்று நிச்சயித்து, தன்னுடைய தபோவிரதங்களும் மனோரதங்களும் வீணாயினவேயென்று துக்கித்து, கிலேசாதிகத்தாலும் பயமிகுதியாலும் தேககம்பமுற்று, ஸ்ரீராகவத்தியான பரையாய் ஒளிமழுங்கிசுருங்கி விரூபமடைந்த திருமுகத்துடன், எதினின்று இன்னம் க்ஷணகாலத்தில் தன்னுடையதுக்கங்களும் தாபங்களும் பிரலாபங்களும் பற்றறவொழிய ஸ்ரீராமகதாமிருதமாகிற தேவாமிருதமானது பெருகப்போகின்றதோ, எதினின்று தனதையன்விடுத்ததூதன் வெளிப்பட்டு ஆத்மஹத்தியிற் பிரவர்த்தித்த தனதுதுக்கத்தையாற்றிக்ஷேமஸமாசாரமுரைக்கப்போகின்றனரோ அப்படிப்பட்டவிருக்ஷராஜமாகிற சிம்சுபாவிருக்ஷத்தையடைந்தாள்.

౧౮. శోకాభితప్తాబహుధావిచింత్యసీతాథవేణ్యుద్గ్రథనంగృహీత్వా।ఉద్బధ్యవేణ్యుద్గ్రథనేనశీఘ్రమహంగమిష్యామియమస్యమూలమ్॥

௧௮. 𑌶𑍋𑌕𑌾𑌭𑌿𑌤𑌪𑍍𑌤𑌾𑌬𑌹𑍁𑌧𑌾𑌵𑌿𑌚𑌿𑌨𑍍𑌤𑍍𑌯𑌸𑍀𑌤𑌾𑌥𑌵𑍇𑌣𑍍𑌯𑍁𑌦𑍍𑌗𑍍𑌰𑌥𑌨𑌂𑌗𑍃𑌹𑍀𑌤𑍍𑌵𑌾।
𑌉𑌦𑍍𑌬𑌧𑍍𑌯𑌵𑍇𑌣𑍍𑌯𑍁𑌦𑍍𑌗𑍍𑌰𑌥𑌨𑍇𑌨𑌶𑍀𑌘𑍍𑌰𑌮𑌹𑌂𑌗𑌮𑌿𑌷𑍍𑌯𑌾𑌮𑌿𑌯𑌮𑌸𑍍𑌯𑌮𑍂𑌲𑌮𑍍॥

௧௮. ஶோகாபிதப்தாபஹுதாவிசிந்த்யஸீதாதவேண்யுத்க்ரதநம்க்ருஹீத்வா।
உத்பத்யவேண்யுத்க்ரதநேநஶீக்ரமஹம்கமிஷ்யாமியமஸ்யமூலம்॥

	உரை.	பதம்.	உரை.
அத-ஶோகாபிதப்தா	பிறகு - வியஸனத்தால் நன்றாக தபிக்கப்பட்ட	அஹம்-வேண்யுத்க்ரதநேந-நான்-பின்னலால்	
ஸீதா-வேண்யுத்க்ரதநம்-பிராட்டி-பின்னலை		உத்பத்ய	உரிபோட்டுக்கொண்டு
க்ருஹீத்வா	கிரகித்துக்கொண்டு	யமஸ்யமூலம்	இயமனுடையஸமீபத்தை
பஹுதா-விசிந்த்ய	அனேகபிரகாரமாக-ஆலோசித்து	ஶீக்ரம்	துவரையாக
		கமிஷ்யாமி	அடைகிறேன்.

౧౯. ఉపస్థితాసామృదుసర్వగాత్రీశాఖాంగృహీత్వాథనగస్యతస్య।తస్యాస్తురామంప్రవిచింతయంత్యారామానుజంస్వంచకులంశుభాంగ్యాః॥

౨౦. శోకాన్నిమిత్తానితథాబహూనిధైర్యార్జితానిప్రవరాణిలోకే।ప్రాదుర్నిమిత్తానితథాబభూవుఃపురాపిసిద్ధాన్యుపలక్షితాని॥

௧௯. 𑌉𑌪𑌸𑍍𑌥𑌿𑌤𑌾𑌸𑌾𑌮𑍃𑌦𑍁𑌸𑌰𑍍𑌵𑌗𑌾𑌤𑍍𑌰𑍀𑌶𑌾𑌖𑌾𑌂𑌗𑍃𑌹𑍀𑌤𑍍𑌵𑌾𑌨𑌗𑌸𑍍𑌯𑌤𑌸𑍍𑌯 ।
𑌤𑌸𑍍𑌯𑌾𑌸𑍍𑌤𑍁𑌰𑌾𑌮𑌂𑌪𑍍𑌰𑌵𑌿𑌚𑌿𑌨𑍍𑌤𑌯𑌨𑍍𑌤𑍍𑌯𑌾𑌰𑌾𑌮𑌾𑌨𑍁𑌜𑌂𑌸𑍍𑌵𑌂𑌚𑌕𑍁𑌲𑌂𑌶𑍁𑌭𑌾𑌙𑍍𑌗𑍍𑌯𑌾𑌃 ॥

௨௦. 𑌶𑍋𑌕𑌾𑌨𑌿𑌮𑌿𑌤𑍍𑌤𑌾𑌨𑌿𑌤𑌥𑌾𑌬𑌹𑍂𑌨𑌿𑌧𑍈𑌰𑍍𑌯𑌾𑌰𑍍𑌜𑌿𑌤𑌾𑌨𑌿𑌪𑍍𑌰𑌵𑌰𑌾𑌣𑌿𑌲𑍋𑌕𑍇 ।
𑌪𑍍𑌰𑌾𑌦𑍁𑌰𑍍𑌨𑌿𑌮𑌿𑌤𑍍𑌤𑌾𑌨𑌿𑌤𑌦𑌾𑌬𑌭𑍂𑌵𑍁𑌃𑌪𑍁𑌰𑌾𑌪𑌿𑌸𑌿𑌦𑍍𑌧𑌾𑌨𑍍𑌯𑍁𑌪𑌲𑌕𑍍𑌷𑌿𑌤𑌾𑌨𑌿 ॥

௧௯. உபஸ்திதாஸாம்ருதுஸர்வகாத்ரீ ஶாகாம்க்ருஹீத்வா தகஸ்யதஸ்ய।
தஸ்யாஸ்துராமம்ப்ரவிசிந்தயந்த்யாராமாநுஜம்ஸ்வஞ்சகுலம்ஶுபாங்க்யா꞉॥

௨௦. ஶோகாநிமித்தாநிததாபஹூநிதைர்யார்ஜிதாநிப்ரவராணிலோகே।
ப்ராதுர்நிமித்தாநிததாபபூவு꞉புராபிஸித்தாந்யுபலக்ஷிதாநி॥

𑌇𑌤𑌿 𑌶𑍍𑌰𑍀𑌸𑍁𑌨𑍍𑌦𑌰𑌕𑌾𑌣𑍍𑌡𑍇 𑌅𑌷𑍍𑌟𑌾𑌵𑌿𑌂𑌶𑌃 𑌸𑌰𑍍𑌗𑌃 ।

பதம்.	உரை.	பதம்.	உரை.
அத-ம்ருதுஸர்வகாத்ரீ-ஸா-பின்பு-மெல்லிய	அவயவங்களையுடைய-அந்த (ஸீதை)	ஶோகாநிமித்தாநி	துக்கத்திற்குக்காரணமில்லாதனவும்
தஸ்ய-நகஸ்ய	அந்த-மரத்தினுடைய	ததா	அந்தபிரகாரம் (வாயிட்டுசொல்லமுடியாதனவாக)
ஶாகாம் க்ருஹீத்வா	கிளையை-பிடித்துக்கொண்டு	பஹூநி-தைர்யார்ஜிதாநி	அநேகங்களும்-தைரியத்தை யுண்டு பண்ணுகின்றனவும்
உபஸ்திதா	இருந்தாள்.	லோகே-ப்ரவராணி	உலகத்தில்-பிரஸித்தமானவும்
ராமம்-ராமாநுஜம்	ஸ்ரீராகவனையும் - இலக்ஷ்மணனையும்	புராபி-ஸித்தாநி	முன்பும்-பலித்தனவாக
ஸ்வம்-குலம்ச	தன்னுடைய-வம்சத்தையும்	உபலக்ஷிதாநி	காணப்பட்டுமிருக்கிற
ப்ரவிசிந்தயந்த்யா꞉	நன்றாயாலோசித்திருக்கிறவளும்	நிமித்தாநி	சுபசகுனநிமித்தங்கள்
ஶுபாங்க்யா꞉-தஸ்யா꞉-சோபனமான	அவயவமுமுடைய-அந்த (பிராட்டிக்கு)	ததா-ப்ராதுர்பபூவு꞉	அப்பொழுது-உண்டாயின.

தா-ம்.—துக்கத்தால் மிகவுந்தபிக்கப்பட்ட ஸீதை சிம்சுபாவிருக்ஷத்தின் கீழ் நின்று ஆத்மஹத்திசெய்யும்விஷயத்தை வெகுவிதம்யோசித்து முடிவில் பிராணத்தியாகஞ்செய்வதே யுக்தமென்று நிச்சயித்துத் தனது பின்னலைக்கழுத்தில்சுற்றி மரக்கிளையில் மாட்டி மரணத்தையடைகிறதென்கிற தீர்மானத்துடன் அம்மரத்தினோர்சாகையைப் பிடித்துக்கொண்டுநின்றாள். தற்கொலைபுரிய வெத்தனிக்குமுன் பிராணபந்துவான ஸ்ரீராகவனையும்,பத்தினிபிரிந்தாலும் தான்பிரிந்தறியா வனுஜனை இலக்ஷ்மணனையும், மற்றுள்ள பந்துக்களையும்நினைத்துநின்றாள். அப்பொழுது அந்தசோபனாங்கிக்கு சோகத்தை யொழிக்கின்றனவும் தைரியத்தையுண்டுபண்ணுகின்றனவும், இதுவரையில் உலகத்தார்க்கு க்ஷேமத்தையேகுறித்து வந்தனவுமான அநேக நற்சகுனங்களுண்டாயின.

ஸ்ரீஸம்மநோரஞ்ஜநீ நாமத்திராவிட வியாக்யாந ஸஹிதமான ஸுந்தரகாண்டத்தில்
இருபத்தெட்டாவதுஸர்க்கம் - முற்றிற்று.

இருபத்தொன்பதாவதுஸர்க்கம்.

౧. తథాగతాం తాం వ్యథితామనిందితాం వ్యపేతహర్షాం పరిదీనమానసామ్। శుభాం నిమిత్తాని శుభాని భేజిరే నరం శ్రియా జుష్టమివోపజీవినః॥

௧. 𑌤𑌥𑌾𑌗𑌤𑌾𑌂𑌤𑌾𑌂𑌵𑍍𑌯𑌥𑌿𑌤𑌾𑌮𑌨𑌿𑌨𑍍𑌦𑌿𑌤𑌾𑌂𑌵𑍍𑌯𑌪𑍇𑌤𑌹𑌰𑍍𑌷𑌾𑌂𑌪𑌰𑌿𑌦𑍀𑌨𑌮𑌾𑌨𑌸𑌾𑌮𑍍 ।
𑌶𑍁𑌭𑌾𑌂𑌨𑌿𑌮𑌿𑌤𑍍𑌤𑌾𑌨𑌿𑌶𑍁𑌭𑌾𑌨𑌿𑌭𑍇𑌜𑌿𑌰𑍇𑌨𑌰𑌂𑌶𑍍𑌰𑌿𑌯𑌾𑌜𑍁𑌷𑍍𑌟𑌮𑌿𑌵𑍋𑌪𑌜𑍀𑌵𑌿𑌨𑌃 ॥

௧. ததாகதாம்தாம்வ்யதிதாமநிந்திதாம்வ்யபேதஹர்ஷாம்பரிதீநமாநஸாம்।
ஶுபாம்நிமித்தாநிஶுபாநிபேஜிரேநரம்ஶ்ரியாஜுஷ்டமிவோபஜீவிந꞉॥

பதம்.	உரை.	பதம்.	உரை.
ததாகதாம்	(கணக்கிடுவதற்கரிதான) அப்படிப்பட்டவியஸனத்தையடைந்தவளும்	நிமித்தாநி	(அவள்விஷயத்தில்உண்டான)சகுனங்கள் (காரணங்கள்)
வ்யதிதாம்	மநோவிசாரத்தையடைந்தவளும்	ஶுபாநி	நல்ல சகுனங்களை (ஸூசிப்பித்து)
அநிந்திதாம்	நிந்திக்கத்தகாதவளும் [ம்	ஶ்ரியா-ஜுஷ்டம்	ஸம்பத்தால்-பூர்ணனை
வ்யபேதஹர்ஷாம்	போய்விட்டஸந்தோஷ முடையவளு	நரம்-உபஜீவிந இவ	மநுஷியனை - அண்டிப்பிழைப்பவன் போல்
பரிதீநமாநஸாம்	மிகதைந்நியமான மனமுடையவளும்		
ஶுபாம் - தாம் - மங்களஸ்வரூபியுமான - அந்த (ஸீதையை)		பேஜிரே	ஸேவித்தன.

தா-ம்.—இந்தவிதம், இனிஜீவதாரணஞ்செய்யின் சஸ்திரசரங்களோடு பிடிக்கமுயலு மராவணனது ஹிம்ஸைக்குள்ளாக வேண்டிவரும், அதினின்றுதப்ப ஆத்மஹத்தியொன்றேஉபாயம், அவ்வுபாயத்தை யனுஷ்டிப்பதில் விரோதங்களனேகமுண்டாயினும் அதைவிட பிரகிருதத்தில் வேறுகதியில்லை, இத்தியாதிகாரணங்களால் அந்தியோபாயமான ஹந்தியோபாயத்தில் நிச்சயங்கொண்டபிராட்டி மஹத்தான விசாரமடைந்து அதிதைன்னியமான நிலைமையிலிருந்தாள். ஸ்ரீராகவனோடுவாழ்ந்த பேரானந்தமெல்லாம்மறந்து துக்கமேகுடிகொண்ட மனமுடையளாயிருந்தாள். துக்கமனுபவிக்கையிலும் பாதிவிருத்தியத்தினின்று விலகாமல் நி

தனக்கிடமற்ற சிலவதியாயிருந்தாள். இப்படிப்பட்ட தைன்னியத்திலும் திவ்வியலக்ஷணங்களமைந்த விரகதப்தமான அவளது ஸுந்தராங்கங்கள் சுபகரமாகவிளங்கின. இவ்விதஸ்திதியில் விருக்ஷக்கிளையைப் பிடித்துக்கொண்டு உயிர்நிலையைக்கிளப்ப ஸன்னத்தையாயிருக்கும் ஜானகிக்கு மங்களசகுனங்க ளனேகமுண்டாயின. அவையெல்லாம், தனுட்டியனையடைந்து வேண்டியதிரவியத்தைப்பெற்று ஸந்தோஷமுறும் யாசகர்போல், ஸர்வமங்களஸ்வரூபியான ஸாக்ஷாத் இலக்ஷ்மிக்குக் கிஞ்சித்துதவிபுரிந்து மேன்மையடைந்தன. அமோக மங்களங்களைப் பெறப்போகிற பிராட்டிவிஷயத்தில் தாங்களுண்டாகி அவளுடைய மங்களப்பிராப்தியால் தாங்கள் மங்களசகுனங்களென்கிற கியாதிலாபத்தையடைந்து ஸ்வரூபம் பெற்றன.

౨. తస్యాశ్శుభం వామమరాళపక్ష్మరాజీవృతం శుక్లవిశాలకృష్ణమ్। ప్రాస్పందతైకం నయనం సుకేశ్యా మీనాహతం పద్మమివాభితామ్రమ్॥

உ. தஸ்யாஶ்ஶுபம் வாமமராளபக்ஷ்மராஜீவ்ருதம் ஶுக்லவிஶாலக்ருஷ்ணம்।
ப்ராஸ்பந்ததைகம் நயநம் ஸுகேஶ்யா மீநாஹதம் பத்மமிவாபிதாம்ரம்॥

உ. தஸ்யாஶ்ஶுபம்வாமமராளபக்ஷ்மராஜீவ்ருதம்ஶுக்லவிஶாலக்ருஷ்ணம்।
ப்ராஸ்பந்ததைகம்நயநம்ஸுகேஶ்யாமீநாஹதம்பத்மமிவாபிதாம்ரம்॥

பதம்.	உரை.	பதம்.	உரை.
அராளபக்ஷ்மராஜீவ்ருதம்-வக்கிரமான (கண்) இரப்பைவரிசையினுல் சுற்றப்பட்டதும். [ப்பானதும்		ஸுகேஶ்யா:-தஸ்யா:-சிறந்ததலைமயிரையுடைய அந்த(ஸீதை	
ஶுக்லவிஶாலக்ருஷ்ணம்-வெளுத்ததும்விசாலமானதும் கறு		வாமம்-நயனம்	இடதான-கண்ணனது [யினுடைய
அபிதாம்ரம்	கடையில் சிகப்பையுடையதும்	மீநாஹதம்	மத்ஸ்யத்தாலடிக்கப்பட்ட
		பத்மமிவ	தாமரைப்புஷ்பம்போல்,
ஏகம்	அத்விதீயமானதுமான	ஶுபம்-ப்ராஸ்பந்தத	மங்களகரமாக-அதிர்ந்தது.

தா-ம்.—அதியழகானகேசமுடைய பிராட்டியினிடதுபக்கத்திலுள்ளதும், நடுவிற்கறுத்து இடையில் வெளுத்து கண்டயிற்சிவந்து அதிவிசாலமும் அத்விதீயமான ஸுந்தரமும்பொருந்தி லோகானந்தகரமாகப் பிரகாசிக்கிறதுமானதிருக்கண், திவ்வியஸரஸ்ஸில் ஆனந்தத்தோடுவிளையாடுமோர் மத்ஸ்யசிரேஷ்டத்தாலடிபட்டதாமரஸம்போல், மங்களஸூசகமாக இரப்பையாலடியுண்டு துடித்தது.

౩. భుజశ్చ చార్వంచితపీనవృత్తః పరార్ధ్యకాలాగరుచందనార్హః। అనుత్తమేనాధ్యుషితః ప్రియేణ చిరేణ వామస్సమవేపతాశు॥

௩. புஜஶ்ச சார்வஞ்சிதபீநவ்ருத்த: பரார்த்யகாலாகருசந்தநார்ஹ:।
அநுத்தமேநாத்யுஷித: ப்ரியேண சிரேண வாமஸ்ஸமவேபதாஶு॥

௩. புஜஶ்சசார்வம்சிதபீநவ்ருத்த:பரார்த்யகாளாகருசந்தநார்ஹ:।
அநுத்தமேநாத்யுஷித:ப்ரியேணசிரேணவாமஸ்ஸமவேபதாஶு॥

பதம்.	உரை.	பதம்.	உரை.
சார்வஞ்சிதபீநவ்ருத்த:	அழகாகப்பொருந்திபெருத்துஉருண்டதும்	அநுத்தமேந-ப்ரியேண-உத்தமனுன-நாயகனுல்	
		அத்யுஷித:	பிடிக்கப்பட்டதும்
பரார்த்யகாளாகருசந்தநார்ஹ:-சிறந்த கறுத்த அகருசந்தனத்திற்கிசைந்ததும்		வாம:-புஜஶ்ச	இடதுமான-தோளும் [து.
		சிரேண-ஆஶு-ஸமவேபத-வெகுகாலம்-சீக்கிரமாக- துடித்த	

தா-ம்.—சிறந்தவனப்புடன் திரண்டுஉருண்டு அகருமுதலிய உத்தமவாஸனைத் திரவியங்களாலலங்கரிப்பதற்கருகமாயுள்ளதும், லோகநாதனும் தனக்குப்பிராணபந்துவுமான ஸ்ரீராகவனுல் ஆலிங்கனுதிகள் செய்யப்பெற்று அனுபவிக்கப்பட்டதாயுமிருக்கிற பிராட்டியினிடதுதோள் சிரகால மடிக்கடி துடித்தது.

౪. గజేంద్రహస్తప్రతిమశ్చ పీనస్తయోర్ద్వయోస్సంహతయోస్సుజాతః। ప్రస్పందమానః పునరూరురస్యా రామం పురస్తాత్ స్థితమాచచక్షే॥

௪. கஜேந்த்ரஹஸ்தப்ரதிமஶ்ச பீநஸ்தயோர்த்வயோஸ்ஸம்ஹதயோஸ்ஸுஜாத:।
ப்ரஸ்பந்தமாந: புநரூருரஸ்யா ராமம் புரஸ்தாத் ஸ்திதமாசசக்ஷே॥

௪. கஜேந்த்ரஹஸ்தப்ரதிமஶ்சபீநஸ்தயோர்த்வயோஸ்ஸம்ஹதயோஸ்ஸுஜாத:।
ப்ராஸ்பந்தமாந:புநரூருரஸ்யாராமம்புரஸ்தாத்ஸ்த்திதமாசசக்ஷே॥

பதம்.	உரை. [மானமானதும்	பதம்.	உரை.
கஜேந்த்ரஹஸ்தப்ரதிம:	கஜசிரேஷ்டத்தின்துதிக்கைக்குஸ	(வாம:)-அஸ்யா:	(இடதான)-இவளுடைய
பீந:-ஸுஜாத:	பெருத்ததும்-ஸுந்தரமானதும்	ஊரு:-புந:புந:	துடையானது-அடிக்கடி
ஸம்ஹதயோ:	(ஒன்றுக்கொன்று) சேர்ந்ததும்	ப்ரஸ்பந்தமாந:	துடித்ததாக
த்வயோ:	இரண்டானதும்	ராமம்-புரஸ்தாத்	ஸ்ரீராகவனை-எதிரில்
தயோ:	(ஸுலக்ஷணத்தால் அப்படிபிரஸித்தமான)அத்துடைகளுக்குள்	ஸ்திதம்-ஆசசக்ஷே	இருப்பவராக-சொல்லிற்று.

தா-ம்.—மத்தகஜஹஸ்தம்போற் பெருத்துருண்டுநீண்ட அதிஸுந்தர வடிவினவான பிராட்டியினிரண்டுதுடைகளுள் இடதுதுடையானது ஸ்ரீராகவனிதோ வந்துவிட்டானென் றுரைப்பதுபோல் அடிக்கடி துடித்தது.

౫. శుభం పునర్హేమసమానవర్ణమీషద్రజోధ్వస్తమివామలాక్ష్యాః। వాసః స్థితాయాశ్శిఖరాగ్రదంత్యాః కించిత్పరిస్రంసత చారుగాత్ర్యాః॥

ரு. [illegible]
[illegible]

ரு. ரூபம்புநர்ஹேமஸமாநவர்ணமீஷத்ரஜோத்வஸ்தமிவாமலாக்ஷ்யா:।
வாஸஸ்த்திதாயாஶ்ஶிகராக்ரதந்த்யா:கிஞ்சித்பரிஸ்ரம்ஸதசாருகாத்ர்யா:॥

பதம்.	உரை.
ரூபம்-ஹேமஸமாநவர்ணம்-	மங்களகரமானதும்-பொன்னிற்குஸமானமாகியவர்ணமுடையதும்
ஈஷத்ரஜ:	கொஞ்சம்தும்புடையதும்
ஶிகராக்ரதந்த்யா:	குண்டானநுனியையுடைய பற்களையுடையவளும் அல்லதுமாதளம்பழத்தின்விரைபோன்ற நுனியையுடையபற்களையுடையவளும்அல்லது சிகராகாரம்போன்றநுனியையுடையபற்களையுடையவளும்
அமலாக்ஷ்யா:	நிர்மலமானகண்களையுடையவளும்
ஸ்திதாயா:	வஸ்திரம்நழுவுதற்கனுகூலமாக(இருக்கிற)
சாருகாத்ர்யா:	அழகானசரீரத்தையுடைய (பிராட்டியினுடைய)
வாஸ:-த்வஸ்தமிவ	ஆடையானது-நழுவிவிழுந்ததுபோல்
புந:-கிஞ்சித்-பரிஸ்ரம்ஸத-	மறுபடி-கொஞ்சம்-நழுவிற்று.

(பர்யஸ்ரம்ஸத-என்றிருக்கவேண்டும்,பரிஸ்ரம்ஸத-என்கிறது ஆர்ஷம்.)

தா-ம்.—பர்வதசிகரங்கள்போல் உருண்டபிரதக்கான நுனிகளையுடைய பற்களினொளியாற் ப்ரகாசிப்பவளும், அதியழகானஇடக்கணுக்கமுடையவளும், அதிஸுந்தரமான தனுகாத்திரமுடையவளுமான பிராட்டியின் திருமேனியிலிருந்து அவள்தரித்திருந்த சுபகரமும் ஹேமவர்ணமும் கொஞ்சம் மலினமும் பொருந்திய வஸ்திரமானது நழுவுவதுபோலிருந்தது.

௬. ఏతైర్నిమిత్తైరపరైశ్చ సుభ్రూః సంబోధితా ప్రాగపి సాధు సిద్ధైః। వాతాతపక్లాంతమివ ప్రణష్టం వర్షేణ బీజం ప్రతిసంజహర్ష॥

௬. [illegible]
[illegible]

௬. ஏதைர்நிமித்தைரபரைஶ்சஸுப்ரூஸ்ஸம்போதிதாப்ராகபிஸாதுஸித்தை:।
வாதாதபக்லாந்தமிவப்ரணஷ்டம்வர்ஷேணபீஜம்ப்ரதிஸஞ்ஜஹர்ஷ॥

பதம்.	உரை.
ஏதை:-நிமித்தை:	இந்த-நிமித்தங்களாலும்
ப்ராக்-ஸாது-ஸித்தை:-	முன்பு-நன்றாக-ஸித்தித்திருக்கிற
அபரை:	வேறான (நிமித்தங்களாலும்)
ஸம்போதிதா	(சீக்கிரம் தன்னுயகாகமனவார்த்தையுண்டாகப்போகிறதென்று) அறியப்பட்டவளும்
ஸுப்ரூ:	நற்புருவமுமுடைய (ஸீதை)
வாதாதபக்லாந்தம்	காற்றினாலும்வெயிலினாலும் வாட்டப்பட்டதாதலால்
ப்ரணஷ்டம்	மிககாணப்படாமலிருக்கிற
பீஜம்-வர்ஷேணேவ	விரையானது-மழையினாலேபோல்
ப்ரதிஸஞ்ஜஹர்ஷ	ஸந்தோஷித்தாள். (விரைக்குஸந்தோஷம் பூமியிலழிந்து கரிகிப்போகும் ஸமயத்தில் மழையினால்முளைக்கிளம்பி பெருப்பதுபோல் இவளும் ஸந்தோஷித்தாள்.)

தா-ம்.—பூமியில்விழுந்தநாள்முதல் பிராணதாரகமான ஜலத்தைக் காணாது வெயில் வாதமிவையிழைக்குந்துன்மையால்வாடி தீந்துபோகும்வித்தானது மழையைக்கண்டவுடன் ஏறக்குறைய, நஷ்டமாய்விட்ட பிராணனை மறுபடியுமடைந்து வேரோடி மேல்நோக்கிப் பயிராவதுபோல், இலங்காக்ஷேத்திரத்தில் ஸ்ரீராகவனுகிற நீலமேகமண்டலத்தைக் காணாது இராக்ஷஸிகளாகிற உஷ்ண வாதத்தால் தபிக்கப்பட்டுப் பிராணநஷ்டத்தைச்செய்துகொள்ள ஸித்தையாயிருக்கிற பிருகுடிஸௌந்தரியமுடையாளான பிராட்டி, இந்தநன்குச்சுனங்களையும் இன்னம் முன்னோனுபவத்தில் சுபஸூசகங்களென்று நிச்சயிக்கப்பட்டிருக்கிற அநேக நிமித்தங்களையும் நன்றாகப்பார்த்து அவை முற்குறிக்கிற ஸ்ரீராகவப்பிராப்தமாகிற க்ஷேமலாபத்தையூகித்து நானும் எனதுநாதனையடையும்படியான பாக்கியஞ்செய்தேனோ, இதென்னஸந்தோஷகாலமென்று தேகமபூரித்து ஆனந்தபரவசையானாள்.

௭. తస్యాః పునర్బింబఫలాధరోష్ఠం స్వక్షిభ్రు కేశాంతమరాళపక్ష్మ। వక్త్రం బభాసే సితశుక్లదంష్ట్రం రాహోర్ముఖాచ్చంద్ర ఇవ ప్రముక్తః॥

எ. [illegible]
[illegible]

எ. தஸ்யா:புநர்ப்பிம்பபலாதரோஷ்டம்ஸ்வக்ஷிப்ருகேஶாந்தமராளபக்ஷ்ம।
வக்த்ரம்பபாஸேஸிதஶுக்லதம்ஷ்ட்ரம்ராஹோர்முகாச்சந்த்ரஇவப்ரமுக்த:॥

பதம்.	உரை.
பிம்பபலாதரோஷ்டம்-	கோவைக்கனிபோல் மேலுதடும்(கீழுதடுமுடையவளும்)
ஸ்வக்ஷிப்ரு	சிறந்தகண்களும்புருவமுமுடையவளும்
கேஶாந்தம்	மயிரின்னுனியையுடையவளும் (என்றால்முன்பாகத்தில்விஸ்தரித்தஅளகமுடையவளென்றர்த்தம்
அராளபக்ஷ்ம	கோணலான இரப்பையுடையவளும்
ஸிதஶுக்லதம்ஷ்ட்ரம்-	மிகவெளுப்புற்றபற்களையுடையவளுமான அல்லதுஇடைவெளியில்லாமல் கோர்வையானபற்களையுடையவளுமான
தஸ்யா:-வக்த்ரம்	அந்த (ஸீதையினுடைய)முகமானது
ராஹோர்முகாத்-முக்த:-	இராகுவினிடவாயிலிருந்து விடப்பட்ட
சந்த்ரஇவ-பபாஸே-	மதிபோல்-(மருபடி)விளங்கிற்று.

தா-ம்.—“ அடுத்தது காட்டும் பளிங்குபோனெஞ்சங் கடுத்தது காட்டுமுகம் ” என்பதுபோல், சுபசகுனங்களைக்கண்டு ஸந்தோஷித்த பிராட்டியின் மனோத்ஸாகத்தை அவள் வாண்முகம் வெளிக்காண்பித்தது. துக்கதப்தமாகி துவண்டிருந்தவதரங்கள் சுவைநீர்ப்பெருக்கால் சோபையடைந்து கோவைக்கனிபோல் மிகவுஞ் சிவந்துவிளங்கின. உள்ளிற்கு முருவல்வரிசைகளும் நிலாபொழிவனபோல் வெளிவந்து பிரகாசித்தன. செங்கமலபத்திரம்போலகன்ற திருக்கண்கள் ஒளிபெற்றுவிளங்கின. மன்மதசாபம்போல்வளைந்த புருவங்கள் உன்னதமடைந்துசோபித்தன. அடர்ந்த ரோமபங்திகளையுடைய இமைகள் ஒளிவீசு நேத்திரங்களை ரக்ஷித்துக்கொண்டு தங்களுக்கியல்பான கோணலைவகித்துப் பிரகாசித்தன. இப்படி அதியழகான அதரங்களும் முருவல்களும் நேத்திரங்களும் புருவங்களுமமையப்பெற்று, நீருண்டமேகம்போற்கறுத்த நீண்டகேசத்தையெல்லையாகக்கொண்டு பிரகாசிக்குமப்பிராட்டியின் திருமுகமண்டலமானது இராகுவிமுக்தமான சந்திரன்போல் ஸ்வச்சமான காந்தியைவகித்து அதிமனோகரமாயும் பிரஸன்னமாயும் விளங்கிற்று.

౮. సా వీతశోకా వ్యపనీతతంద్రీ శాంతజ్వరా హర్షవివృద్ధసత్త్వా। అశోభతార్యా వదనేన శుక్లే శీతాంశునా రాత్రిరివోదితేన॥

௮. ஸா வீதஶோகா வ்யபநீததந்த்ரீ ஶாந்தஜ்வரா ஹர்ஷவிவ்ருத்தஸத்த்வா।
அஶோபதார்யா வதநேந ஶுக்லே ஶீதாம்ஶுநா ராத்ரிரிவோதிதேந॥

௮. ஸாவீதஶோகாவ்யபநீததந்த்ரீஶாந்தஜ்வராஹர்ஷவிவ்ருத்தஸத்வா।
அஶோபதார்யாவதநேநஶுக்லேஶீதாம்ஶுநாராத்ரிரிவோதிதேந॥

இதி ஸ்ரீஸுந்தரகாண்டே - ஏகோநத்ரிம்ஶஸ்ஸர்க்க꞉.

பதம்.	உரை.	பதம்.	உரை.
வீதஶோகா	போய்விட்டசோகமுடையவளும்	ஆர்யா-ஸா	பூஜ்யையுமான-அந்த(ஸீதை)
வ்யபநீததந்த்ரீ	போக்கடிக்கப்பட்ட புத்திகல்மஷமுடையவளும்	வதநேந	முகத்தினால்
ஶாந்தஜ்வரா	அடங்கினஸந்தாபமுடையவளும்	ஶுக்லே-உதிதே	ஶுக்லபக்ஷத்தில்-உதித்த
ஹர்ஷவிவ்ருத்தஸத்வா-ஸந்தோஷத்தால்விகஸித்தமனமுடையவளும்		ஶீதாம்ஶுநா-ராத்ரிரிவ-சந்திரனலே-இராபோல்	
		அஶோபத	விளங்கினள்.

தா-ம்.—இந்த சுபசகுனங்களுடைய தர்சனமாத்திரத்தால் பிராட்டியினுடையஸர்வசோகமும்விலகிவிட்டது. ஆத்மஹத்திசிந்தையால்கலக்கமுற்ற வவள்மனம் நிஷ்கல்மஷமானதாய்விட்டது. இராவணபயத்தாலும் ஸ்ரீராகவப்பிராப்திய பாவத்தாலுமுண்டான ஜ்வரமானது உடனே தணிந்துவிட்டது. இப்படி துக்கவிமுச்தையாகி ஸந்தோஷங்கொண்ட அவ்வாரியபுத்திரியின் திருமுகமானது திவ்யானந்தகரமான கலைகளைவீசிக்கொண்டு பிரகாசிக்கும் பூர்ணேந்துவைப்போல் சோபித்தது. இவ்விதவாண்முகத்துடன் தேவியானவள் சுினமுபகதமான சுக்லபக்ஷவிரவுபோல் பிரபையுற்று விளங்கினள்.

ஸ்ரீஸர்மநோரஞ்ஜநீநாமத் திராவிடவியாக்யாநஸஹிதமான ஸுந்தரகாண்டத்தில்
இருபத்தொன்பதாவது ஸர்க்கம் - முற்றிற்று.

முப்பதாவது ஸர்க்கம்.

౧. హనుమానపి విక్రాంతస్సర్వం శుశ్రావ తత్త్వతః। సీతాయాస్త్రిజటాయాశ్చ రాక్షసీనాం చ తర్జనమ్॥

௧. ஹநுமாநபி விக்ராந்தஸ்ஸர்வம் ஶுஶ்ராவ தத்த்வத꞉।
ஸீதாயாஸ்த்ரிஜடாயாஶ்ச ராக்ஷஸீநாம் ச தர்ஜநம்॥

௧. ஹநுமாநபிவிக்ராந்தஸ்ஸர்வம்ஶுஶ்ராவதத்வத꞉।
ஸீதாயாஸ்த்ரிஜடாயாஶ்சராக்ஷஸீநாம்சதர்ஜநம்॥

பதம்.	உரை.	பதம்.	உரை.
விக்ராந்த꞉*-ஹநுமாநபி-பராக்கிரமவந்தரான-ஹனுமாரும்		ராக்ஷஸீநாம்	(திரிஜடையொழிந்தமற்ற)இராக்ஷஸிகளுடைய
ஸீதாயா꞉-த்ரிஜடாயாஶ்ச-பிராட்டியினுடையவும் - திரிஜடையினுடையவும்		தர்ஜநம்	பயமுறுத்தும்வார்த்தைகளையும்
தத்வத꞉-ஸர்வம்	உள்ளபடி-ஸகலவிருத்தாந்தத்தையும்	ஶுஶ்ராவ	கேட்டார்.

தா-ம்.—சிம்சுபாவிருக்ஷக் கிளையின் மீ தெழுந்தருளியிருந்த ஹநுமான், பிராட்டியின் பிரலாபத்தையும், திரிஜடாஸ்வப்னத்தையும், இராக்ஷஸிகளின் மிரட்டலையும் இவைகளையெல்லாம்உள்ளபடிகேட்டறிந்தார்.

౨. అవేక్షమాణస్తాం దేవీం దేవతామివ నందనే। తతో బహువిధాం చింతాం చింతయామాస వానరః॥

* “விஶ்ராந்த꞉” என்றும் பாடம். அப்பொழுது ஹநுமான் நிஶ்சேஷ்டிதராயிருந்தாரென்றர்த்தம்.

உ, [illegible]

உ. அவேக்ஷமாணஸ்தாம்தேவீம்தேவதாமிவநந்தநே।
ததோபஹுவிதாம்சிந்தாம்சிந்தயாமாஸவாநர:॥

பதம்.	உரை.	பதம்.	உரை.
வாநர:-தாம்-தேவீம்	ஹநுமான்-அந்த-ஸீதையை	அவேக்ஷமாண:-தத:	பார்க்கிறவராய்க்கொண்டு-பிறகு
நந்தநே-தேவதாமிவ	இந்திரோத்தியானவனத்தில் - தேவதைபோல்	பஹுவிதாம்-சிந்தாம்	அனேகவிதமான-எண்ணத்தை
		சிந்தயாமாஸ	ஆலோசித்தார்.

தா-ம்.—மஹேந்திரவனமான நந்தனவனத்திலுலாவுந் தேவஸ்திரீபோல் அஸாதாரணவடிவழகோடு சிம்சுபாவிருக்ஷத்தின்கீழ் ஸஞ்சரிக்கும் பிராட்டியைப்பார்த்து ஹநுமான் வெகுவிதமாகச்சிந்தித்தார்.

3. యాంకపీనాంసహస్రాణిసుబహూన్యయుతానిచ। దిక్షుసర్వాసుమార్గంతేసేయమాసాదితామయా॥

௩. [illegible]

௩. யாம்கபீநாம்ஸஹஸ்ராணிஸுபஹூந்யயுதாநிச।
திக்ஷுஸர்வாஸுமார்கந்தேஸேயமாஸாதிதாமயா॥

பதம்.	உரை.	பதம்.	உரை.
ஸுபஹூநி	மிகவதிகங்களான	மார்க்கந்தே	தேடுகின்றனவோ
கபீநாம்-ஸஹஸ்ராணி	வானரங்களுடைய ஆயிரங்களும்	ஸா-இயம்	அப்படிப்பட்ட - இந்த (ஸீதையானவள்)
அயுதாநிச	பதினாயிரங்களும் [திக்குகளில்		
யாம்-ஸர்வாஸு-திக்ஷு-எந்த(ஸீதையை) - ஸமஸ்தங்களான		மயா-ஆஸாதிதா	என்னால்-அடையப்பட்டாள்.

தா-ம்.—எவள்நிமித்தமாக அனேகாயிரம்வானரர் சதுர்த்திசைகளிலும் விடுக்கப்பட்டனரோ, எவளை வானரர் திசைகள்தோறுமின்னம தேடுகின்றனரோ, அப்படிப்பட்ட ஸீதையானவள், அஹோ ஆச்சரியம் என்பாக்கியவிசேஷத்தாலிதோவென்னால் காணப்பட்டாள்.

४. చారేణతుసుయుక్తేనశత్రోశ్శక్తిమవేక్షతా। గూఢేనచరతాతావదవేక్షితమిదంమయా॥

௪. [illegible]

௪. சாரேணதுஸுயுக்தேநஶத்ரோஶ்ஶக்திமவேக்ஷதா।
கூடேநசரதாதாவதவேக்ஷிதமிதம்மயா॥

பதம்.	உரை.	பதம்.	உரை.
ஸுயுக்தேந-சாரேண	மிகயோக்கியனான-வெளி சுற்றுகிறவனும்	சரதா-மயா	திரிகிறவனுமான-என்னால்
ஶத்ரோ:-ஶக்திம்	பகையாளியினுடைய-சக்தியை	இதம்-தாவத்	இனிசொல்லப்போகிற-ஸமஸ்தமும்
அவேக்ஷதா-கூடேந	பார்ப்பவனும்-மறைவாக	அவேக்ஷிதம்	பார்க்கப்பட்டது.

५. రాక్షసానాంవిశేషశ్చపురీచేయమవేక్షితా। రాక్షసాధిపతేరస్యప్రభావోరావణస్యచ॥

௫. [illegible]

௫. ராக்ஷஸாநாம்விஶேஷஶ்சபுரீசேயமவேக்ஷிதா।
ராக்ஷஸாதிபதேரஸ்யப்ரபாவோராவணஸ்யச॥

பதம்.	உரை.	பதம்.	உரை.
ராக்ஷஸாநாம்-விஶேஷஶ்ச-இராக்கதருடைய- விசேஷமும் (அவேக்ஷித:)	(என்னால்) பார்க்கப்பட்டது	ராக்ஷஸாதிபதே:	இராக்கதப்பிரபுவான
இயம்-புரீச	இந்த-இலங்காபட்டணமும்	அஸ்ய-ராவணஸ்ய	இந்த - இராவணனுடைய
அவேக்ஷிதா	(என்னால்) பார்க்கப்பட்டது	ப்ரபாவஶ்ச	மஹிமையும் (பார்க்கப்பட்டது.)

தா-ம்.—யாவர்கண்ணுக்கும் புலப்படாது மிகவல்லமையோடு சத்துருபலத்தைப் பார்த்துக்கொண்டேஸஞ்சரிக்கிறவென்னால் இவ்விலங்காநகரமுழுதும் நன்றாகப்பார்க்கப்பட்டது, அளவற்ற இராக்ஷஸகோடிகள் தரிசிக்கப்பட்டன திரிலோகபிரஸித்தமாக விதை யரசுபுரிந்துவரும் தசகண்டனுடைய மஹாப்பிரதாபங்களும் பார்க்கப்பட்டன.

౬. యుక్తంతస్యాప్రమేయస్యసర్వసత్త్వదయావతః। సమాశ్వాసయితుంభార్యాంపతిదర్శనకాంక్షిణీమ్॥

௬. [illegible]

௬. யுக்தம்தஸ்யாப்ரமேயஸ்யஸர்வஸத்வதயாவத:।
ஸமாஶ்வாஸயிதும்பார்யாம்பதிதர்ஶநகாம்க்ஷிணீம்॥

பதம்.	உரை.	பதம்.	உரை.
அப்ரமேயஸ்ய	இப்படிப்பட்டவனென்றளவிடுவதற்கு சக்தியமானவனும்	பதிதர்ஶநகாம்க்ஷிணீம் - பர்த்தாவினுடையதரிசனத்தைக்கோருகிற	
ஸர்வஸத்வதயாவத꞉-ஸமஸ்தபிராணிகளிடத்திலும்கிருபையுடையனுமான [பந்தமான)		பார்யாம் - ஸமாஶ்வாஸயிதும் - பத்தினியை - ஸமாதானம் செய்வதற்கு	
தஸ்ய	அந்த-ஸ்ரீராகவனுடைய (அவன்ஸம்	யுக்தம்	யுக்தந்தான்

౭. అహమాశ్వాసయామ్యేనాం పూర్ణచంద్రనిభాననామ్। అదృష్టదుఃఖాం దుఃఖార్తాం దుఃఖస్యాంతమగచ్ఛతీమ్॥

௭. 𑌅𑌹𑌮𑌾𑌶𑍍𑌵𑌾𑌸𑌯𑌾𑌮𑍍𑌯𑍇𑌨𑌾𑌂𑌪𑍂𑌰𑍍𑌣𑌚𑌨𑍍𑌦𑍍𑌰𑌨𑌿𑌭𑌾𑌨𑌨𑌾𑌮𑍍।
𑌅𑌦𑍃𑌷𑍍𑌟𑌦𑍁𑌃𑌖𑌾𑌂𑌦𑍁𑌃𑌖𑌾𑌰𑍍𑌤𑌾𑌂𑌦𑍁𑌃𑌖𑌸𑍍𑌯𑌾𑌨𑍍𑌤𑌮𑌗𑌚𑍍𑌛𑌤𑍀𑌮𑍍॥

௭. அஹமாஶ்வாஸயாம்யேநாம்பூர்ணசந்த்ரநிபாநநாம்।
அத்ருஷ்டதுꞏக்காம்துக்கார்தாம்துꞏக்கஸ்யாந்தமகச்சதீம்॥

பதம்.	உரை. [முகமுடையவளும்	பதம்.	உரை.
அஹம்-பூர்ணசந்த்ரநிபாநநாம்-நான்-நிறைந்தமதிக்கொப்பான		துக்கஸ்ய-அந்தம்	வியஸனத்தினுடைய-முடிவை.
அத்ருஷ்டதுக்காம்	பாராததுக்கமுடையவளும்	அꞏச்சதீம்-ஏநாம்	அடையாதவளுமான-இந்த ஸீதையை
துக்கார்த்தாம்	துக்கத்தால்பீடிக்கப்பட்டவளும்	ஆஶ்வாஸயிஷ்யாமி	ஸமாதானம்செய்யக்கடவேன்.

౮. యద్యప్యహమిమాం దేవీం శోకోపహతచేతనామ్ । అనాశ్వాస్య గమిష్యామి దోషవద్గమనం భవేత్॥

௮. 𑌯𑌦𑍍𑌯𑌪𑍍𑌯𑌹𑌮𑌿𑌮𑌾𑌂𑌦𑍇𑌵𑍀𑌂𑌶𑍋𑌕𑍋𑌪𑌹𑌤𑌚𑍇𑌤𑌨𑌾𑌮𑍍।
𑌅𑌨𑌾𑌶𑍍𑌵𑌾𑌸𑍍𑌯𑌗𑌮𑌿𑌷𑍍𑌯𑌾𑌮𑌿𑌦𑍋𑌷𑌵𑌦𑍍𑌗𑌮𑌨𑌂𑌭𑌵𑍇𑌤𑍍॥

௮. யத்யப்யஹமிமாம்தேவீம்ஶோகோபஹதசேதநாம்।
அநாஶ்வாஸ்யகமிஷ்யாமிதோஷவத்கமநம்பவேத்॥

பதம்.	உரை.	பதம்.	உரை.
ஶோகோபஹதசேதநாம்-துக்கத்தாலடிக்கப்பட்டமனமுடை		அஹம்-கமிஷ்யாமியதி	நான்-போவேனாகில்
இமாம்-தேவீம்	இந்த-ஸீதையை [ய	கமநம்	(என்னுடைய) கமனமானது
அநாஶ்வாஸ்ய	ஸமாதானஞ்செய்யாமல்	தோஷவத்-பவேத்	தோஷமுடையதாக-ஆகும்.

౯. గతే హి మయి తత్రేయం రాజపుత్రీ యశస్వినీ । పరిత్రాణమవిందంతీ జానకీ జీవితం త్యజేత్॥

௯. 𑌗𑌤𑍇𑌹𑌿𑌮𑌯𑌿𑌤𑌤𑍍𑌰𑍇𑌯𑌂𑌰𑌾𑌜𑌪𑍁𑌤𑍍𑌰𑍀𑌯𑌶𑌸𑍍𑌵𑌿𑌨𑍀।
𑌪𑌰𑌿𑌤𑍍𑌰𑌾𑌣𑌮𑌵𑌿𑌨𑍍𑌦𑌨𑍍𑌤𑍀𑌜𑌾𑌨𑌕𑍀𑌜𑍀𑌵𑌿𑌤𑌂𑌤𑍍𑌯𑌜𑍇𑌤𑍍॥

௯. கதேஹிமயிதத்ரேயம்ராஜபுத்ரீயஶஸ்விநீ।
பரித்ராணமவிந்தந்தீஜாநகீஜீவிதம்த்யஜேத்॥

பதம்.	உரை.	பதம்.	உரை.
மயி-தத்ர	நான்-அங்கு (ஜாம்பவத்பிரபிருதிகள் இருக்குமிடம்)	இயம்-ஜாநகீ	இந்த-ஜனகன்மகளான (ஸீதை)
		பரித்ராணம்-அவிந்தந்தீ-இரக்ஷிப்பவரை - அறியாதவளாக(அடையாதவளாக	
கதே (ஸதி)	போனவளவில் [மான		
ராஜபுத்ரீ-யஶஸ்விநீ	இராஜபுத்திரியும்-கீர்த்தியுடையவளு	ஜீவிதம்-த்யஜேத்	பிராணனை-விட்டுவிடுவள்.

౧౦. మయా చ స మహాబాహుః పూర్ణచంద్రనిభాననః । సమాశ్వాసయితుం న్యాయ్యః సీతాదర్శనలాలసః॥

௰. 𑌮𑌯𑌾𑌚𑌸𑌮𑌹𑌾𑌬𑌾𑌹𑍁𑌃𑌪𑍂𑌰𑍍𑌣𑌚𑌨𑍍𑌦𑍍𑌰𑌨𑌿𑌭𑌾𑌨𑌨𑌃।
𑌸𑌮𑌾𑌶𑍍𑌵𑌾𑌸𑌯𑌿𑌤𑍁𑌂𑌨𑍍𑌯𑌾𑌯𑍍𑌯𑌃𑌸𑍀𑌤𑌾𑌦𑌰𑍍𑌶𑌨𑌲𑌾𑌲𑌸𑌃॥

௰. மயாசஸமஹாபாஹுꞏபூர்ணசந்த்ரநிபாநந꞉।
ஸமாஶ்வாஸயிதும்ந்யாய்யஸ்ஸீதாதர்ஶநலாலஸ꞉॥

பதம்.	உரை.	பதம்.	உரை.
பூர்ணசந்த்ரநிபாநந꞉	நிறைந்தமதிக்குநிகரானதிருமுகமுடை	ஸச	அந்த-(ஸ்ரீராகவனும்)
மஹாபாஹுꞏ꞉	பெருத்தபுஜமுடையவரும் [யவரும்	மயா	என்னால்
ஸீதாதர்ஶநலாலஸ꞉	பிராட்டியின் பார்வையில் ஆஸக்தியுடையவருமான	ஸமாஶ்வாஸயிதும்	ஸமாதானம்செய்யப்படுவதற்கு
		ந்யாய்ய꞉	தகுந்தவர்தான்.

(௭-மு-௰-ல்) தா-ம்.—அளவிலாத் தேஜோமகிமையுடையவரும் ஸர்வஜீவகாருண்ணியருமான அந்தரகுநாதனுடைய பிரியபார்யையான இந்தஸீதை பர்த்திருதர்சனத்தில் மிகவும் ஆஸக்திகொண்டிருக்கிறாள், இப்பதிவிரதை அந்தலோகநாதனைச்சேர்ந்து ஸுகிக்கவேண்டியது யுக்தந்தான். இவளோ துக்கானுபவத்திற்குக்கொஞ்சமேனுந் தகுந்தவளல்ல. விதிவசத்தால் வியஸனத்தையடைந்துவிட்டாள். வியஸனத்தால் வெகுவிதமாகப்பீடிக்கப்பட்டாள். அவ்வியஸனத்திற்கு முடிவுகாணாது மஹாதீனையானாள். அஹோ! தேவியிப்படி வருந்தயான் காணத்தக்கனதோ! பூர்ணேந்துவைப்பழிக்கு மித்திருமுகமண்டலத்தி லச்ருநீர்பெருகயான் கண்டிருக்கிறதோ! இவளையெப்படியாவது பதிஸமேதையாக்குவதென்கடமை. இவ்வளவுதூரம்வந்து, இவளது கஷ்டங்களையெல்லாம் பிரத்தியக்ஷமாகப்பார்த்து, இவளுக்கிவ்வளவு உபகாரஞ்செய்யேனாகில் நான்ம

ஹாபாபத்திற்குள்ளாவேன். ஸீதாதர்சனந்தான் இலபித்துவிட்டதே, இனியென்னவேண்டுமென்று திருப்தி கொண்டு வானரரிடம் சேர்ந்தேனாகில், துக்கஸந்தப்தையான தேவி இரக்ஷிப்பாரொருவரையுங்காணாது, சீல ரக்ஷணநிமித்தமாக ஜீவனையொழித்துவிடுவாள். உத்தமகுலப்பிரஸூதையும் யசஸ்வினியுமானவிவள் இனி இராவணஹிம்ஸையை ஸகியாள். ஆவியையொழித்தாவது மானத்தைரக்ஷிப்பது உயர்குலத்தோரியல்பன் றோ! ஆகையாலித்தருணத்தில், ஸ்ரீரகுநாதன் ரக்ஷிக்கவருகிறானென்பதை யறியாளாகில் ஆத்மஹத்திசெய்து அம்மஹாபாதகத்திற்கு என்னையாளாக்கிவிடுவாள். இவள்விஷயமிப்படியிருக்க, ஸர்வலோகசரண்ணியனும் ஸர்வசத்துருஹந்தாவுமான ஸ்ரீராமசந்திரனுக் குபகாரமிழைக்கயான் கடமைப்பட்டவனல்லவோ? பிரபலசத்துருவான வாலியைஹரித்து ஸுக்கிரீவாபீஷ்டங்களைத்தந்து, ஸுக்கிரீவபலத்தால் பத்தினியையடைந்துவிடலாமென்று ஸீதாதர்சனைத் ஸுகராய்தக்ஷிணமுகந்திரும்பி இமைகொட்டாது விழித்துப்பார்த்திருப்பரோ. அப்புருஷோத்தமனோடு, இந்தநித்தியகல்யாணியைச்சேர்ப்பித்து, அவருடைய முகாரவிந்தமலரயான் காணவேண்டியது நியாயமன்றோ. ஸ்ரீராகவஸுக்கிரீவஸ்நேகத்திற்குக் காரணபூதனான நான் அந்தஸ்நேகத்தை ஸபலமாகச்செய்வதற்குக் கடமைப்பட்டிருக்கிறேன். இவ்விதகாரணங்களால் ஸீதையை ஸ்ரீராகவனோடு சேர்ப்பிப்பது எனக்கு அத்தியந்தம் ஆவசியகமானதர்மம்.

౧౧. నిశాచరీణాం ప్రత్యక్షమనర్హం చాభిభాషణమ్ । కథం ను ఖలు కర్తవ్యమిదం కృచ్ఛ్రగతో హ్యహమ్ ॥

கக. 𑌨𑌿𑌶𑌾𑌚𑌰𑍀𑌣𑌾𑌂 𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌕𑍍𑌷𑌮𑌨𑌰𑍍𑌹𑌂 𑌚𑌾𑌭𑌿𑌭𑌾𑌷𑌣𑌮𑍍 ।
𑌕𑌥𑌂 𑌨𑍁 𑌖𑌲𑍁 𑌕𑌰𑍍𑌤𑌵𑍍𑌯𑌮𑌿𑌦𑌂 𑌕𑍃𑌚𑍍𑌛𑍍𑌰𑌗𑌤𑍋 𑌹𑍍𑌯𑌹𑌮𑍍 ॥

கக. நிஶாசரீணாம்ப்ரத்யக்ஷமநர்ஹம்சாபிபாஷணம்।
கதம்நுகலுகர்தவ்யமிதம்க்ருச்ச்ரகதோஹ்யஹம்॥

பதம்.	உரை.	பதம்.	உரை.
நிஶாசரீணாம்-ப்ரத்யக்ஷம்-	இராக்ஷஸிகளுடைய-முன்பாக [து	கர்த்தவ்யம்	செய்யத்தக்கது
பாஷணம்சாபி	(ஸீதையோடு)வார்த்தைசொல்வதான	அஹம்-க்ருச்ச்ரகதஃ	நான்-(இதுவிஷயத்தில்) கஷ்டத்தை யடைந்தவனாகஆனேன்.
அநர்ஹம்	யுக்தமல்ல (ஆகையால்)		
இதம்-கதம்நுகலு	இந்தவார்த்தையை-எப்படிதான்		

౧౨. అనేన రాత్రిశేషేణ యది నాశ్వాస్యతే మయా । సర్వథా నాస్తి సందేహః పరిత్యక్ష్యతి జీవితమ్ ॥

கஉ. 𑌅𑌨𑍇𑌨 𑌰𑌾𑌤𑍍𑌰𑌿𑌶𑍇𑌷𑍇𑌣 𑌯𑌦𑌿 𑌨𑌾𑌶𑍍𑌵𑌾𑌸𑍍𑌯𑌤𑍇 𑌮𑌯𑌾 ।
𑌸𑌰𑍍𑌵𑌥𑌾 𑌨𑌾𑌸𑍍𑌤𑌿 𑌸𑌨𑍍𑌦𑍇𑌹𑌃 𑌪𑌰𑌿𑌤𑍍𑌯𑌕𑍍𑌷𑍍𑌯𑌤𑌿 𑌜𑍀𑌵𑌿𑌤𑌮𑍍 ॥

கஉ. அநேநராத்ரிஶேஷேணயதிநாஶ்வாஸ்யதேமயா।
ஸர்வதாநாஸ்திஸந்தேஹஃபரித்யக்ஷ்யதிஜீவிதம்॥

பதம்.	உரை.	பதம்.	உரை.
அநேந-ராத்ரிஶேஷேண-	இந்த-இராமீதியால்	ஸர்வதா-ஜீவிதம்	ஸகலவிதத்தால்-பிராணனை
மயா	என்னால் (இந்தஸீதையானவள்) [ல்	பரித்யக்ஷ்யதி	விட்டுவிடுவாள்
நாஶ்வாஸ்யதேயதி-	ஸமாதானம்செய்யப்படாமற் போவாளாகி	ஸந்தேஹஃ-நாஸ்தி	(இதுவிஷயத்தில்) ஸந்தேஹம்இல்லை.

தா-ம்.—பிராட்டியை ஸ்ரீராகவனோடு சேர்ப்பிப்பது ஆவசியகமானவிஷயமே. இவ்விருவருடைய சேர்த்தியிற் பிரவர்த்தித்தேனாகில் பிரதமத்திலிப்பொழுது தேவியோடு ஸம்பாஷிக்கவேண்டும். ஸ்ரீராகவதூதன் யான், க்ஷேமஸமாசாரங் கொண்டுவந்தேனென்று தெரிவிக்கேனாகில் ஆத்மஹத்தியிற் பிரவர்த்தித்திருக்குமிவள் முந்திவிடுவாள். இப்பொழுது ஸம்பாஷிப்பதற்கோ ஸமயபேதமாகவிருக்கிறது. இராக்ஷஸிகளெல்லோருஞ் சூழ்ந்துநிற்கின்றனர். அவர்கள்முன்னிலையில் ஜானகியோடு இவ்விஷயத்தை விளம்புவது யுக்தமல்ல. தாமஸஞ்செய்தாலும் நஷ்டம்நேரிடும். உதயாத்பூர்வம் க்ஷேமஸமாசார முரையாவிடில் தேவிபிழைத்திருப்பதைக்காணேன். இக்காரியத்தையெப்படி முடிப்பேன். எனதாகமனத்தை தேவிக்கெப்படி தெரிவிப்பேனென்று ஹநுமான்சிந்தித்தார்.

౧౩. రామశ్చ యది పృచ్ఛేన్మాం కిం మాం సీతాబ్రవీద్వచః । కిమహం తం ప్రతిబ్రూయామసంభాష్య సుమధ్యమామ్ ॥

கங. 𑌰𑌾𑌮𑌶𑍍𑌚 𑌯𑌦𑌿 𑌪𑍃𑌚𑍍𑌛𑍇𑌨𑍍𑌮𑌾𑌂 𑌕𑌿𑌂 𑌮𑌾𑌂 𑌸𑍀𑌤𑌾𑌬𑍍𑌰𑌵𑍀𑌦𑍍𑌵𑌚𑌃 ।
𑌕𑌿𑌮𑌹𑌂 𑌤𑌂 𑌪𑍍𑌰𑌤𑌿𑌬𑍍𑌰𑍂𑌯𑌾𑌮𑌸𑌂𑌭𑌾𑌷𑍍𑌯 𑌸𑍁𑌮𑌧𑍍𑌯𑌮𑌾𑌮𑍍 ॥

கங. ராமஶ்சயதிப்ருச்சேந்மாம்கிம்மாம்ஸீதாப்ரவீத்வசஃ।
கிமஹந்தம்ப்ரதிப்ரூயாமஸம்பாஷ்யஸுமத்யமாம்॥

பதம்.	உரை.	பதம்.	உரை.
ராமஶ்ச-ஸீதா	ஸ்ரீராகவன்-ஸீதையானவள்	ஸுமத்யமாம்	ஸுஷ்டுவான இடுப்பையுடைய (ஸீ
மாம்-கிம்-வசஃ	என்னைக்குறித்து-என்ன-வார்த்தை	அஸம்பாஷ்ய	வார்த்தைசொல்லாமல் [தையோடு
அப்ரவீத்-ப்ருச்சேத்யதி-	சொன்னாள் (என்று) கேட்பாராகில்	கிம்-ப்ரதிப்ரூயாம்	என்ன-பதில்சொல்வேன்.
அஹம்-தம் (ப்ரதி)	நான்-அவரைப்பற்றி		

౧౪. సీతాసందేశరహితం మామితస్త్వరయా గతమ్ । నిర్దహేదపి కాకుత్స్థః క్రుద్ధస్తీవ్రేణ చక్షుషా ॥

கச. [illegible]
[illegible]

கச. ஸீதாஸந்தேஶஸஹிதம்மாமிதஸ்த்வரயாகதம்।
நிர்தஹேதபிகாகுத்ஸ்தஃக்ருத்தஸ்தீவ்ரேணசக்ஷுஷா॥

பதம். உரை.
ஸீதாஸந்தேஶஸஹிதம் - ஸீதையின்க்ஷேமஸமாசாரத்தால் சூன்னியனாக [கிற
இதஃ-த்வரயா-கதம் இவ்விடத்திலிருந்து-சீக்கிரமாக-போ
மாம்-காகுத்ஸ்தஃ என்னை-ஸ்ரீராகவன்

பதம். உரை
க்ருத்தஃ - தீவ்ரேண-சக்ஷுஷா-கோபித்தவராக-உஷ்ணமான கண்ணினால் (பாருவையால்)
நிர்தஹேதபி கொளுத்திவிடுவரோ.

தா-ம்.—ஸீதையோடு ஸம்பாஷிக்காமல் திரும்புவதும் ஸரியல்ல. பத்தினிவிரகத்தாலுன்மாதங்கொண்டிருக்கிற ஸ்ரீராகவனிடத்தில், "ஹேரகோத்தம! தேவியைக்கண்ணுற்றேன். இலங்கையில் க்ஷேமமாகவிருக்கிறாள்," என்று சொன்னமாத்திரததில், மிகுந்தபரபரப்புடன், "ஹநுமன்! ஸீதையைக்கண்ணுற்றாயா, க்ஷேமமாகவிருக்கின்றாளா, என்னைப்பற்றியென்னசொன்னாள், யதோக்தம்சொல்லவேண்டும்ஹநுமானே." என்று வினவுவரே. அவருடைய ஆவலையென்னவிதம் திருப்தி செய்வேன். "ஹேராஜேந்திர! தேவியைக் கண்ணுற்றதுண்டு, ஆனாலம்மெல்லியிடையாளோடு யான் ஸம்பாஷிக்கவில்லை; ஸம்பாஷிப்பதற்கு ஸமயம்நேரிடவில்லை. வந்துவிட்டேன்," என்றுமூடனை தூதன்போல் பிரத்தியுத்தரமளிக்கவகையற்றவனாக நிற்பேனோ? ஸீதையின்க்ஷேமத்தைப்பற்றி யாதொன்றுஞ் சொல்லத்தெரியாமல் மயங்கிநிற்கிறவென்னைத்தனது தீப்பொறிசிந்துங்கோபவிழியால் அக்காகுத்ஸ்தன் தகித்துவிடாரோ!

౧౫. యదిచోద్యోజయిష్యామిభర్తారం రామకారణాత్ । వ్యర్థమాగమనంతస్య ససైన్యస్య భవిష్యతి ॥

கரு. [illegible]
[illegible]

கரு. யதிசோத்யோஜயிஷ்யாமிபர்தாரம்ராமகாரணாத்।
வ்யர்தமாகமநம்தஸ்யஸஸைந்யஸ்யபவிஷ்யதி॥

பதம். உரை.
ராமகாரணாத் ஸ்ரீராகவன்நிமித்தமாக (நான்)
பர்த்தாரம் - உத்யோஜஇஷ்யாமியதி - ஸுக்ரீவனை - (இராவணனோடுயுத்தம்புரிவதற்காக) இவ்விடம் வருவதற்குரிய - ப்ரயத்னம்செய்தேனாகில்.
ஸஸைந்யஸ்ய-தஸ்ய ஸைன்னியத்தோடுகூடின-அந்த(ஸு

பதம். உரை.
க்கிரீவனுடைய [ஆய்விடும்
ஆகமநம்-வ்யர்த்தம்-பவிஷ்யதி-வரவு - பிரயோஜனமற்றதாக-
(ஸீதையைக்கண்டிப்பொழுது ஸ்ரீராகவனுடையக்ஷேமஸமாசாரத்தாலவளை தேற்றாமல்போய் ஸுக்ரீவனையழைத்துவரும்பரியந்த மிவள் பிராணன்னில்லாது நிஷ்பலமாய்விடுமென்றர்த்தம்.)

౧౬. అంతరంత్వహమాసాద్య రాక్షసీనామిహస్థితః । శనైరాశ్వాసయిష్యామి సంతాపబహుళామిమామ్ ॥

கசு. [illegible]
[illegible]

கசு. அந்தரம்த்வஹமாஸாத்யராக்ஷஸீநாமிஹஸ்திதஃ।
ஶநைராஶ்வாஸயிஷ்யாமிஸந்தாபபஹுளாமிமாம்॥

பதம். உரை.
அஹம்-இஹ-ஸ்திதஃ-நான்-இவ்விடத்தில் (இந்தமரத்தின்மீது இருந்தவனாக
ராக்ஷஸீநாம்-அந்தரம் இராக்ஷஸிகளுடைய-ஸமயத்தை

பதம். உரை.
ஆஸாத்ய அடைந்து (ஸீதையை)
ஸந்தாபபஹுளாம்-இமாம்-அதிகமானஸந்தாபமுடைய-இந்த
ஶநைஃ-ஆஶ்வாஸயிஷ்யாமி-மெள்ளஸமாதானம்செய்கிறேன்.

தா-ம்.—ஸீதைக்கு யானிங்குவந்ததைத் தெரிவியாமற்போவேனாகில், இவள் இன்னம் சற்றுநேரத்திற்குள் பிராணனைவிட்டு விடுவாள். நான்கிஷ்கிந்தையையடைந்து ஸீதாதர்சனத்தைத்தெரிவித்து அளவற்ற ஸைன்னியங்களைத் திரட்டிக்கொண்டு மஹாராஜருடனிங்குவந்து தேவிபோய்விட்டாளென்று கேள்வியுறினென்ன பிரயோஜனம்.ஸீதைஜீவனோடிருந்தாலல்லவோ பிரயோஜனம்.இல்லாவிடில் இராவணனைத்தண்டிப்பதில்மாத்திரம் யாதுபிரயோஜனம். ஆகையால், இங்கிருந்து, இராக்ஷஸிகளயர்ந்திருக்கிற ஸமயம்பார்த்து துக்கமிகுதியால் வாடுகிறஜானகிக்கு க்ஷேமஸமாசாரமுரைத்து அவளைத்தேற்றரவுசெய்துவிட்டு அவளுடைய ஸ்ரீராகவவிஷயமான குசலப்பிரஶ்னங்களையும் விக்கியாபனங்களையுங்கொண்டு தான் ஸ்ரீராகவஸன்னிதியடையவேண்டுமென்று ஹநுமான் நிச்சயித்தார்.

౧౭. అహంత్వతితనుశ్చైవ వానరశ్చవిశేషతః । వాచంచోదాహరిష్యామి మానుషీమిహసంస్కృతామ్ ॥

கஎ. [illegible]
[illegible]

கஎ. அஹம்த்வதிதநுஶ்சைவவாநரஶ்சவிஶேஷதஃ।
வாசம்சோதாஹரிஷ்யாமிமாநுஷீமிஹஸம்ஸ்க்ருதாம்॥

பதம்.	உரை.	பதம்.	உரை.
வாநர:-அஹம்	வானரனான-நான்	ஸம்ஸ்க்ருதாம்	[ணத்தோடுகூடிய
அதிதநுஶ்சைவ	வெகுஸூக்ஷ்மசரீரியாக	வாசம்ச	பிரயோகிக்க ஸௌஷ்டவமானலக்ஷ வாக்கியத்தையாவது (ஸம்ஸ்கிருதபாஷையையாவது) [சொல்லுகிறேன்.)
இஹ-மாநுஷீம்	இவளிடத்தில் - மனிதஸம்பந்தமான (வார்த்தையையாவது)	விஶேஷத:-உதாஹரிஷ்யாமி-விசேஷமாக - உதாகரிக்கிறேன்	

౧౮. యదివాచం ప్రదాస్యామి ద్విజాతిరివ సంస్కృతామ్ । రావణం మన్యమానా మాం సీతా భీతా భవిష్యతి॥

౧౯. వానరస్య విశేషేణ కథం స్యాదభిభాషణమ్ । అవశ్యమేవ వక్తవ్యం మానుషం వాక్యమర్థవత్ ॥

౧౯½ మయా సాంత్వయితుం శక్యా నాన్యథేయమనిందితా।

௧௮. யதிவாசம்ப்ரதாஸ்யாமித்விஜாதிரிவஸம்ஸ்க்ருதாம்।
ராவணம்மந்யமாநாமாம்ஸீதாபீதாபவிஷ்யதி॥

௧௯. வாநரஸ்யவிஶேஷேணகதம்ஸ்யாதபிபாஷணம்।
அவஶ்யமேவவக்தவ்யம்மாநுஷம்வாக்யமர்த்தவத்॥

௧௯½. மயாஸாந்த்வயிதும்ஶக்யாநாந்யதேயமநிந்திதா।

௧௮. யதிவாசம்ப்ரதாஸ்யாமித்விஜாதிரிவஸம்ஸ்க்ருதாம்।
ராவணம்மங்யமாநாமாம்ஸீதாபீதாபவிஷ்யதி॥

௧௯. வாநரஸ்யவிஶேஷேணகதம்ஸ்யாதபிபாஷணம்।
அவஶ்யமேவவக்தவ்யம்மாநுஷம்வாக்யமர்த்தவத்॥

௧௯½. மயாஸாந்த்வயிதும்ஶக்யாநாந்யதேயமநிந்திதா!

பதம்.	உரை.	பதம்.	உரை.
தா-ம்.—இவ்விதம்பயாதிக்யத்தால் நன்மையுரைக்கவந்தவரைநன்குணராது விரோதியென்று விபரீதபுத்திகொண்ட பிராட்டி, பிரதிகூலருடைய மனமுமுருகும்படி மஹாதீனஸ்வரத்தில் வெகுவிதமாகப் பிரலாபித்தனள். ஹா ராகவ! சரண்ணிய! தீனபந்தோ! தயாஸிந்தோ! இவ்வேளையிடத்தில் மனமிரங்கவில்லையோ! ஹாலக்ஷ்மண! அன்னையை யிவ்விதங்கைவிடத்துணிந்தீரோ! என்றுஇவ்விதம் ஸ்ரீராமலக்ஷ்மணருடைய திருநாமங்களையடிக்கடியுச்சரித்து, அதிமந்தமாயும், பிரலாபிக்கையிலு மதுரமாயுமிருக்கிற தீங்குரலோசையுடன், ஸர்வலோகானந்தகரமான வடிவழகைக்கொண்டஜானகி துக்கித்தனள்.

౬. సాతందృష్ట్వాహరిశ్రేష్ఠంవినీతవదుపస్థితమ్।మైథిలీచింతయామాసస్వప్నోయమితిభామినీ॥

௬. 𑌸𑌾𑌤𑌂𑌦𑍃𑌷𑍍𑌟𑍍𑌵𑌾𑌹𑌰𑌿𑌶𑍍𑌰𑍇𑌷𑍍𑌠𑌂𑌵𑌿𑌨𑍀𑌤𑌵𑌦𑍁𑌪𑌸𑍍𑌥𑌿𑌤𑌮𑍍।
𑌮𑍈𑌥𑌿𑌲𑍀𑌚𑌿𑌨𑍍𑌤𑌯𑌾𑌮𑌾𑌸𑌸𑍍𑌵𑌪𑍍𑌨𑍋𑌯𑌮𑌿𑌤𑌿𑌭𑌾𑌮𑌿𑌨𑍀॥

௬. ஸாதம்த்ருஷ்ட்வாஹரிஸ்ரேஷ்டம்விநீதவதுபஸ்த்திதம்।
மைதிலீசிந்தயாமாஸஸ்வப்நோயமிதிபாமிநீ॥

பதம்.	உரை.	பதம்.	உரை.
மைதிலீ	மிதிலைதேசத்தரசன்புத்திரியான	ஹரிஸ்ரேஷ்டம்-தம்	வானரசிரேஷ்டனுமான-அந்த(ஹனு [மானை)
ஸா-பாமிநீ	அந்த-ஸ்திரீயானவள்	த்ருஷ்ட்வா	பார்த்து
விநீதவத்-உபஸ்திதம்	வினயமுடையவனாக-ஸமீபத்தில் வந் திருப்பவனும்	அயம்-ஸ்வப்ந:-இதி	இது கனவு-என்று
		சிந்தயாமாஸ	எண்ணினாள்.

தா-ம்.—இந்தவிதம் பயத்தால்மோகங்கொண்டுதுக்கமுற்ற சோபனாங்கியான அஜ்ஜனகன்திருமகள் அத்தியந்தம் விநீதபாவத்துடன்தேகமொடுங்கி சிரம்வணங்கி அன்னையைத் தேற்றரவுசெய்யுநிமித்தம் ஸமீபத்து நிற்கிற மாருதியைப்பார்த்து, இதென்னவோர்ஸ்வப்னமோ, ஸ்ரீராகவன் திருக்கதையைக்கேட்டதும், இவ்வானரதர்சனஞ்செய்ததும் ஸ்வப்னாவஸ்தையைச்சேர்ந்த விஷயங்களோவென்றெண்ணினாள்.

౭. సా వీక్షమాణా పృథుభుగ్నవక్త్రం శాఖామృగేంద్రస్య యథోక్తకారమ్। దదర్శ పింగాధిపతేరమాత్యం వాతాత్మజం బుద్ధిమతాం వరిష్ఠమ్॥

௭. 𑌸𑌾 𑌵𑍀𑌕𑍍𑌷𑌮𑌾𑌣𑌾 𑌪𑍃𑌥𑍁𑌭𑍁𑌗𑍍𑌨𑌵𑌕𑍍𑌤𑍍𑌰𑌂 𑌶𑌾𑌖𑌾𑌮𑍃𑌗𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌸𑍍𑌯 𑌯𑌥𑍋𑌕𑍍𑌤𑌕𑌾𑌰𑌮𑍍।
𑌦𑌦𑌰𑍍𑌶 𑌪𑌿𑌙𑍍𑌗𑌾𑌧𑌿𑌪𑌤𑍇𑌰𑌮𑌾𑌤𑍍𑌯𑌂 𑌵𑌾𑌤𑌾𑌤𑍍𑌮𑌜𑌂 𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌮𑌤𑌾𑌂 𑌵𑌰𑌿𑌷𑍍𑌠𑌮𑍍॥

௭. ஸாவீக்ஷமாணாப்ருதுபுக்நவக்த்ரம்ஸாகாம்ருகேந்த்ரஸ்யயதோக்தகாரம்।
ததர்சபிங்காதிபதேரமாத்யம்வாதாத்மஜம்புத்திமதாமவரிஷ்டம்॥

பதம்.	உரை.	பதம்.	உரை.
ஸா	அந்த (ஸீதையானவள்)	பிங்காதிபதே:-அமாத்யம்-மஹாராஜருக்கு-மந்திரியும் [மான	
ப்ருதுபுக்நவக்த்ரம்	பெருத்தும் கோணலாயு மிருக்கிற முகமுடையவரும் [ய	புத்திமதாம் வரிஷ்டம்	புத்தியுடையவருக்குள் - சிரேஷ்டனு
ஸாகாம்ருகேந்த்ரஸ்ய	வானரத்தலைவனான ஸுக்கிரீவனுடை	வாதாத்மஜம்	ஹநுமானை [றவனாக
யதோக்தகாரம்	சொற்படி நடப்பவரும்	வீக்ஷமாணா	(விசாரத்தோடு)நாற்புறமும் பார்க்கி
		ததர்ஸ	பார்த்தாள்.

౮. సా తం సమీక్ష్యైవ భృశం విసంజ్ఞా గతాసుకల్పేవ బభూవ సీతా। చిరేణ సంజ్ఞాం ప్రతిలభ్య భూయో విచింతయామాస విశాలనేత్రా॥

௮. 𑌸𑌾 𑌤𑌂 𑌸𑌮𑍀𑌕𑍍𑌷𑍍𑌯𑍈𑌵 𑌭𑍃𑌶𑌂 𑌵𑌿𑌸𑌂𑌜𑍍𑌞𑌾 𑌗𑌤𑌾𑌸𑍁𑌕𑌲𑍍𑌪𑍇𑌵 𑌬𑌭𑍂𑌵 𑌸𑍀𑌤𑌾।
𑌚𑌿𑌰𑍇𑌣 𑌸𑌂𑌜𑍍𑌞𑌾𑌂 𑌪𑍍𑌰𑌤𑌿𑌲𑌭𑍍𑌯 𑌭𑍂𑌯𑍋 𑌵𑌿𑌚𑌿𑌨𑍍𑌤𑌯𑌾𑌮𑌾𑌸 𑌵𑌿𑌶𑌾𑌲𑌨𑍇𑌤𑍍𑌰𑌾॥

௮. ஸாதம்ஸமீக்ஷ்யைவப்ருஸம்விஸம்ஜ்ஞாகதாஸுகல்பேவபபூவஸீதா।
சிரேணஸம்ஜ்ஞாம்ப்ரதிலப்யபூயோவிசிந்தயாமாஸவிஸாலநேத்ரா॥

பதம்.	உரை.	பதம்.	உரை.
ஸா-தம்	அந்த (ஸீதை) அந்த (ஹனுமானை)	விஸாலநேத்ரா	நீண்டகண்களையுடைய
ஸமீக்ஷ்யைவ-ப்ருஸம்-பார்த்தமாத்திரத்தில்-மிகவும்		ஸீதா	ஸீதையானவள்
விஸம்ஜ்ஞா	பிரஜ்ஞையற்ற	சிரேண-ஸம்ஜ்ஞாம்	வெகுகாலம்பொறுத்து-பிரஜ்ஞையை
கதாஸுகல்பேவ	மரித்தவளுக்குஸமானைபோல்	ப்ரதிலப்ய	அடைந்து
பபூவ	ஆனாள்	புந:-விசிந்தயாமாஸ	மறுபடி-விசாரித்தாள்.

தா-ம்.—மிகவும்பெருத்து வக்கிரமடைந்துள்ள திருமுகமுடையவரும், வானரர்கோனான ஸுக்கிரீவனுக்குச் சிரேஷ்டமந்திரியும், மஹாராஜாவினுக்கிணையைவழுவாதுநடத்துபவரும், மஹாபுத்திசாலியும், உத்கிருஷ்டபராக்கிரமசாலியுமான ஹநுமானை மறுபடியுநன்றாகப்பார்த்து பயமடைந்த ஜானகிமரித்தவள்போல் அறிவிழந்து நிஸ்சேஷ்டிதையாயவிட்டாள். சிரகாலானந்தரம் அவ்விசாலாக்ஷி பிரக்ஞையடைந்து வானரதர்சனத்தின் பலனென்னவென்றுவிசாரித்தாள்.

౯. స్వప్నో మయాయం వికృతోఽద్య దృష్టః శాఖామృగః శాస్త్రగణైర్నిషిద్ధః। స్వస్త్యస్తు రామాయ సలక్ష్మణాయ తథా పితుర్మే జనకస్య రాజ్ఞః॥

௯. 𑌸𑍍𑌵𑌪𑍍𑌨𑍋 𑌮𑌯𑌾𑌯𑌂 𑌵𑌿𑌕𑍃𑌤𑍋𑌽𑌦𑍍𑌯 𑌦𑍃𑌷𑍍𑌟𑌃 𑌶𑌾𑌖𑌾𑌮𑍃𑌗𑌃 𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌗𑌣𑍈𑌰𑍍𑌨𑌿𑌷𑌿𑌦𑍍𑌧𑌃।
𑌸𑍍𑌵𑌸𑍍𑌤𑍍𑌯𑌸𑍍𑌤𑍁 𑌰𑌾𑌮𑌾𑌯 𑌸𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑌣𑌾𑌯 𑌤𑌥𑌾 𑌪𑌿𑌤𑍁𑌰𑍍𑌮𑍇 𑌜𑌨𑌕𑌸𑍍𑌯 𑌰𑌾𑌜𑍍𑌞𑌃॥

௯. ஸ்வப்நோமயாயம்விக்ருதோத்யத்ருஷ்டஸ்ஸாகாம்ருகஸ்ஸாஸ்த்ரகணைர்நிஷித்த:।
ஸ்வஸ்த்யஸ்துராமாயஸலக்ஷ்மணாயததாபிதுர்மேஜநகஸ்யராஜ்ஞ:॥

பதம்.	உரை.	பதம்.	உரை.
ஸாஸ்த்ரகணை:-நிஷித்த:-சாஸ்திரஸமூகத்தால் - தள்ளுண்ட [தும்		ராமாய	ஸ்ரீராகவனுக்கும்
விக்ருத:	விகாரரூபத்தையடைந்ததுமான	ததா-மே-பிது:	அப்படியே-என்னுடை-பிதாவான
அயம்-ஸாகாம்ருக:	இந்த-குரங்கானது	ஜநகஸ்ய-ராஜ்ஞ:	ஜனகனென்கிற-அரசனுக்கும்
ஸ்வப்நே-த்ருஷ்ட:	கனவில்-பார்க்கப்பட்டது	ஸ்வஸ்தி	க்ஷேமமானது
ஸலக்ஷ்மணாய	(ஆதலால்) இலக்ஷ்மணனோடுகூடின	அஸ்து	ஆகட்டும்.

தா-ம்.—ஸர்வசாஸ்திர நிஷித்தமானதும் விகாரரூபமுடையதுமான இவ்வானரத்தை ஸ்வப்னத்திற் கண்டேன். ஸ்வப்னத்தில்வானரதர்சனம் பந்துநாசகரமென்பார்களே. என்னதுக்கம் ஸம்பவிக்கப் போகிறதோவறியேன். எனதுபிரியபந்துக்களான ஸ்ரீராமலக்ஷ்மணரிருவர்க்கும் மங்களமுண்டாகட்டும், எனதுபிதாவான ஜனகமஹாராஜனுக்கு மவ்வண்ணமேமங்களமுண்டாகட்டும், என்றிவ்விதம்வாழ்த்தினள்.

౧౦. స్వప్నోఽపి నాయం నహి మేఽస్తి నిద్రా శోకేన దుఃఖేన చ పీడితాయాః। సుఖం హి మే నాస్తి యతోఽస్మి హీనా తేనేందుపూర్ణప్రతిమాననేన॥

௧௦. 𑌸𑍍𑌵𑌪𑍍𑌨𑍋𑌽𑌪𑌿 𑌨𑌾𑌯𑌂 𑌨𑌹𑌿 𑌮𑍇𑌽𑌸𑍍𑌤𑌿 𑌨𑌿𑌦𑍍𑌰𑌾 𑌶𑍋𑌕𑍇𑌨 𑌦𑍁𑌃𑌖𑍇𑌨 𑌚 𑌪𑍀𑌡𑌿𑌤𑌾𑌯𑌾𑌃।
𑌸𑍁𑌖𑌂 𑌹𑌿 𑌮𑍇 𑌨𑌾𑌸𑍍𑌤𑌿 𑌯𑌤𑍋𑌽𑌸𑍍𑌮𑌿 𑌹𑍀𑌨𑌾 𑌤𑍇𑌨𑍇𑌨𑍍𑌦𑍁𑌪𑍂𑌰𑍍𑌣𑌪𑍍𑌰𑌤𑌿𑌮𑌾𑌨𑌨𑍇𑌨॥

௧௦. ஸ்வப்நோபிநாயம்நஹிமேஸ்திநித்ராஶோகேநதுঃக்கேநசபீடிதாயாঃ।
ஸுகம்ஹிமேநாஸ்தியதோஸ்மிஹீநாதேநேந்துபூர்ணப்ரதிமாநநேந॥

பதம்.	உரை.	பதம்.	உரை.
அயம்-ஸ்வப்நோபி-ந	இது-கனவும்-அல்ல	யதঃ-	எந்தகாரணத்தினுல் [ய
ஹி	ஏதனுலென்றல்	இந்துபூர்ணப்ரதிமாநநேந-பூர்ணசந்திரன்போன்ற முகமுடை	
ஶோகேந	மனதிலுண்டானவியஸனத்தாலும்	தேந	அந்த (ஸ்ரீராகவனுல்)
துঃக்கேநச	வெளியிலுண்டாகிறவியஸனத்தாலும்	ஹீநா-அஸ்மி	விட்டவளாக-இருக்கிறேனே
பீடிதாயாঃ-மே	பீடிக்கப்பட்ட-எனக்கு	(ததঃ)-மே	(அந்தகாரணத்தினுல்) எனக்கு
நித்ரா-நாஸ்தி	துயில்-இல்லை	ஸுகம்-நாஸ்திஹி	ஸுகமானது-இல்லவேயில்லை.

தா-ம்.—இவ்வானரதர்சனத்தை ஸ்வப்னுவஸ்தையென்றெண்ணிபயந்தேனே. இது ஸ்வப்னமுமல்ல, ஏனெனில்:—ஸ்வப்னத்திற்குநித்திரைவேண்டும், நித்திரை ஸுகமுள்ளவிடத்தில்நாடும், பூர்ணேந்துவதனனை ஸ்ரீராகவனைப்பிரிந்தவெனக்கு ஸுகமுமுண்டோ! ஸ்ரீராகவவிரகம் அந்தக்கரணத்தைவதைக்க, இராவணுதிகளுடையஹிம்ஸைகள் தேகத்தைப்பீடிக்க, இவ்விதநிலைமையிலுள்ளவென்னை நித்திரையுமணுகுமோ! இக்காரணத்தா லிவ்வானரதர்சனம் ஸ்வப்னமெனவொண்ணுது.

౧౧. రామేతి రామేతి సదైవ బుద్ధ్యా విచింత్య వాచా బ్రువతీ తమేవ। తస్యానురూపాం చ కథాం తమర్థమేవం ప్రపశ్యామి తథా శృణోమి॥

௧௧. 𑌰𑌾𑌮𑍇𑌤𑌿 𑌰𑌾𑌮𑍇𑌤𑌿 𑌸𑌦𑍈𑌵 𑌬𑍁𑌦𑍍𑌧𑍍𑌯𑌾 𑌵𑌿𑌚𑌿𑌨𑍍𑌤𑍍𑌯 𑌵𑌾𑌚𑌾 𑌬𑍍𑌰𑍁𑌵𑌤𑍀 𑌤𑌮𑍇𑌵।
𑌤𑌸𑍍𑌯𑌾𑌨𑍁𑌰𑌪𑌾𑌂 𑌚 𑌕𑌥𑌾𑌂 𑌤𑌮𑌰𑍍𑌥𑌮𑍇𑌵𑌂 𑌪𑍍𑌰𑌪𑌶𑍍𑌯𑌾𑌮𑌿 𑌤𑌥𑌾 𑌶𑍃𑌣𑍋𑌮𑌿॥

௧௧. ராமேதிராமேதிஸதைவபுத்யாவிசிந்த்யவாசாப்ருவதீதமேவ।
தஸ்யாநுரூபாம்சகதாம்தமர்த்தமேவம்ப்ரபஶ்யாமிததாஶ்ருணோமி॥

பதம்.	உரை.	பதம்.	உரை.
(அஹம்)ஸதைவ	(நான்)எப்பொழுதுமே	அநுரூபாம்	தகுந்த
ராமராமேதி	இராமராமாவென்று [ம்	கதாம்	கதையையும்
புத்யா-விசிந்த்ய	புத்தியினுல்-நன்றுயெண்ணிகொண்டு	ததா-ஶ்ருணோமி	அப்படியே-கேட்கிறேன்
தமேவ	அதையே [ப்பதனுல்)	தம்-அர்த்தம்ச	அந்த-கதையினர்த்தத்தையும்
வாசா-ப்ருவதீ	வாக்கினுல்-சொல்லிகொண்டும் (இரு	ஏவம்-ப்ரபஶ்யாமி	சொன்னபிரகாரம் - பார்க்கிறேன்
தஸ்ய	இந்த (ஸ்ரீராகவசிந்தைக்கு)		(அறிகிறேனென்றர்த்தம்.)

தா-ம்.—யான்ஸ்ரீராமகதா சிரவணஞ்செய்ததும் வானரதர்சனஞ்செய்ததும் ஸ்வப்னுவஸ்தையல்லாவிடில் இவையுண்டானதற்குக்காரணமென்னெனில், யான்நாதனைப்பிரிந்ததுமுதல் அவரது திவ்வியநாமத்தையே வாக்கினுலுச்சரித்துக்கொண்டிருக்கிறேன். அவரதுதிவ்விய மங்களவிக்கிரகத்தை யென்மனத்தினில்வைத்து அவருடையதிவ்வியசரிதங்களையே ஸதாதியானித்துவருகிறேன். இப்படிமனமும் வாக்குமொன்றுபட ஸ்ரீராகவசிந்தையே மேலிட்டிருக்கிற வென்மனோபாவத்திற்கிணங்க அவரதுபுண்ணியகதையை இப்பொழுதுசெவியுற்றனன், அப்புண்ணியகதையின் அர்த்தத்தையறிந்தனன். இதுஇடைவிடா சிந்தையின்காரியமல்லதுவேறல்ல.

౧౨. అహం హి తస్యాద్య మనోభవేన సంపీడితా తద్గతసర్వభావా। విచింతయంతీ సతతం తమేవ తథైవ పశ్యామి తథా శృణోమి॥

௧௨. 𑌅𑌹𑌂 𑌹𑌿 𑌤𑌸𑍍𑌯𑌾𑌦𑍍𑌯 𑌮𑌨𑍋𑌭𑌵𑍇𑌨 𑌸𑌂𑌪𑍀𑌡𑌿𑌤𑌾 𑌤𑌦𑍍𑌗𑌤𑌸𑌰𑍍𑌵𑌭𑌾𑌵𑌾।
𑌵𑌿𑌚𑌿𑌨𑍍𑌤𑌯𑌨𑍍𑌤𑍀 𑌸𑌤𑌤𑌂 𑌤𑌮𑍇𑌵 𑌤𑌥𑍈𑌵 𑌪𑌶𑍍𑌯𑌾𑌮𑌿 𑌤𑌥𑌾 𑌶𑍃𑌣𑍋𑌮𑌿॥

௧௨. அஹம்ஹிதஸ்யாத்யமநோபவேநஸம்பீடிதாதத்கதஸர்வபாவா।
விசிந்தயந்தீஸததம்தமேவததைவபஶ்யாமிததாஶ்ருணோமி॥

பதம்.	உரை.	பதம்.	உரை.
அஹம்	நான் [யால்)	ஸததம்-தமேவ	எப்பொழுதும்-அவரையே [லால்)
தஸ்ய	அந்த(ஸ்ரீராகவனுக்கு உரியவளாகை	சிந்தயந்தீ	எண்ணிக்கொண்டிருப்பவளும் (ஆத
தத்கதஸர்வபாவா	அவரையடைந்த ஸமஸ்தமனோபாவமுடையவளும், அதனுலே)	அத்ய	இப்பொழுது
		ததைவ-பஶ்யாமி	அப்படியே-பார்க்கிறேன்
மநோபவேந	மன்மதனுல்	ததா-ஶ்ருணோமி	அப்படியே-கேழ்க்கிறேன்.
ஸம்பீடிதா	நன்றுய்பீடிக்கப்பட்டவளும்		

தா-ம்.—யான்ஸ்ரீராகவனுக்கே யுரியதர்மபத்தினியாதலால், அவரைப்பிரிந்தவிப்பொழுது மன்மதனுலளவின்றிதபிக்கப்படுகிறேன். என்மனமுழுது மவ்வரையடைந்துவிட்டது. ஸதா அம்மங்களமூர்த்தியையேதியானித்திருக்கிறேன். இப்படி அனன்யபாவமுடையளானவெனக்கு என்னுதனைக்காண்பதுபோலும், அவரதுதிருக்கதையைக்கேட்பதுபோலும்தோன்றுகிறது. இதெல்லாம்மனோவிகாரமின்றிவேறல்ல.

௧௩. మనోరథస్స్యాదితిచింతయామితథాపిబుద్ధ్యాచవితర్కయామి। కింకారణంతస్యహినాస్తిరూపంసువ్యక్తరూపశ్చవదత్యయంమామ్॥

கங. [illegible]

[illegible]

கங. மநோரதஸ்யாதிதிசிந்தயாமிததாபிபுத்யாசவிதர்கயாமி।
கிம்காரணம்தஸ்யஹிநாஸ்திரூபம்ஸுவ்யக்தரூபம்ச வதத்யம்மாம்॥

பதம்.	உரை.	பதம்.	உரை.
மநோரதஃ	(ராமனுமானவைச்சொல்லுகிறவனுடைய தர்சனம்) அபிலாஷைமாத்திரம்	கிம்-காரணமிதிசேத்	என்ன-காரணமென்ருல்
ஸ்யாத்-இதி	ஆகிறது-என்று	தஸ்ய-ரூபம்	அம்மனோரதத்திற்கு - ஆகாரமானது
சிந்தயாமி	எண்ணுகிறேன்	நாஸ்தி	இல்லே
ததாபி	அப்படிஎண்ணமிருந்தபோதிலும்	அயம்ஹி	இவ்வானரனேவென்ருல் [னுகவும்
புத்யா-விதர்க்கயாமி	புத்தியினல் - விசேஷமாக தர்க்கிக்கிறேன்	ஸுவ்யக்தரூபம்ச	ஸுஷ்டுவான வானரரூபமுடையவ
		மாம்-வததிச	என்னை (குறித்து) சொல்லவும்சொல்லுகிருன்.

தா-ம்.—இந்தவிதம் ஸ்ரீராகவனேக்குறித்துக்கேட்டதும் அறிந்ததும் மனோரதத்தின் காரியமென்றே யெண்ணுகிற வெனக்கோர்ஸந்தேகமுண்டாகிறது. மனோரதத்திற்கு ரூபமில்லேயல்லவோ. இதோவென்னெதிரிலிருக்கும்வானரன் வியக்தமானரூபத்துடன்நிற்பதுமன்றி என்னைக்குறித்து வசனங்களுமொழிகின்றனனே. இதுமனோரதத்தின் செய்கையாகுமோ! இதற்கென்னகாரணமோவறியேன்.

(அவதாரிகை.) இந்தவிதம், மாருதியினுடைய தர்சனத்தைப்பற்றி பிராட்டிபலவாறுயோசித்தனள். அந்தரூபமும்ஒளியும் புத்திசதுரமும் வானரனுக் கஸம்பவியமாதலால், இதேதோமாயாவிசேஷமென்றுநடுங்கினுள். ஒருவேளே ஸ்வப்னவஸ்தையாயிருக்குமென்றெண்ணி, ஸ்வப்னத்தில் வானரதர்சனம் துக்கஹேதுவாயிற்றேயென்றுபதைத்தாள். துக்கசிந்தாபரையான தனக்கு ஸ்வப்னமுண்டாவதைப்பரிகரித்து,சிந்தையால்உன்மாதாவஸ்தையடைந்து ஸ்ரீராகவகதையைக்கேட்கிறதுபோலும் அறிகிறதுபோலுமிருக்கலாம், ஆனல்வியக்தமானரூபத்தோடு பிரத்தியக்ஷமாய்ப்பேசுகிற இவ்வானரதர்சன மப்படியுண்டாகாதேயென்றுயோசித்தாள். இப்படி காலதேசவர்த்தமானங்களோடொத்த காரணத்தையறியாவிடினும் வானரன்மொழிந்தநன்மொழிகள் ஸத்தியமாகட்டுமென்று தேவதாப்பிரார்த்தனே செய்கின்றனள்.

௧௪. నమోస్తువాచస్పతయేసవజ్రిణేస్వయంభువేచైవహుతాశనాయచ। అనేనచోక్తంయదిదంమమాగ్రతోవనౌకసాతచ్చతథాస్తునాన్యథా॥

கச. [illegible]

[illegible]

கச. நமோஸ்துவாசஸ்பதயேஸவஜ்ரிணேஸ்வயம்புவேசைவஹுதாசநாயச।
அநேநசோக்தம்யதிதம்மமாக்ரதோவநௌகஸாதச்சததாஸ்துநாந்யதா॥

இதி ஸ்ரீ[illegible]காண்டே - [illegible]ஸர்கஃ.

பதம்.	உரை.	பதம்.	உரை.
ஸவஜ்ரிணே	வஜ்ஜிரபாணியானஇந்திரனேடேகூடின	அநேந-வநௌகஸா	இந்த-வானரனலே
வாசஸ்பதயே	பிருஹஸ்பதியின்பொருட்டும்	இதம்-யத்	இந்த-எந்த- சரித்திரமானது)
ஸ்வயம்புவேசைவ	பிருஹ்மாவையும்பொருட்டும்	மம-அக்ரதஃ	எனக்கு-முன்பாக
ஹுதாசநாயச	அக்கினிபகவானையும்பொருட்டு	உக்தம்	சொல்லப்பட்டதோ
நமஃ-அஸ்து	நமஸ்காரம்-ஆகுக	தத்-ததா-அஸ்து	அது-அப்படியே-ஆகட்டும்.

தா-ம்.—ஸர்வசத்துருக்களேயு நிபாதஞ்செய்கிற வஜ்ஜிராயுதந்தாங்கிய மஹேந்திரனுக்குநமஸ்காரம். ஸர்வஜகத் பாவனங்களான நான்மறைகள் நவிலும் பரிசுத்த வாக்குடைய பிரஹஸ்பதிக்கு நமஸ்காரம். ஸ்ரீமந்நாராயணனுடைய நாபிக்கமலத்திலிருந்து ஜனித்தமஹாப்பிரபுவான பிரம்மாவுக்கு நமஸ்காரம். யக்ஞியஆஹுதிகளே யுண்டு ஸர்வஜகத்தையும் பாவனமாகச்செய்கிற அக்கினிபகவானுக்கு நமஸ்காரம். இவ்வானரனிப்பொழுது சொன்ன யாவத்தும் ஸத்தியமாகட்டும். என்னுடைய நாதனை ஸ்ரீரகுநந்தனனுக்கு மெனக்கு மவ்வண்ணமே மங்களமுண்டாகக்கடவதாக, என்றிவ்விதம் பிராட்டி மஹேந்திரனேயும், பிரஹஸ்பதியையும், அக்கினிபகவானேயும், பிரம்மாவையும் நமஸ்கரித்து, வானரதர்சன மெக்காரணத்தாலுண்டானதாயினும், அவன்மொழிந்த நல்வசனங்கள் யாதொருதோஷத்தாலும் பாதிக்கப்படாமல் ஸத்தியமாகி தனது பர்த்தா தன்னையடைந்து நித்திய ஸ்ரீமானுய் வாழ்ந்திருக்க அனுக்கிரகிக்க வேண்டுமென்று பிரார்த்தித்தனள்.

ஸ்வாமிப்பிராயம்.

ப்ரும்ஹா-ப்ருஹஸ்பதி - மஹேந்திரன் - அக்கினி என்று ஸாதாரணநாமங்களைச் சொல்லலாது, வாசஸ்பதி, வஜ்ரி, ஸ்வயம்பூஃ ஹுதாசநஃ என்கிற விசேஷநாமங்களைச் சொல்வதற்கபிப்ராயமென்னென்னில், பின்வருவாறு. "வாசஸ்பதயே-" ஸமஸ்த வாக்குகளுக்கும் பதியாயிருக்கிற தேவரீர் இப்பொழுதிந்த வானரனல் எது சொல்லப்பட்டதோ அதையப்படியே தலைக்கட்டித்தரும்படி தெண்டன் ஸமர்ப்பிக்கிறேனென்ருள். "வஜ்ரிணே-" நீ கையில் பிடித்திருக்கிற வஜ்ஜிராயுதமானது அழகுக்கல்ல,விரோதி நிரஸநார்த்தமாதலால் இப்பொழுது ஒரு விரோதமும் வாராமல் இவ்வாக்கை நிலைநிறுத்தித்தரவேணுமென்று இந்திரனை தெண்டனிட்டாள். "ஹுதாசநாய-" எனது பாணிக்கிரகணகாலத்தில் தேவரீர் மத்தியஸ்தராயிருந்தன்றோ

என்னை ஸ்ரீராகவனோடு சேர்ப்பித்தீர், அப்படியே இப்பொழுது பதியும் நானும் பிரிந்திருக்கிற துக்கத்தை நீக்கி இருவரையும் ஒன்றுசேர்த்து உம்முடைய கடகக்ருத்தியத்தை நிலைநிறுத்தக் கிருபைபுரியீரென்று அக்கினியை நமஸ்கரித்தாள். "स्वयंभुवे" இதரரைப்போலன்றி ஸ்ரீமந்நாராயணனுடைய நாபிக்கமலத்தில் அவதரித்து ஸர்வசக்தியையுமடைந்து ஸமஸ்தப்பிராணிகளின் கோரிக்கைகளையு மீடேற்றவல்ல தேவரீர் இம்மங்களகரமான வார்த்தை கடலோசையாய் விடாமல் ஸபலமாக்கித் தரவேணுமென்று பிரம்மாவைத் தெண்டனிட்டாள். "च," இந்த சகாரத்தால் ஸமஸ்த தேவதைகளைக்குறித்து நமஸ்காரம் செய்கிறாளென்பது குறிக்கப்படுகிறது. என்னுதனை ஸ்ரீராகவனுடைய பட்டாபிஷேகத்தை மந்தரைமுகமாய்க் கலைத்ததுபோல் இப்பொழுதும் என் பாக்கியோதய ஸூசகமான இவ்வாக்கியத்தை நீங்களொன்றுகூடி கலைக்கமுயலாது ஸபலமாக்குங்களென்று ஸகல தேவர்களையும் தெண்டனிட்டாளாகவுமாம்.

ஸகல தேவகணங்களும் ஸமயத்திற்குச் சிரகாலம் காத்து வந்திக்கத்தக்க சரணநளினங்களுடைய வகிலலோகஜனனியானவள். (दैवतैर्दैवतं देवा हेतुकीर्तिमनुत्तमाम्। विष्णोर्देवस्य महतः श्रियं वक्षसि सेविताम्॥) என்கிறபடியேதன்னுயகனானஸர்வேச்வரனுக்கனுரூபமாய் (विदेहराजस्य सुता सीता) என்கிறபடியே அவன் ரகுகுலத்தில் தசரதசக்கிரவர்த்திக்கு திருக்குமாரனாய் ஸ்ரீராமநாமாங்கிதனாய் வந்தவதரிக்கக, தானும் (रावणस्य वधार्थाय) என்கிறபடியே, ஜனகசக்கிரவர்த்தி ஓர் வேள்விசெய்யக்கோலி பூகர்ஷணம்செய்ய அதில்நின்றும் ஸீதேதிநாமாங்கிதையாய் பொற்கொடிபோல்தோன்றி பின்னிருவரும் மணம்புரிந்து பிராகிருதரைப்போல் காலத்திற்குக் கட்டுண்டு தண்டகாவனம்சென்று அங்கொரு பர்ணசாலையில் எழுந்தருளி இருக்கும்பொழுது "இராவணன் பிரித்தானென்றொரு வியாஜத்தாலே (அகலகில்லேனிறையுமென்றலர்மேல்மங்கையுறைமார்பா) என்கிறபடியே அவனைவிட்டு ஒருக்ஷணமும்பிரிந்து ஸகிக்கவறியாததான் இப்படி நெடுநாள் பிரிந்து (படாதனபட்டுமனிசர்க்காய்) என்கிறபடியே ஸகல சேதநவர்க்கங்களையீடேற்றி ஸமஸ்ததேவஸ்திரீகளின்சிறையைநீற்குநிமித்தம் தான் சிறையிருந்து இந்த ஸாமான்னிய தேவதைகளையும் வணங்கி பிரார்த்தியாநின்றாள். இவள் கிருபாதிசயமிருக்கும்படி என்!

ஸ்ரீஸந்மநோரஞ்ஜநீ நாமத்திராவிட வியாக்யாந ஸஹிதமான ஸுந்தரகாண்டத்தில்

முப்பத்திரண்டாவது ஸர்க்கம் - முற்றிற்று.

முப்பத்துமூன்றாவது ஸர்க்கம்.

౧ సోవతీర్య ద్రుమాత్తస్మాద్విద్రుమప్రతిమాననః । వినీతవేషః కృపణః ప్రణిపత్యోపసృత్య చ ॥
౨. తామబ్రవీన్మహాతేజా హనూమాన్మారుతాత్మజః । శిరస్యంజలిమాధాయ సీతాం మధురయా గిరా ॥

௧. सोऽवतीर्य द्रुमात्तस्माद्विद्रुमप्रतिमाननः।
विनीतवेषः कृपणः प्रणिपत्योपसृत्य च॥

௨. तामब्रवीन्महातेजा हनूमान्मारुतात्मजः।
शिरस्यञ्जलिमाधाय सीतां मधुरया गिरा॥

௧. ஸோவதீர்யத்ருமாத்தஸ்மாத்வித்ருமப்ரதிமாநநः।
விநீதவேஷःக்ருபணःப்ரணிபத்யோபஸ்ருத்யச॥

௨. தாமப்ரவீந்மஹாதேஜாஹநுமாந்மாருதாத்மஜः।
ஶிரஸ்யஞ்ஜலிமாதாயஸீதாம்மதுரயாகிரா॥

பதம்.	உரை.	பதம்.	உரை.
வித்ருமப்ரதிமாநநः	பவழத்திற்கொப்பான முகமுடையவரும்	உபஸ்ருத்ய	ஸீதையின் ஸமீபம்போய்
மஹாதேஜாः	மிகதேஜஸ்ஸுடையவரும்	ஶிரஸி-அஞ்ஜலிம்-ஆதாய	தலையின்மீது - கைகூப்புகிறதை செய்துகொண்டு
மாருதாத்மஜः	வாயுபுத்திரருமான	ப்ரணிபத்யச	தண்டனுமிட்டு
ஸः-ஹநுமாந்	அந்த-ஹநுமாரானவர்	மதுரயா-கிரா	செவிக்கின்பமான-வாக்கினல்
தஸ்மாத்-த்ருமாத்-அவதீர்ய	அம்மரத்தினின்று-இரங்கி	தாம்-அப்ரவீத்	அப்பிராட்டியைக்(குறித்துச்) சொன்னார்.
விநீதவேஷः	விநயத்தால்அலங்காரமுடையவராக		
க்ருபணः	(ஸீதையின் துர்த்தசையைக் கண்டு தானும்) தீனனாக		

தா-ம்.—பவழம்போற்சிவந்து மிகுந்ததேஜஸ்ஸோடுவிளங்கு மவ்வாயுபுத்திரன், விபரீதஜ்ஞையாய்ப் புலம்பும் ஜானகியினுடையபிரலாபத்தைக்கேட்டு, இவ்வியஸனத்திற்குத்தான் காரணமானதுகண்டு மிகவு மனமுளைந்து தைன்னியநிலையைக்கொண்டவராய் அவ்வியர்த்தமான வியஸனத்தைப்போக்கி அன்னையைத் தேற்றுநிமித்தம் இராக்ஷஸிகளுறங்கும்ஸமயமான வத்தருணத்தில், விருக்ஷக்கிளையைவிட்டிரங்கி, ஸ்ரீராகவ பார்யையும் ஸர்வலோகமாதாவுமான அந்தஜகத்ரக்ஷகியினுடைய ஸந்நிதியின்பெருமைக்கிணங்க, மிகுந்த விநீதபாவத்துடன், சிரஸிலஞ்சலிசெய்துகொண்டு, பிரணிபத்யாதிவந்தனஸஹிதராய், தேவியைஸமீபித்து, துக்கசரங்களாற்புண்பட்ட வவள் மனமாறும்படி ஐந்திரவியாகரணங் கற்ற தனது பரிசுத்த வாக்கினல் தேனமுதூறும் திவ்வியவசனங்களைமொழிந்தனர்.

(அவதாரிகை.) இந்தவிதம் தேவிஸந்நிதியைச்சேர்ந்தஹநுமான் அவளைப்பின்வருமாறு பிரச்னிக்கிறார்.

3. కానుపద్మపలాశాక్షి క్లిష్టకౌశేయవాసినీ । ద్రుమస్యశాఖామాలంబ్యతిష్ఠసిత్వమనిందితే॥

௩. 𑌕𑌾𑌨𑍁𑌪𑌦𑍍𑌮𑌪𑌲𑌾𑌶𑌾𑌕𑍍𑌷𑌿𑌕𑍍𑌲𑌿𑌷𑍍𑌟𑌕𑍌𑌶𑍇𑌯𑌵𑌾𑌸𑌿𑌨𑍀।
𑌦𑍍𑌰𑍁𑌮𑌸𑍍𑌯𑌶𑌾𑌖𑌾𑌮𑌾𑌲𑌮𑍍𑌬𑍍𑌯𑌤𑌿𑌷𑍍𑌠𑌸𑌿𑌤𑍍𑌵𑌮𑌨𑌿𑌨𑍍𑌦𑌿𑌤𑍇॥

௩. காநுபத்மபலாஶாக்ஷீக்லிஷ்டகௌஶேயவாஸிநீ।
த்ருமஸ்யஶாகாமாலம்ப்யதிஷ்டஸித்வமநிந்திதே॥

பதம்.	உரை.	பதம்.	உரை.
பத்மபலாஶாக்ஷீ	தாமரையிலைபோன்றகண்களையுடையவளே	த்வம்	நீயானவள் [தூக்கொண்டு
க்லிஷ்டகௌஶேயவாஸிநீ	ஜீர்ணமானபட்டுடுத்திருப்பவளே	த்ருமஸ்ய-ஶாகாம்-ஆலம்ப்ய	மரத்தினுடைய-கிளையை-பிடித்
ஹே அநிந்திதே	வாராய் நிந்திக்கத்தகாதவளான (ஸீதே)	திஷ்டஸி-காநு	இருக்கிறாயே-நீஆர்.

౪. కిమర్థంతవనేత్రాభ్యాంవారిస్రవతిశోకజమ్ । పుండరీకపలాశాభ్యాంవిప్రకీర్ణమివోదకమ్॥

௪. 𑌕𑌿𑌮𑌰𑍍𑌥𑌂𑌤𑌵𑌨𑍇𑌤𑍍𑌰𑌾𑌭𑍍𑌯𑌾𑌂𑌵𑌾𑌰𑌿𑌸𑍍𑌰𑌵𑌤𑌿𑌶𑍋𑌕𑌜𑌮𑍍।
𑌪𑍁𑌣𑍍𑌡𑌰𑍀𑌕𑌪𑌲𑌾𑌶𑌾𑌭𑍍𑌯𑌾𑌂𑌵𑌿𑌪𑍍𑌰𑌕𑍀𑌰𑍍𑌣𑌮𑌿𑌵𑍋𑌦𑌕𑌮𑍍॥

௪. கிமர்த்தம்தவநேத்ராப்யாம்வாரிஸ்ரவதிஶோகஜம்।
புண்டரீகபலாஶாப்யாம்விப்ரகீர்ணமிவோதகம்॥

பதம்.	உரை.	பதம்.	உரை.
புண்டரீகபலாஶாப்யாம்	தாமரைஇலையில்நின்று	தவ-நேத்ராப்யாம்	உன்னுடைய்-கண்களிலிருந்து
விப்ரகீர்ணம்	விசேஷமாய்த்ததும்புகிற	ஶோகஜம்-வாரி	துக்கத்தினலுண்டான-ஜலமானது
உதகமிவ	ஜலமானதுபோல்	கிமர்த்தம்-ஸ்ரவதி	என்ன நிமித்தமாக-பெருகுகிறது.

தா-ம்.—பத்மபத்திரம்போலகன்றுநீண்டு ஆக்லாதகரமாகவிளங்கும் திருக்கண்களையுடைய ஹேஸுந்தரி! நினதுவடிவழகும், வபுவொளியும், தனுலக்ஷணமுங்கண்ணுமின், உன்னதபதவியிலாவிர்ப்பவித்தஉத்தமஸ்திரீபோல்காணப்படுகிறாய், ஆனால்மிகவுங்கிழிந்த மலினமான பட்டுவஸ்திரம்தரித்திருக்கிறாய், புண்டரீகத்தினின்றுதிரு முதகம்போல் நினதுகமலக்கண்களினின்று துக்கநீரைத் தாரைதாரையாகப் பெருக்குகிறாய். இராஜஸுகங்களுக்கருகையான நீ இவ்வண்ணம் ஆபரணாலங்காரங்களின்றி துக்கநீர்பெருக்கிக்கொண்டு தைன்னியநிலைமையிலிருப்பதற்குக் காரணமென்னே? பதிவிரதை கண்ணீர்விடின் சத்துருவம்சநாசமுண்டாகுமே. பரமபவித்திரையான நீ எக்குலமழிய இப்படிநீர்சொரிகிறாய்? அநிந்திதமானசீலமுடைய வுனக்கு கூந்தலைக்கிளையில்மாட்டி ஆத்மஹத்திசெய்துகொள்ளும்படியான விபத்துவந்ததென்ன? நீயார்? உன்பேரூர்வரலாறென்ன? உனது துக்கத்திற்கும் இவ்விபத்து நிலைமைக்குங்காரணமென்ன! விசதமாகவிளம்ப, ஹேதேவி! கிருபைபுரியவேண்டும்.

౫. సురాణామసురాణాంవానాగగంధర్వరక్షసామ్ । యక్షాణాంకిన్నరాణాంవాకాత్వంభవసిశోభనే॥

௫. 𑌸𑍁𑌰𑌾𑌣𑌾𑌮𑌸𑍁𑌰𑌾𑌣𑌾𑌂𑌵𑌾𑌨𑌾𑌗𑌗𑌨𑍍𑌧𑌰𑍍𑌵𑌰𑌕𑍍𑌷𑌸𑌾𑌮𑍍।
𑌯𑌕𑍍𑌷𑌾𑌣𑌾𑌂𑌕𑌿𑌨𑍍𑌨𑌰𑌾𑌣𑌾𑌂𑌵𑌾𑌕𑌾𑌤𑍍𑌵𑌂𑌭𑌵𑌸𑌿𑌶𑍋𑌭𑌨𑍇॥

௫. ஸுராணமஸுராணம்வாநாககந்தர்வரக்ஷஸாம்।
யக்ஷாணம்கிந்நராணம்வாகாத்வம்பவஸிஶோபநே॥

பதம்.	உரை.	பதம்.	உரை.
ஶோபநே	மங்களஸ்வரூபே!	யக்ஷாணம்	யக்ஷருக்குள்ளாவது
ஸுராணம்வா	தேவர்களுக்குள்ளாவது	கிந்நராணம்வ	கின்னரருக்குள்ளாவது
அஸுராணம்வா	அஸுரர்களுக்குள்ளாவது	கா-த்வம்	யாராக-நீ
நாககந்தர்வரக்ஷஸாம்	நாகர்கந்தருவர்இராக்ஷதர் இவர்களுக்குள்ளாவது	பவஸி	ஆகிறாய்.

౬. కాత్వంభవసిరుద్రాణాంమరుతాంవావరాననే । వసూనాంవావరారోహేదేవతాప్రతిభాసిమే।

௬. 𑌕𑌾𑌤𑍍𑌵𑌂𑌭𑌵𑌸𑌿𑌰𑍁𑌦𑍍𑌰𑌾𑌣𑌾𑌂𑌮𑌰𑍁𑌤𑌾𑌂𑌵𑌾𑌵𑌰𑌾𑌨𑌨𑍇।
𑌵𑌸𑍂𑌨𑌾𑌂𑌵𑌾𑌵𑌰𑌾𑌰𑍋𑌹𑍇𑌦𑍇𑌵𑌤𑌾𑌪𑍍𑌰𑌤𑌿𑌭𑌾𑌸𑌿𑌮𑍇॥

௬. காத்வம்பவஸிருத்ராணம்மருதாம்வாவராநநே।
வஸூநாம்வாவராரோஹேதேவதாப்ரதிபாஸிமே॥

பதம்.	உரை.	பதம்.	உரை.
(ஹே)வராநநே	ஓசிரேஷ்டமானமுகமுடையவளே!	வஸூநாம்	அஷ்டவஸுக்களுக்குள்ளோ
வராரோஹே	உத்தமஸ்திரீயே!	காவா-பவஸி	ஆரோ-ஆகிறாய்
த்வம்-ருத்ராணம்வா	நீ-ஏகாதசருத்திரருக்குள்ளோ	மே	எனக்கு [கிறாய்.)
மருதாம்வ	ஸப்தமருத்துக்களுக்குள்ளோ	தேவதா-ப்ரதிபாஸி	தேவதையாகவிளங்குகிறாய்-(தோன்று

தா-ம்.—உத்தமமான தனுவழகையுடைய ஹேவரானனே! சோகத்திலும் நினதுதேகம் சோபனவத்தாகக்காணப்படுகிறது. இந்ததேஜஸ்ஸுமனுஷியஜாதிக்குலபிக்காதது. தேவதானவாதி ஜாதிகளுளொன்

றைச்சேர்ந்த ஸுந்தரிபோற்காண்கிறாய். ஆகையால், ஸுராஸுரகந்தர்வராக்ஷஸ யக்ஷகின்னரஜாதிகளுள் நீ எஜ்ஜாதிக்குரியாள்? அல்லது, ஏகாதசருத்திரர், ஸப்தமருந்துக்கள், அஷ்டவஸுக்கள், இவர்களுடைய ஜாதியிலொன்றைச்சேர்ந்தவளோ? மனுஷியரூபங்கொண்டவளாயினு முன்னைக்கண்டால் மனுஷியஸ்திரீயாகத்தோற்றவில்லை. ஓர்தேவதைபோலிருக்கிறாய். ஆகையால்நீயார்? உனதுசரித்திரமென்ன? விசதமாகவெனக்குச்சொல்லவேண்டும்.

౭. కిన్ను చంద్రమసా హీనా పతితా విబుధాలయాత్ । రోహిణీ జ్యోతిషాం శ్రేష్ఠా శ్రేష్ఠా సర్వగుణాన్వితా॥

௭. 𑌕𑌿𑌂𑌨𑍁 𑌚𑌨𑍍𑌦𑍍𑌰𑌮𑌸𑌾 𑌹𑍀𑌨𑌾 𑌪𑌤𑌿𑌤𑌾 𑌵𑌿𑌬𑍁𑌧𑌾𑌲𑌯𑌾𑌤𑍍।
𑌰𑍋𑌹𑌿𑌣𑍀 𑌜𑍍𑌯𑍋𑌤𑌿𑌷𑌾𑌂 𑌶𑍍𑌰𑍇𑌷𑍍𑌠𑌾 𑌶𑍍𑌰𑍇𑌷𑍍𑌠𑌾 𑌸𑌰𑍍𑌵𑌗𑍁𑌣𑌾𑌨𑍍𑌵𑌿𑌤𑌾॥

௭. கிந்நுசந்த்ரமஸாஹீநாபதிதாவிபுதாலயாத்।
ரோஹிணீஜ்யோதிஷாம்ஶ்ரேஷ்டாஶ்ரேஷ்டாஸ்ஸர்வகுணாந்விதா॥

பதம்.	உரை.	பதம்.	உரை.
சந்த்ரமஸா-ஹீநா	சந்திரனாலே-விடப்பட்டவளாக	ஶ்ரேஷ்டாஃஸர்வகுணாந்விதா-	உத்தமமானஸமஸ்தகுணங்களோடு கூடினவளுமான
விபுதாலயாத்	ஸுவர்க்கத்திலிருந்து	ரோஹிணீகிந்நு	ரோகிணியாஎன்ன.
பதிதா	விழுந்தவளும்		
ஜ்யோதிஷாம்-ஶ்ரேஷ்டா-	நக்ஷத்திரங்களுக்குள் சிறந்தவளும்		

౭½. కా త్వం భవసి కల్యాణి త్వమనిందితలోచనే।

௭½. 𑌕𑌾 𑌤𑍍𑌵𑌂 𑌭𑌵𑌸𑌿 𑌕𑌲𑍍𑌯𑌾𑌣𑌿 𑌤𑍍𑌵𑌮𑌨𑌿𑌨𑍍𑌦𑌿𑌤𑌲𑍋𑌚𑌨𑍇।

௭½. காத்வம்பவஸிகல்யாணித்வமநிந்திதலோசநே।

பதம்.	உரை.	பதம்.	உரை.
ஹேகல்யாணி	வாராய்சுபகரமானவளே	அநிந்திதலோசநே	நிந்திக்கத்தகாதகண்களையுடையவளே
த்வம்-கா	நீ-யார்	த்வம்-கா-பவஸி	நீ-ஆர்-ஆகிறாய்.

தா-ம்.—ஹேகோமளாங்கி! நினதுஸௌந்தரியமும் தேகபாளபள்ளியமும் அப்பிராகிருதங்களாயிருக்கின்றன. துக்கபீடிதையாயினும் சோபனரூபமுடையளாயிருக்கிறாய். ஏதமிலாவெழில்கொண்ட நேத்திரமுடையளாயிருக்கிறாய். குலஸ்திரீகளுக்குரிய பர்த்திருஸ்நேஹாதி உத்தமகுணங்களோடு கூடியிருக்கிறாய். இவ்வஸாதாரண ரூபலக்ஷணமும் தேஜோவிசேஷமும் குணாதிசயமுங்கொண்டிருக்கிறநீ, ஜியோதிர்மண்டலங்களுக்குள் உத்தமஜ்ஜியோதியுடையளாய், அநுரூபனான சந்திரனைப்பதியாகவடைந்து, காலவசத்தாலப்பிராணநாதனைப்பிரிந்து, ஸ்வர்க்கத்தினின்றுநழுவி பூமியில்விழுந்து அவதிப்படுகிற ஸாக்ஷாத்ரோகிணிதேவியோ? நீயார்? உனதுவரலாற்றைத் தெரிவிக்கக்கிருபைபுரியாய்.

౮. కోపాద్వా యది వా మోహాద్భర్తారమసితేక్షణే। వసిష్ఠం కోపయిత్వా త్వం నాసి కల్యాణ్యరుంధతీ।

௮. 𑌕𑍋𑌪𑌾𑌦𑍍𑌵𑌾 𑌯𑌦𑌿 𑌵𑌾 𑌮𑍋𑌹𑌾𑌦𑍍𑌭𑌰𑍍𑌤𑌾𑌰𑌮𑌸𑌿𑌤𑍇𑌕𑍍𑌷𑌣𑍇॥
𑌵𑌸𑌿𑌷𑍍𑌠𑌂 𑌕𑍋𑌪𑌯𑌿𑌤𑍍𑌵𑌾 𑌤𑍍𑌵𑌂 𑌨𑌾𑌸𑌿 𑌕𑌲𑍍𑌯𑌾𑌣𑍍𑌯𑌰𑍁𑌨𑍍𑌧𑌤𑍀।

௮. கோபாத்வாயதிவாமோஹாத்பர்த்தாரமஸிதேக்ஷணே॥
வஸிஷ்டம்கோபயித்வாத்வம்நாஸிகல்யாண்யருந்ததீ।

பதம்.	உரை.	பதம்.	உரை.
ஹே அஸிதேக்ஷணே	வாராய் கறுத்தகண்களையுடையவளே	கோபயித்வா	கோபம்செய்து
கல்யாணி	மங்களமானவளே	(விபுதாலயாத்)	(ஸுவர்க்கத்திலிருந்துவந்த)
த்வம்-கோபாத்வா	நீ-கோபத்தினாலேயோ	அருந்ததி	அருந்ததீதேவி
யதி-மோஹாத்வா	இல்லாவிடில்-மோஹத்தாலேயோ	நாஸீ	அல்லவா (அருந்ததிஎன்றர்த்தம்.)
பர்த்தாரம்-வஸிஷ்டம்	பதியான-வஸிஷ்டரை		

தா-ம்.—கருநெய்தல்போற் கறுத்தவிழிகளுடையஹேஸுந்தரி! மணக்கோலமழியாச் சோபையுள்ள ஹேநித்தியமங்களே! நீ மூர்க்கத்தன்மையாலாவது அக்கியானத்தாலாவது மஹாதபஸ்வியும் பர்த்தாவுமான வஸிஷ்டரிடத்திற் கோபங்கொண்டு அவரைவிட்டிங்குவந்துவிட்ட அருந்ததீதேவியல்லவா?

౯. కో ను పుత్రః పితా భ్రాతా భర్తా వా తే సుమధ్యమే॥ అస్మాల్లోకాదముం లోకం గతం త్వమనుశోచసి।

௯. 𑌕𑍋 𑌨𑍁 𑌪𑍁𑌤𑍍𑌰𑌃 𑌪𑌿𑌤𑌾 𑌭𑍍𑌰𑌾𑌤𑌾 𑌭𑌰𑍍𑌤𑌾 𑌵𑌾 𑌤𑍇 𑌸𑍁𑌮𑌧𑍍𑌯𑌮𑍇॥
𑌅𑌸𑍍𑌮𑌾𑌲𑍍𑌲𑍋𑌕𑌾𑌦𑌮𑍁𑌂 𑌲𑍋𑌕𑌂 𑌗𑌤𑌂 𑌤𑍍𑌵𑌮𑌨𑍁𑌶𑍋𑌚𑌸𑌿।

௯. கோநுபுத்ரஃபிதாப்ராதாபர்த்தாவாதேஸுமத்யமே॥
அஸ்மால்லோகாதமும்லோகம்கதம்த்வமநுஶோசஸி।

பதம்.	உரை.	பதம்.	உரை.
ஸுமத்யமே	ஸூக்ஷ்மமான இடையுடையவளே	அஸ்மால்லோகாத்	இந்தலோகத்திலிருந்து
தே-புத்ரஃ-கோநு	உனக்கு-புத்திரன்-ஆர்	அமும்லோகம்	பரலோகத்தை
ப்ராதா-பர்த்தா	உடன்பிறந்தவன்-நாயகன் (இவர்கள்) ஆர்.	கதம்	அடைந்த (எந்தபந்துவைக்குறித்து)
		த்வம்-அநுஶோசஸி	நீ-துக்கப்படுகிறாய்.

தா-ம்.—மின்னற்கொடிபோ லதிஸௌக்ஷ்மமும் பிரகாசமும்பொருந்திய விடையுடைய ஹேபரதேவ தே! நீபெற்றெடுத்த புத்திரன்யார்? உன்னுடன்பிறந்தஸகோதரராார்? நீமாலையிட்டநாயகனர்? மண்ணுலகு விட்டு மேலுலகுசேர்ந்த எந்தபந்துவைப்பற்றி இப்போதுக்கிக்கிருய். நீயிழந்தபந்துவார்? உன்னுடன் ஸம்ப ந்தப்பட்டபந்துக்களின்வரலாறென்ன?

౧౦. రోదనాదతినిశ్శ్వాసాద్భూమిసంస్పర్శనాదపి॥నత్వాందేవీమహంమన్యేరాజ్ఞస్సంజ్ఞావధారణాత్।

௧௦. 𑌰𑍋𑌦𑌨𑌾𑌦𑌤𑌿𑌨𑌿𑌶𑍍𑌵𑌾𑌸𑌾𑌦𑍍𑌭𑍂𑌮𑌿𑌸𑌂𑌸𑍍𑌪𑌰𑍍𑌶𑌨𑌾𑌦𑌪𑌿॥
𑌨𑌤𑍍𑌵𑌾𑌂𑌦𑍇𑌵𑍀𑌮𑌹𑌂𑌮𑌨𑍍𑌯𑍇𑌰𑌾𑌜𑍍𑌞𑌃𑌸𑌂𑌜𑍍𑌞𑌾𑌵𑌧𑌾𑌰𑌣𑌾𑌤𑍍।

௧௦. ரோதநாததிஶ்வாஸாத்பூமிஸம்ஸ்பர்ஶநாதபி॥
நத்வாம்தேவீமஹம்மந்யேராஜ்ஞஸ்ஸம்ஜ்ஞாவதாரணாத்।

பதம்.	உரை.	பதம்.	உரை.
ரோதநாத்	அழுவதினலும்	த்வாம்-அஹம்	ன்னை-நான்
அதிஶ்வாஸாத்	அதிகமாகமூச்சுவிடுவதாலும்	தேவீம்	தய்வப்பெண்ணக
பூமிஸம்ஸ்பர்ஶநாதபி	பூமியைத்தொடுவதினலும்[யத்தாலும்	நமந்யே	ண்ணேன்.
ராஜ்ஞ:-ஸம்ஜ்ஞாவதாரணாத்-ராஜாக்களுடைய-லக்ஷணநிச்ச			

தா-ம்.—நீ கண்டம்விட்டுப்புலம்புகிருய். துக்காதிகத்தாற் பெருமூச்செறிகிருய். பாதத்தால்பூஸ்பரி சஞ்செய்கிருய். உனதுதேகத்தில் திவ்வியராஜஸ்திரீலக்ஷணங்களமைந்திருக்கின்றன. இக்காரணங்களாலுன் னை தெய்வப்பெண்ணெனக்கருதேன்.

౧౧. వ్యంజనానిచతేయానిలక్షణానిచలక్షయే॥మహిషీభూమిపాలస్యరాజకన్యాసిమేమతా।

௧௧. 𑌵𑍍𑌯𑌞𑍍𑌜𑌨𑌾𑌨𑌿𑌚𑌤𑍇𑌯𑌾𑌨𑌿𑌲𑌕𑍍𑌷𑌣𑌾𑌨𑌿𑌚𑌲𑌕𑍍𑌷𑌯𑍇॥
𑌮𑌹𑌿𑌷𑍀𑌭𑍂𑌮𑌿𑌪𑌾𑌲𑌸𑍍𑌯𑌰𑌾𑌜𑌕𑌨𑍍𑌯𑌾𑌸𑌿𑌮𑍇𑌮𑌤𑌾।

௧௧. வ்யஞ்ஜநாநிசதேயாநிலக்ஷணநிசலக்ஷயே॥
மஹிஷீபூமிபாலஸ்யராஜகந்யாஸிமேமதா।

பதம்.	உரை.	பதம்.	உரை.
தே-யாநி	உன்னுடைய-எந்த	லக்ஷயே	காணப்படுகின்றனவோ (அவைகளா லே நீ)
வ்யஞ்ஜநாநி	(உத்தமஸ்திரீகளுக்குக்குறிப்பான)அ வயவலக்ஷணங்களும்	பூமிபாலஸ்ய-மஹிஷீ	இராஜாவுக்கு-பட்டஸ்திரீ (என்றும்)
லக்ஷணநி	ஶுபமாக விளங்குகிற ஹஸ்தாதிரே கைகளும்	ராஜகந்யா-அஸி	இராஜகுமாரத்தி ஆகிருய் (என்றும்)
		மே-மதா	என்னுலே-எண்ணப்படுகிறது.

தா-ம்.—னது அவயவலக்ஷணங்களையும் ஹஸ்தாதிப்பிரதேசங்களிலுள்ள ரேகைலக்ஷணங்களையுங் காணின், நீயோர்ராஜகுமாரத்தியென்றும், ஓர்ஸார்வபௌமனுக்கு மாலையிட்டபாக்கியவதியென்றுமெண் ணுகிறேன்.

౧౨. రావణేనజనస్థానాద్బలాదపహృతాయది॥సీతాత్వమసిభద్రంతేతన్మమాచక్ష్వపృచ్ఛతః।

௧௨. 𑌰𑌾𑌵𑌣𑍇𑌨𑌜𑌨𑌸𑍍𑌥𑌾𑌨𑌾𑌦𑍍𑌬𑌲𑌾𑌦𑌪𑌹𑍃𑌤𑌾𑌯𑌦𑌿॥
𑌸𑍀𑌤𑌾𑌤𑍍𑌵𑌮𑌸𑌿𑌭𑌦𑍍𑌰𑌂𑌤𑍇𑌤𑌨𑍍𑌮𑌮𑌾𑌚𑌕𑍍𑌷𑍍𑌵𑌪𑍃𑌚𑍍𑌛𑌤𑌃।

௧௨. ராவணேநஜநஸ்த்தாநாத்பலாதபஹ்ருதாயதி॥
ஸாத்வமஸிபத்ரம்தேதந்மமாசக்ஷ்வப்ருச்சத:।

பதம்.	உரை.	பதம்.	உரை.
த்வம்	நீயானவள்	ஸீதா-அஸியதி	ஸீதையாக-இருப்பாயாகில்
ராவணேந	இராவணனல்	தே-பத்ரம்	உனக்கு மங்களமுண்டாக
ஜநஸ்த்தாநாத்	கரதூஷணதிகளிருப்பிடத்திலிருந்து	தத்-ப்ருச்சத:-மம	அதை-கேழ்க்கிற-எனக்கு
பலாத்-அபஹ்ருதா	பலவந்தமாக-அபகரிக்கப்பட்ட	ஆசக்ஷ்வ	சொல்லு.

தா-ம்.—இவ்விலங்கையர்கோனன இராவணன் ஜனஸ்தானத்திலிருந்து ஸீதையென்பாளொருராஜ மஹிஷியை பர்த்திருரஹிதையாயிருக்குங்கால் பலாத்கரித்துக்கொண்டுவந்துவிட்டான். அந்த ஸீதை நீயா கில் உனக்குமங்களமுண்டாகப்போகிறது; நீபயப்படவேண்டாம், துக்கிக்கவேண்டாம், விபரீதவெண்ணங் கொள்ளவேண்டாம். ஆகையாலுன்னுடைய யதார்த்தநிலைமையயறியவிரும்புகிற வெனக்குவாஸ்தவத்தை யுரைக்கக் கிருபைபுரியாய்.

౧౩. యథాహితవవైదైన్యంరూపంచాప్యతిమానుషమ్॥తపసాచాన్వితోవేషస్త్వంరామమహిషీధ్రువమ్।

௧௩. 𑌯𑌥𑌾𑌹𑌿𑌤𑌵𑌵𑍈𑌦𑍈𑌨𑍍𑌯𑌂𑌰𑍂𑌪𑌂𑌚𑌾𑌪𑍍𑌯𑌤𑌿𑌮𑌾𑌨𑍁𑌷𑌮𑍍॥
𑌤𑌪𑌸𑌾𑌚𑌾𑌨𑍍𑌵𑌿𑌤𑍋𑌵𑍇𑌷𑌸𑍍𑌤𑍍𑌵𑌂𑌰𑌾𑌮𑌮𑌹𑌿𑌷𑍀𑌧𑍍𑌰𑍁𑌵𑌮𑍍।

௧௩. யதாஹிதவவைதைந்யம்ரூபம்சாப்யதிமாநுஷம்॥
தபஸாசாந்விதோவேஷஸ்த்வம்ராமமஹிஷீத்ருவம்।

பதம்.	உரை.	பதம்.	உரை.
தவ-தைந்யம்-யதா	உன்னுடைய-தீனத்துவமானது - எப்படி (இருக்கிறதோ)	தபஸா-அந்விதஃ	தபஸ்ஸோடு கூடினதாக (இருக்கிறது)
ரூபம்ச	(அப்படியே) ஸௌந்தரியமும்	(தஸ்மாத்	இத்தியாதி காரணங்களால்)
அதிமாநுஷம்	மனிதனை விஞ்ஜினதாக (இருக்கிறது)	த்வம்-ராமமஹிஷீ	நீ-ஸ்ரீராகவபத்தினி (தான்)
வேஷஶ்ச	வேஷமும்	த்ருவம்	நிச்சயம்.

தா-ம்.—யாதோகாரணத்தால் தைன்னியநிலையையடைந்தாலும் உனது ரூபலக்ஷணஸௌந்தரியாதிகள் அமானுஷியத்தன்மை கொண்டனவாயிருக்கின்றன. ஸ்ரீராகவனைப்போலவேநீயும் தாபஸவேஷம்பூண்டவளாயிருக்கிறாய். இக்காரணங்களால் அந்தஜகத்பதியினுடைய பிரியமஹிஷியென்றே உன்னைநினைக்கிறேன். இதுநிச்சயந்தான்.

౧౪. సాతస్యవచనంశ్రుత్వా రామకీర్తనహర్షితా॥ ఉవాచవాక్యంవైదేహీ హనుమంతంద్రుమాశ్రితమ్।

கச. [illegible]
[illegible]

கச. ஸாதஸ்யவசநம்ஶ்ருத்வாராமகீர்த்தநஹர்ஷிதா॥
உவாசவாக்யம்வைதேஹீஹநுமந்தம்த்ருமாஶ்ரிதம்।

பதம்.	உரை. (ஸீதை)	பதம்.	உரை.
வைதேஹீ-ஸா	விதேஹத்தரசன் புத்திரியான - அந்த	த்ருமாஶ்ரிதம்	மரத்தினடிவாரத்தை யடைந்திருக்கிற
தஸ்ய-வசநம்-ஶ்ருத்வா-அந்த	(ஹநுமானுடைய) வசனத்தை-கேட்டு	ஹநுமந்தம்(ப்ரதி)	ஹநுமானைக்(குறித்து)
ராமகீர்த்தநஹர்ஷிதா	- ஸ்ரீராகவனைச்சொல்வதினால் ஸந்தோஷித்தவளாக	உவாச	(பின்வருமாறு) மொழிந்தாள்.

தா-ம்—இந்தவிதம்விபரீதக்கியையாய்ப்பிரலாபித்தபிராட்டி ஹநுமானுடையமிருதுபாஷணத்தைக் கேட்டு ஸமாதானமடைந்து, அவர்செய்த ஸ்ரீராகவகதாஸங்கீர்த்தனத்தால் பரமஸந்துஷ்டையாகி, துக்கார்ணவமக்னையாயினும் என்னமோ கேழ்க்கிறானென்றிராமல், தனதுபெருந்தன்மை வெளிவிளங்க, அந்ருதமொழியாவாக்கினால் தனதுசரித்திரத்தை யுள்ளபடிபின்வருமாறு மொழியலுற்றனள்.

౧౫. పృథివ్యాంరాజసింహానాంముఖ్యస్యవిదితాత్మనః॥ స్నుషాదశరథస్యాహంశత్రుసైన్యప్రతాపినః।

கரு. [illegible]
[illegible]

கரு. ப்ருதிவ்யாம்ராஜஸிம்ஹாநாம்முக்யஸ்யவிதிதாத்மநஃ॥
ஸ்நுஷாதஶரதஸ்யாஹம்ஶத்ருஸைந்யப்ரதாபிநஃ।

பதம்.	உரை.	பதம்.	உரை.
அஹம்	நான்	விதிதாத்மநஃ	ஆத்மஸ்வரூபமறிந்தவரும்
ப்ருதிவ்யாம்	பூமியில்	ஶத்ருஸைந்யப்ரதாபிநஃ-பகையாளிகளின்	சேனைகளை மிகதபிக்கும்படி செய்பவருமான
ராஜஸிம்ஹாநாம்	இராஜசிரேஷ்டருக்குள்		
முக்யஸ்ய	தலைவரும்	தஶரதஸ்ய-ஸ்நுஷா	தசரதருக்கு-நாட்டுப்பெண்.

౧౬. దుహితాజనకస్యాహంవైదేహస్యమహాత్మనః॥ సీతేతినామనామ్నాహంభార్యారామస్యధీమతః।

கசு. [illegible]
[illegible]

கசு. துஹிதாஜநகஸ்யாஹம்வைதேஹஸ்யமஹாத்மநஃ॥
ஸீதேதிநாமநாம்நாஹம்பார்யாராமஸ்யதீமதஃ।

பதம்.	உரை.	பதம்.	உரை.
அஹம்	நான்	அஹம்	நான்
வைதேஹஸ்ய	விதேஹதேசத்தரசனும்	தீமதஃ-ராமஸ்ய-பார்யா-தீமானன-ஸ்ரீராகவனுக்கு-பத்தினி	
மஹாத்மநஃ-ஜநகஸ்ய	சிறந்த ஸ்வபாவமுமுடையவரான-ஜனகருடைய	நாம	பெயரினால்
துஹிதா	புத்திரி	ஸீதேதி-நாம	ஸீதையென்று-பிரஸித்தம்.

౧౭. సమాద్వాదశతత్రాహంరాఘవస్యనివేశనే॥ భుంజానామానుషాన్భోగాన్సర్వకామసమృద్ధినీ।

கஎ. [illegible]
[illegible]

கஎ. ஸமாத்வாதஶதத்ராஹம்ராகவஸ்யநிவேஶநே॥
புஞ்ஜாநாமாநுஷாந்போகாந்ஸர்வகாமஸம்ருத்திநீ।

பதம்.	உரை.
தத்ர	(என்மாமனருடைய) மாளிகையில்
ராகவஸ்ய-நிவேஸநே	ஸ்ரீராகவனுடைய கிருஹத்தில்
அஹம்-ஸர்வகாமஸம்ருத்திநீ	நான்-ஸமஸ்த கோரிக்கைகளுடைய பூர்ணமுடையவளாக

பதம்.	உரை.
த்வாதஸ-ஸமாஃ	பன்னிரண்டு-ஸம்வத்ஸரம்
மாநுஷாந்-போகாந்	மனிதஸம்பந்தமான-போகங்களை
புஞ்ஜாநா	அனுபவித்தவளாக (ஆனேன்.)

౧౮. తత్రత్రయోదశేవర్షే రాజ్యేనేక్ష్వాకునందనమ్॥ అభిషేచయితుం రాజా సోపాధ్యాయః ప్రచక్రమే।

க௮. [illegible]

க௮. தத்ரத்ரயோதஸேவர்ஷேராஜ்யேநேக்ஷ்வாகுநந்தநம்॥
அபிஷேசயிதும்ராஜாஸோபாத்யாயஃப்ரசக்ரமே।

பதம்.	உரை.
தத்ர	அவ்விடத்தில்
த்ரயோதஸே-வர்ஷே	பதிமூன்றாவதான வருஷத்தில்
ராஜா	தசரதமஹாராஜாவானவர்
ஸோபாத்யாயஃ	உபாத்தியாயரோடுகூடினவராக

பதம்.	உரை.
இக்ஷ்வாகுநந்தநம்	ஸ்ரீராகவனை
ராஜ்யேந	அரசுபுரிவதால்
அபிஷேசயிதும்	பட்டாபிஷேகம்செய்வதற்கு
ப்ரசக்ரமே	ஆரம்பித்தார்.

౧౯. తస్మిన్ సంభ్రియమాణేతు రాఘవస్యాభిషేచనే॥ కైకేయీనామ భర్తారం దేవీ వచనమబ్రవీత్।

க௯. [illegible]

க௯. தஸ்மிந்ஸம்ப்ரியமாணேதுராகவஸ்யாபிஷேசநே॥
கைகேயீநாமபர்த்தாரம்தேவீவசநமப்ரவீத்।

பதம்.	உரை.
தஸ்மிந்	அந்த தசரதமஹாராஜா
ராகவஸ்ய - அபிஷேசநே	ஸ்ரீராகவனுடைய - அபிஷேக நிமித்தம்
ஸம்ப்ரியமாணே(ஸதி)	ஸாமக்ரீஸம்பாதிக்கையில்

பதம்.	உரை.
கைகேயீநாம-தேவீ	கைகேயியென்கிற-தேவியானவள்
பர்த்தாரம்	நாயகனைக்(குறித்து)
வசநம்-அப்ரவீத்	(இனிவரும் விதம்) வார்த்தையை - சொன்னாள்.

౨౦. నపిబేయం నఖాదేయం ప్రత్యహం మమ భోజనమ్॥ ఏష మే జీవితస్యాంతో రామో యద్యభిషిచ్యతే।

௨௦. [illegible]

௨௦. நபிபேயம்நகாதேயம்ப்ரத்யஹம்மமபோஜநம்॥
யேஷமேஜீவிதஸ்யாந்தோராமோயத்யபிஷிச்யதே।

பதம்.	உரை.
ராமஃ-அபிஷிச்யதேயதி	ஸ்ரீராகவன்-அபிஷேகம் பண்ணப்பட்டானாகில்
ப்ரத்யஹம்-மம	தினந்தோறும்-என்னுடைய (ஸம்பந்தமான)
போஜ்யம்	தின்னத்தகுந்தது குடிக்கத்தகுந்தது இதுமுதலான எல்லாவற்றையும்

பதம்.	உரை.
நபிபேயம்	குடியேன்
நகாதேயம்	தின்னேன்
ஏஷஃ	இந்த பட்டாபிஷேகமானது
மே-ஜீவிதஸ்ய-அந்தஃ	என்னுடைய-உயிருக்கு - முடிவு (ஆகும்.)

౨౧. యత్తదుక్తం త్వయా వాక్యం ప్రీత్యా నృపతిసత్తమ॥ తచ్చేన్న వితథం కార్యం వనం గచ్ఛతు రాఘవః।

௨௧. [illegible]

௨௧. யத்ததுக்தம்த்வயாவாக்யம்ப்ரீத்யாந்ருபதிஸத்தம॥
தச்சேந்நவிதத்தம்கார்யம்வநம்கச்சதுராகவஃ।

பதம்.	உரை.
(ஹே) ந்ருபதிஸத்தம	வாரீர் இராஜசிரேஷ்டனே
ப்ரீத்யா-த்வயா	அன்போடு-உன்னாலே
யத்-வாக்யம்	எந்தவரதானரூபமான-வாக்கியமானது
(ததா).உக்தம்-முன்பு	சொல்லப்பட்டதோ

பதம்.	உரை.
தத்-விததம்	அதை-வீணாக
நகார்யம்சேத்	செய்யாமலிருக்கவேண்டுமாகில்
ராகவஃ-வநம்-கச்சது	ஸ்ரீராகவன் வனத்தைக்(குறித்து) போகட்டும்.

(கரு-மு-உக-ல்.) தா-ம்.—பூவுலகாளும் ந்ருபகேஸரிகளுக்குள் முக்கியரும் சத்துருஸைந்யங்களைத் தபிக்கச்செய்தாணதீரனும்ஸர்வதிசைகளிலும் நிர்விக்கினமாகச்செல்லக்கூடியஇரதமுடையோனும்ஆத்மக்கியானமுள்ளபெரியோனுமான தசரதமஹாராஜாவென்கிற அயோத்தியாமன்னனுக்குநான் தலைமைநாட்டுப்பெண். மஹாக்கியாதாவும்விதேகதேசத்தையாள்பவருமானஜனகமஹாராஜாவுக்கு ஸாக்ஷாத்புத்திரி. ஸர்வக்கியனும் ஸகலஜனேல்லாஸகனுமான ஸ்ரீரகுநாதனுக்குப்பார்யை. என்னை ஸீதையென்றனைவரு மழைப்பார்கள்.

பாணிக்கிரகானந்தரம்யான்ஸ்ரீராகவனோடு அயோத்திசேர்ந்துமனிதர்காமுறக்கூடிய ஸகலபோகங்களையுங்குறைவின்றியடைந்து பன்னிரண்டுவருஷகாலம் பதிஸஹிதையாய்ப்பேரானந்தத்துடன்பெருவாழ்க்கை புரிந்தனன். பதின்மூன்றாவதுவருஷாரம்பத்தில் எனதுமாமனாரான அந்தஸார்வபௌமன், உத்தமதேஜோபராக்கிரமகுணவிசேஷங்களால் இக்ஷ்வாகுகுலத்தினானந்தத்தையபிவிர்த்திசெய்கிற ஜ்யேஷ்டபுத்திரனை ஸ்ரீரகுநாதனுக்கு மகுடாபிஷேக மகோத்ஸவஞ்செய்து களிக்குநிமித்தம், குலகுருவஸிஷ்டபகவானை முன்னிட்டுக்கொண்டு தகுந்தபிரயத்தினங்கள்செய்தார். அவருடையபட்டமஹிஷிகள் மூவருள் இளையவளும் அதிபூஜ்யையும் கைகேயியென்று நாமதேயம்பூண்டவளுமான வென்மாமி இராஜா இந்தவிதம் ஜ்யேஷ்டபுத்திர பட்டாபிஷேகோத்ஸுகராய் நகராலங்காரமுதலிய மஹாப்பிரயத்தினங்களுபக்கிரமித்திருக்கிறாரென்பதைக்கேட்டு, சக்கிரவர்த்தி தன்னிடம்வரும் ஸமயம்பார்த்தவரைக்குறித்துப்பின்வருமாறுமொழிந்தனள். ஹேமஹாராஜ! எனதாவியைப்போக்க நற்காரியமொன்று நன்றாகச்செய்தீர்! இராமனுக்கபிஷேகமாம், நகரமுழுது மலங்காரமாம், இராஜ்ஜியமுழுதுமதிகோலாகலமாம்! இதுநற்காரியமே. இராமனுக்குமுடியுஞ்சூட்டலாம், உடனேகைகேயிக்கு உத்தரக்கிரியையுஞ்செய்யலாம்! ஹேராஜன்! எனதுகட்டளையைக்கேளும. இராமனுக்கு மகுடாபிஷேகஞ்செய்யப்பட்டதாகில் அக்கணமுதல் யானுண்ணேன், பானஞ்செய்யேன், அதேவியாஜமாகப்பிராணனையொழிப்பேன். கைகேயிமுடிவைக்காணவேண்டுமானால் இராமனுக்குமுடிசூட்டும், இல்லாவிடில்யான்சொல்வதைக்கேளும். நீரோ இராஜாதிராஜன், ஸார்வபௌமகுலோத்பவன், இரவிகுலதிலகன், ஸத்யஸந்தன், விரும்பியதளிக்கும்வரப்பிரஸாதி, உம்மிடத்திலோர் விக்கியாபனஞ் செய்துகொள்ளுகிறேன், அதைக்கொஞ்சம் கேட்டருளீர். முன்னொருக்கால் சம்பராஸுரயுத்தத்தில் உமக்கோ ராபத்துவந்தவிடத்து யான்கைகொடுத்து ரக்ஷித்ததுண்டோ? எனதுபேருதவியைக்கண்டு மனமகிழ்ந்து, பிரதியொன்றுமிச்சியாத வென்னைப்பார்த்துப் பிரீதிவசத்தால், யான்விரும்பியபொழுது ஸபலமாக்கிக்கொள்ளுகிறதென்கிற அதிகாரமுட்கொண்ட இரண்டுவரங்களெனக் கும்மாலளிக்கப்பட்டதுண்டோ? அவ்வரங்களளித்த உமதுவாக்கு ஸத்தியவாக்காகவேண்டுமானால், நீர் அறுபதினாயிரவருஷம் ஸத்தியஸந்தரா யரசாண்டபெருமை நிலைநிற்கவேண்டுமானால், அவ்விரண்டுவரங்களையு மிப்பொழுது நீர்ஸபலமாக்கியருளவேண்டும். அவைகளுள் முதல்வரத்திற்குயான்கோரும்பலன் யாதெனில் நாளைமகுடமேந்தப்போகிற இராமன்இன்றேஅடவியேகவேண்டும். பீதாம்பரம்தரித்து ஸிம்ஹாஸனமேறப்போகுமிராகவன் மரயுரிதரித்துக் கிருஷ்ணாஜனங்கொண்டு கானேறவேண்டுமென்றனள்.

౨౨. సరాజా సత్యవాగ్దేవ్యా వరదానమనుస్మరన్ ॥ ముమోహవచనంశ్రుత్వా కైకేయ్యాః క్రూరమప్రియమ్ ।

௨௨. [illegible] ॥
[illegible] ।

௨௨. ஸராஜாஸத்யவாக்தேவ்யாவரதாநமநுஸ்மரந்॥
முமோஹவசநம்ஶ்ருத்வாகைகேய்யா:க்ரூரமப்ரியம்।

பதம்.	உரை.	பதம்.	உரை.
ஸத்யவாக்	நிச்சயவாக்கையுடைய	க்ரூரம்-அப்ரியம்	பயங்கரமானதும்-அநிஷ்டமானதுமான
ஸ:-ராஜா	அந்த-ராஜாவானவர்	கைகேய்யா:-வசநம்	கைகேயியினுடைய-வார்த்தையை
தேவ்யா:	கைகேயினுடைய	ஶ்ருத்வா	கேட்டு
வரதாநம்-அநுஸ்மரந்	வரமளித்ததை-ஸ்மரியாநின்றுகொண்[டு]	முமோஹ	மெய்மறந்தார்.

தா—ம். இக்கடுமொழியைக்கேட்ட வக்காவலன் தேவிக்குவரதானஞ்செய்த அவஸரத்தையுன்னி உண்மையென்றோர்ந்து ஸத்திய வ்ரதனாகையால் மறுக்கமுடியலாது அவள் யாசித்த கொடும்பலனை ஸ்மரித்து துக்கமூர்ச்சிதராய் மெய்மறந்தனர்.

౨౩. తతస్స స్థవిరో రాజా సత్యే ధర్మే వ్యవస్థితః ॥ జ్యేష్ఠం యశస్వినం పుత్రం రుదన్ రాజ్యమయాచత ।

௨௩. [illegible] ॥
[illegible] ।

௨௩. ததஸ்துஸ்தவிரோராஜாஸத்யேதர்மேவ்யவஸ்தித:॥
ஜ்யேஷ்டம்யஶஸ்விநம்புத்ரம்ருதந்ராஜ்யமயாசத।

பதம்.	உரை.	பதம்.	உரை.
தத:-ஸ்தவிர:-ராஜா	பின்பு-கிழவரான-ராஜாவானவர்	யஶஸ்விநம்-ஜ்யேஷ்டம்-புத்ரம்	கீர்த்தியுடையவரும்-மூத்தவருமான-குமாரனை
ஸத்யே-தர்மே-வ்யவஸ்தித:	ஸத்தியத்திலும்-தர்மத்திலும்-நிலைநின்றவராக	ராஜ்யம்-அயாசத	இராஜ்ஜியத்தை-யாசித்தார்.
ருதந் (ஸந்)	வியஸனித்துக்கொண்டு		

౨౪. సపితుర్వచనం శ్రీమానభిషేకాత్పరం ప్రియమ్ ॥ మనసా పూర్వమాసాద్య వాచా ప్రతిగృహీతవాన్ ।

௨௪. [illegible] ॥
[illegible] ।

௨௪. ஸபிதுர்வசநம்ஸ்ரீமாநபிஷேகாத்பரம்ப்ரியம்॥
மநஸாபூர்வமாஸாத்யவாசாப்ரதிக்ருஹீதவாந்।

பதம்.	உரை.	பதம்.	உரை.
ஸ்ரீமாந்-ஸஃ	(உத்ஸாஹ)ஸம்பத்தையுடைய-அந்த [(ஸ்ரீராகவன்)	பிதுஃ-வசநம்	பிதாவினுடைய-வாக்கியத்தை
அபிஷேகாத்-பரம்-ப்ரியம்-	அபிஷேகத்தைக்காட்டிலும்-வெகுவான-இஷ்டமான	பூர்வம்-மநஸா-ஆஸாத்ய-	முன்பு-மனதினால்-அடைந்து
		வாசா-ப்ரதிக்ருஹீதவாந்-	வாக்கினாலே-அங்கீகரித்தார்.

(௨௩-மு-௨௪-ல்) தா-ம்.—இந்தவிதம் தனதருமைக்குழந்தையான ஸ்ரீராமனுக்குமுடிசூட்டிமகிழவேண்டுமென்கிறகுதூகலத்துடனிருக்கையில்அவருக்குவனவாஸத்தையளிக்கவேண்டுமென்றுமறுக்கமுடியாத ஸந்தர்ப்பத்தில்தன்னையாசித்தகைகேயியின் குரூரமொழிகள் மனத்தைப்பிளக்க துக்கம்ஸகியாதுமூர்ச்சையடைந்தஅவ்வயோதிகரானராஜா, ஸத்தியத்தைக்கைவிடாதவரும்தர்மத்தைப்பரிபாலிப்பவருமாதலால், உயிர்நிலையைக்கிளப்பும்படி வதைக்கிற அக்கொடும்வியஸனத்திலும், பத்தினிகேட்பதைத்தந்து வாக்குக்கடனைத்தீர்க்குநிமித்தம், பிதிருபக்தனை தனதுபுத்திரரத்தினத்தையழைப்பித்துத் தானளித்த ராஜ்ஜியத்தைக் கைகேயியின்பொருட்டுக் கொடுக்கவேண்டுமென்றவரையாசித்தனர். இஷ்டானிஷ்டங்களைஸமமாயெண்ணுகிற அந்த ஸ்ரீராமனும் இவ்விஷயங்கொண்ட பிதிருவாக்கியத்தை அபிஷேகசெய்தியைவிட அதிகமானஸந்தோஷத்துடன்கிரகித்து மனப்பூர்வமாய்காடிய விசைந்து வாக்கினாலு மவ்வண்ணம்வெளியிட்டனர்.

౨౫. యద్యాజ్ఞప్రతిగృహ్ణీయాన్నబ్రూయాత్కించిదప్రియమ్॥అపిజీవితహేతోర్వారామస్సత్యపరాక్రమః।

௨௫. 𑌯𑌦𑍍𑌯𑌾𑌜𑍍𑌞𑌪𑍍𑌰𑌤𑌿𑌗𑍃𑌹𑍍𑌣𑍀𑌯𑌾𑌨𑍍𑌨𑌬𑍍𑌰𑍂𑌯𑌾𑌤𑍍𑌕𑌿𑌂𑌚𑌿𑌦𑌪𑍍𑌰𑌿𑌯𑌮𑍍॥
𑌅𑌪𑌿𑌜𑍀𑌵𑌿𑌤𑌹𑍇𑌤𑍋𑌰𑍍𑌵𑌾𑌰𑌾𑌮𑌸𑍍𑌸𑌤𑍍𑌯𑌪𑌰𑌾𑌕𑍍𑌰𑌮𑌃।

௨௫. தத்யாந்நப்ரதிக்ருஹ்ணீயாந்நப்ரூயாத்கிஞ்சிதப்ரியம்॥
அபிஜீவிதஹேதோர்வாராமஸ்ஸத்யபராக்ரமஃ।

பதம்.	உரை.	பதம்.	உரை.
ஸத்யபராக்ரமஃ	யதார்த்தமான பராக்கிரமமுடைய	கிஞ்சித்	சிறிதேனும்
ராமஃ	ஸ்ரீராகவன் [ண்டும் (அதில்)	நப்ரதிக்ருஹ்ணீயாத்	பற்றக்கூடாது
தத்யாத்	(இராஜ்ஜியத்தை) கொடுத்துவிடவே	அப்ரியம்-நப்ரூயாத்	அனிஷ்டவாக்கியத்தை-சொல்லவுங்கூடாது.
ஜீவிதஹேதோர்வா	ஜீவனார்த்தமாவது		

౨౬. సవిహాయోత్తరీయాణిమహార్హాణిమహాయశాః॥విసృజ్యమనసారాజ్యంజనన్యైమాంసమాదిశత్।

௨௬. 𑌸𑌵𑌿𑌹𑌾𑌯𑍋𑌤𑍍𑌤𑌰𑍀𑌯𑌾𑌣𑌿𑌮𑌹𑌾𑌰𑍍𑌹𑌾𑌣𑌿𑌮𑌹𑌾𑌯𑌶𑌾𑌃॥
𑌵𑌿𑌸𑍃𑌜𑍍𑌯𑌮𑌨𑌸𑌾𑌰𑌾𑌜𑍍𑌯𑌂𑌜𑌨𑌨𑍍𑌯𑍈𑌮𑌾𑌂𑌸𑌮𑌾𑌦𑌿𑌶𑌤𑍍।

௨௬. ஸவிஹாயோத்தரீயாணிமஹார்ஹாணிமஹாயஶாஃ॥
விஸ்ருஜ்யமநஸாராஜ்யம்ஜநந்யைமாம்ஸமாதிஶத்।

பதம்.	உரை.	பதம்.	உரை.
மஹாயஶாஃ-ஸஃ	பெருங்கீர்த்தியுடைய அந்த-(ஸ்ரீராகவன்)	மநஸா-ராஜ்யம்-விஸ்ருஜ்ய -	மனதினால்-இராஜ்ஜியத்தையும்
மஹார்ஹாணி-உத்தரீயாணி-	மிகவிலையுயர்ந்த-மேல் உத்திரீயங்களை	ஜநந்யை-மாம்	தாயும்பொருட்டு-என்னை [விட்டு
விஹாய	விட்டு	ஸமாதிஶத்	ஆஜ்ஞாபித்தார்.

(௨௫-மு-௨௬-ல்) தா-ம்.—இந்தவிதம், ஸகலசத்துருக்களையுமரித்து ஸகலலோகங்களையும்பரிக்கவல்ல பராக்கிரமசாலியான அந்தரகுவீரன் தனக்குக்கிடைத்த ராஜ்ஜியத்தைப் பிதிருவாக்கியத்திற்கிணங்கி சிறந்னைக்கீந்தபிறகு, இனி யந்தராஜ்ஜியத்தில் ஜீவனார்த்தமாவது சிறிதுபூமிகூட கைப்பற்றக்கூடாது, சிறிது ராஜ்ஜியம்வேண்டுமென்று அவனுக்கு அப்பிரியமாகக் கேட்கவுங்கூடாதென்று நிச்சயித்து, வீனவாஸோத்ஸுகராய் இராஜ்ஜியத்தையும் தேகத்திலணிந்திருந்த வஸ்திராபரணங்களையும் மனப்பூர்வகமாய்த்தியஜித்து என்னைக் கௌஸல்வியாதேவியுடனிருக்க ஆக்கியாபித்து வனயாத்திரைக்காரம்பித்தனர்.

౨౭. సాహంతస్యాగ్రతస్తూర్ణంప్రస్థితావనచారిణీ॥నహిమేతేనహీనాయావాసస్స్వర్గేపిరోచతే।

௨௭. 𑌸𑌾𑌹𑌂𑌤𑌸𑍍𑌯𑌾𑌗𑍍𑌰𑌤𑌸𑍍𑌤𑍂𑌰𑍍𑌣𑌂𑌪𑍍𑌰𑌸𑍍𑌥𑌿𑌤𑌾𑌵𑌨𑌚𑌾𑌰𑌿𑌣𑍀॥
𑌨𑌹𑌿𑌮𑍇𑌤𑍇𑌨𑌹𑍀𑌨𑌾𑌯𑌾𑌵𑌾𑌸𑌸𑍍𑌸𑍍𑌵𑌰𑍍𑌗𑍇𑌽𑌪𑌿𑌰𑍋𑌚𑌤𑍇।

௨௭. ஸாஹம்தஸ்யாக்ரதஸ்தூர்ணம்ப்ரஸ்த்திதாவநசாரிணீ॥
நஹிமேதேநஹீநாயாவாஸஸ்ஸ்வர்கேபிரோசதே।

பதம்.	உரை.	பதம்.	உரை.
ஸா-அஹம்	[அந்த-நான் (ஸ்ரீராகவனால் ஆஜ்ஞாபிக்கப்பட்ட)	தஸ்ய-அக்ரதஃ	அவனுக்கு-முன்பு
தேந-ஹீநாயாஃ-மே	அவனாலே-விடப்பட்ட-எனக்கு	தூர்ணம்	சீக்கிரமாக
ஸ்வர்கேபி	ஸுவர்க்கத்திலும்	வநசாரிணீ	வனவாஸத்திலூற்றமுடையவளாக
வாஸஃ-நரோசதேஹி -	இருப்பு-ருசிக்காதன்றோ(ஆகையால்)	ப்ரஸ்த்திதா	பிரயாணம் புறப்பட்டவளாக(ஆனேன்.

தா—ம். வஸ்துவைச்சாயை யனுஸரிக்குமாப்போல் யான் ஸ்ரீராகவனையே அனுஸரித்தவள். அவரின்றியான் ஜீவியேன், அவரில்லாதஸ்வர்க்கம் எனக்கு ஸ்வர்க்கமல்ல, அவரோடிருக்கிறவாழ்க்கையே எனக்குப்பேரானந்தவாழ்க்கை. ஆகையால், தான்வனஸஞ்சாரஞ்செய்யப்புகுகையில் நான் அயோத்தியில் கௌஸல்யையோடு வாஸஞ்செய்து கொண்டிருக்கவேண்டியதென்கிற ஸ்ரீராகவவாக்கியமானது எனக்குமஹாதுக்கத்தைத்தந்தது அதற்கிணங்காமல், வனவாஸத்திற்கிசைந்தவளாய் என்னுடையநாதனுக்குமுன் நானும் பிரயாணப்பட்டேன்.

௨௮. ప్రాగేవతుమహాభాగస్సౌమిత్రిర్మిత్రనందనః॥పూర్వజస్యానుయాత్రార్థే ద్రుమచీరైరలంకృతః।

உ-அ. [Grantha text]॥

[Grantha text]।

உ-அ. ப்ராகேவதுமஹாபாகஸ்ஸௌமித்ரிர்மித்ரநந்தநஃ॥

பூர்வஜஸ்யாநுயாத்ரார்த்தேத்ருமசீரைரலங்க்ருதஃ।

பதம்.	உரை.	பதம்.	உரை.
மஹாபாகஃ	வெகுபாக்கியமுடையவரும்	அநுயாத்ரார்த்தே	பின்செல்லுகிறபிரயோஜனத்தையும்பொருட்டு
மித்ரநந்தநஃ	சினேகிதர்களுக்கு ஸந்தோஷத்தைச்செய்கிறவரும்	ப்ராகேவ	முன்பாகவே (சீக்கிரமாக)
ஸௌமித்ரிஃ	ஸுமித்திரையின்புத்திரனை (இலக்ஷ்மணன்)	த்ருமசீரைஃ	மரவுரியினால்
பூர்வஜஸ்ய	தமயனுடைய	அலங்க்ருதஃ	அலங்கரித்துக்கொண்டார்.

௨௯. తేవయంభర్తురాదేశంబహుమాన్యదృఢవ్రతాః।ప్రవిష్టాస్స్మపురాదృష్టంవనంగంభీరదర్శనమ్।

உ௯. [Grantha text]॥

[Grantha text]।

உ௯. தேவயம்பர்த்துராதேஸம்பஹுமாந்யத்ருடவ்ருதாஃ॥

ப்ரவிஷ்டாஸ்மபுராத்ருஷ்டம்வநம்கம்பீரதர்ஸநம்।

பதம்.	உரை.	பதம்.	உரை.
தே-வயம்	அப்படி பிரயாண ஸந்நத்தரான-நாங்கள்	புரா-அத்ருஷ்டம்	முன்பு-பாராததும்
பர்த்துஃ-ஆதேஸம் - பஹுமாந்யஸ்வ	பர்த்தாவானதசரதருடைய-ஆஞ்ஞையை-ஆதரித்து	கம்பீரதர்ஸநம்	பிரவேசிக்கக்கூடாத ஸ்வரூபமுடையதுமான
த்ருடவ்ருதாஃ	உறுதியானவனவாஸ விரதமுடையவர்களாக	வநம்	அடவியை
		ப்ரவிஷ்டாஃ	பிரவேசித்தோம்.

௩௦. వసతోదండకారణ్యేతస్యాహమమితౌజసః॥రక్షసాపహృతాభార్యారావణేనదురాత్మనా।

௩௦. [Grantha text]॥

[Grantha text]॥

௩௦. வஸதோதண்டகாரண்யேதஸ்யாஹமமிதௌஜஸஃ॥

ரக்ஷஸாபஹ்ருதாபார்யாராவணேநதுராத்மநா।

பதம்.	உரை.	பதம்.	உரை.
தண்டகாரண்யே	தண்டகாவனத்தில்	பார்யா-அஹம்	பத்தினியான-யான்
வஸதஃ	வஸியாநின்றிருக்கிற	துராத்மநா	துஷ்டபுத்தியுடைய
அமிதௌஜஸஃ-தஸ்ய	அமிதமில்லாத்தேஜஸ்ஸுடைய - அந்த (ஸ்ரீராகவனுக்கு)	ராவணேந-ரக்ஷஸா	இராவணனென்கிற-இராக்கதனால்
		அபஹ்ருதா	அபஹரிக்கப்பட்டேன்.

௩௧. [Telugu text]॥[Telugu text]।

௩௧. [Grantha text]॥

௩௧உ. [Grantha text]।

௩௧. த்வௌமாஸௌதேநமேகாலோஜீவிதாநுக்ரஹஃக்ருதஃ॥

௩௧உ. ஊர்த்த்வம்த்வாப்யாந்துமாஸாப்யாம்தததஸ்த்யக்ஷ்யாமிஜீவிதம்।

இதி ஸ்ரீஸுந்தரகாண்டே - த்ரயஸ்த்ரிம்ஸஸ்ஸர்க்கஃ.

பதம்.	உரை.	பதம்.	உரை.
தேந	அந்த இராவணனால்	ததஃ	பின்பு
த்வௌ-மாஸௌ	இரண்டான-மாதங்கள் (இரண்டுமாதரூபமான)	த்வாப்யாம்-மாஸாப்யாம்	இரண்டானமாதங்களைக்காட்டிலும்
காலஃ-மே	காலமானது-எனக்கு [ட்டிருக்கிறது	ஊர்த்த்வம்	மேலே
ஜீவிதாநுக்ரஹக்ருதஃ	பிழைப்பதற்கு அனுகிரஹம்செய்யப்ப	ஜீவிதம்-த்யக்ஷ்யாமி	பிராணனை-விட்டுவிடுகிறேன்.

(உ௮-மு-௩௧உ-ல்) தா-ம்—இந்தவிதம் யான் பிரயாணப்பட, தேஜஸ்வியும், யசஸ்வியும் பாக்கியவந்தரும் ஸுஹ்ருத்துக்களுக்கானந்தவிர்த்திசெய்பவருமான இலக்ஷ்மணனென்னும் ஸுமித்திராதேவி புத்திரன் தனது ஜ்யேஷ்டப்பிராதா ஆரண்ணியம்புகுகையில் தான் நகரவாஸஞ்செய்து ஸுகிக்கிறதாவென்று விரக்

கொண்டு கைங்கரியார்த்த மவரும் புறப்பட்டார். இப்படி யாங்கள் மூவரும் தசரதாக்ஞையைச் சிரஸால் வஹித்து, அவரது சொற்படி வனவாஸஞ்செய்கிறதென்கிற திடவிரதங்கொண்டவராய், முன் பாராததும் கம்பீரதர்சனமுள்ளதுமான மஹாவனத்தைப் பிரவேசித்தனம். சிரகாலம் சித்திரகூடாதிப் பிரதேசங்களில் வஸித்துக் கடைசியில் தண்டகாவனமபுகுந்து கோதாவரீதீரத்தில் வாஸம்புரிகையில் துராத்மாவும் துஸ்வபாவமுடையவனுமான இராவணனென்கிற இவ்விராக்ஷதன் எனது பர்த்தாவின் தேஜோமஹிமையை யுணராது வஞ்சனையாலென்னை யபகரித்தான். அவனுக்கு யானபிமதையாவதற்காக வரையிடப்பட்ட வோராண்டில் பத்துமாதமாய்விட்டது. மிகுதியுள்ள விரண்டுமாதங்களுக்குமாத்திரம் இராக்ஷஸப்பிரபு எனக்கு ஜீவனளித்திருக்கிறர்! அதற்கப்புறம் யானவரது சயனத்தை மேவேனுகில் எனதுயிர் தக்காதாம்! அந்தநீசனென்னைக் கொலைசெய்யவெத்தனிக்குமுன் யானே அக்காலங்கடந்தவுடன் ஜீவனை யொழிக்கிறேன்.

இந்தவிதம் தேவிமுதலில் தான் பிறந்துவளர்ந்து புகுந்து வாழ்ந்த பெருமைகளைச்சொல்லி, பிறகு வனத்திற்கெழுந்தருளின வரலாற்றையுரைத்து, அனந்தரம் இராக்ஷஸாதமனுடைய மாயையால் நாதனைவிட்டுத் தான் பிரிந்ததையும், ஜகதேகவீரனுடைய பத்தினியான தனக்கு அந்த ராக்ஷஸப்பதர் ஆயுள்வரையிட்டதையும் சொல்லி, தனது தத்கால தைன்னியநிலைமைக்குக் காரணந்தோன்றவிஷயங்களை விவரித்து முடித்தனள்.

உ௮-வது சுலோகத்தின் விசேஷார்த்தம்.

பெருமாள் (ஸ்ரீராகவன்) மரவுரிதரித்தபிறகன்றோ இளையபெருமாள் (இலக்ஷ்மணன்) மரவுரிதரித்தது. அப்படியிருக்க, இந்தவிடத்தில் "பூர்வமேவ" (முன்பாகவே) என்றது- "தீவ்ரத்ருஷ்ணாம்வாயதிராஜ்யஸ்ய பூர்வம் | பூர்வஷஷ்டி த்ருஷ்டிவிஷயம் ப்ரவ்ருத்தம்ஜவோ யாநாய" (கண்படைத்தாருக்கு அது வீணே யொழியாதே, தன்திருமேனிஸௌந்தர்யாதிசயத்தால் அவர்களுக்கத்யாநந்தத்தை யளிப்பவரான என் அண்ணன் ஸ்ரீராகவன் ஜ்வலிக்கிற அக்கினியையோ, பயங்கரமான அடவியையோ, இன்னமெதையோ பிரவேசித்தபோதிலும் அவருக்குமுன் அதில் பிரவேசித்தவனாக என்னை யறிந்துகொள்ளாய்) என்று கௌஸல்யாதேவியைப்பார்த்து சொன்னவராதலால், அவர் மரவுரிதரிக்குமுன் தான் தரித்தாரென்றது த்வராதிசயத்தைச் சொல்லிற்று. ஸ்ரீராகவன் பித்ருவசன பரிபாலனார்த்தம் இராஜமுடியையும் பீதகவாடையையும் தவிர்த்து மரவுரிசாற்றினர். இவரும், "யந்நதீயம்தயவாஜவமஜ்ஞ" (தனதான்னிய புத்திரமித்திர கோசங்கள் முதலான ஸகலபாக்கியமும் எனக்கு ஸொந்தமுமானது தேவரீருடைய திருவடியல்லது வேறில்லை. என்றும், "உன்னடிக்கீழமர்ந்துபுகுந்தேனே" என்றும் "உனக்கேநாமாட்செய்வோம்" என்றும்சொல்லுகிறபடியேதொண்டாகிறவெகு மேன்மையான ஆபரணத்தை யடைவதற்காகத்தான் மரவுரிதரித்தார். "ஸஹாஸாமஸ்" - "அஹம் ஸர்வம் கரிஷ்யாமி" (ஸகலவித கைங்கரியங்களையும் செய்யக்கடவேன்) என்று பிரதிஜ்ஞை செய்தபடியே திருவபிஷேக விக்கம்பிறக்க, அதுநிமித்தமாக ஸமஸ்த கைங்கரிய ஸாம்ராஜ்ஜியத்தை யடைந்தவர். "ஸௌமித்ரி" - "ஸ்ருஷ்டஸ்த்வம் வநவாஸாய" "ராமம் தசரதம் வித்தி மாம் வித்தி ஜநகாத்மஜாம்" (ஹே லக்ஷ்மண! உன்னை வனவாஸார்த்தம் தான் பெற்றெடுத்து வளர்த்தேன். ஆகையால் உன்னண்ணனான ராமன் எழுந்தருளுகையில் மத்தகஜத்தைப்பரிஹஸிக்கும் நடையழகிலும், அப்போது கொஞ்சம் அதிர்ந்து நேத்திரானந்தத்தையளித்து மனதைக் கொள்ளைகொள்ளும்படியான அவன் வடிவழகிலுமீடுபட்டு இறுமாந்து பிரமாதத்தை விளைவிக்காதே கண்டாய்) என்று அனுக்ரஹித்து எனதருமைமாமியான கைகேயியைப்போலன்றிக்கே "ராமம் தசரதம் வித்தி மாம் வித்தி ஜநகாத்மஜாம்" என்று ஒரு குறையுமெண்ணாதே கூடப்போவென்று அனுப்பினவள் வயிற்றில் பிறந்தவர். "மித்ரநந்தந:" - ஸ்ரீராகவனைப்பிரியாது நாம் ஸகலவடிமைகளையும் செய்யப் பெற்றிலோமாகில் இலக்ஷ்மணன் எல்லாவடிமைகளையும் செய்யப்பெற்றானென்று அநுகூலவர்க்கங்களையுகப்பிக்குமவர். "பூர்வம் ஜலம் ப்ராதுர்யாதாம் ப்ருஷ்டத: ஸௌமித்ரி ரநுவ்ரஜத:" ஸ்ரீராகவன் பின்னே ஸேவித்து போகைக்காக மரவுரிசாற்றிஅத்தாலே அலங்கிருதரானர் என்கை.

ஸ்வாபிப்பிராயம்.

இவ்விடத்தில் "ஸஹாஸாமஸ:" என்றதற்குக்கருத்து "பால்யாத் ப்ரப்ருதி ஸுஸ்நிக்த:" என்கிறபடியேபிறந்தவன்றுதொடங்கிஸ்நாநபாநாதுலெபநவிஹாராதியவஸரங்களிலும் ஸ்ரீராகவனைவிட்டு வகன்றுஸங்கவறியாதவர். இப்படி ப்ராத்ருப்ரேமையுடைய விவரை குழந்தையாயிருக்கும்போதொருநாள் மஞ்சனமாட்டி திவ்யமானபாலூட்டி கனகமயமாயதிஜாஜ்வல்யமாய் விளங்குமோர்தொட்டிலில் அதிம்ருதுளமானபீதாம்பரம்பரப்பி அதில்விட்டு இனிய கானவிசேஷத்தால் தாலாட்டியும், சிறிதேனும் நித்திரைகொள்ளாது பெருரோதனம்செய்ய,பிறகு இவ்வாரழுகுரலைக்கேட்டஸுமித்திரையாரோடிப்பார்க்கையில் ஸ்ரீராகவனுடைய தொட்டில் வேறுயிருப்பதைக்கண்டு அத்யாச்சரியங்கொண்டவளாய் இருதொட்டிலையும் ஒன்றுசேரக்கட்ட. அப்பொழுது இவர்ஸுகமாகக் கண்வளர்ந்தாரென்பது பிரஸித்தம். இப்படி இவர்களொருவருக்கொருவர் வெகு அந்நியோந்நியமா யிருப்பதைக்கண்ட ஸமஸ்தரும் இப்படியுமுண்டோ ப்ராத்ருஸ்நேகமென்று கொண்டாடும்படியாய் வனவாஸத்திலும் "அஹம் ஸர்வம் கரிஷ்யாமி" என்று ஸங்கல்பித்து ஸ்ரீராகவனைப் பின்றொடர்ந்து ஸகலவிதகைங்கரியங்களையும் செய்வதற்காக அவர் மரவுரிதரிக்குமுன் தான் அதிசீக்கிரமாய் மரவுரிதரித்து வனஸஞ்சாரத்திலுண்டான பெருஸங்கடத்தையும் அதிஸுகமாக பாவித்துவந்த இலக்ஷ்மணன் கைங்கரிய ஸாம்ராஜ்யத்தை யுடையவனென்று பிராட்டியும் கொண்டாடுகிறாளென்றபடி.

ஸ்ரீஸம்மநோரஞ்ஜநீ நாமத்திராவிட வியாக்யாந ஸஹிதமான ஸுந்தரகாண்டத்தில்
முப்பத்துமூன்றுவது ஸர்க்கம் - முற்றிற்று.